

திராவிடநாடு
பொங்கல் மலர் 1961
விலை ரூ 1-50
கே. மாதவன்

சென்னை : பாரகன், ராக்ஸி, மகாராணி, நூர்ஜஹான்

மதுரை : சென்ட்ரல் சினிமா




மற்றும் தென்னகமெங்கும்

காஞ்சிபுரம்,
14-1-'61

**தம்பி,**

என் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் உன் குறும்புப் புன்னகையின் பொருள் எனக்கு விளங்காமலில்லை. இந்த விழா நாளன்று, எவரெவரோ தத்தமது உடன்பிறந்தார்கட்கு விரும்பித் தருவர் விதவிதமாகப் பொருள்; பட்டும் பொன் இழையும் பாங்காகச் சேர்த்தமைத்த வண்ணம் சிறந்திடும் நல் ஆடை வகைதானுண்டு, மெல்லியதாய்த், துல்லியதாய், மேனி அழகினைக் கூட்டிக் காட்டுவதாய்; எழிலூட்டி வளம் காட்டும் எத்தனையோ வகையான அணிபணிகள் பெற்றளிக்க அங்காடியா இல்லை; சுவையூட்டும் பண்டங்கள் தொகை தொகையாய் உள்ளனவே; எனக்கென்று நீ இன்று எடுத்துவந்தளிப்பதுதான் என்ன என்றறிய ஆவல் கொண்டுள்ளேன், ஏன் இனியும் ஓட்டுகிறாய் என் காலம் வீணாக, கொண்டுவந்த பொருளதனைக் கொடுத்திடு, கோலம் காண்போம், இன்று என் அண்ணாவின் ஏற்றமிகு பொருள்பெற்று, காட்டிட நான் வருவேன், கடுகி என்றுரைத்து, நேற்று அந்திப்போதினிலே செப்பிவிட்டேன் நண்பரிடம்; அவரெல்லாம் எனைக்கண்டு, ஐயயே! இதுதானா? என இழித்துப் பேசிடவா, அண்ணா நீ எனைவிடுவாய். இல்லை! இல்லை! நானறிவேன்! எனக்கென்றே நல்ல பொருள் எடுத்துத்தான் வந்திருப்பாய். எனக்கன்றி வேறு எவர்க்குமில்லை! நீயன்றிப் பொருள் எனக்களிப்பாரும் வேறு இல்லை! இருவருமே இதனை மிக நன்றாக அறிந்துளோமே! எனினும் காலமதை வீணாக்கி அலைக்கழித்து, எனைவாட்டி நிற்கின்றீர், எடுத்திடும் என் பொருளை! கொடுத்திடும் இப்போதே!!—என்றெல்லாம் கேட்டிடுது, உன் பார்வை, நானறிவேன். ஆனாலும், அன்புத் தம்பி! எப்பொருளைப் பெற்றாலும், அது என்னவகை என்றாலும், பொன்னுடன் நேர்செய்து பார்த்திடும் போதினிலே, என்னவோ அவ்வளவு ஏற்றமிலையோவென்று அங்காடி மனத்தினர் அறிவித்துவிட்டாலும், ஒன்றை மறவாதே, இன்றல்ல நேற்றல்ல, நம் நெஞ்சம் நேசத்தால் நெகிழ்ந்திட்ட நாள் தொட்டு, என்னால் இயன்றதனை இம்மியும் வஞ்சமின்றி எடுத்து வந்து தருகின்றேன், ஏற்கின்றாய்; மகிழ்கின்றாய்! முத்து இது அல்ல, மூலையில் போட்டுவிடு என்றுரைக்கும் தாய் உண்டோ, தன் சிறுமதலை தரும் கடலலையாய் ஒதுங்கிவந்து உடைபட்ட கிளிஞ்சல் துண்டு! அஃதேபோல அளித்திடும் பொருளுக்கெல்லாம், அங்காடிக் கணக்கைவிட்டு, அகத்திலே ஊறுகின்ற அன்பு பெய்திட்டதென்று, ஆங்கதனைத்தான் கொண்டு அகமகிழ்ந்து இருப்பதுதான், உடன்பிறந்தார் காட்டும் உவகைமிகு பாசமாம். இன்றும் அதுவே முறை! என்றென்றும் அம்முறையால்,



வாராது எக்குறையும்! குன்றின்மேல் வீழும் கொன்றை, கண்ட நம் புலவோர் பேழையுள் கிடங்கிட்ட பொன்னுக்கு நிகர் என்றார்; அது பண்பு. அவர் வழியில் நாம் வந்தோம், நாம் தாழ்ந்தால், அவர் தம்மைப் பிறர் இகழவைக்கின்றோம் என்றாகும். ஆகையினால், என்றென்றும் நம் நெஞ்சில், தமிழ்ப் பண்பு ஏற்றம் பெற்றுளடும்.

அண்ணன் தருகின்ற பொருளைப் பெறுங்காலை தந்த பொருள், தர எண்ணும் பொருளைச் சுட்டிக்காட்டிடும் வகைதான், என்று எண்ண வேண்டும். மலர்தொட்ட கரம் காட்டும் மணத்தைக் கண்டால், மலர்த்தோட்டம் பெறவேண்டும் என்ற எண்ணம் எழுதல் வேண்டும்; அஃதேபோல, அண்ணனால் இயன்றதனை அளிக்கின்றான், அதனைப்பெற்று, அவனால் ஆகாதனவற்றை நாம் முடித்து வெற்றி காண்போம், என்றெண்ணி இகல் வென்று, வாழ்க நீயும். இனிதாக நீ வாழுங்காலை, நானும் இடுக்கணிலா உழன்றிடுவேன்? இல்லை! வாழ்வேன்!!

இன்றுனக்கு விழா! இல்லம் புதுக்கோலம் கொள்ளும் நாள்! அந்தக்கோலம், அழகளிக்கும், ஏனென்றால், காணும்போது, உள்ளம் களிப்புப் பொங்கும் காரணத்தால். பொங்கற் புதுநாள் போந்தது என்றால், மங்கிக்கிடந்ததெலாம் தங்கமென்றாகும்காண்! வெளியெல்லாம் பொன்பரப்பி வேலியெல்லாம் மணி இழைத்து, வைத்திருக்கும் இந்த எழில், தந்ததெவர்? உழைப்பாளி! அவர், சதிராடிக் காட்டிடும் கதிரானைக் கண்டதாலே, மயங்கிடாமல், நின்றவளை, அழைத்து வந்தார், மனைதனுக்கு! அவள் ஏறிவரும் வண்டிக்கு எருதுகள்தான் பூட்டியது, என்றாலும், எழிலரசி ஏழெட்டுக் குதிரைகளைப் பூட்டியதோர் நல் இரதத்தில் புறப்பட்டு உலா வந்தால், ஊர் என்ன கவின்பெறுமோ, அதற்கு நேர் இஃது, இல்லை, அதனையும் மிஞ்சிடும் எழில்மிக்க காட்சி இது என்பதனை, இன்றல்ல, என்றோ அறிந்தார், நம் தமிழர்; அதனால்தான், மன்னவனைக் கண்டிட்ட மாப்புலவர் கூறி நின்றார், நின்கரத்துச் செங்கோற்குக் காப்பு ஏது கூறுவன், கேள்! ஏரடிக்கும் சிறுகோல்!! என்றியம்பினர்; வியந்தார்.

இன்றும், ஏதேதோ தொழில், ஏற்றம், மாற்றமிகு வினைபலவும், காண்கின்றோம், களிக்கின்றோம், என்றாலும், அச்சாணியாக இன்றும், அமைந்து இருப்பது முன் ஆன்றோர்கள் மெச்சிப் புகழ்ந்திட்ட உழவுதான்; மறுப்பு இலை. அந்த உழவு, கனிவு பெற்றளிக்க, அந்தச் சுவை உண்டு மகிழ்ந்திடத்தான், மனைதோறும் கூடுகின்றார், மாடுகன்றும் போற்றுகின்றார், பொங்கலோ பொங்கலென்று! பாடி மகிழ்கின்றார், திருநாள் கொண்டாடும் திரு இடத்து மாந்தரெலாம். அந்த நன்னாளிலே, அருகே கரும்பிருக்க, அதைக் காண மனமின்றி, ஆரணங்கின் மொழிகேட்டு, பலவின் கனிமொய்க்கும் பான்மையிலே, நீ இருக்க, எனை என்ன, உனக்கேற்ற பொருள் அளிக்கும் திறன்பெற்றேன், என்று எண்ணப்போகின்றாய்? உம்! நானறிவேன், இன்றுனக்கு, பொன்னும் பொருளும் மின்னலிடையாள் வீசும் கன்னல் மொழியில் உண்டு! குழலுண்டு' யாழுண்டு! கூத்துண்டு! பாட்டுண்டு!! இவை எல்லாம் இருக்கையிலே, உனக்கின்று, நானென்ன உயர்ந்த பொருள் அளித்திடுவேன்! முயற்சியும் வீணே! பூத்தமலரின் புதுத்தேனைத் தானுண்டு, பாடி வட்டமிடும், வண்டினுக்கு, நான் இன்று, 'பருகப் பால் உண்டு!' என்றழைக்க வருவது, நன்றல்ல, நானறிவேன்.

மகிழ்ந்திருக்கும் இவ்வேளை, மகிழ்ச்சியே வினையென்று, மயங்கிடுதல் கூடாது, என்று மூதறிஞர் இயம்பியதை மட்டும், மறவாதிருப்பதுதான், மாண்பு; தமிழர் நெறி.

மகிழ்ச்சியே மயக்கம்; மன்னுயிரைத்தான் மாய்க்கும்! என்று கூறினோர் அல்லர் நம் தமிழர், எனினும், **மகிழ்ச்சியே வினை; வேறு செயல் வேண்டாம், என்றிருத்தல் நன்றன்று; வினை, வித்து; மகிழ்ச்சி, விளைவு; அந்த விளைவு அவ்வளவும், தின்று தீர்த்திட்டால், பின் வினைக்கு வித்து ஏது? எனவே, விளைவு அளிக்கும் சுவையினை உண்டு மகிழ்ந்திருப்பதுடன், இருந்திடாது 'வித்து' எடுத்துவைத்து, மீண்டும் வினைமேற் கொளல் வேண்டும்; அங்ஙனம், முறை வகுத்துக் கொண்டால்தான், வாழ்வில் வளம் காண வகை கிடைக்கும், தொடர்ந்து.**



மகிழ்ச்சி, மயக்கமாகுதல் கூடாது; மது மாந்திடும் மந்தி போன்றதன்று மனிதகுலம்! மகிழ்ச்சி, புது முயற்சிகட்கு ஊக்குவிக்கும் மாமருந்து; மதுவன்று.

கரும்பளித்த கழனி, மீண்டும் கரும்பளிக்கக் காண்கிறோம்; மண்தான்; எனினும் மதிமிக்க செயலன்றோ! மனிதன், அதனினும் மேம்பட்டன்றோ,இருத்தல் வேண்டும்? எனவே, **ஒருவிளைவு, மறுவினைக்குத் துவக்கம்; மகிழ்ச்சி, வினையின் இறுதி முடிவு அல்ல; வினைப்பயன்; புதிய வினைக்கு அழைப்பு.** புதிர் அல்ல, புண்யம் பேசிடுவோர் கூறிடும் தத்துவமும் இஃதல்ல; பொருள் பொதிந்த உண்மை; தமிழர்க்கு இது புதிதுமன்று.



தாயின் அழகைப்பெற்றிடும் மகவு, பிறகு தாயுமாகித், தன்அழகளித்துச், சேயை அளித்திடும்; காண்கிறோம் அன்றோ!



அதுபோலவே தான், மகிழ்ச்சிபெறுகிறோம் விழா காரணமாக. எனில், அந்த மகிழ்ச்சியில் திளைத்துப். பிறகு, தொடர்ந்து, தொகை தொகையாக வகை வகையாக, மகிழ்ச்சி பெற்றிடச் செயலில் ஈடுபடவேண்டும்.

குழலில் உள்ள துளைகளின் மீது விரல் சேர்க்கும் இசை வல்லான், என் செய்யக் காண்கின்றோம்? எல்லாத் துளைகளையும் இறுக மூடிவிட்டால், இசை தானும், எங்கிருந்து எழும், கூறு? இசையின் வகைக்கேற்ப, அளவுக்கேற்ப, இன்னின்ன நேரத்தில், இன்னின்ன முறையோடு, விரலுக்கும் குழலிலுள்ள துளைகட்கும் தொடர்புண்டு என்பது இசைவல்லோன், கண்டறிந்த இலக்கணம், அதற்கேற்ப, மூடுகிறான் ஓர் துளையை, முற்றும் ஒலி பிறக்கும் நிலையிலே வேறோர் துளையை விட்டுவைத்துக் காட்டுகிறான், தொட்டும் தொடாததுமாய் விரல் இருக்கும் சில துளையில், பாதி, கால், அரைக்கால் என்று பாங்கறிந்த அளவுமுறை தானறிந்து, விரல்களையே வினை செய்ய விடுகின்றான்; அதனால்தான் ஏழிசையின் இனிமைதனை, மானிடர் கேட்டு இன்புற்று மகிழ்ந்து இருக்கின்றார்; நாகமும் தீண்டாதாம், நஞ்சுகொண்டதெனினும்!

வாழ்க்கையே, அதுபோல்தான்.

அளவு, தொடர்பு, அறிந்து வினை செய்து, எதற்கும் முறை வகுத்து, இன்பம் காண்பது, வாழ்வு! அதுவும், மூழ்கிச்செயலற்றுப்போக அல்ல; அது மடமை! துய்த்திடலாம் வாழ்வின் சுவை; துஞ்சிட அல்ல; வினை மேற்கொள்ள; தொடர்ந்து செயலாற்ற; ஏனெனில், **இயங்குதல் வாழ்க்கையின் இலக்கணம்; இனியன புரிதல் அறநெறியாகும்; அறநெறியதனை அடவி ஏகாமல், மாடும் மனையும் சூழ இருந்திடும் மாண்புமிகு இல்லறம் அதனிலேயே, பெற்றிட இயலும் என்று கூறினர், தமிழர்; துறவோரும், இவரில்லை எனில் இல்லை யாங்கண் என்றார் உணர்ந்து.**

இல்லறத்தாருக்கு நல்ல விழாவாக அமைந்திருப்பது தான், பொங்கற் புதுநாள். எனவேதான், இன்று, ஈசன் திருவடி நிழலைச்சேர்ந்திடும் காதை பற்றிப் பேசிடும் கவலை இல்லை; பொங்கிற்று பால்! என்று ஒருவருக்கொருவர் கேட்கும், பூரிக்கும் காட்சி காண்கிறோம்.

"எப்படியும் வந்திடுவார் என்றாள். அவள் ஆருடம் இப்படிப்பலிக்குமென்று, எண்ணவே இல்லை" என்று இருபதாண்டு தாங்கும் எழிற்கொடியைத்தான் பார்த்து, இதுபோல மும்மடங்கு ஆண்டு கண்ட முதியவள், கூறிநிற்க, "நானென்ன அவருக்காக, ஏக்கமா கொண்டிருந்தேன்? அவர் வந்த காரணமும், எனைக்காணத்தானா! இப்பக்கம் ஏதேனும் அலுவல் இருந்திருக்கும்; அக்காரணம் பற்றி வந்திருப்பார், மனைவரையில்" என்றந்த மலரனையாள், இடிக்கின்றாள் சொல்லாலே. வெடுக்கென்று இதழ் கடிக்கும் தன் மகவு கன்னத்தை, இதுகேட்டு, இலேசாகத் தட்டுகிறான் பெற்றெடுத்தோன்; "ஏதேது! மெத்தவும் நீ, போக்கிரியாகிவிட்டாய்! உனைக்கட்டித்தழுவி நான், கசக்கிவிடப்போகிறேன், பார்!" என்று கூறுகிறான்; குழவிக்காம் அப்பேச்சு! ஆனால் பார்வை? அவள் மீது!!



"இதைப்பாரண்ணா! இதைப்பார்! பால் பொங்குகிறது பார்! பொங்கலோ பொங்கல்! பொங்கலோ பொங்கல்!" என்று கூவுகிறாள், அவன் உடன் பிறந்தாள்; அவள் செங்காய்!

•

"ஏடா! உன் அண்ணன், ஏதுகூற முனைந்திடினும், இழுத்து வந்து பேசுவானும் காதல் கதை எல்லாம்; கடிந்துரைத்தார் ஓர் 'கனம்' கால்வாய் திறப்புவிழாவன்று; அவர் உரைத்தது போலவா உன் அண்ணன் பேசுகிறான்?" என்று கேட்டிடுவார், காதற் காவியத்தின் கடைசி ஏடு வரை, படித்து முடித்திட்ட முதியோர், இல்லத்துப் பெரியோர். அவரல்ல பேசுவது; அமைச்சர்' அவர்க்கும் கோபம், காதல் மீதல்ல; என்மீது! அதற்கும் காரணம், காதல் அவர்க்கெல்லாம் காஞ்சிரமுமல்ல!! எனினும் ஏன் இதுபோல் அவர் பேசித்திரிகின்றார் என்பாயேல், மாசு எனக்குச் சேருமாம்; மனப்பால் குடிக்கின்றார். அறம் பொருளை உரைத்ததுடன், வீடு காண அழைத்து சென்றாரில்லை, அருங்குறளை ஆக்கியோனும்; 'இன்பம்' தந்தார்; அஃது இயற்கை எனும் காரணத் தால்.



அது அற்றுப்போமேல், உயிரில்லை, ஊரில்லை, ஊராளும் முறையுமில்லை; ஊராள்வோர்க்கோ இது புரியவில்லை,

நானுங்கூட தீதோதான் காதற்திறமுரைத்தல், ஆன்றோரெல்லாம், அதனை வெறுத்துத்தானா கூறியுளார் என்பதனைக் கண்டறிய, ஏடு பலவும் பார்த்தேன்; அதனுள் இருப்பதனை எடுத்தியம்ப வல்லோர் தம்மை அடுத்து கேட்டுப்பார்த்தேன்; அமைச்சர் பேசும் பேச்சு பேச்சாக இருத்தல்கூட, அமைச்சராய் அவர் இருக்கும் காரணத்தாலேதான்; வாழ்வுக்கு நல்லோர்கள் வகுத்த நல்லறமே காதல்; என்கின்றார்; அறிகின்றேன்.

காதலே யுலகம்! சாதலே வாழ்க்கை!
காதற் களிப்பே கடவுட் களிப்பாம்;
காதலின் மறப்பே கவலையுந்துயரும்!
காதலின் அளிப்பே கட்டறுமின்பம்!
காதலால் உயிரைக் கடவுள் படைத்தான்:
காதலித் தின்னுங் கண்ணிலம் பெருகவே!
விண்மீன் கணங்களு மிளிர்வன காதலில்!
தண்ணுங் காற்றுந் தவழ்வன காதலில்
உண்கனி விளைவதும் உள்ளக் காதலால்!
புன்னகை யொன்றாற் பூத்திடுங் காதல்;
கண்கள் கதுவிக் கனவுகள் காணும்;

இன்னிய காதலால் எண்ணம் உயரும்;
பொன்னொளிர் வனப்பும், புதுப்புது மகிழ்வும்,
நாளொரு மேனியும், நாண்மல ரழகும்,
வாள்விழி நோக்கின் வரப்பிரசாதம்.
புள்ளின் பாட்டும், பூவின் மணமும்
கள்ளுண் வண்டும், காற்றின் உயிர்ப்பும்
அன்னமும், மானும், அழகிய கிளியும்,
வன்ன வியற்கையும், வசந்தப் பசுமையும்,
காதலர் தூதே! காசினியெல்லாம்
காதலர் கடிதம், காதலர் பேச்சு!
காலமும் இடமும் காதலை வெல்லா;
கால மிடத்தைக் காதலே வெல்லும்;
காதலே காய கற்பமு மாகும்;
காதலே தேவர் சோதிக் கனவாங்;
கண்களாற் பேசிக் கருத்திரண் டிணைத்துப்
புண்களை யாற்றிப் புலன்களைப் பற்றி,
இமையவ ரின்பமும் இணையிலா இன்பம்
இமையி னளித்திடும் இன்பமே காதல்.
காதல் வாழ்க! காதலர் வாழ்க!
காதலால் வாழ்வுக் கற்பக மோங்குக!
ஓங்குயர் காதலே உயிர்க்கடை யாளம்
நீங்காக் காதலே நித்திய வாழ்வு;
காத லற்றவர் கட்டையைப் போல்வர்;
உயிரின் இன்பமே, உயிரெனும் பசிய
பயிரினை வளர்க்கும் பைம்முகி லேயுனைப்
பிரிந்து வாழேன்; பிதற்றியுன்பெயரை
விரிந்த வுலகெலாம் வெறிகொண் டலைந்தேன்;
நீவேறில்லை; நான் வேறில்லை;
பூவே றில்லை; நிறம் வேறில்லை;
நானுன் யாக்கை; நீயென்னுவி;
நானுன் வாழ்க்கை; நீயென்வையம்;
உள்ளந்தாராய்; உயிரைத்தாராய்;
உள்ளம் வணங்கும் ஒன்றிய காதலே!



எப்படித் தம்பி, கவிதை!! ஏதேது, அமைச்சர்கள் சொல்லச் சொல்ல, அண்ணன், அகவலாகக் கொட்டு கிறான்போலும், காதல் பற்றி: என்றுதானே எண்ணிக் கொள்கிறாய்; தம்பி! இது நான் தொடுத்த கவிதையே அல்ல!! வாழ்வு எனும் மாயப் பைசாசத்தின் பிடியில் அகப்பட்டு உழன்று, பேரின்பம் பெறவேமுடியாத வகையில் சிற்றின்பச்சேற்றில் அழுத்திக் கிடந்திடும், அறம் மறந்த ஒருவரின், வேட்கை குழம்பி வெளிப்பட்டது மல்ல. இளைஞர் மனதினை ஈர்த்துக், கட்சிக்கு வலிவுதேடும் 'கதை கூறி'யின் பேச்சுமல்ல. கண் கவரும் காட்சி காட்டிக் காசுதனைப்பறிக்கக் கலையை விலையாக்கும் 'காதகரும்' அல்ல இவர்! தூயவர்! ஆம்! அங்ஙனம் நான் கூறுவதை அமைச்சரும் ஒப்புவர்! மேலவர்! அவர் அறிவு கண்டோர் கூறுவர் அதுபோல்' அம்மட்டுமன்று தம்பி! புலன் அடக்கி வாழ்கின்றார், புதுயோகி இவர்; என்று, அமைச்சர் போன்றார் போற்றினர், நாடறியும். அரவிந்தர் அமைத்த நல் ஆசிரமம் தனில் இருந்து; அறம் வளர்த்தார், இவர் துறவி, என்று அநேகர் கூறினர். அந்தத் துறவி தந்த அருங்கவிதைதான், இங்கு நான் இணைத்துத்தந்தது. காதலின்பம், மாண்பு, கூறிடுதல் தீதென்றால், இக் கவிதைக்கு என்ன பெயர்? இதனைத் தந்த, துறவியை அறிவர் நாட்டார்; **சுத்தானந்த பாரதியார்.**


அவர் பாடிஅளித்திட்ட இந்த அரும் கவிதை கண்ட அமைச்சர்கள், நாவெல்லாம் அசையாது இருந்ததுஏன்? பசைபோட்டு அவர் நாவை ஒட்டிவைத்தனரோ,எவரேனும்? கதைக்கின்றார் இது போது, 'கழகம் உள்ளோர், காதற்கதை பேசி வளர்க்கின்றார், கேடு' என்று; அன்று துறவி தொடுத்த கவிதை கண்டு, வாய்அடைத்துக் கிடந்திடக் காரணம் என்ன?அவர் கவிபாடினார்; கட்சி நடத்தவில்லை, நாம் கவி பாடவுமில்லை, கட்சி ஒன்றில் ஈடு பட்டோம்; அந்தக்கட்சியின் வளர்ச்சி கண்டதால் அவர்க்குக் கசப்பு! உள்ளே வெந்தால், வாயும் கசக்கும், என்றுரைப்பர் மருத்துவம் அறிந்தோர். இவர்தம் கசப்புக்கு இஃதே காரணம். வாய்க்கசப்புடையோர் வட்டில் தன்னில் பழச்சாறு பெய்து தந்திட்டாலும், ஐயோ! எரியுது! ஆகாது, இது தீது! என்றே அலறுவர்! குறை, அவர் நாவில்!! நமது பேச்சில் இல்லை. அகம் என்றும் புறம் என்றும் அன்று புலவோர் வகுத்த காலை, இவ்விதம் சில பேர் குமுட்டல் கொண்டோர் வருவர் என்று துளியேனும் எண்ணவில்லை. போகட்டும்! அவர் நோய், விரைவில் தீரட்டும்! விழாநாளன்று, அவர்க்கும் நல்வாழ்த்தளிப்போம் அவரும், தமிழர் ஆதலாலே.

*

இல்லற இன்பம், மாண்புடையது என்பதைச் சுவை பட எடுத்துக்காட்டும் விழாவாக, பொங்கற் புதுநாள் இருப்பதனால்தான், தம்பி! தமிழகத்திலே புதியதோர் எழில் அந்நாளில் பூத்திருக்கிறது.

வேட்டுச்சத்தம் கொட்டு முழக்கு, இல்லை!


தாளமும் மேளமும் தோற்றிடும் அளவில், 'கைலையும் வைகுந்தமும்' கிலிகொண்டு கிடுகிடுத்து, ஆங்குள்ள கடவுளர் அவரவர் வாகனம் கிடைத்திடினும் மேய்ந்திட எங்கேனும் போயிருப்பினும், இனியும் தாமதித்தால், இக்



கூச்சல் நம் உலகினைத் துளைக்கும் என்று அஞ்சி ஓடி வந்து, என்ன வேண்டும்? என்று கேட்டு, வரம்தந்து போகவேண்டும் என்று கூறும் வகையில், கோவிந்தன், பெயரையோ பரமசிவன் நாமந்தனையோ, பல்வேறு வகையான ஒலியாலே எழுப்பிடும், பஜனைக்கோஷ்டிகள், பாற்பொங்கற் நாளன்று இருப்பதில்லை.

வளை ஒலி எழும்பிடும்; வண்ணக் கலவையால் கோலம் போடுவர்! வீடு அழகுபெறும்; வீட்டுளார் புத்தாடை புனைவர்; மாடு கன்று நீராட்டல்பெறும்: அவற்றினுக்கும் புதுக்கோலம் புனைவர்; மஞ்சளும் இஞ்சியும், அவரையும், துவரையும், பூசணியும் பிறவும் கொட்டி இருக்கும்! வாழையுடன் கரும்பிருக்கும்; வடித்தெடுத்த சோற்றினிலே சுவையும் குழம்பியிருக்கும்; உண்டு மகிழ்ந் திருப்பர்; உரையாடிக் களித்திருப்பர்; இது தமிழர் திருநாள்.





தம்பி! எனக்கொரு ஆசை: சிற்சில ஊர்களிலே ஓரளவு செய்கின்றனர், நமது தோழர்கள்.

தமிழர் திருநாள், அந்த ஊருக்கே. மகிழ்ச்சி தரும் நாள்! எனவே, ஊர் மக்கள் அனைவரும், விழாக்கோலம் பூண்டிருக்கும் அந்நாள், உழைப்புக்கும், அறிவுக்கும், எழிலுக்கும், ஏற்றத்துக்கும், ஊர் மன்றம் புகழ்மாலை சூட்டிப் பெருமைப்படுத்த வேண்டும்.

உழவுத்திறன் காட்டச்சொல்லி, உழவர்க்குப் பரிசு அளித்தல்,

வலிவுத்திறம் விளக்கிடும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தி வெற்றிகொள்வாருக்குப் பரிசளித்தல்,

நேர்த்திமிக்க ஆடை நெய்தவர்க்குப் பரிசு,

ஊர் மக்கள் நோய்தீர்த்த உத்தமர்க்குப் பரிசு,

கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்க்குப் பரிசு,

முதல்தரமான பசு,

நல்ல காளை,

அழகான கன்று,

எடுப்பான தோற்றமுள்ள சேவல், கோழி,




அழகான குழந்தை,

ஆடல்பாடலில்வல்லோர்,

புதிய கவிதைகள் புனைந்தோர்,

நல்ல ஏடு தருவோர்,



இப்படிப்பட்ட, சிறப்பு இயல்புகளுடையோரைத் தேர்ந்தெடுக்க ஊர் மன்றம் கூடி, பரிசளித்து, மகிழ்ந்து கொண்டாட வேண்டும்.

அன்றலர்ந்த பூ தொடுத்த அழகான மாலையோ,

புத்தாடையோ,

பொற்பதக்கமோ,

பரிசுப்பொருள், எதுவாக இருப்பினும், அன்று பெறுவதிலே ஓர் தனி மகிழ்ச்சியுண்டு; அத்தகைய ஓர் ஏற்பாடு விழாவினுக்குச் சிறப்பளிக்கும்.

களம் சென்று மட்டுமே உள்ளவுரம் காட்ட வேண்டும் என்று தமிழர் இருந்தார் இல்லை.

ஊரார் கண்டு மகிழ, தம்மையொத்தவர் வியந்திட, வீர விளையாட்டுகளில் ஈடுபட்டு, வெற்றிபெற்று, விருது பெற்றனர்; விழாக்களிலே இவை தனிச்சிறப்பான இடம் பெற்றிருந்தன.

மல்லர்கள், தமது திறம் காட்டினர்,

மாடு அடக்குதல், வீர விளையாட்டாகத் திகழ்ந்தது.

கூடிப்பாடுதல், கைகோத்து ஆடுதல், இவை மகிழ்ச்சிப்பெருக்கைக் காட்டின.

•

விழாக்களில், ஈடுபடும்போது புது எழிலைப் பெற்றனர் — அணிபணியாலும் ஆடை வகையாலும் ஆடவரும், ஆரணங்குகளும்.



செல்வம் சீரளித்தது என்பதனை எடுத்துக் காட்டுவனவாக, விழாக்கள் இருந்து வந்தன என்பது மட்டுமல்ல, விழாக்கோலம், கலை அழகு வளர்ந்திட, வாய்ப்பு அளித்தது என்பதும் தெரிகிறது; இலக்கியம் பயிலும் போது.

கசங்கிய கண்ணினராக, கூப்பிய கரத்தினராக, வாழ்வைச் சுமையாகக் கருதிக் காதலை வெறுத்து மாதரை மாயப்பிசாசு என்று இழித்துக் கூறி, தமிழர் வாழ்ந்தாரில்லை,

வாழ்க்கையும் ஒரு கலை என்று அறிந்திருந்தனர்.



வாழ்க்கைக் கலையினை விளக்கத் தனியாக நூலொன்று தந்தாரோ வெனில், இல்லை. ஆனால் அறநெறி உரைத்திட தமிழ்ப்புலவோர் ஆக்கி அளித்த காப்பியங்களிலேயே, மக்கள் வாழ்ந்த வகையினை அழகுற எடுத்துக் கூறும்போது, கலை அறிவுடன் அவர்தம் வாழ்க்கை அமைந்து இருந்ததை எடுத்துக்காட்டினர்.

பூம்புகார், மதுரைமா நகர் இரண்டிலேயும், மாந்தர் வாழ்க்கை, சிறப்பாக மகளிர் வாழ்க்கை இருந்த விதத்தை, படம்பிடித்துக் காட்டும் பான்மையிலே தந்தவர் துறவி; இளங்கோ அடிகள்.

மலரணிக்கொண்டை மாதர்க்கு அழகு!

இளங்கோ அடிகள், மதுரை மகளிர், மலரணிந்து மகிழ்ந்திருந்தனர் என்று மட்டுமல்ல மலர்கள் பல வண்ணங்களாக உள்ளன அல்லவா? அவற்றினை ஒன்றுகத்தொடுத்து, அணிந்தனர் என்பதையும் கூறுகிறார்.

மலர் மணம் தருகிறது! எனவே, மாதர்தம் கூந்தலுக்குச் சேருகிறது.

ஆனால் இது, கலை அழகும் பெறுகிறது, கலை அழகு உணர்வு மிகுந்தவர் மதுரை மகளிர், என்பதைக் காட்டுகிறது, அவர்கள் முல்லை, குவளை, நெய்தல், மல்லிகை, செங்கழுநீர்ப்பூ, முதலியவைற்றினைத் தொடுத்து அணிந்து கொண்டனர், என்று அடிகளார் கூறும்போது.

அந்த மலர்களையும், மதுரை மகளிர், முத்தாரங்களுடன் தொடுத்து அணித்திருந்தனராம். பாண்டிநாடு முத்துடைத்து அல்லவா!!

செல்வம், சீர், கலை உணர்வு, வாழ்க்கையை வெறுத்திடாத தன்மை, இவ்வளவும் விளங்கும் வகையில், மதுரை மகளிர் முல்லை, குவளை, நெய்தல், மல்லிகை, செங்கழுநீர்ப்பூ, முதலியவற்றை முத்தாரங்களுடன் தொடுத்து அணிந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

வாழ்க்கை இவ்விதம் இருத்தல்தான் முறை; மதுரை மகளிர் இப்படி இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனை, அடிகள், எப்போது காட்டுகிறார்? கண்ணகி, கணவன் அன்பைத் திரும்பவும் பெற்று, புது வாழ்வு தொடங்கப், பொருள் தேட முயலும் நோக்குடன் கோவலனுடன் வருகிறபோது!

மதுரை மகளிர், முத்தாரமும் மலரும் தொடுத்து அணிந்துள்ளனர்; வணிகக் கோமான் மகள், கண்ணகி இதனினும் மேலாக, அணிபணி பூண்டு வாழ்ந்திடலாம்.

ஆனால், காற்சிலம்பு விற்றால்தான். கைப்பொருள் கிடைக்கும் என்ற நிலை!!

என்றாலும், மகிழ்ந்து இருக்கும் மதுரை மகளிரைக் கண்டபோது, புதுவாழ்வு கிடைக்கும்; அப்போது, இது போல...! என்ற எண்ணம் கண்ணகிக்கும், தோன்றியிருக்குமோ, என்னவோ!

காலத்துக்கு ஏற்றபடி, தம்மை அழகுபடுத்திக் கொள்வது, நுண்ணிய கலை உணர்வைக் காட்டுவதாகும்.

இப்போது, ஜப்பான் நாட்டுப் பெண்கள் தமது இல்லத்தையும், தம்மையும், வண்ணங்களின் வகை அறிந்து அழகுபடுத்தும் நுண்கலை மிகுதியாகப் பெற்றவர்கள் என்று கண்டறிந்தோர் கூறுகின்றனர்.

காலத்துக்கு ஏற்ப, ஊர் கோலம்கொள்கிறது — இயற்கை அப்படிக் கோலத்தை மாற்றிக் காட்டுகிறது.

அந்தக் கோலத்துக்கு ஒத்ததுபோல ஆடை அணி புனைவது, கலை அழகினை நன்கு உணர்ந்தால் மட்டுமே முடியும்.

அத்தகைய கலை உணர்வு மதுரை மகளிருக்கு இருந்திருக்கிறது என்பது வாடைக்காலத்துக்கு ஏற்ப அரத்தப்பூம்பட்டையை, மளிர் அணிந்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து தெரிகிறது.

பூம்புகார் நகரத்துப் பெண்கள் பகலில் பட்டு ஆடையும், இரவில் பருத்தி ஆடையும் உடுத்தினராம்.

ஆரணங்குகள் மட்டுமல்ல; ஆடவரும், அணிபணி பூண்டு, தம்மை அழகுபடுத்திக்கொண்டனர். வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொற்குவளை மலர்களை, ஆடிடும் விறலியர் அணிவராம்.

வெள்ளியால் நார்! பொற்குவளை! — வண்ணங்களை அடுக்கி அழகுபெறும் கலைத்திறனை, கலையால் கவர்ச்சியூட்டும் விறலியர் பெற்றிருப்பது மிகப்பொருத்தமல்லவா?

ஆடவரோ, கடகம், கழல், எனும் அணிகள் பூண்டிருந்தனர்.

அவை, செல்வத்தைக் காட்டுவன மட்டுமல்ல; **வீர** வெற்றிகள் பெற்றவர் என்பதையும் காட்டுவன.

**கொள்ளழல் புரிந்த தாமரை**
**வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே.**

புறநா: 11

**எரியகைந் தன்ன வேடி தாமரை**
**சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி**
**நூலின் வலவா நுணங்கரின் மாலை**
**வாலொளி முத்தமொடு பாடினி யணிய.**

—பொருந: 159-62

[வேடி-சிவந்த (பொன், அழகிய); பித்தை-கூந்தல்; பாடினி-பாடுபவள்.)



அணிவன, சூடுவன, என் பதில் மட்டுமல்ல, பூசுவன வற்றிலே, பல பொருள், பல முறைகள் இருந்திருக் கின்றன.

மாதவி, தன் கூந்தலை பத்து வகைப்பட்ட துவர், ஐந்து வகைப்பட்ட விரை, முப்பத்து இரண்டுவகை ஓமாலிகைகள் முதலியன ஊறின நல்ல நீராலே கழுவி, வாசனைப் புகையூட்டி கஸ்தூரி, சவ்வாது, கலந்த தைலத்தைத் தடவி அழகு படுத்திக்கொண்டாள், என்று சிலப்பதிகாரம் செப்பு கிறது.

இப்படியெல்லாம் செய்து, கோவலனை மயக்கினுள் —என்று கூறுவர், நுனிப்புல் மேய்வோர்.

எண்ணிப்பார்த்து வியப்படைய வேண்டியது அஃது அல்ல. இவ்வளவு இன்பமாகச், செல்வமாகக், கலை அழகு உணர்வுடன், காட்சிப் பொருளாக வளர்ந்த அந்த ஆடலழகி, கோவலன் தன்னைத் துறந்தான், பின்னர் வெட்டுண்டு இறந்தான் என்ற உடன், என்ன ஆனுள்? எல்லாம் துறந்தாள்!!

அவ்வளவு அழகூட்டும் முறைகளும், அவனுக்காக; அவனை மகிழ்விக்க! அவன் இல்லை! அவை இனி ஏன்? என்று துறந்தாள்.

ஆடலழகியரும் விறலியரும் அழகளிக்கப் பலமுறை தேடிக்கொள்வதிலே வியப்பென்ன? அது பொதுமுறை யாமோ? என்று சிலர் ஐயப்படுவர்.

**அலத்தகம்** எனும் செம்பஞ்சுக் குழம்பை, கால், உள்ளங்கை, இதழ், நெற்றி, நகம், இங்கெல்லாம் பூசி **இலக்கணையார்** மண அறைக்கு அழைத்துக்கொண்டு வரப்பட்டார் என்று சிந்தாமணியில் காண்கிறோம்.

கால வேறுபாட்டினைக் கவனித்து; பெண்கள், மலர் சூடுவர், என்பதும், கூறப்பட்டிருக்கிறது.

## மாதவியின் ஒப்பனை

**பத்துத் துவரினும் ஐந்து விரையினும்**
**முப்பத் திருவகை யோமா லிகையானும்**
**ஊறின நன்னீர் வுரைத்த நெய்வாசம்**
**நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்**
**புகையில் புலர்த்திய பூமென் கூந்தலை**
**வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி**

—சிலப்: கடலாடு காதை: 76-81.

[துவர்-பூசுவன, விரை-கலவைச் சாந்து; ஓமாலிகை-மணம் உள்ள நீரில் இடும்பொருள்; மான்மதம்-கஸ்தூரிக் குழம்பு.]

**அம்மலர் அடியுங் கையும் அணிகிளர் பவழவாயும்**
**செம்மலர் நுதலும் நாவும் திருந்தொளி**
**உகிரோ(டு) அங்கேழ்**
**விம்மிதப் பட்டு வீழ அலத்தகம் எழுதி இட்டாள்**
**அம்மலர்க் கண்ட முள்ளிட் டரிவையைத்**
**தெரிவை தானே.**

—இலக்கணையாரிலம்பகம்: 69

[நுதல்-நெற்றி; உகிர்-நகம்; அலத்தகம்-செம்பஞ்சுக் குழம்பு.]

முன்பனிக் காலத்தில், மகளிர், தம் கூந்தலில் மல்லிகையையும் அதன் அருகே **வாகையையும்** சூடிக் கொள்வராம்.

இளவேனிற் காலத்திலோவெனில், கழுநீர் மாலையாம், குவளை மலராம்!!

தம்பி! இவ்விதமாக வெல்லாம், இல்லறத்திலே, வாழ்க்கைக் கலையழகுடன், வாழ்ந்துவந்தவர் தமிழர், முன்பு!!

தமிழரின் தனிச்சிறப்புடை திருநாளாம், பொங்கற் புதுநாளன்று—ஓர் நாளாகிலும்—எழில் குலுங்க, இன்பம் துலங்க, மகிழ்ச்சி பொங்க இருக்கவேண்டாமா? அதை அறிந்தே, தமிழகம் விழா நடத்தி மகிழ்கிறது.

•

எதனையும் அளித்திட இயலாதாராக உள்ள இன்றைய ஆட்சியாளர், தமிழர் வாழ்ந்த வகை அறிந்து அகமகிழ்ந்திடும் வாய்ப்பினைப் பெறுகிறார்களே, இன்று மக்கள்—ஓரளவுக்கு—நமது கழகம், தரணி மெச்சத் தமிழர் ஓர் காலத்தில் வாழ்ந்த சீரினை எடுத்துக்காட்டுவது கேட்டு; அந்த மகிழ்ச்சியையாவது அனுபவித்துத் தொலைக்கட்டும், என்று வாளா இருக்கிறார்களா? இல்லை, வேலாய்க்குத்துகிறார்கள்! அதென்ன, தமிழ், தமிழர், தமிழ்நாடு, தமிழ்ப்பண்பு! இதெல்லாம் சின்னப்புத்தி! பேதப்புத்தி! ஆகாவழி! என்று பேசுகின்றனர். பேசுவ துடன், இவ்விதமெல்லாம் தமிழ் இனம், தமிழ் நாடு, திராவிடம், தனி அரசு, என்றெல்லாம் பேசுகிறார்களே, இந்தக் கழகத்தார்கள், ஏன் தெரியுமா? என்று கேட்டு விடையும் தருகிறார்கள்; எல்லாம், அமைச்சர் ஆகும் ஆசையினுல்தான் என்று.

பாரேன், தம்பி! ஒவ்வொரு நாட்டு அறிவாளர், வித்தகர், வேலையற்றுப்போய், சந்திரமண்டலம் போகும் வழி, செவ்வாய் மண்டலத்தின் தன்மை, எனும் ஏதேதோ ஆராய்ச்சி நடத்துகிறார்கள்—நமது அமைச்சர்களைப்பார்! யாரும் நடத்தாத, எவராலும் நடத்த இயலாத, எவரும் வியந்து பாராட்டத்தக்க ஆராய்ச்சி நடத்திப், பேருண்மை ஒன்றைக் கண்டுபிடித்துக்கூறி விட்டனர்—தனிநாடு என்று நாம் பேசுவது மந்திரி வேலைக்காகத்தான்! என்று!!

இப்படி அமைச்சர்கள் பேசியது கேட்ட, நண்பரொரு வர், சொன்னார், நூலை அறுத்திடுமோ என்று அஞ்சி,



அங்கு குதித்துக் கூத்தாடிய குரங்குகளை ஒருவன் விரட்டினனும்! குரங்கு, ஓஹோ! என்போன்ற 'வால்' இவனுக்கு இல்லாத பொறுமையால், இவ்விதம் செய்கின்றான்! எனக்குள்ள பெருமையே இந்த 'வாலால்' வருவதன்றோ, இது அந்த மானிடனுக்குக் கிடைத்திடலாமா — கூடாது.— என்று கூறிற்றாம். ஏதோ அப்படி ஒரு கதையாம்.

நான்தான், மெத்தவும் கேட்டுக்கொண்டேன், அந்த நண்பனை, இப்படி நாலுபேர் நடுவே பேசாதேயப்பா — சரியல்ல — நமக்கும் அவர்களுக்கும் பிறகு வித்தியாசம் தான் என்ன — அமைச்சர்கள் பேசட்டும் — தாங்கிக்கொள்வதிலே என்ன தலை இறக்கம் — அவர்களையே நாடு தாங்கிக்கொள்கிறபோது அவர்களின் நாக்குத் தீண்டுவது கண்டு நாம் கோபப்படலாமா? என்றெல்லாம் சொல்லிவைத்தேன்.

தம்பி! தமிழகத்தின்பழங் காலச் சிறப்பினை மறந்துவிட்டால், இன்று அமைந்துள்ள, வட அரசுக்கு இம்மியும் எதிர்ப்பு எழாது என்றெண்ணி, வரலாற்றையும் இலக்கியத்தையும் கூட, அழித்தொழிக்க முனைகின்றனர்.



தமிழ் உணர்வு. பொங்கற் புதுநாள் போன்ற பொன்னான விழாக்களின்போது. ஏற்றம் பெற்றுத் திகழ்கிறது.

இதை அறிந்து, பாழாக்க இனி, என்னென்ன செய்வரோ, யாரறிவார்.

•

முன்பு நான், **வாழு! வாழவிடு!!** என்றெழுதிய போது, நமது இயற்கையும், உரிமையும் கொண்ட தமிழர் திராவிடர் என்ற உணர்ச்சியையும் அழித்தொழித்து, பாரதம், ஏக இந்தியா எனும் உணர்ச்சி போலி என்ற காரணத்தால் அதனைப் புகுத்தி வெற்றிகாணவும் முடியாமல் ஒரு 'சூன்ய' நிலைமையை, எங்கே இவர்கள் ஏற்படுத்திவிடுவார்களோ என்ற அச்சத்தை வெளியிட்டேன். பலர், அவ்விதம் அஞ்சத் தேவையில்லை. நாம், நமது இன உணர்ச்சியை என்றும் இழந்துவிடப் போவதில்லை என்றெல்லாம் எழுதி எழுச்சியூட்டினார்கள். அவர்கட்கு என் நன்றி. பொங்கற் புதுநாள் போன்ற விழாக்காலம், தமிழ் இன உணர்வை, மங்கிடாதிருக்கச் செய்யும் மகத்தான நல்வாய்ப்பு. எனவே மனைதொறும் பெற்றிடும் மகிழ்ச்சியுடன், மன்றமெங்கும், தமிழர் மாண்புபற்றி எடுத்துரைத்திட இந்த நாட்களைப் பயன்படுத்துதல் ஏற்றம் அளிக்கும்; அறிந்து செயல்பட வேண்டுகிறேன்.

•

உருட்டி மிரட்டினாலும், உறுமிக் கிடந்தாலும், உண்மையினை அடியோடு ஒழித்துவிடுதல் இயலாது.

வரலாறு தெளிவாக உணர்த்துவது, ஓர் பேருண்மை. நமது இடம், திருஇடம்; வடக்கே வேறு இடம்; இரண்டும் பிணைக்கிறார்கள்; அது ஒவ்வாது, என்பதை எடுத்துக் கூறாத, வரலாற்றுப் பேராசான்களும், உளநூல் வல்லோரும் — விலைக்கு வாங்கப்பட்டவர்கள் தவிர — இல்லை என்று கூறலாம்.

தம்பி! இந்தியா என்பது இயற்கையானது அல்லதான் — பலவேறு இனங்களின் இருப்பிடங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன என்பதும் உண்மைதான் — என்றாலும், இந்தியாவை ஒரு நாடு ஆக்கிவிட்டோம் — ஒரு பேரரசு அமைத்துவிட்டோம் — இனி இதை மாற்றப்போவதில்லை என்று பேசுகின்றனர் அரசினர்.

இது வேதனை நிரம்பிய பேச்சு — இன உணர்ச்சி உள்ள எவரையும், செய் அல்லது செத்துமடி என்று தூண்டிவிடக்கூடிய அறைகூவல்; அதுமட்டுமல்லாமல், ஒரு போலி அமைப்புதான் இந்தியா என்பதை வெட்கமின்றி ஒப்புக்கொள்வதுமாகும்.

கிடைத்ததை விடமாட்டோம் என்று பேசுவது அறம் அறிந்தோர் பேச்சு அல்ல — ஆதிக்கக்காரரின் ஆணவப் பேச்சு.

ஆனால் வரலாறும், இலக்கியமும் அழிக்கமுடியாத விதத்தில் ஏற்படுத்தி வைத்துள்ள உணர்ச்சி, வழிவழி வளர்ந்து, பண்பாடு ஆகி, இருக்கிறது; அந்த 'உணர்ச்சியை' அழித்துவிடுவது, இயலாத காரியம் என்பதை, இன்று ஆதிக்கத்தை நம்பிக்கொண்டிருக்கும் அரசினர், ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள்.

ஆனால், உரிமைக்காக எதனையும் இழந்திடும் வீர உணர்ச்சி தியாக உள்ளம், கொழுந்துவிட்டு எரியும்போது ஆணவம் வெந்து கருகிச் சாம்பலாகும்

இவ்வளவு பலமாக அமைத்து விட்டிருக்கிறோம், ஆதிக்கத்துக்கு அரண்கள் உள்ளன; அரண்காக்கப்படைகள் உள்ளன; படைகளை அமைத்திட பணபலமும் உண்டு. என்று இறுமாந்துகிடப்போர், இந்தியப்பேரரசு என்றென்றும் நிலைத்து இருக்கப்போகிறது என்று எண்ணுகிறார்கள்.



எனினும், அவர்களுக்கே சிற்சில போது, ஐயப்பாடும் அச்சமும், கவலையும் கலக்கமும் ஏற்பட்டுவிடுகிறது; கை பிசைந்துகொள்கின்றனர்; இந்தியர் என்ற உணர்ச்சி இல்லையே என் மொழி! என் பிர

தேசம்! என்று பேசுகிருர்களே. அதற்கு ஏதேனும் கெடுதல் நேரிடும் என்று தெரிந்தால், பேயாட்டமாடுகிருர்களே! என்று பேசுகிருர்கள், மனம் மருண்டு.

பேரரசு அமைத்து விடலாம்—பலர் அமைத்தனர்—அதனை உடைபடாமல் பாதுகாக்கவும் செய்யலாம் வெகு பாடுபட்டு—ஆனல் பிணைக்கப்பட்ட நாடுகளிலே, ஏற்பட்டுவிடும் மனக்கசப்பு, மாருது. அதுசமயம் பார்த்துக் கொண்டு இருக்கும் நச்சரவம் போன்றது.

புயலில் வீழும் பெருமரங்கள், நாலைந்துநாட்களுக்கு முன்பே, நான் விழப்போகிறேன்—என் வேர்கள் நைந்து போயுள்ளன பெரும் காற்றடித்தால் தாங்கி நிற்கும் வலிவு எனக்கு இல்லை—என்று அபாய அறிவிப்பா தருகிறது.

காரணமற்று, அடிப்படைக் கோளாறுடன், அமைக்கப்படும் எந்தப் பேரரசும், விடுதலை ஆர்வம் முற்றிப் புரட்சிப் புயலாக மாறும்போது, பொடிப்பொடியாகித்தான் போகும்.



•

உதுமானிய சாம்ராஜ்யத்தைவிடப் பேரரசு இருந்ததில்லை என்று கூறலாம், வீரமும் திருவும் விளங்கிடும் சாம்ராஜ்யமாகத்தான் திகழ்ந்தது. உதுமானிய சாம்ராஜ்யத்தின் புகழ்பாடக் கவிவாணர்களும், வெற்றி தேடிக் கொடுக்க வீரர்குழாமும், அணி அணியாக இருந்தனர்.

படைபலம் மட்டுமல்ல, உதுமானிய சாம்ராஜ்யத்துக்குத் தேவபலமும் இருக்கிறது என்றுதான் செப்பிப் பெருமைபட்டனர்.

எவ்வளவு விரிந்து பரந்து இருந்தது! எத்துணை எத்துணை எழிலூர்கள், அந்த சாம்ராஜ்யத்தில்.

உதுமானிய சாம்ராஜ்யத்திலே, இருந்து, இதுபோது தனிநாடுகளாகி, விட்டவைகளின் பட்டியலைப் படித்தால் வியப்பாக இருக்கும்; அவ்வளவு 'நாடுகளை' சாம்ராஜ்யம் தன் இரும்புக் கரங்களில் வைத்துக்கொண்டிருந்திருக்கிறது.

இன்றைய துருக்கி
கிரீஸ்
பல்கேரியா
ருமேனியா
செர்பியா
போஸ்னியா
கிரீமியா
ஈஜிப்ட்
சிரியா
துனீசியா
திரிபோலி
அல்ஜியர்ஸ்

இவை உதுமானிய சாம்ராஜ்யத்தின் பகுதிகள்!

இந்தியப் பேரரசு, எப்படி, திராவிடம் போன்ற நாடுகளை, 'பிரதேசங்கள்' என்று பேசிவருகிறதோ, அது போல, இவைகளை உதுமானிய சாம்ராஜ்யம், பகுதிகள் என்றுதான் குறிப்பிட்டது.

1907ம் ஆண்டுவரை உதுமானிய சாம்ராஜ்யம், பல இனம், பலநாடுகளை, தன்னுடைய பிடியில் வைத்துக் கொண்டு, ஆண்டவனின் அருளும், படைபலமும், பாதுகாப்பு அளித்து வருவதாகவும், எதிர்த்து எவரும் ஏதும் செய்துவிட முடியாது என்றும் எக்காளமிட்டது.

இன்று, தம்பி! இத்தனை பெரிய உதுமானிய சாம்ராஜ்யம், என்ன ஆயிற்று? உடைபட்டுப் போயிற்று!

துருக்கியை மையமாக வைத்துத்தான், உதுமானிய சாம்ராஜ்யம் கட்டப்பட்டது; இன்று மிச்சமாக இருப்பது துருக்கி ஒன்றுதான்.

வரலாறு அறியாதார், ஈஜிப்ட் ஒருகாலத்திலே, துருக்கியால் அமைக்கப்பட்ட, உதுமானிய ராஜ்யத்திலே ஒரு பகுதி என்று நாம் கூறினல், ஆச்சரியப்படுவர்.

கிருஸ்தவ மார்க்கத்தைக் கொண்ட பல்கேரியா, கிரீஸ் போன்ற நாடுகளாகிலும், இஸ்லாமிய மார்க்கத்தைக்கொண்ட துருக்கியர் அமைத்த சாம்ராஜ்யத்தில் இருப்பது இழுக்கு, கடவுளுக்கே பொறுக்காது என்று கருதிக் கொதித்தெழுந்து, விடுபட, தனியரசாகத் துடித்திருக்கலாம்—ஈஜிப்ட்டுக்கு என்ன கெடுதல்?

ஈஜிப்ட்டில் உள்ளவர்கள் அராபியர்.

துருக்கியரும் அராபியரும் இருவருமே, இஸ்லாமியர். மதம் ஒன்று! என்ருலும், அராபியருக்கு அராபியர் என்ற இன உணர்ச்சி, துருக்கியரின் சாம்ராஜ்யத்தில் எவ்வளவு அழுத்தமாக பிணைக்கப்பட்டிருந்தும் மங்கிப் போய்விடவில்லை.

இஸ்லாம்போல, மார்க்கத்திலே சேர்ந்துள்ளவர்களை ஒன்றுபடுத்தும் மகத்தான சக்தி வேறு இல்லை. இருந்தும் அராபியர் தம் இன உணர்ச்சியை இழக்கவில்லை.

இப்போதும், நாசர், அராபியப் பேரரசு என்றுதான் கூறிப் பூரிப்படைகிருர்.

இமயமுதல் குமரிவரை, எங்கு இருந்தாலும், இந்தியப் பேரரசில், பேதம் காட்டப்படுவதில்லை; எல்லோரும் சமம் — எவரும் தாழ்வில்லை — எவரும் உயர்ந்தோர் என்றும் உரிமை கொண்டாடுவதற்கில்லை — என்று இந்தியப் பேரரசுக்காக வாதிடுவோர் பேசுகின்றனர்.

உதுமானிய சாம்ராஜ்யத்தில், துருக்கியர், அராபியரை எந்த ஒரு துறையிலும், எந்த வகையிலும், தாழ்வாக நடத்தவில்லை. படையிலாகட்டும், ஆட்சி அலுவலகங்களிலாகட்டும், அராபியர், துருக்கியருக்குச் சமமாகவே, இடம் பெற்றனர், பெருமை பெற்றனர். என்ருலும், நாம் அராபியர்! நமது நாடு, ஈஜிப்ட்! இன்று அதனைத்

துருக்கியர், தமது சாம்ராஜ்யத்தில் அடிமைப்படுத்தியுள்ளனர் என்ற எண்ணம், அவர்கள் மனதைவிட்டு அகலவே இல்லை.

அராபியரும் துருக்கியரும் கலப்பு மணம் செய்துகொண்டும் வாழ்ந்தனர். என்ருலும், அராபியர் என்ற தேசீய உணர்ச்சி, பீறிட்டுக்கொண்டு வந்தது, சாம்ராஜ்ய பிடிப்புப் பொடிப்பொடியாயிற்று; விடுபட்ட ஈஜிப்ட் தனி அரசு, தன்னரசு நடத்துகிறது.

•


அது அந்தக்காலம்—புரட்சி செய்து--படைகொண்டு தாக்குவது — அதனுல்தான் பேரரசிலிருந்த நாடுகள் பிரிந்து, தனி அரசு என்ருகிவிட்டன. இது வேறு காலம்!! என்று, மிரட்டும் குரலிலும், கேலிசெய்யும் விதத்திலும், ஆதிக்கக்காரர் பேசுகின்றனர்.

காலம்,-முறைகளை மாற்றுமே தவிர, மனப்போக்கையும், உணர்ச்சியையும், நிச்சயம் மாற்றிவிடாது-அழித்துவிடாது.


முன்புபோல அல்ல, இப்போது. எந்த இடத்திலிருந்து, குமுறல் கேட்டாலும், எந்தப் பகுதியில் வீரத் தியாகிகளின் இரத்தம் கொட்டப்பட்டாலும், ஏன்? என்று கேட்கவும், நியாயம் பேசவும், துணைநிற்கவும், உலகில் பல்வேறு நாடுகள் முனைந்து நிற்கின்றன.

அந்தக் காரணத்தால்தான், **கெனியா** நாட்டு விடுதலைக்கான நல்லெண்ண ஆதரவுபெற, அந்நாட்டு விடுதலைத் தளபதி **டாம் இம்போயா**, இந்தியப் பேரரசுத் தலைவரை நாடி வருகிருர்.

அவர்களுக்கெல்லாம், தமது நாட்டு விடுதலை குறித்து எடுத்துரைக்க, இங்கெல்லாம் வரும் அளவுக்கு 'ஏகாதிபத்தியம்' உரிமை தருகிறது. ஆனுல் இங்கு நடைபெறும் 'அன்பாட்சி' 'அகிம்சையாட்சி' வெளி நாடுகள் செல்ல, நமது கழகத்தவருக்கு, அனுமதி வழங்க இப்போதே மறுக்கிறது.



இஃதொன்றே, இந்தியப் பேரரசுக்கு உள்ள வலிவைக் காட்டவில்லையா, என்று கேட்கத் தோன்றும். தம்பி! இது அந்த அரசுக்கு உள்ள வலிவை அல்ல, நம்பிக்கைக் குறைவை, பயத்தைத்தான் காட்டுகிறது. எந்த நாடு சென்று இவர்கள், வரலாற்று, இலக்கிய ஆதாரங்களைக் காட்டித், தங்கள் இன இயல்புகள் பற்றி எடுத்துச் சொன்னுலும், ஏற்றுக்கொண்டு ஆம்! ஆம் என்று பேசுவார்களே, நாம் பிறகு, பலருடைய கேள்விகளுக்கு அல்லவா பதிலளிக்கவேண்டி வந்துவிடும், என்ன பதில் அளிப்பது? நாம் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த அமைக்கப்பட்டபேரரசுக்கு'என்ன நியாயம் காட்டுவது? என்ற பயமும், நம்பிக்கைக்குறைவுமே, கழகத் தோழர்களை, வெளிநாடுகள் போகவிடாமல் தடுத்து வைத்திடச் செய்கிறது.




ஆனுல், தம்பி! இலண்டனிலோ, பெர்லினிலோ, டோக்கியோவிலோ, பாரிசிலோ, வாஷிங்டனிலோ இதுபற்றி இப்போது ஒன்றுமே தெரியாது என்றும் கூறிவிட முடியாது.

நமது பூம்புகார் பற்றியும், கொற்கை குறித்தும், உறையூரில் நமது அரசு இருந்த ஏற்றம் பற்றியும், நமது மன்னர், காழகம், கடாரம், வங்கம், கலிங்கம், சென்று வெற்றி கண்டது குறித்தும், நமது தமிழகப் பட்டிதொட்டிகளிலெல்லாம், எடுத்துக்கூறும் கட்டத்திலே நாம் மும்முரமாக ஈடுபடவேண்டி இருக்கிறது.

தமிழகமெங்கணும், தமிழ் இன உணர்வு வீரமணம் எழுப்பினுல், பிற நாட்டார் நம்மை அறிந்துகொள்ளச் செய்வதிலே கஷ்டம் அதிகம் இருக்காது.

எந்த நாடும், ஒரு நாட்டின் ஆட்சிமன்றத்திலே எவர் இடம்பெறுகின்றனர், அவர்தம் திட்டமென்ன, கொள்கை என்ன, மக்கள் ஆதரிப்பது எந்தக் காரணம் கொண்டு என்பதனை இன்று அறிய ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

எனவேதான், இந்தியப் பேரரசு என்பது போலித் தத்துவம், சுரண்டல் யந்திரம், இன உணர்வு அழிக்கும் பலிபீடம், என்ற கொள்கையைக் காட்டி, திராவிடம் அமைக்கவேண்டும் என்ற திட்டத்துக்காகப் பணியாற்றும், நமது கழகம், பொதுத்தேர்தலில், மக்களின் பெருவாரியான ஆதரவைப் பெறவேண்டும் என்று விரும்புகிருேம்.

அது கிடைத்திடுமேல், தட்டாமலே, அறமன்றக் கதவுகள், திறக்கப்படும்; கேளாக் காதினருக்கும், நமது விடுதலைப் போர்ப்பரணி கேட்கும், வெற்றித் தென்றல் வீசிடும்.

தம்பி! இன்று விழாநாள். தென்றல் காண்கிருய் இல்லத்தில்! இது, உன் மனைமாட்சிக்கு எடுத்துக்காட்டு. ஆனுல் நாட்டிலே வீசி, நலிவுகளைப்போக்கிடும், வெற்றித் தென்றல் விடுதலை எனும் சந்தனமணம் கமழ்ந்து, வீசிட வேண்டும் அன்ருே,



அதற்கான அரும் பணி அடுக்கடுக்காய் உள்ளது, அறிவாய். அறிந்ததை உரைத்திடின், ஆரணங்கும் தடுத்திடப்போவதில்லை

பொருள்தேடப் புறப்படுகிறீர்என்றால், இருப்பார்க்கு வந்து உரை என்று இயம்பிடுவாள், சங்ககாலத்துப் பெருமாட்டி! அந்த ஆரணங்கேகூட, களம் செல்கிறான் என்றாலோ, வேல் எடுத்துக் கரம் கொடுத்து, புன்னகை விருந்திட்டுப் போய்வருவீர், என் அரசே! வெற்றித் திருவுடனே, நீர் வருவீர், நானறிவேன்! நாடு உமை அழைக்கிறது. நாட்டுக்கே நாம் உள்ளோம். மாடுமனை இருப்பதும், மலர்த்தோட்டம் இருப்பதும் ஆங்கு நாம் ஆடி மகிழ்வதுவும் நாடு நமது என்ற நன்னிலை இருப்பதனால்தான், அந்த நிலைக்கு ஒருதுளியும் குந்தகம் விளையுமென்றால், ஆவி தரிக்காது; மானமொன்றே நமக்கு வழி வழி வந்த செல்வம், அது காக்கப் புறப்படுவீர்! ஆற்றல் உண்டு நாட்டைக்காக்க! அந்தக் கடமையினை ஆற்ற நீர் செல்கையிலே, பிரிவு தாங்கும் மனம் உண்டு, தமிழ் மகள் நான்! என்றுரைத்து களம் அனுப்பிவைப்பர்.

இன்றும், அந்தப் பண்பு பட்டுப்போய்விடவில்லை. எத்தனையோ தாய்மார்கள் நாட்டுக்கு இடிவந்துற்ற காலையிலே, ஆரணங்கு பலரும், தம் நெஞ்சில் நிறைந்தவரை, கொஞ்சு மொழி பேசிடும் தம் கொழுநரை, கோல்கொண்டோர் அது சாய்க்கும் வேலையிலே ஈடுபட்டு, தமிழ் வீரத்தைப் பழித்தபோது, அறப்போருக்கு அனுப்பிவைத்தார்—அறிவோம் நாம். அது நம் கழக வரலாறு.

**'நாகநாடு'** கேட்டிடும் தலைவனை வேட்டையாடிப் பிடிக்கப்பார்த்தனர்; இன்றோ அவன் கேட்டிடும் 'தனிநாடு' போன்ற ஒரு ஏற்பாடுதந்து, சமரசம் கேட்கின்றார்; நாகர் இணங்க மறுக்கின்றனர்.

**'பஞ்சாபிசுபா'** கேட்கும் பழம்பெரும் வீரராம் **தாராசிங்** பாடிடும் பரணிகேட்டுப் பல்லாயிரவர் சிறை சென்று, இன்று விடுதலை பெற்றுவந்தனர் வெளியே, அறப்போர் தொடுத்திட—புதிய முறையினில்.

'ரகுவம்ச' காலமுதல் எமது **வங்கம்** எவருக்கும் அடிபணிந்துகிடந்ததில்லை, இன்றும் எவர் எம்மை அடிமை கொள்ளச் சூழ்ச்சிகள் செய்திடினும், முறியடிப்போம் என்று முழக்கமெழுப்புகின்றனர் வங்க மக்கள்.

அவரெலாம் அடவிதன்னைப் புகலிடம் என்று பெற்று உழன்ற காலத்திலேயே, அணிநகர் பலவும்கண்டு, அறநூற்கள் பலவும்பெற்று, அரசு அமைத்துத், தமிழர் வீரமுரசு கொட்டி வாழ்ந்தார்.

**ஆப்பிரிக்க** கண்டத்துள்ளார், அடவியில் உள்ள பொல்லா மிருகத்துக்கொப்பார் என்று. அவர்களைப் பிடித்துச்சென்று அடிமைகளாக விற்றார், ஆணவ வெறியர் முன்பு. இன்று ஆப்பிரிக்க பூபாகமெங்கும் விடுதலை முரசு!

எவரையும் அடிமைகொள்ள எவருக்கும் உரிமை இல்லை; அவரவர் தாயகத்தில் தனி அரசமைத்து வாழ்வதே, அவனிக்கு அடுக்கடுக்காய் அழகுறு அணி அளிக்கும், இதனை இனிக் காணவிட்டால், இருண்டிடும் எதிர்காலமென்று, அறிவுளார் அனைவருமே அறைகின்றார் நாளும்.

இத்தகு நாட்கள் தன்னில் இருந்திடும் நமக்குத் தம்பி! மெத்தவும் பொறுப்பு உண்டு, விடுதலைக்கு நல்வாய்ப்பு உண்டு; வேண்டுவதெல்லாம் உறுதி; அதுபோல் உறுபகை அழிக்கவல்ல கருவியும் வேறு உண்டோ?

அந்த உறுதிபூண்ட வீரனும் உனக்கு ஓர்நாள், திருநாளாய் உள்ளது; உறுதி வளர்த்திடும் வகையான உற்சாகம் பெற்றிட.

ஆகையினால், அருமைத் தம்பி! ஆகட்டும், ஆகட்டும் இன்றுனக்கு அரிய விழா; அதிலே கிடைக்கும் இன்பம், பெற்று மகிழ்ந்திடுக! பேசிட ஆயிரம் உண்டு! பூசிடச் சந்தனம் உண்டு! வாசமலரெடுத்துச் சூட்டிடவும், வாய்ப்புண்டு!! இத்தனையும் உன் செல்வம், இடம்கொடுத்தால் மட்டுந்தான்!

இன்பம் பொங்கி, நின் இல்லம் எழில்பூத்து விளங்கட்டும். அந்த இன்பத்தூடே, திருநாடு தெரியட்டும், என்ற என் நல் வாழ்த்தே, நான் இன்று உனக்களிப்பேன். வேறென்ன வேண்டும் உனக்கு.



**மழை**

**நெஞ்சில் நெருப்பு**

**கன்னி விதவையானாள்**

**நீதிபதி, வக்கீலானார்**

**செந்தாமரையாள்**

**பூச்சு வேலை**

என்பன ★ இக்குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன; அவை நானளிக்கும், இஞ்சி, மஞ்சள் இன்னபிற என்று கொள்ளேன் !

பொன் எனினோ, உன் மின்னிடையாள், மேனிக்கென்ன!

மணி எனினோ, மகவின் கண் ஒளியே, காண்பாய்! உன்னிடம் உள்ள செல்வம் ஏ! அப்பா! மிக அருமை!!

நான் அளிக்க ஒன்று உண்டு; என் நல்லெண்ணம்; வாழ்த்துக்கள்; இல்லம், இன்பப் பூங்காவாக திகழ்க! உனக்கென்று அளிக்கும்போது, அதனைப் பெற்று, மற்றவர்க்கும் பகிர்ந்தளித்து மகிழ்வாய் என்று, சொல்லவா வேண்டும்; நீ, தமிழன்; என் உடன்பிறப்பு! வாழ்க! வாழ்க!!

அண்ணன்,

அண்ணாதுரை

# மருந்தகத்தில் மாரி

## பவாணன்

"நான் அப்போதே சொன்னேன். நீங்கள் கேட்கலியே சாமி! இப்போ அந்தப் பாவி, கல்லைத் தூக்கித் தலையிலே போட்டுட்டானே! நான் எதிர் பார்த்தது நடந்துவிட்டது, முதலாளி!!' என்று கதறிக்கொண்டே மருதூர் மிராசு மகாலிங்கத்தின் அறைக்குள் நுழைந்தான மாரிமுத்து.

ஊர்க் கோடியிலிருக்கும் இலுப்பைத் தோப்பில் குடியிருக்கும் மாரி, மிராசிற்குப் பரம்பரை, பரம்பரையாகத் தொழில் செய்துவரும் குடும்பத்தைச் சேர்ந்தவன. ஆகவேதான, அவன் வரும் அவசரத்தைப் பார்த்தவுடன், மகாலிங்கமும் திடுக்கிட்டு எழுந்தார். அவர் பக்கத்திலே நின்றுகொண்டிருந்த கணக்கப் பிள்ளை கனகர்,

"என்னப்பா, மாரி? என்ன நடந்தது — ஏன் இப்படிப் பதட்டப்படுகிறாய்?" என்றார்.

"சொல்லவே நா கூசுதுங்க......எங்க அப்பா காலத்திலே இருந்து நாங்க குடியிருந்த வீட்டைக் காலிசெய்யணுமாங்க........." என்று அவன் கூறி முடிப்பதற்குள் அவன் கண்களிலே நீர் கலங்கியது.

"ஏன்......எதற்காக நீ காலி செய்யணுமாம்" என்றார்.

"இதோபாருங்க, சின்னச்சாமி கொடுத்தநோட்டீசுங்க......" என்று கையில் வைத்திருந்த நோட்டீசை நீட்டினான்.

மகாலிங்கம் நோட்டீசை வாங்கிப் படித்தார்.

அதைத் திரும்ப, திரும்பப் படித்துப் பார்த்தார்.

அந்தத் தோப்பை விற்கும்போது தெளிவாகச் சொன்னேன்; அந்தச் சின்னச்சாமி எல்லாவற்றிற்கும் தலையை ஆட்டினான். இப்போது உனக்கு நோட்டீசா கொடுக்கிறான!" என்றார் ஆத்திரமாக.

ஊர்க்கோடியிலிருக்கும் இலுப்பைத் தோப்பு மகாலிங்கத்தின் பரம்பரைச் சொத்து. அதிலிருந்து வரும்படி எதுவும் கிடையாது. ஆனாலும், அதிலிருக்கும் இலுப்பை மரங்களை மாரிக்குத்தான் குத்தகைக்கு விடுவது வழக்கம். ஆண்டுதோறும் வரும் பலனில் பாதியை ஊர்க் கோயிலுக்குக் கொடுத்துவிட்டு, மீதியை மாரியே எடுத்துக்கொள்ளலாமென்பதுதான் குத்தகை விதி.

சண்டை வந்த பிறகு ஊரில் நிலத்தின் விலை ஏற ஆரம்பித்தது.

கணக்கப்பிள்ளை, கனகசபேசர்தான் மார்க்கெட் நிலவரத்தை அவ்வப்போது அவருக்குக்கூறி முதலில் விருப்பமில்லாதிருந்த மகாலிங்கத்துக்கு, நல்ல விலை வரும்போது, விடுவது புத்திக் கூர்மையல்ல என்று விளக்கி மனதை மாற்றினர்.

தோப்பிலே என்ன பயிர் செய்தாலும், இலுப்பை மரம் குத்தகையை மாரிக்கே தரவேண்டுமென்று மகாலிங்கம் கூறினர். அதற்கு ஒப்புக் கொண்டே சின்னச்சாமி தோப்பை வாங்கினன்.

இன்று சின்னச்சாமி இப்படிச் செய்துவிட்டான், கோபம் அவருக்கு.

"உன்னைக் காலிசெய்யச் சொல்லிவிட்டு, என்ன செய்யப் போகிறானம்?" என்று வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு கேட்டார், மகாலிங்கம்.

மாரி தயங்கினன். மெதுவாக "அதை ஏனுங்க கேட்கிறீங்க. அங்கே என்னமோ 'பேக்டரி' வரப் போகுதங்களாம்.........இருக்கிற மரங்களையெல்லாம் வெட்டிவிட்டுக், கட்டடங்கள் கட்டிப் புதிய இயந்திரங்கள் அமைத்து, ஆட்டிறைச்சியிலிருந்து மருந்து தயாரிக்கப்போகிறார்களாம்!" அதற்குமேல் மாரி பேசுவதற்கு மகாலிங்கம் அனுமதிக்கவில்லை; அவருடைய கோபம் எல்லையை மீறிவிட்டது.

"ஆட்டிறைச்சியாவது, மருந்தாவது! நம்ப ஊரிலே,நம்மிடமிருந்து வாங்கின தோப்பிலே, அதுவும் கோயிலுக்கு இலுப்பெண்ணெய் தரும் மரங்களை வெட்டிவிட்டா இந்த அக்ரமம் நடக்கணும்?" என்றார்.

"அந்தச் சின்னச்சாமியைப்போய் அழைத்து வாங்கய்யா, கணக்கப் பிள்ளை. இந்த மாதிரி பாவகாரியம் செய்கிறதற்கா நான் தோப்பை அவருக்கு விற்றேன்? சொன்னபடி நடக்க விருப்பமில்லையென்றால், பத்திரத்தை வாங்கிக் கிழிச்சுப் போடுங்கய்யா!" என்று கனகரைப் பார்த்து கூவினர் மகாலிங்கம்.

"ஆமாம், முதலியார்வாள். நீங்க கூறியது நூறுக்கு நூறு சரிதான். நான் போய், அந்தச் சின்னச்சாமியை அழைத்து வருகிறேன்." என்று கூறிவிட்டுக் கிளம்பினர்.

*

மறுநாள் காலையில் அதே இடத்தில் மிராசுதார்—சின்னச்சாமி சந்திப்பு நடைபெற்றது. சின்னச்சாமி புதுப் பணக்காரர். சண்டை சமயத்திலே காண்ட்ராக்ட் எடுத்துப் பணம் சம்பாதித்தவர். மகாலிங்கத்தைப்போலப் பரம்பரை மிராசு அல்ல. ஆகவேதான், மிராசுதார் பார்க்க நினைக்கிறார் என்றதும், சின்னச்சாமி, அவரே கார் எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தார்.

"என்னய்யா, நான் கேள்விப்பட்டது உண்மையா?" என்று மிராசு தோரணையில் ஆரம்பித்தார் மகாலிங்கம்.

"எதைப்பற்றிங்க...?" என்று மரியாதையாகவே கேட்டான் சின்னச்சாமி.

"எதைப்பற்றியா...? இலுப்பைத் தோப்பைப் பற்றித்தான். மாரியைக் காலி செய்யச் சொல்லிவிட்டீராமே?"

"அவனுக்கு மாத்திரமில்லை. மற்றக் குடிசைகளுக்குக்கூடத்தான் நோட்டீசு கொடுத்திருக்கிறேன்!"

"அப்படியானல், எனக்குக் கொடுத்த வாக்குறுதி?"

"வாக்குறுதியா? அப்படி ஒன்றும் நான் உறுதி சொல்லவில்லையே! தோட்டமிருக்கிற வரைக்கும் மாரியை வைத்திருந்தேன். இனிமேலும் அவனுக்கும் மற்றவர்களுக்கும் அங்கே இடம் ஏது?"

"ஏன் இடமில்லை? தோப்பு எங்கே போவது?"

"தோப்பை அழித்துத்தான் அங்கு மருந்துச்சாலை கட்டப்போகிறேன்!"

ஆட்டிறைச்சியைக்கொண்டு மருந்து செய்யப் போகிறீர்களாக்கும்!"

"மாட்டிறைச்சியைக்கொண்டு!"

"அடபாவி!" என்று கத்திக்கொண்டு எழுந்துவிட்டார் மகாலிங்கம். அவர் கண்கள் சிவந்தன. உதடுகள் துடிதுடிக்க ஆரம்பித்தன.

சின்னச்சாமியோ, பொறுமையாக, இலுப்பைத் தோப்பிருந்த இடத்திலே வரப்போவது மருந்துச்சாலை! அங்கே தயாராகப்போகும் மருந்துகள் எத்தனை ஆயிரக்கணக்கான நோயாளிகளைக் குணப்படுத்தப் போகிறது தெரியுமா?

மக்கள் கடவுளின் குழந்தைகள் என்றால், என்னுடைய மருந்துச்சாலைதான் உண்மையான பக்திக் கூடமாகும்!

உங்களுக்கு இலுப்பெண்ணெயே முக்கியமாகப் பட்டால், நானே மாதம் இரண்டு டின் வாங்கிக் கொடுக்கிறேன்!" என்றார். இப்படி ஒரு புதுமையான வாதத்தைக் கேட்கவும், மகாலிங்கத்திற்குக் கோபம் இன்னும் அதிகமாகியது.

சின்னச்சாமி சில நிமிடங்கள் பேசாமல் அமர்ந்திருந்தார். அவர் முதல்தரமான வியாபாரி. எந்த நேரத்திலும் நிதானத்தையே இழக்காதவர். மகாலிங்கத்தின் மனப்போக்கு நன்றாகத் தெரிந்தது. கணக்கப் பிள்ளையைப் பார்த்தார்.

அவர் சமாதானமா செய்வார்?

"ஐயா சொல்றது, முழுக்கச் சரிங்க. பலவிதத்திலும் நீங்க செய்யப்போறது சரியாப் படலிங்க!" என்றார்.

சின்னச்சாமி மெதுவாக, "மாரிக்கு நானே ஒரு குடிசை கட்டிக்கொடுத்துவிடுகிறேனுங்க!" என்றார்.

"நீ என்னய்யா, குடிசை கட்டிக் கொடுக்க?" என்று கோபமாகத் திருப்பிக்கேட்டார் மகாலிங்கம்.

"நான் வாங்கின நிலத்திலே என் வசதிப்படி மாறுதல் செய்யவோ, அதில் எனக்கு இலாபம் தரும் வகையில் வியாபாரம் செய்யவோ ஆட்சேபனை இருக்க நியாயமில்லையே?" என்றார்.

இந்த வார்த்தைகள், பல ஆண்டுகளாகக் கட்டிக்காத்த அவ்வளவு குடும்பப் பெருமையையும் தூக்கி எறிவதுபோல் பட்டது மகாலிங்கத்திற்கு.

"அந்தளவுக்குப் பேசத் துணிந்துவிட்டீர்களா? இனிமேலும் நான் பேசத் தயாராயில்லை. பத்திரத்தைத் திருப்பிக் கொடுத்துப் பணத்தை வாங்கிக்கொண்டு போங்கள்!" என்றார்.

சின்னச்சாமிக்கு எப்படிப் பதில் கூறுவது என்றே புரியவில்லை.

"இப்படிச் சொன்னல் எப்படிங்க. நீங்க நிலத்தை விற்றீர்கள், நான் வாங்கினேன. இனிமேலும் கட்டுப்பாடு போட்டால்......" என்று பேச ஆரம்பித்தவர், மகாலிங்கத்தின் கடுகடுத்த முகத்தைப் பார்த்ததும் நிறுத்திவிட்டார்.

"அந்த இடத்திலே மருந்துச்சாலை வைக்க அனுமதிக்கவே மாட்டேன். ஊர் மக்கள் சார்பாக நானே சர்க்காருக்கு மகஜர் அனுப்புகிறேன்!" என்றார்.

"சர்க்கார் கொடுக்கும் உதவிப்பணத்தோடுதான் இந்தப் புதிய தொழிலை நான் ஆரம்பிக்கிறேன். கலெக்டரே அடிக்கல் நாட்டு விழாவிற்கு வரப்போகிறார்!" என்றார் சின்னச்சாமி.

"இது அக்ரமம். இந்தச் சர்க்காருக்கு மூளையே இல்லையோ!" என்று கத்தினர், மகாலிங்கம்.

சின்னச்சாமி கிளம்பிவிட்டார். அவர் போவதைப் பார்த்துக்கொண்டு மகாலிங்கமும், கனகரும் நின்றுகொண்டிருந்தனர்.

தன்னை மறுத்துப் பேசிவிட்டுத், தைரியமாகக் காரிலேறி ஒருத்தன் போகிற மாதிரி, காலம் வந்ததே என்று ஆத்திரம் மிராசுக்கு. அந்தக்காலமாயிருந்தால், "இழுத்துக் கட்டடா அவனை!" என்று கட்டளையிடுவார்; கட்டியிருப்பார்கள்! இப்பொழுது? காலம் மாறிவிட்டது!

"என்ன கணக்கப் பிள்ளை! உங்கள் இலாபக் கணக்கு எந்தளவில்வந்து நிற்கிறது, பார்த்தீர்களா?" என்றார் மகாலிங்கம்.

கனகர் இதற்கெல்லாம் இளைத்தவரா?

"இப்பொழுது மாத்திரம் என்ன குடிமுழுகிப் போய் விட்டது. யோசனை செய்வோம்" என்றார், கனகர்.

•

அன்றிரவு வெகுநேரம் கணக்கப்பிள்ளை கனகருக்குத் தூக்கம் வரவில்லை. சின்னச்சாமியிடமிருந்து இலுப்பைத் தோப்பை வாங்குவது எப்படி என்று என்னென்ன விதமாகவோ திட்டம் தீட்டிப்பார்த்தார். ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை.

இப்படி மனம் குழம்பும் நேரங்களில் அவருக்குப் புகலிடம் காந்தாமணி வீடுதான்! பட்டணததிலிருந்து வந்து குடியேறிய காந்தாவிற்குப் பல பாதுகாவலர்களில் கனகரும் ஒருவர். ஏதோ ஒரு நாளைக்கு, மனசு இருந்தால் காந்தாவிடம் வந்து ஓர் இரவைக் கழிப்பார் கனகர். அவளும் ஒண்டிக் கட்டையாகக் காலந்தள்ளும் கனகர், அதுவும் மிராசிற்குக் கணக்கப்பிள்ளை என்று அவரை வரவேற்று உபசரிப்பதில் தயங்குவதே இல்லை.

அன்றிரவு காந்தாவின் வீட்டிற்கு வந்தும் கனகரின் பிரச்சினை தீரவில்லை.

நீண்ட நேரமாக ஆழ்ந்த யோசனையில் அவர் அமர்ந்திருப்பதைக் கண்ட காந்தா, அவளாகவே பேச்சைத் துவக்கினள்.

"யாரைப்பற்றி, எதைப்பற்றி இப்படி யோசனை?" என்றாள் அவர் கால்களை வருடியபடியே.

"நம்ம மிராசின் இலுப்பைத் தோப்பை விற்றோமே, அந்தச் சின்னச்சாமியைத் தெரியுமோ, உனக்கு?" என்றார்.

அவளோ, "சின்னச்சாமியை எனக்குத் தெரியாது அவர் மருமகளை எனக்குத் தெரியும்!" என்றாள்.

"அவளை எப்படி உனக்குத் தெரியும்?" என்று சாதாரணமாக ஒரு கேள்வியைக் கேட்டுவைத்தார், கனகர்.

'அந்தக் கதையைப் பூராவும் சொல்லணுமா'! என்று பூர்வ பீடிகை போட்டுப், பிறகு கொஞ்சம் கொஞ்சமாக விஷயத்தை விளக்கினாள், காந்தா.

"மூன்றாண்டுகளுக்குமுன் பட்டணத்திலே நடந்த சம்பவம் அது.

•

அப்பொழுது காந்தாமணி 'சந்திரா கலாமன்றம்' என்ற ஒரு கலைமன்றத்திலே அடைக்கலம் புகுந்து இருந்த நேரம். கலைமன்றம் என்ற பெயரிலே பல அக்ரமங்களுக்கும் இருப்பிடமாக இருந்த அந்த இடத்திலே பாட்டுக் கற்றுக்கொள்ள ஒரு இளம் பெண் வந்தாள். நல்ல குணம்படைத்த அந்தப் பெண், நேர்மையான எண்ணத்தோடுதான் கலாமன்றத்திற்கு வந்து போய்க்கொண்டிருந்தாள். ஒரு நாள் திடீரென்று போலீஸ் அந்த இடத்தில் படையெடுத்தது. கூடத்தில் அந்த பெண் பாட்டுக்கற்றுக்கொண்டிருந்தாள். பாவம், அவளுக்கொன்றும் தெரியாது, பின் அறையில் என்ன நடந்துகொண்டிருந்தது, என்று.

அங்கே ஒரேசீட்டும், கூத்துமாக இருந்தது. போலீஸ்காரர்களுக்கு, கலாமன்றத்திற்குள்ளே இருப்பவர்கள் அத்தனைபேரும் அக்ரம வழியில் செல்பவர்கள்தானே? ஆகவே அங்கிருந்த நாலைந்து பெண்களுடன், அந்தப் பெண்ணையும் சேர்த்து இழுத்துக்கொண்டு போனார்கள். ஒருநாளிரவு பூராவும் அவள் சிறையிலேயே இருந்தாள். மறுநாள் யாரோவந்து சொல்லி அவளைமாத்திரம் அழைத்துப்போனார்கள்!

'அப்படி அழைத்துச் செல்லப்பட்டவள்தான் சின்னச்சாமியின் மருமகள் மல்லிகா" என்றுகூறிமுடித்தாள் காந்தாமணி.

சிறையில் ஒரு நாள் விபசாரத் தடைச்சட்டத்திலே அடைக்கப்பட்டுக் கிடந்தவள்தான் சின்னச்சாமியின் மருமகள் என்று தெரிந்தவுடன் வேகமாகத் துண்டை எடுத்து மேலே போட்டுக்கொண்டு புறப்பட்டார்.

•

மகாலிங்கத்தின் முன் வெற்றிப் பார்வையோடு நின்றார், கனகசபேசர்.

"என்னய்யா, என்ன செய்யப்போறிங்க. நல்லா மூக்கறுத்துவிட்டுப் போயிட்டானே!" என்றார் மகாலிங்கம்.

கனகரோ, மிக அமைதியாக, அவர்முன் ஒரு கடிதத்தை நீட்டி "இதில் கையெழுத்தைப் போடுங்கோ!" என்றார்.

"கடிதமா..." என்று அதைப் படித்த மகாலிங்கத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது.

கனகர், முந்தின இரவு காந்தாமணி விளக்கிய சம்பவத்தை விவரித்துக் கூறினார்.

"முள்ளை முள்ளால்தான் எடுக்கணுங்க; இந்த விஷயத்தை நாம் அம்பலப்படுத்துவோமென்னு ஒரு வார்த்தை சொன்னால், போதும்; பிறகு பாருங்க, பட்டணத்தான் நம்ப கிழிச்ச கோட்டைத் தாண்டுறானுன்னு!" என்று தன் திட்டத்தை விளக்கினார், கனகர். மகாலிங்கத்திற்குத் தன் கணக்கப்பிள்ளையின் புத்திசாலித்தனத்தில் பெரிய மதிப்பே ஏற்பட்டது.

வெகு திருப்தியோடு கையெழுத்தும் போட்டு அனுப்பினார்.

'மருந்துச் சாலையைக் கைவிட்டுவிடும். இல்லையேல் குடும்ப இரசியம் அம்பலமாகும், மல்லிகா—சந்திரா கலா மன்றம்"

குறிப்பு: "விளக்கம் தேவையானால் உங்கள் மருமகளைக் கேட்கவும்."

இப்படி ஒரு கடிதம் தனக்கு வருமென்று சின்னச்சாமி கனவிலும் நினைக்கவில்லை. நாவலில் வரும் மர்மக் கடிதம்போல் வந்திருக்கும் இந்தக் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தும் ஒன்றும் புரியாமல் தன் ஒரே மகன் சேகரனைக் கூப்பிட்டார். அவனுக்கு மாத்திரம் என்ன தெரியும். "மல்லிகா—சந்திரா கலா" மன்றம் என்று பல தடவைகள் படித்தானே தவிர, அவனும் ஒரு விளக்கமும் தர முடியவில்லை. இதில் அடங்கி இருக்கும் குடும்ப இரகசியத்தை உணரமுடியாமல் மல்லிகாவின் அறைக்கே அப்பாவும், மகனும் சென்றனர்.

நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த மல்லிகா, ஒரு சேரக் கணவனும், மாமனாரும் வருவதைக் கண்டு திடுக்கிட்டு எழுந்து நிற்க முயன்றாள். அதற்குள் சின்னச்சாமியே, 'பரவாயில்லை, அப்படியே உட்கார். இந்தா இந்தக் கடிதம் வந்திருக்கிறது. இதைக் கண்டு பயப்பட வேண்டாம். விஷயம் என்னவென்று சொல்லு. அதற்குமேல் என்ன செய்யலாம் என்று யோசிப்போம்..." என்று கூறிக்கொண்டே கடிதத்தை நீட்டினார். அந்த நேரத்திலே எவ்வளவு பெரிய பேரிடியைத் தூக்கிப் போடுகிறோம் என்பது அவருக்கெப்படித் தெரியும்!

பாவம், கடிதத்தைப் படித்த மறுகணம் மூர்ச்சையானாள், மல்லிகா. அதற்குமேல் அவள் என்ன செய்யமுடியும்? எத்தனை துன்பங்களுக்கிடையே வாழ்ந்து, வளர்ந்து, இன்று நிம்மதியாகக் கணவனோடுவாழும்போது, எப்போதோ, ஒருதவறும் செய்யாத நிலையில் எதிர்பாராமல் நடைபெற்ற சம்பவம் இன்று அவள் வாழ்வைக் குலைக்கிறது.

"நான் போய் டாக்டரை அழைத்து வருகிறேன்" என்று கூறிக்கொண்டே சேகர் ஓடினான்.

சின்னச்சாமி சிறிது நேரம் மயக்கமுற்றுக் கிடக்கும் தன் மருமகளையே பார்த்துக்கொண்டிருந்தார்.

அந்தக்களங்கமற்றமுகம் எந்தத்தவறும் செய்திருக்காது என்று நினைத்தவண்ணம் வெளியேறினார்.

மகாலிங்கத்தின் வீட்டிற்குள் அவர் வரும்போது பழைய சின்னச்சாமியாக இல்லை. கோபம் பொங்கி வழிய வேக வேகமாக வந்தார்.

"இதற்கென்ன அர்த்தம் மிராசுதாரே?" என்று கூறிகொண்டே அந்தக் கடிதத்தை அவர் மேஜை மேல் எறிந்தார்.

"இதற்கு அர்த்தம் நீங்க மாட்டிறைச்சியை வைத்து மருந்து செய்து ஊரை நாற அடிக்கிறதற்குள்ளே, உங்கள் குடும்பத்தின் பெயர் நாறிப்போகும் என்பதாகும்! என்றார் கனகர்.

"எங்கள் குடும்பத்திலே என்ன......நான் புதுப் பணக்காரனாயிருக்கலாம். ஆனால், நாங்கள் மானத்தோடு வாழ்கிறவர்கள்!"

"ஹிம்! அங்கேதான் வித்தியாசம். நீங்கள் எல்லோரும் மானத்தோடு வாழ்ந்தவங்க இல்லை. உங்க மருமகள் மல்லிகா......"

அட பாவி. பெண் பிள்ளைகளை எதுக்கு நம் சண்டையில் இழுக்கிறே. அதுவும் என் மருமகளைப் பற்றி ஏதாவது சொன்னே, உன்னைக் கொன்று போட்டிடுவேன்!" என்று கோபக் கனலைக் கக்கினார்.

"சரி, நீங்க பூராவும் சொல்லவிடமாட்டிங்க. இதோ, இந்தப் பேப்பர்லலே வந்திருக்கிற செய்தியைப்

பாருங்க" என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்வந்த தினப் பத்திரிகை ஒன்றை எடுத்து நீட்டினர் கனகர்.

அந்தப் பத்திரிகையிலே "சந்திரா கலா மன்றத்தில் போலீஸ் சோதனை என்ற கொட்டை எழுத்துக்களில் வந்த செய்தியில், கடைசியில், மல்லிகாவின் பெயரும் காணப்படவே, சின்னச்சாமிக்குக் கொஞ்சம் நாடி தளர்ந்தது.

"ஏதோ ஒரு பேப்பரைக் காண்பித்து என்னை மிரட்டப் பார்க்கிருயா? என் மருமகள் மாசற்றவள்— தூய்மையின் உருவம்!" என்று கனகர்மேல் பாய்ந்தார்.

'மிரட்டலில்லை! ருஜுக்கள் ஒன்றன்பின் ஒன்ருக வரும். ஆனல், இந்த விஷயத்தைப் பற்றி நாம் விவாதிப்பதைவிட, அடிப்படைபிரச்சினைக்கே போய் விடலாமே!" என்ருர் சபேசர்.

இதற்குள், அவர் மகன் சேகரனே அங்கு வந்து விட்டான்.

அவனைக் கண்டதும் சின்னச்சாமி "சரி, எதுவாயிருந்தாலும், நாளைக்கு வந்து பேசிக்கொள்ளலாம்!" என்று புறபபட்டார். சேகரனுக்கு ஒனறும புரிய வில்லை.

"வாப்பா போகலாம்! என்று பையனைக் கூப்பிட்டார் தந்தை.

"இல்லை. என் மனைவியின் பெயர் எதற்காக இழுக்கப்பட்டது என்பது தெரியாத வரையில் நான் இந்த இடத்தைவிட்டு அகலுவதாக இல்லை. இவர் மிராசா இருந்தாலென்ன, மிட்டாதாராயிருந்தாலென்ன? என மனைவியின் பெயரை இழுத்த குற்றத்திற்குப் பழிவாங்காமல் இந்த இடத்தைவிட்டு நகரமாட்டேன்!"

என்று ஆவேசப் பேச்சில் இறங்கினன் சேகர்.

சின்னச்சாமி நடந்த விஷயத்தைத் தன்மகனிடம் எப்படிக் கூறுவார்?

கனகரும், மகாலிங்கமும் வெறிகொண்ட வாலிபனிடம் எதைப் பேசுவது என்று திகைத்தனர். விளைவு, விபரீதமானல், என்று பயம் அவர்களுக்கு,

இந்தப் பயங்கரமான சூழ்நிலையில் சின்னச்சாமியின் வீட்டு வேலையாள் தலைதெறிக்க ஓடிவந்தான்.

"சின்ன எஜமானி அம்மாவைக் காணேமுங்க. வீடு, தோட்டம் எல்லாம் தேடிட்டேனுங்க" என்று அவன் கூறி முடிப்பதற்குள், சேகரன "மல்லிகா... மல்லிகா" எனறு கதறிக்கொண்டே வெளியே ஓடினன்.

இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டே நின்றுகொண்டிருந்த சின்னச்சாமி திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

"ஐயா, மகா உத்தமர்களே! இதோ என் மகன், அவன மனைவி மீது வைத்திருக்கும் அன்பைக் கண்டீர்கள். நீங்கள் கூறுவதில் எது உண்மையோ, எது பொய்யோ, அதை இபபோது ஆராயததயாராயில்லை. ஆனல், இந்தநிமிஷம நாம் ஒரு முடிவுக்கு வருவோம். என மகன் இங்கு திரும்பி வருமபோது அவனுக்கு இந்தச் சம்பவத்தைக் கூருமல் வேறு ஒரு நல்ல சமாதானத்தைக் கூறவேண்டும். அவனுக்கு அவன் மனைவிமீது உள்ள முழு நம்பிக்கையும் குறையாமல் சமாதானம் சொல்லி அனுப்புங்கள். அபபடி நீங்கள் சொலலி அனுபபினல், என்னுடைய மகனின் காதலுக்குக்காணிக்கையாக, இந்த இலுப்பைததோபபை உங்களுக்கே கொடுத்துவிட்டு, நான் இந்த ஊரை விட்டே போய்விடுகிறேன். அப்படிக்கில்லாமல் என் மகனுக்கும் இந்த விஷயம் தெரியுமாறு செய்தீர்களானல், அதற்குமேல் நான் முரடனுகிவிடுவேன். அப்புறம் என்ன நடக்குமென்று எனக்கே தெரியாது!" என்ருர் சின்னச்சாமி.

மகாலிங்கத்திற்கு மூச்சு வந்தது.

'சின்னச்சாமி! அந்த விஷயத்தை எங்களிடம் விட்டுவிடு. உன் பையனை ஏமாற்றி நல்லசாக்குச் சொல்லித் திருபபி நாங்கள் அனுப்புருேம்!" என்ருர் கனகர்.

சின்னச்சாமி அவருக்கு இருந்த வெறுப்பைக் காட்டக், காறி உமிழ்ந்துவிட்டு வெளியேறினர்.

"பழைமையைக் காப்பாற்ற இந்த மனிதப்பதர்கள் கடைப்பிடிக்கும் வழியைப்பாரீர்!" என்று அவர் கூறவில்லை.

*

வீட்டிற்குச் சென்ற சின்னச்சாமியின் மனம் நிம்மதியற்ற நிலையில் ஒவ்வொரு விநாடியும் புழுங்கிக் கொண்டிருந்தது. மனைவியைத் தேடிப்போன மகன் மாலைதான் வந்தான். என்ன சொல்லப்போகிருனே என்ற பயத்துடன் "மல்லிகா... என்று ஆரமபித்தார்.

'ஆண் குழந்தை — உங்களுக்குப் பேரன்!" என்ருன சேகர்,

"ஏன் அப்படியே நிற்கிறீர்கள், அப்பா. உங்களுக்குப் பேரன் பிறந்ததில் மகிழ்ச்சி இல்லையா?" எனறு கூறிக்கொண்டே, அவர் அருகில் வந்தான்.

அவர் மெதுவாக, "மகாலிங்கம் வீட்டிற்குப் போனுயா தம்பி?" என்ருர். அவர் கவலை அவருக்கு!

"எதற்கு அங்கே போவது? மல்லிகாவே பழைய சம்பவம் அத்தனையும் கூறினள். அவள் களங்கமற்றவள்.

அவ்வளவுதான் எனக்கு வேண்டியது. ஊரார் ஏளனம் பேசுனல், நாம் அவர்களைப் பார்த்துச் சிரிக்க வேண்டுமே தவிர, அதற்காக நம் கண்ணை நாமே குத்திக்கொள்வதா? மல்லிகா உயிரை மாய்த்துக் கொள்ளப் பார்த்தாள். வழியில் குழந்தை பிறந்தது. என் குழந்தை என்னிடம் தாயோடு வந்துவிட்டது. இனி, ஒருநாளும் அதைவிட்டுப் பிரியமாட்டேன!" என்று கூறிக்கொண்டே மாடிக்கு ஓடினன் சேகர்.

சின்னச்சாமிக்கு அளவற்ற மகிழ்ச்சி. தன் மகனின் காதல் வாழ்வுதான் அவருடைய குறிக்கோள். அது கிடைததுவிட்டது.

"அப்படியானல், தம்பி, நாம் ஆரம்பிக்கபோகும் மருந்துச் சாலைக்கு குழந்தையின் பெயரையே வைக்க வேண்டும்!" என்ருர்.

அடுத்த ஆறுமாதத்திலே மருதூரில் "தூயமணி" மருந்தகம் ஆரம்பிக்கபபட்டது. அதில் நூற்றுக்கணக்கான ஆட்களுக்கு வேலை கிடைத்தது. மிராசுதார் மகாலிங்கத்தின குடும்பம் அந்த இலுபபைத் தோபபிலே மாரிமுத்துக்களை மாததிரம் வளர்த்து, அவர்களுக்கு, தீவட்டி பிடிக்கவே பழக்கிக்கொண்டிருந்தது! ஆனல், சின்னச்சாமியின் குடும்பமோ, புதுப்புது இளங் காளைகளை, விஞ்ஞானிகளை, மக்களின் நலத்தைப் பாதுகாக்கும் உத்தமர்களை உற்பத்தி செய்துகொண்டிருந்தது! மாரிதான் மருந்துச்சாலையில் 'பெட்டி' செய்பவன்.




அன்னம்—அதுதான் அவள் பெயர். சின்ன இடை துவள, அன்ன நடைபோட்டு அவள் நடப்பதைக் கண்டால், காண்போர் உள்ளமெல்லாம், அசைந்தாடும் — அவள் பின்னல் சடையைப்போல் ஊசலாடும். இத்தனைக்கும் அன்னம் அப்படி ஒன்றும் பேரழகி அல்ல. ஆனால், அவள் கருவிழியும், சுருள் குழலும், கட்டுடலும் அவளுக்குக் கவர்ச்சியைத் தந்தன. இந்தக் கவர்ச்சிப் பாவையிடம்தான் தன் உள்ளத்தையே பறிகொடுத்திருந்தான் இரத்தினம்.

இரத்தினம் — சாதாரண ஆள் அல்ல. அந்த வட்டாரத்திலேயே அவனை அறியாதவர்கள் யாரும் இடையாது! ஏன்? அவன் பெயர் காவல் நிலையத்தில் கூட அடிக்கடி அடிபடும். ஆனால், யாரும் நெருங்க மாட்டார்கள். இத்தனைக்கும் அவன் அவ்வளவு கொடூரமானவனுமல்ல. ஆனால், அவனுடைய ஒரே எண்ணம்—"உழைத்துச் சம்பாதிப்பவன மனிதனே அல்ல — இந்தப் புது உலகில்'' — அந்த எண்ணத்துடன் இயைந்துதான் அவன் தன் வாழ்க்கையை நடத்தி வந்தான்.

இரத்தினம்—அன்னத்தைத் தானே கலியாணம் செய்துகொள்ளவேண்டுமென்று திட்டமிட்டிருந்தான். இதற்குக் காரணம், அன்னம், அவனுக்கு முறைப்பெண்—மாமன் மகள். அதோடல்லாமல், அவளின் வெட்டும் விழியும், செட்டான பேச்சும், கட்டான உடலும் அவனை அவள்பால் ஈர்த்தன. ஆகவே, அடிக்கடி, அவள் எங்காவது சென்றால், அவளைப் பின்தொடருவான். இப்படியே எவ்வளவு நாட்களுக்குப் பின்தொடருவது என்று யோசித்த இரத்தினம், ஒரு நாள், அவளை வழிமடக்கித், தன்னைக் கலியாணம் செய்துகொள்ளுமாறு கேட்டான். அவள் மறுத்ததைக் கேட்ட இரத்தினம், சினந்து நேரே அவள் தந்தை—தன் மாமனிடம் போய்க்கேட்டான். இவனுடைய குணம் அறிந்திருந்த கருப்பண்ணன், தன் மகளின் திருமணத்தில் தனக்கு ஒரு உரிமையும் இல்லை என்றும், எல்லாம் தன் மகளின் விருப்பப்படி தான் நடக்கும் என்றும் கூறிவிட்டான். இதைக் கேட்க அவனுக்குக் கோபம் இன்னும் அதிகமாக வந்தது. "எல்லாம் அந்தச் சிறுக்கியின் துணிச்சல் தான்'' என்று மனதில் நினைத்துக்கொண்டான். இதை மனதிலேயே நினைத்துப் புழுங்கிக்கொண்டிருந்த இரத்தினம், ஒருநாள், அன்னத்தைக் காய்கறிக் கடையில் பார்த்து, அவளை, மடக்கி, "ஏய் சிறுக்கி! நீ ஏண்டி என்னைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டே'' என்று கேட்டான. சிறுக்கி என்று அவன தன்னைப் பொதுவிடத்தில் கூப்பிட்டதைக் கேட்ட அன்னம் கோபமடைந்து 'நான் ஒன்றும் ஊரை ஏய்த்துப் பிழைக்கும் பொறுக்கிக்கு மனைவியாகமாட்டேன்'' என்று சட்டென்று முன்பின் யோசியாமல் கத்திவிட்டாள். "பொறுக்கி'' என்று அவள் சொன்னதைக் கேட்ட இரத்தினம், கோபம் பீறிட்டெழப், 'பளார்' என்று அவள் கன்னத்தில் அறைந்துவிட்டான் "ஏய் சிறுக்கி! இன்றைக்கு நீ என்னைப் பொறுக்கின்னு கூப்பிட்டே! பார்க்கிறேண்டி, உன்னை எந்தச்சோம்பேறி கலியாணம்செய்துகொள்கிறான்னு'' என்று கருவிக்கொண்டே போய்விட்டான்—கூட்டம் சேர்ந்தது. ஆனால், இரத்தினத்திற்கும் அவன் மாமன் மகளுக்கும் ஏற்பட்ட சண்டை என்று தெரிந்து கொண்டு ஒன்றும் கேட்டுக்கொள்ளாமல் போய் விட்டனர்.

அன்னம்—இரத்தினத்தை விரும்பாததின் உண்மைக் காரணம், அவன போக்கிரித்தனம் மாத்திரம் அல்ல—அவள் தன் மனதை, அந்த வட்டாரக் காவலன் கண்ணனிடம் பறிகொடுத்திருந்தாள். அவள் வெளியே போகும்போதெல்லாம், கண்ணன் இருக்கும் அந்தக் காவல் நிலையம் வழியே போவது தவறுவதில்லை. முதலில் இவர்களுடைய விழிகள் சந்தித்தன. பிறகு உறவாடின. இப்படியே சில நாட்கள் கழிந்தன.

ஒரு நாள்—அன்னம் கறிகாய் வாங்கிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பும்போது, கண்ணன் அவளைக் காவல் நிலையத்தின வெளியே சந்தித்தான். எப்படியாவது அவளிடம் ஏதாவது பேசவேண்டும் என்ற எண்ணத்தில் அவளைக் கண்டவுடன "என்ன காய்

கறி எல்லாம் ஒரே தடபுடலாக இருக்கிறதே! இன்றைக்கு ஏதாவது பலமோ! நான் கூடவரலாமா!'' என்று சற்றுத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டுவிட்டான். அன்னமும் குறும்புக்காரி. அவளும் அதற்குக் குறும்பாகப் பதில்சொல்ல வேண்டும் என்று நினைத்து ''தடபுடல் எல்லாம் உங்களுக்காகத்தான் — வாங்களேன் பகல் சாப்பாட்டிற்கு'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

சதிராடும் விழிகளினால் ஏற்கெனவே குழம்பி இருந்த அவன் உள்ளம், இந்த மொழிகேட்டு, இன்னும் குழம்பிவிட்டது. கண்ணன் சாதாரண காவலன் தான். ஆனால், அவனிடம் காவலனுக்கு வேண்டிய கடுமை கிடையாது. இளகிய உள்ளம் படைத்தவன். யார் பேச்சையும் எளிதில் அப்படியே நம்பிவிடுவான். இன்று அன்னம் சொன்னதையும் அப்படியே நம்பி விட்டான். அவளின் சுழலும் கருவிழியும், கன்னல் மொழியும் விடுத்த அழைப்புக்கு இணங்கி, அவன் உச்சிவேளைக்கு அன்னத்தின் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

போகும் வழியெல்லாம், அவனுக்குச் சிறிது பயமாகத்தான் இருந்தது! இருந்தாலும், காவலன் அல்லவா! சிறிது தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அவள் வீட்டை அடைந்ததும், கதவை மெதுவாகத் தட்டினான். வெளியில் கதவுதட்டும் ஒலி கேட்ட, கருப்பண்ணன் ''அன்னம்... அன்னம்...போய்ப் பாரு அம்மா யாருன்னு—எவன் வரப்போறான்—எல்லாம் அவனாகத்தான் இருக்கும்—நீ ஒரு பேச்சு அவனைக் கலியாணம் பண்ணிக்கொள்றேன்னு சொல்லிட்டா அவன் ஏனம்மா வரப்போகிறான்'' என்று படுக்கையில் இருமிக்கொண்டே சொன்னான். இதையெல்லாம் கண்ணன் வெளியே கேட்டுக்கொண்டிருந்தபோது, பழம் நழுவிப் பாலில் விழுவதுபோல் இருந்தது. தந்தை சொல்கேட்டு எழுந்து வந்த அன்னம் கதவருகில் சென்று ''என்னை விட்டா இவருக்கு வேறு யாரும் கிடைக்கலியா! எனக்கு என்ன தலையெழுத்தா, இதைப் போல ஆளுக்குவாழ்க்கைப்படணும்னு'' என்று சொல்லிக்கொண்டே, வெளியே பார்க்காமல் கதவைத் திறந்துவிட்டுஉள்ளே வந்துவிட்டாள். அன்னத்தின்சொல்கேட்ட கண்ணன், நெருப்பை மிதித்தவன்போல் துடித்தான். கதவைத் திறந்து தன்னைப் பார்க்காமல் உள்ளே அன்னம் சென்றது இன்னும் அவனுக்கு எரிச்சலை உண்டாக்கி விட்டது. தன்னை அவமானப் படுத்தத்தான் அவள் இவ்வாறு செய்தாள் என்று நினைத்த கண்ணன், உள்ளே போகாமல் உடனே திரும்பிவிட நினைத்தான். திடீரென்று திரும்பவே, அங்கு இருந்த தாழ்ந்தசாரம் அவன் தலையில் பட ''அம்மா'' என்று வலி தாங்காமல் கதறிவிட்டான்.

''அம்மா'' என்ற கதறலைக் கேட்டுத்தான் அன்னம் திரும்பிப் பார்த்தாள். எதிரே கண்ணன் தலையில் அடிபட்டு, இரத்தம் கசிவதைக்கண்டு, அவளுக்கு, அப்பாவிடம் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

''அப்பா... அவர்.... அவர்... தலையில்... காயம்...'' என்று மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் வெளிநோக்கிப் போனாள்.

ஆனால், அன்னம் வெளியே போவதற்குள், கண்ணன் தன் தலையைக்கையால் பிடித்துக்கொண்டு போய்விட்டான். போகும் வழியெல்லாம் அவன் சிந்தித்துக்கொண்டே சென்றான். அவனுக்குத் திரும்பிப்பார்க்கவே பிடிக்கவில்லை.

அவன், அவளுடைய தந்தை சொன்னதையும், அன்னம் சொன்னதையும் திருப்பித் திருப்பித் தன் மனக்கண்முன் கொண்டுவந்து பார்த்தான். தன்னை அவமானப்படுத்தத்தான், அன்னம் இவ்வாறு நடந்துகொண்டாள் என்று நினைத்தான். ஆனால், அவன் உள்ளத்தில் ஒரு சந்தேகம் எழத்தான் செய்தது. ''தன்னை விரும்பாத அன்னம், ஏன் தன்னை வைத்த விழி வாங்காமல் பார்க்கவேண்டும்'' இது தான் அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. இதையெல்லாம் நினைக்க நினைக்க, அவளைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் எழுந்தது. ஆனால் ''என்னைவிட்டா இவருக்கு வேறு யாரும் கிடைக்கலியா—எனக்கு என்ன தலையெழுத்தா இதைப்போல ஆளுக்கு வாழ்க்கைப் படணும்னு'' என்று அவள் சொன்னதை நினைத்தவுடன், அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. ஒரு சாதாரண பெண், தன்னை இப்படியா அவமானப்படுத்துவது என்று யோசித்தான்! சரி, இதற்கெல்லாம் ஏதாவது காரணம் இருக்கவேண்டும், அதைக் கண்டுபிடித்து, அவளைப் பழிக்குப் — பழி வாங்கவேண்டும் என்று தீர்மானித்தான்.




அவன் காவல்முறைப்படி, அன்னத்தைப்பற்றிப் புலன் விசாரிக்க ஆரம்பித்து, அன்னத்தின் கண்களுக்குஅகப்படாமலேயே இருந்து வந்தான். ஆனால், அன்னமோ, நடந்ததை நினைத்து நினைத்து—நொந்து — அவனிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தினம் தினம் காவல் நிலையம் வழியாகப் போவதும் வருவதுமாக இருந்தாள். ஒவ்வொரு நாளும் பைத்தியக்காரி போல் அங்கேயே சுற்றிக்கொண்டும் இருந்தாள்.

புலன் விசாரிக்க ஆரம்பித்த கண்ணனுக்கு, உண்மைகள்தெரிய

வந்தன. இந்த வட்டாரத்தில் இருக்கும் பெரிய போக்கிரியான இரத்தினத்தின் அத்தை மகள்தான் அன்னம் என்று தெரியவந்தது. அதோடு, அன்னத்தை இரத்தினம்தான் கலியாணம் செய்து கொள்ளப்போகிறான் என்று அந்த வட்டாரத்தில் பேசிக்கொண்டதும் அவன் காதில் விழாமல் இல்லை. இதையெல்லாம் கேட்ட அவனுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. "தன் மாமன் மகன், யாராலும் பிடிக்கமுடியாத ஒரு பெரிய போக்கிரி" என்ற காரணத்தினால்தான், அன்னம் இறுமாந்து தன்னை அவமானப்படுத்தியிருக்கிறாள் என்று நினைத்தான்.

தன்னை அவமானப்படுத்திய அவள் கர்வத்தை அடக்கிப், பழிவாங்கவேண்டும் என்று நினைத்த அவனுக்குக், கடமையில் கண்ணும் கருத்தும் அதிகமாகி விட்டது. அதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

திங்களிரண்டு உருண்டோடிவிட்டன. அன்று தைத்திங்களும் பிறந்துவிட்டது! திராவிடர் திருநாளாகிய அன்று, எங்கும் ஒரே குதூகலம்! அகமும் புறமும் ஒரே இன்பம்—தோட்டி முதல் தொண்டைமான் வரை எல்லோர் வீட்டிலும் இன்பம் பொங்கி எழுந்தது! அந்த இன்பத் திருநாளை இனிது கழிக்க வேண்டுமென்று அந்த வட்டாரத்திலுள்ள திருவள்ளுவர் கழகத்தார், அன்று மாலை கூட்டமும், ஒரு இலவச நாடகமும் ஏற்பாடு செய்திருந்தனர். கூட்டத்தில் பல தோழர்கள், தமிழர் திருநாளின் சிறப்பைப் பற்றிப் பேசினர். ஒரு சிலர் கவிதை பாடினர்—கூட்டம் முடிவதற்கே மணி ஒன்பதாகிவிட்டது. அடுத்து நாடகம், இன்னும் அரை மணி நேரத்தில் ஆரம்பமாகிவிடும் என்று அறிவிக்கப்பட்டது. "இவனே தலைவன்" என்ற புரட்சி நாடகத்தை முத்தமிழ்க்கலை மன்றத்தார் அளிக்க இருந்தனர். இமயம் சென்று—வென்று—கனகவிசயன் தலையில் கல்வைத்து—இழுத்து வந்த, சேரன் பரம்பரையில் தோன்றிய, தென்னகத்து "இளம் பிறை", யாருக்கும் தெரியாதவன் அல்ல. அதே "இளம் பிறை" தான் அன்று அந்த நாடகத்தில் "ஒப்பற்ற நிகரில்லா ஒரே தலைவனாக" நடிக்க இருந்தது. ஆகவே, கூட்டம் ஏராளம்.

அதைப்போன்ற நெருக்கடியான கூட்டத்தில்தான், இரத்தினம் போன்றவர்களுக்கு அதிகமான வேலை. அவர்களைப் போன்றவர்கள் அங்கு வருவதால்தான், காவலர்களும் அங்கு அதிகமாகப் "பாரா"வுக்கு அனுப்பப்படுகிறார்கள். அப்படி வந்திருந்த காவலர்களில் கண்ணனும் ஒருவன்.

கண்ணனுடைய கருத்தெல்லாம், அப்போது இரத்தினத்தின் மேலேயே இருந்தது. அவனுடைய எண்ணமெல்லாம், இரத்தினத்தைக் கையும் களவுமாகப் பிடிக்கவேண்டும் என்பதுதான்—அதற்காகத்தான் மறைவிலிருந்தபடியே இரத்தினத்தைத் தேடினான். தேடியும் கண்டுபிடித்துவிட்டான்.

இரத்தினத்தின் கருத்தெல்லாம் அப்போது அங்குள்ள மக்களின்மீதிருந்தது. அவனுடைய எண்ணமெல்லாம் இன்று எப்படியாவது ஒரு உயர்ந்த இலாபகரமானவேட்டையாடவேண்டும்என்பதுதான். அதற்காகவே அவன் தன் தலையில் ஒரு மப்ளரைக் கட்டிக்கொண்டு, தன்முகம் யாருக்கும் சரியாகத் தெரியாத வண்ணம், அங்கு வந்திருந்த பெண்கள் அணிந்திருக்கும் நகைகளின் மீது கண்ணோட்டம் செலுத்திக் கொண்டிருந்தான்.

அன்னமும் அவள் தந்தையுடன் அந்த நாடகத்திற்கு வரத் தவறவில்லை. அன்னத்தின் கருத்தெல்லாம் கண்ணன் மேலேயே இருந்தது. அவளுடைய எண்ணமெல்லாம் எப்படியாவது கண்ணனைச் சந்தித்து, அவனிடம் நடந்ததை எல்லாம் சொல்லி மன்னிப்புக் கேட்கவேண்டும் என்பதுதான். அதற்காகவே அவள் சுற்றுமுற்றும் அவனைத் தன் விழிகளால் தேடிக்கொண்டிருந்தாள்.

இப்படி மூவரும், மூன்று வெவ்வேறு எண்ணத்துடன் கூட்டத்தில் இருந்தனர். திடீரென்று மணி அடித்தது. அதுதான் நாடகத்தின் முதல் மணி.

"இவனே இந்நாட்டுத் தலைவன்"

என்ற கருத்தினை அழகாக எடுத்துக்காட்டும் நாடகம் ஆரம்பிக்க அடுத்த மணியும் அடித்துவிட்டது. வெளி விளக்குகள் அணைந்தன. வாழ்த்துப்பாடல் ஆரம்பமாயிற்று. ஆனால், இருள் கவ்வி இருந்த கூட்டத்தில் திடீரென்று ஒரே கூச்சல் கேட்டது. "ஐயோ இடிக்கிறார்களே! நசுக்குகிறார்களே—ஐயோ திருடன்... திருடன்... என் செயின்! ...லைட் போடுங்க ஐயா" என்று மக்கள் கத்தினர்.

கூச்சலைக் கேட்டதும், சேவகர்கள் வெளிவிளக்கைப் போடச்சொன்னார்கள். கூட்டத்தில் ஒரே சலசலப்பு—அமளி—செயின் போய்விட்டது — காப்புப் போய்விட்டது என்ற கத்தல். இதையெல்லாம்

## "வியாபாரம்"

ஏகாம்பரத்திற்கு பதவி உயர்வு கிடைத்தது. நெடுநாளாக அவனுக்குக் கிடைக்க வேண்டியதும், எதிர்பார்த்ததும் தான் அது. என்றாலும் அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தன் நன்றியறிதலை மானேசருக்குச் சொல்லிவிட்டு வரலாம் என்று அவர் வீட்டிற்குப் புறப்பட்டான். வெறுங்கையோடு போவதைவிட, ஏதாவது பழம் வாங்கிக்கொண்டு போகலாம் என்று தீர்மானித்து, ஒரு டசன் ஆப்பிள் பழங்களை வாங்கிக்கொண்டு போனான், கடைக்காரனோடு சண்டை போட்டு ஆறு ரூபாய் சொன்ன விலையை ஐந்தாகக் குறைத்து வாங்கினான்.

மானேசர் வீட்டில் இருந்தார், நன்றியறிதலை ஏற்றுக் கொண்டார். சிரித்துக்கொண்டே பழக்கூடையை எடுத்து, உள்ளே வைத்தான் ஏகாம்பரம். அதைப் பார்த்த மானேசருக்குக் கோபம்பொத்துக்கொண்டுவந்தது. "என்னை என்ன என்று நினைத்துக் கொண்டாய்? இது என்ன பழக்கம்? இதெல்லாம் எனக்குப் பிடிக்காது என்று உனக்குத் தெரியாதா?" என்று குதித்தார்.

நடுங்கிப்போன ஏகாம்பரம் தப்புவதற்கு ஒரேவழிதான் இருந்தது. மெல்லச் சொன்னான்; சும்மா எடுத்துக்கொள்ள வேண்டாம், ஐயா, ஒரு டசன் ஒரு ரூபாய் என்று விலைக்குத் தருகிறேன்— இது வியாபாரமாக இருக்கட்டும் என்றான்.

"அதுசரி — நியாயம். இந்தா ஒரு ரூபாய் எடுத்துக் கொள். மீதி நான்கு ரூபாய்க்கும் நான்கு டசன் நாளைக்குக் கொண்டுவா" என்று ஒரு ஐந்து ரூபாய்த்தாளை நீட்டினார்.

கண்ணனுடைய காதுகள் ஏனோ கேட்க மறுத்தன. அவனுடைய எண்ணமெல்லாம் இரத்தினத்தின் மேல் இருந்தது. கூட்டத்தில் இரத்தினத்தைத் தேடினான்—காணவில்லை. உடனே கண்ணனுக்கு இரத்தினமும் இந்தத் திருட்டுகளில் கலந்துகொண்டிருக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றிவிட்டது. கூட்டத்தில் ஆள் இடைக்காமல் போய்விடவே, பக்கமாக எங்கேயாவது போயிருப்பான் என்று நாடக மேடையின் பின்புறம் சென்று பார்த்தான்.

பின்புறமாக, ஒரு உருவம் இருட்டில் போய்க்கொண்டிருந்தது. அதைத்தொடர்ந்தான் கண்ணன். தெருவின் முனைக்குச் சென்ற அந்த உருவம், ஒரு விளக்கடியில் வந்ததும் நின்றது. சுற்று முற்றும் பார்த்தது. கண்ணன் திடீரென்று ஒரு மரத்தின் பின்னால் நின்றுவிடவே, அந்த உருவத்திற்குக் கண்ணன் நிற்பது தெரியவில்லை. விளக்கின் அடியில் நின்ற உருவத்தை உற்று நோக்கினான் — அந்த உருவம் வேறு யாருமல்ல—இரத்தினமேதான். இரத்தினம் சுற்றுப்புறத்தில் யாரும் இல்லாததைக்கண்டு, தன் ஜேபியில் கையைவிட்டு எடுத்து விளக்கொளியில் பார்த்தான். இரட்டைச் சரடு—சுமார் எட்டுச் சவரன் இருக்கும். பொங்கல் எல்லோருக்கும் குதூகலமான நாள்—தனக்கும் அவ்வாறே என்று நினைத்த இரத்தினம், சிரித்துக்கொண்டே "பொங்கும் இன்பம் எங்கும் தங்குக" என்று சொல்லிக்கொண்டு ஜேபியில் போட்டுக்கொண்டான். இதைக் கண்ட கண்ணன்—"அடபாவி! எந்தப் பெண்மணியின் செயினை இப்படித் திருடினியோ தெரியலையே! "இரத்தினம் உனக்குக் கெட்டகாலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது" என்று கூறியபடி அந்த உருவம் நகர—அதன் பின்னாலேயே தொடர்ந்தான்.

இரத்தினம் அடுத்த சந்து திரும்பியதும், கண்ணன் திரும்பாமல் அவசரமாகச், சத்தம் செய்யாமல் ஓடி, அடுத்த சந்தில் திரும்பி, இரத்தினத்தை எதிர்நோக்கி நடக்கலானான். கண்ணனுக்கு இரத்தினம் திருடியிருக்கிறான் என்று தெரிந்திருந்தும், அவனைத் தனிமையில் பிடிப்பது ஆபத்து என்று புரிந்துகொண்டான். அதே நேரத்தில் தனக்கு எதிரே யாரோ ஒரு காவலன் வருவதைக் கண்ட இரத்தினம் திடுக்கிட்டான். என்ன இருந்தாலும் பழைய பெருச்சாளி அல்லவா! ஆகவே, ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு

"யாரது வாத்தியாரே! எங்கே இப்படி ரோந்து" என்று கேட்டான்.

"நான்தான் கண்ணன் — என்ன செய்யறது? எங்க பொழப்பு—ஆமாம்—ஏன் அண்ணாச்சி நாடகத்துக்குப் போகலே......

"பாத்தியா வாத்தியாரே! நம்மையே இண்டல் பண்றியே! நான் எங்கே வாத்தியாரே அங்கே எல்லாம் போறது"

"ஏன், என்ன சமாச்சாரம்......"

"என்ன வாத்தியாரே—அப்படிக் கேட்டிட்டியே! உனக்குத் தெரியுமே! இந்தப் பசங்க போடற நாடகத்துக்கு யார் வாத்தியாரே வருவாங்க! ஏழை பாழைங்க எல்லாம் வருது......நம்ம அந்தஸ்துக்கு...

"ஆமாம் இது ரொம்ப மட்டம்தான்.—வாயேன் அண்ணாச்சி—நம்ம நாயர் டீ கடைக்குப் போயி ஒரு டீ அடிச்சுட்டுப் போகலாம்"

"உம், வேணும் வாத்தியாரே"

"பரவாயில்லை, வா அண்ணாச்சி" என்று கண்ணன் அவனை அழைத்துக்கொண்டு நாயர் கடைக்குப் போனான். உள்ளுக்குள்ளே — கண்ணனுக்கு, நாயர் கடையில் யாராவது சி. ஐ. டி-கள் இருப்பார்கள், அவர்களை வைத்துக்கொண்டு இவனை மடக்கலாம் என்ற எண்ணம். இரத்தினசாமிக்கோ—"கண்ணன்—பாவம் அப்பாவி—ஏமாந்துவிட்டான்" என்ற எண்ணம். இருவரும் நாயர் கடையை அடைந்தனர். கண்ணன், நாயர் கடையில் இரண்டு சேவகர்கள் இருப்பதைக் கண்டு ஆனந்தம் கொண்டான். உடனே அந்த இரு காவலர்களுக்கும் கண் அடித்துவிட்டு இரத்தினம் பக்கம் திரும்பி,

"டேய் இரத்தினம்! எத்தனை நாளாகவடா நீ ஏமாற்றிக்கொண்டு வர்ரே—வாடா நிலையத்துக்கு" என்று கைத்தடியைத் தூக்கி மிரட்டினான். ஆனால், உடனே இரத்தினசாமி சட்டைக்கையைத் தள்ளிக்கொண்டே "டேய் கண்ணா...ஜாக்கிரதை..." என்று உறுமினான். ஆனால் டீக்கடையில் இருந்த மற்ற இரண்டு காவலர்களும் ஓடி வந்து அவன் கையைப் பிடித்து, அவனுடைய மப்ளரால்பின்பக்கமாகக் கட்டினார்கள்.

"டேய் கண்ணா! என்னை யாருன்னு நினைச்சே!" என்று கத்தினான்.

"டேய், சரிதான் கத்தாதேடா! கலெக்டர் மருமகன்னு நினைச்சிக்கச் சொல்றியா-சரிதான், வாடா, கருப்பண்ணன் மருமகனே! திருடுவதையும் திருடிவிட்டு என்னிடமா கதை பண்றே" "அண்ணே இழுத்துவாங்க அண்ணே, இவனை நிலையத்துக்கு" என்று அவர்களைத் துரிதப்படுத்தினான். அவர்களும் இரத்தினத்தை இழுத்துக்கொண்டு காவல் நிலையம் சென்றனர்.

மூன்று காவலர்களும், இரத்தினத்தை இழுத்துக்கொண்டு காவல் நிலையத்தில் நுழையும்போது—உள்ளே யாரோ ஒரு பெண் அழும் குரல் கேட்டது. உள்ளே சென்று பார்த்ததும், அங்கே, அன்னம் தன் தந்தையுடன் அழுதுகொண்டிருந்தாள்.

நாடக அரங்கில் மூவரும் இருந்தனர்—ஒவ்வொருவர் ஒவ்வொரு எண்ணத்துடன். ஆனால், இருவர் எண்ணம்தான் பலித்தது அங்கே! இரத்தினசாமி பொன் சரடு களவாடிவிட்டான்! கண்ணன் அதைக் கண்டுபிடித்துவிட்டான். ஆனால், அங்கே அன்னத்தின் எண்ணம் நிறைவேறவில்லை. நிறை

## அழகு!

ஆணுக்கு மீசை அழகு; பெண்ணுக்குக் கூந்தலழகு என்று சொல்வதுண்டு. இப்படி அழகே, கேசத்தில்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒரு ஆண் மகனின் தலையில் சுமார் ஒரு இலட்சம் கேசங்கள் இருக்கின்றன. பெண்மணியின் தலையில் சுமார் 90,000 முதல் 140,000 வரை இருக்கும். கேசம் மிகவும் மென்மையானதும் மெல்லியதும் கூட, இருப்பினும் ஒரு பெண்ணின் முடி 3,000 பவுண்டு எடையைத் தாங்கக்கூடிய வலிவுடையது.

வேறு காரணத்தினாலோ என்னவோ, மறுபடியும் காவல் நிலையத்தில் மூவரும் சந்தித்தனர். அன்னம் கண்ணனைக் கண்டதும், கண்களைத் துடைத்துக் கொண்டு, அவனையே ஏக்கத்தோடு, விழுங்கிவிடு பவள்போல் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால், கண்ணனோ அவர்களைக் கண்டதும் காணாததுபோல் இருந்து, தன் மேலதிகாரிக்கு வணக்கம் தெரிவித்து விட்டு, இரத்தினத்தின் கதையைச் சொன்னான்.

இரத்தினத்திற்குத் தலையைத் தூக்கவே முடிய வில்லை—ஏற்கெனவே போக்கிரி எனறு கூப்பிட்ட அத்தைமகள், இனிமேல் இதைப்பார்த்துத், தன்னை மதிக்காமலே போய்விடுவாள் என்ற எண்ணம் தோன்றியது. கண்ணனை அப்படியே கொன்றுவிட வேண்டும்போல் தோன்றியது.

ஆனால், இதற்குள் மேலதிகாரியும் காவலர்களைக் கூப்பிட்டு இரத்தினத்தை உள்ளே அழைத்துச் சென்று சோதனையிடும்படி சொல்லிவிட்டு, அன்னத்தையும் கருப்பண்ணனையும் சிறிது வெளியே அமரும்படி சொன்னார். ஆனால், இதற்குள் கண்ணன் குறுக்கிட்டுத், தன் வஞ்சனையைத் தீர்த்துக்கொள்ள இதுதான் நேரமென்று மேலதிகாரியைப் பார்த்து,

"வேண்டாம் ஐயா! இரத்தினத்தைப்பற்றி இவர்களுக்கும் தெரியவேண்டும், ஏனென்றால் இவர் தான் இரத்தினத்தின் மாமனார்—இவள்...." என்று கண்ணன் சொல்லி,

"அத்தை மகள் மாத்திரமல்ல சார்—எதிர்கால மனைவியும்கூட" என்று கேலி செய்வதுபோல் சொல்லும்போது, சோதனை செய்த காவலர்கள் வெளியே வந்து ஒரு இரட்டைத் தங்கச்சரடைக் காண்பித்தனர்.

இதைக் கண்ட அன்னம், "ஐயா! இது என்னுடையதுதான்! அடபாவி என கழுத்திலேயே கையை வச்சுட்டியே!" என்று புலம்பினாள்.

அவள் மனதைப் புண்படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன்,

'பெண்டாட்டி கழுத்திலே கையை வைக்க ஆம்படையானுக்கு உரிமையில்லையா என்று கண்ணன் கேட்க",

"ஐயோ! இதெல்லாம் யார் சொன்னது? அவன் என் புருஷனுமில்லை—நான் அவன் மனைவியுமில்லை" என்று தலையில் அடித்துக்கொள்ள—மேலதிகாரி இதைக் கண்டு "அம்மா இது காவல் நிலையம்—இங்கெல்லாம் இப்படிக் கத்தக் கூடாது! 403! நீ இப்படி ஏன் குறுக்கே பேசறே" என்றார்.


அப்போது இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த கருப்பண்ணன், தன் மகள் ஏற்கெனவே தனக்குச் சொன்ன செய்திகளைக் கொண்டு, மேலதிகாரியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு 'ஐயா இது என் குடும்ப சமாச்சசரம்—இங்கு சொல்லக்கூடாது—என்ன இருந்தாலும், இங்கு சொல்லவேண்டியிருக்கிறது, ஆகவே சொல்கிறேன்" என்று தன் மகள் கண்ணன்மேல் காதல் கொண்டுள்ளதைப்பற்றியும், இரத்தினத்தின்மேல் கொண்டுள்ள வெறுப்பைப் பற்றியும் சொன்னான்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த கண்ணனுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. மெதுவாகத் தன் பார்வையை அன்னத்தின் பக்கம் திருப்பினான். அவள் கண்களில் ஏக்கம் இருந்தது! அவளும அவனைப் பார்த்தாள்—கண்கள் சந்தித்தன—இன்பத்தின் மிகுதியால் இருவரும் புன்னகை புரிந்தனர்.

இதைக் கண்ட, மேலதிகாரி "கண்ணா—உனக்கு என் வாழ்த்துக்கள்—உன் கடமைக்குப் பரிசு—அதோ......" என்று அன்னத்தின் பக்கம் காட்டினார்.

இருவரும் நாணத்தால் முகம் திருப்பிக்கொண்டு புன்னகை புரிந்தனர். இதைக் கண்ட கருப்பண்ணன் "ஐயா! உங்கள் தயவால் இந்த இன்பம் என்றும் என வீட்டில் இருக்கவேண்டும்" என்று மேலதிகாரியைப் பார்த்துச் சொன்னான்.


"பொங்குக இன்பம்
எங்கும் தங்குக" என்றார் மேலதிகாரி.



THE SCHOOL OF ENGLISH LEARNING

# ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.




**சிந்தித்துப் பதில் சொல்வீர் !**

**உழைப்பின்** மகிமையைப் பாரோர் பாராட்ட உதாரணமாய் நின்றிடும் **தாஜ்மஹால்,** செல்வத்தின் செழுப்பிலே மன்னன் ஷாஜஹான் எழுப்பிய மகோன்னத சின்னம்.

**அறிவின்** அருமை பெருமைகளுக்கு அணிகலனை விளங்கிடும் காவியமாம் **இலியட்** வறுமையில் வாடிய, மாநிலம் புகழும் ஹோமரின் அற்புத சிருஷ்டி.

உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ ?
உழைப்போடு அறிவும் சேர்ந்து விட்டால்,
ஆகா தேதும் உண்டோ ?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

## ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

## இங்கிலீஷ் (தபால் மூலம்) கற்கலாம்

**சேர கடைசி தேதி: 25—1—61 } பயிற்சிகள் ஆரம்பம்: 27—1—61**

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

**முக்கிய அறிவிப்பு:—** (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப் படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம், பெண்களும் சேரலாம்.

**அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் (நயா 8 பைசா) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.**




ஏராளமான கூட்டம்.

இசை விழா நடந்துகொண்டிருந்தது.

சிவானந்த முதலியார் பெருமையுடன் உலவிக் கொண்டிருந்தார்.

இசை விழா ஏற்பாடுகள் செய்தவர்களில் அவரும் ஒருவர்.

செண்பகத்தின் இனிய கானம் எல்லோரையும் மயக்கச் செய்தது. முதலியாருக்குப் பல நினைவுகள் — அந்தக் குரலில் இழையும் இனிமையைக் கண்டு.

அந்தப் பெண்ணைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் அவருக்கு அதிகரித்தது.

மெள்ள எழுந்து மேடைக்குப் பின்புறமாகச் சென்றார்.

அங்கு ஒருவரும் இல்லை.

"இராசம்மா! நீயா?" என மலைத்து நின்றார் சிவானந்த முதலியார்.

"உங்களை இவ்வளவு வருடங்களுக்குப் பிறகாவது பார்க்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன்."

"உன்னை நான் எதிர்பார்க்கவில்லை."

"உங்கள் வாழ்விலும் நான் எதிர்பாராமல் வந்தேன்; போனேன்."

"ஆமாம், நீ எப்போது பர்மாவில் இருந்து வந்தாய்? பெண் எப்படி இருக்கிறாள்."

"இப்போது நீங்களும், பல்லாயிரக்கணக்கானவர்களும் கேட்டு மகிழ்ந்துகொண்டிருக்கப் பாடிக்கொண்டிருப்பது என் பெண்தான்."

அதற்குள் எவரோ வரும் காலடி ஓசை கேட்டு முதலியார் அவ்விடத்தை விட்டகன்றார். அவருக்குப் பெரு மகிழ்ச்சி! இருக்காதா, பாடிக்கொண்டிருப்பது அவர் மகளல்லவா!! ஆனால் உலகின் கண்முன் அவள்?

திரும்பி வந்து அவர் மனைவியும் மகனும் அமர்ந்திருக்கும் இடத்தில் அமர்ந்துகொண்டார்.

இன்பமழை பொழிந்துகொண்டிருந்தது!

ஓர் காலத்தில் அவர் வாழ்க்கையிலும் இன்பமழை பொழிந்துகொண்டிருந்த நேரம். கண்டார், கட்டழகுப் பெட்டகமான இராசத்தை. அவருக்கு உயிர் அவள்மேல்.

ஆனால், அவள்-தன்னை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து விட்ட கணிகையர் வழி வந்தவள் — எனச் சொல்லிக் கொண்டார்கள்.

இராசத்துடன் ஓராண்டுக் காலத்தை இன்பமாகக் கழித்தார்.

காலத்தின் பாடம்—ஓர் இளம் பிஞ்சு—ஓர் பெண் குழந்தை பிறந்தது.

ஆனால், சமுகம் அவளையும் அந்தக் குழந்தையையும் ஏற்கத் தயாராயில்லை.

சிவானந்தத்திற்கு வேறோர் இடத்தில் பெண் பேசித் திருமணம் செய்துவிட்டனர்.

திருமணத்திற்குப் பிறகு அவரும் மறந்துவிட்டார்—அவளைப்பற்றி, இவள் வந்தபிறகு அவள் எதற்கு?

சிவானந்தம், சிவானந்த முதலியார் ஆனார்!

அவருக்கு ஓர் மகனும் பிறந்தான். படித்துப் பட்டமும் பெற்றான். அவனுக்குத் திருமணம் செய்யவேண்டிய பருவம்.

இந்த வேளையில்தான் அவளைச் சந்தித்தார்.

விழா முடிந்துவிட்டது.

வீடு திரும்பினர்.

ஆனால், அவர் மனம் திரும்பவில்லை, கடந்தகால நிகழ்ச்சிகளைவிட்டு!

❋

அதற்குப் பிறகு பல நாட்கள், அவள் வீட்டிற்குப் போய்வர ஆரம்பித்தார்—தனக்கு ஓர் மகள் இருக்கிறாள் என்ற ஓரே ஆசையில்.

❋

"செண்பகம்."

"ம்"

"விழாவன்று உன்னைச் சந்தித்தேன்"

"அதனால்"

"இப்பொழுது சிந்திக்கிறேன், நம் மணவிழா எப்போது என்று"

"ஆசை இருக்கிறது"

"அச்சம் இல்லை எனக்கு"

"செண்பகம், அதோ பார். என்தந்தை உன் வீட்டை நோக்கி வந்துகொண்டிருக்கிறார். என்ன செய்வது! அவர் என்னைப் பார்த்துவிட்டால்"

"இப்பொழுதுதானே சொன்னீர்கள், அச்சம் இல்லை என்று.

இருக்கவேண்டியதுதான். ஆனால், அச்சப்படாதீர்கள், அவர் அம்மாவைக் கண்டு பேசிவிட்டுப் போய் விடுவார்."

"ஆமாம், எதற்காக அவர் இங்கு வருகிறார்."



"ஏதாவது இசைவிழா ஏற்பாடு செய்வதற்காக இருக்கலாம்."

•

"அப்பா"

"சுந்தரம்"

"உங்களுக்குச் சாதியிலே நம்பிக்கை கிடையாது"

"ஆமாம்"

"பணத்தைப் பற்றிக் கவலையில்லை"

"ஆமாம்"

"நமக்கு இருப்பதிலே இன்னும் இரண்டு குடும்பங்கள் பிழைக்கலாம்"

"ஆமாம்"

"இதற்கெல்லாம் 'ஆமாம்' சொல்லுகின்ற உங்கள் மனது, ஏன், எங்கள் திருமணத்திற்கு 'ஆமாம்' சொல்லாமல், 'ஆனால்' என்கிறது"

"'அதனால்'தான் சொல்கிறேன், அந்த எண்ணத்தை விட்டுவிடு என்று."

"காரணத்தையாவது சொல்லுங்கள்"

"என் மனச்சாட்சி என்னை அனுமதிக்கவில்லை"

"உங்கள் மனச்சாட்சிக்கும் எங்கள் திருமணத்திற்கும் என்னப்பா சம்மந்தம்."

"அதை விளக்குவதற்கு நான் தயாராக இல்லை— அது என்னால் முடியாது—என்னை மன்னித்துவிடு."

•

"மணி! என் மனம் ஓர் நிலையில் இல்லை. என்னைத் தொந்தரவு செய்யாதே. நான் வாழ்வின் கடைசிப் படிக்கு இழுத்து வரப்பட்டுவிட்டேன்.

என் வாழ்வு பாலைவனமாக வேண்டும் என்கிறார் என் தந்தை. செண்பகம் எனக்கில்லை. இல்லை, இல்லை— வேண்டாம் என்கிறார்."

"காரணம்?"

"காரணத்தை நான் சொல்கிறேன். தந்தைக்கும் தனயனுக்கும் ஒரே பெண்மீது காதல். சிசீ! இல்லை, மோகம்."

"மோகன்! என்னை வெறியனாக்காதே. இப்பொழுதே நான் பாதி மிருகமாகிவிட்டேன்."

"பாதி என்ன? உங்கள் குடும்பமே மிருக குணம்தான். ஏனென்றால், தந்தையும் தனயனும் ஒரு பெண்ணை விரும்புவது மனித இனத்திற்கு ஒவ்வாதே! அடிக்கடி நீயும் உன் தந்தையும்; அவர் இல்லாத நேரத்தில் நீயும், நீ இல்லாத நேரத்தில் அவரும் — உனக்கென்ன தெரியும். நீ ஒரு பிள்ளைப் பூச்சி. உலகத்தைப் படத்தில் பார்த்திருப்பாய்! ஆனால், ஏட்டுச் சுரக்காய் இங்கே உதவவில்லை உனக்கு. வேண்டுமென்றால் மளிகைக்கடையிலும், மற்றக் கடைகளிலும் போய்க் கேட்டுப்பார். செண்பகத்திற்கு அவர் செலவிட்டிருக்கும் தொகையை — தந்திருக்கும் விலையை!"

முழு மிருகமாகிவிட்டான் சுந்தரம்!

•

"செண்பகம்"

"ஆ! என்ன கூச்சல். நடுங்கிவிட்டேன்."

"கொஞ்ச வரவில்லை நான். கலைந்துவிட்ட உன் வேடத்தைக் கண்டு காரணம் கேட்க வந்திருக்கிறேன். நீ விலைமகளாக மாறியதைப் பற்றிக்கூட நான் வியப்படையவில்லை. ஏனென்றால், தந்தைக்கும் தனயனுக்கும் இடையே நீ ஆடியிருக்கிறாயே கபட நாடகம், அதை நினைக்கும்போது, இது சாதாரணம்"

"சுந்தரம்! என்ன புதிர்போடுகிறீர்கள்'!

"பணம் கேட்டு வாங்க ஒருவன். மனம்விட்டுப் பேச இன்னொருவன். பொருள் வேண்டும் என்பது உன் எண்ணமானால், நீ என்னிடம் மனம்விட்டு சொல்லியிருக்கலாம். அல்லது என் மனதையாவது கெடுக்காமல் இருந்திருக்கலாம்.

"ஆத்திரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டாதீர்கள். அவை என் இதயத்தைத் தேள்போல் கொட்டுகின்றன! மென்மையான இதயம் என்பீர்களே, அதைத் துன்புறுத்த உங்களுக்கு எப்படி மனம் வந்தது?"

"நீ உன் இதயத்தை இரும்பாக்கிக் கொண்டாய். நான் என் இதயத்தையே இழந்துவிட்டேன்"

"பகுத்தறிவையும் சேர்த்து இழந்துவிட்டேன் என்று சொல்லுங்கள். இல்லையானால் நினைத்தால் நெஞ்சு வெடிக்கும் வார்த்தைகளை அஞ்சாமல் சொல்லமாட்டீர்கள்!!

"செண்பகம்! உனக்கு என் தந்தை புடவைகளும், நகைகளும் வாங்கித் தந்திருக்கிறார், உண்மைதானே!"

"ஆமாம்"

"ஏன்! எதற்கு? உனக்கும் அவருக்கும் என்ன சம்மந்தம்?

"அவருக்கும் எனக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை"

"ஆமாம், அவருக்கும் உனக்கும் இல்லை. பணத்திற்கும் உனக்கும் இருக்கிறதே"

"இல்லை, இல்லை. என்தாய் சொன்னாள், வாங்கிக் கொண்டேன்.

"இல்லை. விற்றுவிட்டாய் — உன் கற்பை."

•

"அப்பா!"

"சுந்தரம்"

"உங்களைத் தந்தை என்று அழைக்கவே என்நா கூசுகிறது. புராணங்களில்தான் நான் படித்து—இல்லை— நீங்கள் படித்து நான் கேட்டிருக்கிறேன்—இம்மாதிரி நிகழ்ச்சிகளை. நீங்கள் அவைகளைக்கற்று அதன் வழியில் நிற்கிறீர்

கள் என்பதைக் காணும்போது வெட்கித் தலைகுனிகிறேன் —உங்கள் அறிவின் 'திறன்' கண்டு''

''சுந்தரம்! நீ என்றுமே என்னிடம் பேசாதவார்த்தைகளைப் பேசுகிறாய், நிலை தவறியவன் போல்.''

'' என் நிலை தவறியது உங்களால்தான். ஆனால், நீங்கள் நீதிதவறியதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது.''

''சேதியைச் சொல்.''

''என்னவென்று சொல்ல! ஒருதனயன் தந்தையிடம் சொல்லவேண்டிய நிகழ்ச்சி அல்ல, ஆனால், நீங்கள் நிகழ்த்திவிட்டீகள். அந்தக் கொடுமையை.''

''புரியும்படி சொல்.''

''எனக்கும் செண்பகத்திற்கும் மணம் செய்விக்க நீங்கள் தடை சொல்லியபோது எனக்குத் தெரியாது, நீங்கள் மனதை அவளிடம் கொடுத்துவிட்டீர்கள் என்பது.

விழியைப் பிடுங்கவில்லை நீங்கள்!

ஓவியத்தை கலைத்துவிட்டீர்கள்!! — என் நெஞ்சின் ஓவியத்தை.''

''சுந்தரம்!

தவறு என்னுடையதுதான். ஆனால், நீ தாறுமாறாகப் பேசியிருக்கவேண்டாம்.

அவள் என் மகள்!

உன் தங்கை!!

இத்தனை நாள் நிலைமையை விளக்காமல் இருந்தேன். நிகழ்ச்சியை மறைத்துவிட, உன் ஓவியத்தைக் கலைத்துவிடவில்லை—திரைபோட்டு மறைத்தேன்.



இராசம் என் வாழ்க்கைப் புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் வந்து சென்றவள். நான் உன்னிடம் அந்த ஏடுகளைக் காண்பிக்காமல் மறைத்தது என் தவறு. ஆனால், செண்பகம் என் மகள் என்பதை இந்த உலகத்திற்கு நான் இப்போது வெளிப்படுத்தினால்...

நீ நிலைமையை புரிந்துகொண்டிருப்பாய் என்று நினைக்கிறேன்!!

''அப்பா! ஆத்திரம் என் அறிவை மயக்கவில்லை— இழக்கவே செய்துவிட்டது. என் நிலைமையும், இளமையும் என்னை வெறியனாக்கிவிட்டது.''

''முனியா! என்ன இவ்வளவு அவசரம்?''

''எசமான் நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. இராசம்மாவை எந்தப் பாவியோ கொன்றுவிட்டான். அந்தப் பொண்ணு துக்கத்தைக் காண......

*

''இன்ஸ்பெக்டர்!''

''மன்னிக்கவேண்டும் மிஸ்டர் சுந்தரம். உங்களையும் உங்கள் தந்தையையும் இராசம்மா கொலை சம்மந்தமாகக் கைது செய்ய வந்திருக்கிறேன்''

''என்னைக் கைது செய்யுங்கள்; அவர் எதற்கு?''

''நான் பேசிக்கொண்டிருக்க வேண்டியவனில்லை. கடமைகளைச் செய்யவேண்டியவன்''.

''சுந்தரம்''

''அப்பா, அழாதீர்கள்.

•

உங்களையும் செண்பகத்தையும் விடுதலை செய்துவிட்டார்கள் என்பதை கேட்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். என்னை அவர்கள் குற்றவாளி என்று முடிவு செய்வதற்கு முன்னமே நான் முடிவு செய்துவிட்டேன், அந்த முடிவை ஏற்றுக்கொள்வதென்று. நீங்களும், தங்கையும் சுகமாக இருங்கள்.''

''சுந்தரம்! வாழவேண்டியவன் நீ — அவர்கள் என்மேல் பழியைச் சுமத்தியிருந்தால் நான் கவலைப்பட்டிருக்கமாட்டேன்!''

''அப்பா! என்னை அறியாமல் என் மனதைச் செண்பகத்திற்கு அளித்துவிட்டேன். இனிமேல் நான் வாழ்ந்தாலும் எனக்கு நிம்மதி இருக்காது நீங்கள் இருந்தால்தான் அந்தத் தாயில்லாப் பெண்ணைக் காப்பாற்ற முடியும். அவள் என் தங்கை என்பதை நானும் உலகத்திற்குச் சொல்லாமல் மறைத்துவிடுகிறேன். நாளை நீதி மன்றத்தில் நீங்கள் தயவுசெய்து எதையும் சொல்லிவிடாதீர்கள்''.

•

''உங்கள் பெயர்?''

''சிவானந்த முதலியார்''

''அதோ கைதிக் கூண்டில் நிற்கும் சுந்தரம் உங்கள் மகன்.

''ஆமாம்''.

''உங்களுக்கும் இராசம்மாளுக்கும் உள்ள தொடர்பு என்னவென்று சொல்லமுடியுமா?''

''ம்......ஒன்றுமில்லை. இசை விழா நடக்கும் நேரங்களில் அவர்கள் வீட்டுக்குச் செல்வேன்—இசைவிழாப் பொறுப்புகள் என்னிடம் தரப்பட்டதால்.''

''இருக்கட்டும், உங்கள் மகன் செண்பகத்தைக் காதலித்தது உண்மைதானே!''

''எனக்குத் தெரியாது''

''அதற்கு அவள் தாய் தடை சொல்லியது''

''எனக்குத் தெரியாது''

''நேற்று உங்கள் மகன் உங்களிடம் கடுஞ்சினத்துடன் பேசிக்கொண்டிருந்தது உண்மைதானே— அதாவது இரவு 7-30 மணிக்கு.''

''ஆம்''

''அவர்கள் குடும்பத்தைபற்றித்தானே''

''ம்......ஆம்''



"நீங்கள் போகலாம்"

✱

"உங்கள் பெயர்"

"செண்பகம்"

"சிவானந்த முதலியாரை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்"

"எந்த முறையில்"

"இசைவிழா நிகழ்ச்சிகள் மூலம்"

"சுந்தரமும் உங்களுக்கு அறிமுகமானவர்..."

"ஆம்"

"மன்னிக்கவும், உங்கள் காதலர் என்று நினைக்கிறேன்"

"ஆம்"

"சரி, கொலை நடப்பதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்னம் சுந்தரம் உங்களிடம் கோபமாகப் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்"

"ஆம்"

"நீங்கள் போகலாம்"

"உயர்திரு: நீதிபதி அவர்களே! தந்தைக்கும் தனயனுக்கும் ஒரே பெண்ணின்மீது விருப்பம். ஆனால், செண்பகத்திற்குச் சுந்தரத்தின்மேல் காதல். இராசம்மாவோ செண்பகத்தை அனுமதிக்கவில்லை, சுந்தரத்தை திருமணம் செய்துகொள்ள! அவள், தந்தை தனயன் இருவரையும் ஏமாற்றிப் பொருள் சேர்க்கத் திட்டம் தீட்டியிருக்கிறாள். சுந்தரத்திற்கு இராசம்மா இருக்கும்வரை திருமணம் இல்லை என்பது தெரிந்துவிட்டது. அதனால் இராசம்மாவை இல்லாமலே ஆக்கிவிட்டிருக்கிறான்.

அத்துடன் குற்றவாளியே தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறான். வேறு சாட்சியம் தேவையில்லை. நீதிபதி அவர்கள் தகுந்த தண்டனை கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்!

"குற்றவாளி தன் காதலுக்கு இடையூறாக வந்தவனைக் கொன்றதாக ஒப்புக்கொள்ளுகிறான். நடந்திருப்பவைகளும் சாட்சியங்களும் அதை உறுதிப்படுத்துகின்றன. ஆகையால், குற்றவாளி சுந்தரத்திற்கு மரண தண்டனை அளிக்கிறேன்."

✱

"ஐயா! நிறுத்துங்கள்!! குற்றவாளி நான்!!

என் பெயர் செல்லப்பன். இருபது வருடங்களுக்கு முன்னமே இராசம்மாளுக்கு அறிமுகமானவன். அவள் இசைக் குழுவில் வீணை வாசிப்பவன் நான்.

ஒருநாள், அவள் சிவானந்தமுதலியாரைச் சந்தித்தாள். ஆனால், சிந்திக்க மறந்துவிட்டாள், அவளுக்கும் அவருக்கும் இடையில் சமூகம் ஏற்படுத்தியிருந்த இடைவெளியைப்பற்றி. வாழ்வு ஓராண்டுக்காலம் இனித்தது—இருவருக்கும். பெண் குழந்தை ஒன்றும் பிறந்தது.

பாழாய்ப்போன சமூகம் இருவரையும் பிரித்தது.

சிவானந்த முதலியார் தன் மனதை மாற்றிக்கொண்டார்! அவள் மனதை மாற்றமுடியவில்லை அவளால்!

ஆனால், மானத்தை விற்கத் தயராகிவிட்டாள்.

வேறொருவருடன் தொடர்பு கொண்டாள்!

பர்மா சென்றாள்.

அந்தப் பாவி கசக்கி எறிந்துவிட்டான் அந்தக் கரும்பை—சிவானந்த முதலியாரின் வாரிசை!!

குழந்தையைப் பறிகொடுத்த அவள், தனக்கு உலகத்துடன் உள்ள தொடர்பை அறுத்துக்கொள்ளத் தயாராகிவிட்டாள்!

அந்த நேரத்தில் தாயில்லாப் பெண்ணாகச் செண்பகம் இருந்தாள்—என் மகள்!!

செண்பகத்தை வளர்க்கும் பொறுப்பை நான் அவளிடம் கொடுத்துவிட்டேன்.

செண்பகத்துடன் இங்கு வந்தவள் சிவானந்த முதலியாரைச் சந்தித்தாள்.

சந்திப்பு அவளுக்கு ஒரு கொடூரமான எண்ணத்தை வளர்த்துவிட்டது.

சிவானந்த முதலியாரிடம் பணம் பறிப்பதற்காக, செண்பகத்தை அவர் மகள் என்று கூசாமல் சொன்னாள். அவள் கோணல் புத்தி, இருவரின் வாழ்க்கைப் பாதையில் பல கோணல்களை ஏற்படுத்தியது.

செண்பகம் என் மகள்! அவள் வாழ்வு பறிக்கப்படும்போது என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

செண்பகத்தின் வாழ்வுக்காக இராசம்மாவின் வாழ்க்கையை முடித்துவிட்டேன். ஆனால், நான் யாருக்காக இந்தக் கொலையைச் செய்தேனோ, அவர்களுக்கு வாழ்வு இல்லை என்று அறிந்ததும், இனியும் மறைப்பதில் பயனில்லை என்று, உண்மையை வெளிப்படுத்திவிட்டேன். தண்டனையை எனக்கு அளியுங்கள்.

"அவர்கள் வாழட்டும்"

"குற்றம் செய்யாத சுந்தரத்திற்கு விடுதலை அளித்து, செல்லப்பனுக்கு ஆயுள் தண்டனை அளிக்கிறேன்,"

✱

"அப்பா!"

"மாமா!"

சிவானந்த முதலியார் இருவரையும் அணைத்துக்கொண்டார். தந்தை நிம்மதியுடன் ஆனந்தக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார். தனயன் அந்த அழகோவியத்திலே இன்ப மழை பொழிவதைக் கண்டு ரசித்துக்கொண்டிருந்தான்!—அற்ப ஆசை அவனுக்கு! ★

# இடையில் ஒரு நாள்

மா. கி. தசரதன்—எம். ஏ.

**நான்**:- 'இப்போது வேண்டாம்; உடல் சோர்ந்து இடக்கிறது—பிறகு காட்டுகிறேன்' என்று சொல்லி விட்டுப் போனுயே—வந்தாயா அப்புறம்!

**மனம்**:- நானாக வரவேண்டுமா? நீ கூப்பிட்டால்தானே வர? அழையாத இடத்திற்குள் நுழையலாமோ?

**நான்**:- யார், யாரை அழைப்பது? விருந்தாக வருவோரை அழைக்கலாம். வீட்டுக்குள் இருப்போரையுமா அழைக்கவேண்டும்?

**மனம்**:- ஏன் அழைத்தால் என்ன? அழைக்கவேண்டும், ஏதாவது கேட்கவேண்டும் என்று உனக்குத் தோன்றியதோ?

**நான்**:- இல்லை.

**மனம்**:- அதுதான் நானும் வரவில்லை.

**நான்**:- இப்போது மட்டும் எப்படி வந்தாய்?

**மனம்**:- என்ன செய்வது? 'மனம்' கேட்கவில்லை—'போபோ' என்று பிடித்துத் தள்ளியது, வந்து விட்டேன்.

**நான்**:- உனக்குவேறு மனம் இருக்கிறதா?

**மனம்**:- ஏன் இருக்காது? உனக்கு ஒருமனம் இருக்கும் போது, உன் மனத்திற்கு ஒரு மனம் இருக்கக் கூடாதா? அதுபோகட்டும். ஏன் இத்தனை நாளாக என்னைக் கூப்பிடவே இல்லை? அதைச்சொல், முதலில்.

**நான்**:- "…………"

**மனம்**:- ஏன் சும்மா இருக்கிருய்? ஏதாவது காரணம் இருக்கவேண்டுமே? என்னைக் காண விரும்பவில்லையா? அதையாவதுசொல்லிவிடு, நான் மறைந்தே போகிறேன்.

**நான்**:- சே! சே! அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. காணவேண்டும்; கலந்து உரையாடவேண்டும் என்று ஆசைதான்.

**மனம்**:- ஓய்வு இல்லையோ?

**நான்**:- ஓய்வு இல்லாமல் என்ன?

**மனம்**:- யாராவது வேண்டாம் என்று தடுத்தார்களோ?

**நான்**:- அதுவும் இல்லை. அழைக்கலாம் அழைக்கலாம் என்று எண்ணிக்கொண்டுதான் இருந்தேன். ஆனால், எப்படியோ அழைக்காமல் இவ்வளவு நாட்கள் கடந்துவிட்டன.

**மனம்**:- அதாவது, நீ விரும்பிய ஒன்றைச் செய்ய முடியாது இருந்துவிட்டாய்?

**நான்**:- ஆமாம்.

**மனம்**:- இதற்கு என்ன பெயர், தெரியுமா?

**நான்**:- தெரியாது, சொல்; தெரிந்துகொள்கிறேன்.

**மனம்**:- சோம்பல் என்பது பெயர்.

**நான்**:- ஓ! அப்படியா?

**மனம்**:- என்ன அவ்வளவு அலட்சியம்? அது எவ்வளவு கொடிய நோய் தெரியுமா?

**நான்**:- நோயா? எது?

**மனம்**:- சோம்பல்! அது நோய்தான், ஐயமேவேண்டாம்; அந்த நோய் பற்றிவிட்டதானல் அழிவு உறுதி. அதைத் தொடர்ந்து வேறுபல நோய்கள் ஒன்றின் பின் ஒன்ருக வந்தவண்ணம் இருக்கும்!

**நான்**:- அவ்வளவு கொடியதா, அது?

**மனம்**:- ஆமாம்! இரும்பிலே துருப்பிடித்திருப்பது இரும்புக்கு எவ்வளவு கெடுதலோ, அவ்வளவு கெடுதல் மனித உடலில் சோம்பல் குடிபுகுவது. அதைவிடக் கெடுதல் மூளையிலே சோம்பல் நுழைவது.

**நான்**:- அப்படியா?

**மனம்**:- அப்படித்தான். ஏன் தெரியுமா? உடலில் சோம்பல் ஏற்பட்டால், சுலபத்திலே போக்கிக் கொள்ளலாம். அது ஒரு பொறியின் வெளி உறுப்பிலே பிடிக்கும் துருப்போல; துடைத்துவிடலாம். ஆனல், மூளையில் சோம்பல் ஏற்பட்டால் அதைப் போக்குவது கடினம். உள்ளுறுப்பில் துரு ஏறி விட்டால், துடைக்கத் தொல்லை என்பது ஒரு பக்கம் இருக்கட்டும், துரு இருப்பதே வெளியில்

தெரியாது அல்லவா? அதைப்போல்தான், உடம்பிலே ஏற்படும் துரு — சோம்பல், மற்றவர்க்குத் தெரியும். ஆனால் மூளையில் ஏற்படும் துரு-மந்தம்-பிறர்க்குத் தெரியாது. அதனால் அது துடைக்கப்படாமல் வளர்ந்துகொண்டே போகும்.

நான்:- அது சரி. துருப்பிடிக்காமல் தடுக்க வழி இல்லையா?

மனம்:- ஏன் இல்லை? பயன்படுத்திக்கொண்டேயிருக்க வேண்டும். சும்மா இருக்கும் போதும் துடைத்து வைக்கவேண்டும்.

நான்:- அதாவது,பயிற்சி செய்யவேண்டும் என்கிறாய்?

மனம்:- ஆமாம்.

நான்:- எங்காவது அழைத்துச் சென்று எதையேனும் காட்டுவாய் என்று நினைத்தேன். நீ என்னவோ என்னிடமே ஆராய்ச்சிகள் செய்யத் தொடங்கி விட்டாயே.

மனம்:- நீ தமிழன் தானே.

நான்:- ஆம். திராவிடன் தான்.

மனம்:- அதனால்தான் உன்னையே ஆராயமுற்பட்டேன்; உன்னிடம் இப்போது இருக்கிறதே இந்தச் சோம்பல் — இந்தச் செல்வம் — உன் முன்னோரிடத்தில் இடைக்காலத்தில் நிரம்ப இருந்தது. அது உன் வரை வந்து நிற்கிறது. அதனால் விளைந்தவை பல.

நான்:- முன்னோர்கள் என்றால் எப்போது இருந்த முன்னோர்கள்? அதைச் சொல்லவில்லையே. சங்க காலத்தில் இருந்த முன்னோர்களா?

மனம்:- சே! அவர்களிடம் சோம்பல் ஏது? அவர்கள் உழைப்பாளிகளாயிற்றே. 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்பது அவர்கள் எண்ணம். அதுமட்டும் அல்ல; பெற்றோர் தேடிய செல்வத்தை நம்பி வாழும் வாழ்வை அவர்கள் மதித்ததே இல்லை. இன்னொன்று தெரியுமா? ஒவ்வொருவனும் தன் திருமணத்திற்கான பொருளைத்தானே உழைத்துத் தேடிக்கொண்டானே அப்போது — அவர்களைச் சோம்பி இருந்தவர்கள் என்று கூறக்கூடாது.

நான்:- அப்படியானால், இந்தச் சோம்பல் பின்யாருடைய சொத்து?

மனம்:- அதுதான் தெரியவில்லை. சங்க காலத்திற்குப் பிறகு, ஒரு பெரிய சரிவு; மாற்றம்; திருப்பம் திசை மாறிய போக்கு இருந்திருக்கிறது. அந்தக் காலத்திலே இடைத்த முதலாக இருக்கலாம் இது.

நான்:- எனக்கு ஒன்று தோன்றுகிறது.சொல்லட்டுமா?

மனம்:- சொல்.

நான்:- சோம்பி இருப்பது என்பது மனிதனிடம் மட்டும் அல்ல, எல்லா உயிரினங்களிடமும் உள்ள குணம் அல்லவா?

மனம்:- ஆமாம்.

நான்:- அந்தக் குணம் சங்க காலத்து மக்களிடமும் ஏன் இருந்திருக்கக் கூடாது?

மனம்:- இருந்திருக்கலாம். ஒரு வகையில் நீ சொல்வதிலே பொருத்தமும் இருக்கிறது. சங்க காலத்தில் மக்களுக்கு வாழ்க்கை போராட்டமாக இருந்தது இல்லை. எனவே, நிரம்ப ஓய்வு இருந்தது. ஓய்வு என்பது என்ன?



நான்:- சும்மா இருப்பது.

மனம்:- ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பது அல்ல, உழைத்து விட்டு, அதனால் ஏற்பட்ட களைப்பால் சும்மா இருப்பது ஓய்வு. ஆனால், சோம்பல் அப்படி அல்ல. உழைக்காமலே சும்மா இருப்பது. ஓய்வு தேவையானது. சோம்பல் தீதானது. இந்தப் பாகுபாடு இன்னும் பலபேருக்குப் புலனாவது இல்லை. உழைத்துவிட்டு ஓய்ந்திருக்கும் ஒருவனைக் கண்ட இன்னொருவன் 'நானும் அவனைப் போலவே சும்மா இருப்பேன' என்று எண்ணிய எண்ணம் படிப்படியாகச் சோம்பலுக்கு — போலி ஓய்வுக்கு—வழிசெய்து விட்டிருக்கலாம்.

நான்:- இன்னொன்றும் சொல்லலாம்.

மனம்:- என்ன?

நான்:- சங்ககாலத்து மக்களிடையே 'மதுவும் மங்கையும்' பழக்கம் இருந்தது அல்லவா?

மனம்:- ஆமாம். சில காட்சிகளைப் பார் என்று அழைத்துச்சென்று காட்டினேனே.

நான்:- அந்த இரண்டும் உடம்பிலும் மூளையிலும் சோர்வையும் சலிப்பையும் உண்டாக்குவன அல்லவா? அப்படி உண்டாகி வளர்ந்திருக்கலாம் இந்தச் சோம்பல் நோய் என்று எண்ணுகின்றேன்

மனம்:- அதுபோகட்டும். இவ்வளவு கொடியதாகிய இதனை எந்தப் புலவராவது கண்டித்து விலக்கி யிருக்கிறார்களா? சொல்.

நான்:- ஏன் இல்லாமல். நன்றாகக் கண்டித்திருக்கிறார் ஒருவர்.

மனம்:- யார் அவர்?

நான்:- வேறு யார், திருவள்ளுவர் தான்.

மனம்:- என்ன சொல்கிறார் அவர்?

நான்: எத்தனைமுறை அந்தக் குறளைச் சொல்லி இருக்கிறேன்? பல இடங்களில் எழுதியும் வைத்திருக்கிறேன். 'மனப்பாடம்' ஆகிவிட்டது என்றும் இறுமாந்தேன். இப்போது மீண்டும் என்ன அது என்று கேட்கிறாயே!

மனம்:- குறளைச் சொல், கேட்கலாம்.

நான்:- நெடுநீர்—இன்று செய்யவேண்டியதை அப்புறம், நாளை என்று ஒத்திப்போடுவது—மறவி—மறதி, மறப்பு — மடி சோம்பல் — துயில் தூக்கம்—இந்த நான்கும்.

மனம்:- சொல்.

நான்:- கெடும் நீரார் — அதாவது கெடவேண்டும் என்று கருதுகின்றவர்கள் விரைந்து சென்று ஏறும் கலம்.

மனம்:- இந்த நான்கும் இருந்தால் நிச்சயம் அழிவு தான் என்கிறார்?

நான்:- ஐயமே வேண்டாம், என்பதற்காகத்தான் இன்னொரு குறளில் இதே கருத்தை இரண்டு ஓவியங்களாக எழுதியுள்ளார்.

மனம்:- அதையும் சொல்—

நான்:- இரண்டு ஓவியத்திலும் இரண்டு இணைகள்— ஆணும் பெண்ணும் — இரண்டிலும் உள்ள ஆண்கள் ஏறத்தாழ ஒரே தன்மையையுடையவர்கள் தாம். ஆனால் பெண்களிலே ஒருத்தி, கரிய நிறத்தவள், அழகற்றவள்—இன்னொருத்தி செந்தாமரை மலர்போன்று சிவந்தவள், அழகி. ஒரு ஓவியத்தில் ஆணின் மடியில் அந்தக் கரியவள் ஆதிக்கத்தோடு அமர்ந்திருக்கிறாள். இன்னொரு ஓவியத்தின் அழகி ஆணின் காலில் கிடக்கிறாள். முதல் ஓவியத்தில் ''மடியுளான்''—சோம்பலுடையவன்— என்றும், இரண்டாவது ஓவியத்தில் ''மடியிலான்''- சோம்பலற்றவன்—என்றும் எழுதியுள்ளார்.

மனம்:- அதாவது......



நான்:- முயலுகின்றவனுக்குச் சீதேவி பணி செய்வாள் என்றும், முயற்சியில்லாதவன் மூதேவியின் ஆட்சியில் அடங்கிக் கிடப்பான் என்றும் பொருள்.

மனம்:- கடவுளரிலேகூட நல்ல கடவுள், கெட்ட கடவுள் என்று உண்டா என்ன?

நான்:- இருப்பதாகத்தானே சொல்கிறார்கள்.

மனம்:- கடவுள் என்றால் என்ன? அதைச் சொல் முதலில்!

நான்:- ஐயோ எனக்குத் தெரியாதே—

மனம்:- அப்படியானால் என்னோடுவா — நான் காட்டுகின்றேன்.

*

[காளி கோயில்—வெட்டுவதற்காக ஆடுகள் கட்டப்பட்டுள்ளன — அவை அவலக்குரல் எழுப்புகின்றன—கள்ளின் முடை நாற்றம் — வெறிகொண்ட மக்கள்—முதலிய காட்சிகளைக் காணல்.]

*

நான்:- 'கடவுளைக் காட்டுகின்றேன் வா' என்று அழைத்துவந்து இந்த இடத்தைக் காட்டுகிறாயே?

மனம்:- இப்போது ஒன்றும் பேசாதே. வா, இன்னும் சிலவற்றைக் காணலாம்.

*

[சிவனுக்கும் திருமாலுக்கும் கடுமையான போர் நடக்கிறது. சுற்றிலும் தேவர்களும், பிறரும் நின்று காண்கின்றனர்.]

*

நான்:- இது போர்க்களம் அல்லவா?

மனம்:- ஆமாம்.

நான்:- கடவுளைக் காட்டுகின்றேன் என்று சொன்னாயே.

மனம்:- இவர்கள் கடவுளர்தாம். ஒருவர் அரன், இன்னொருவர் அரி. அயன் படைப்பதைக் காத்து அழிக்கும் தொழில் கொண்டவர்கள்.

நான்:- தாங்களே ஒருவரை ஒருவர் தாக்கி அழித்துக் கொள்ளுவார்கள் போலிருக்கிறதே.

மனம்:- பிரமன் பழிதீர்த்துக் கொள்கிறான்.

நான்:- இது வேறு?

மனம்:- இருக்காதோ பின்னே? முன்னே ஒருதரம் பிரமனுக்கும் திருமாலுக்கும் தங்களிருவரில் யார் பெரியவர் என்று அறிய எண்ணம் எழுந்தது. நேரே சிவனிடம் சென்று அவரை நடுவணராகி நிற்கச் சொன்னார்கள். அவர் நெடியவராக நின்று 'உங்கள் இருவரைவிட நானே பெரியவன்' என்று நிலைநாட்டினார். அந்தக் கோபம் பிரமனுக்கு. அது தான் இப்போது திருமாலுக்கும் சிவனுக்கும் போர் ஏற்படுத்திவிட்டான்.

நான்:- இதுபோன்ற அற்பமான எண்ணங்களும், செயல்களும் மனிதர்களிடம் அல்லவோ இருக்கும். கடவுளரிடமே இருந்தால் என்ன ஆவது?

மனம்:- என்ன செய்வது? இருப்பதாகத்தானே சொல்கிறார்கள்.

நான்:- கடவுள்களைக் கண்டது போதும், மனிதர்களைக் காணலாம், வா.

மனம்:- இன்னும் காணவேண்டியது எவ்வளவோ இருக்கிறதே.

நான்:- போதும், போதும்—

* * *



[மதுரை. ஒரு பெரிய திடல். கூர்மைமிக்க முனைகளோடு கூடிய கழுமரங்கள் ஆயிரக்கணக்கானவை உள்ளன. அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மனிதனை ஏற்றியுள்ளனர். கூர்த்த மரம் உடலைக் கிழித்துக் குருதி வழியவும், குடல் சரியவுமாகக் குற்றுயிர் குலை உயிராக அவர்கள்



நான்:- மனிதனை உயர்த்துவதற்கு என்று ஏற்பட்டதாகச் சொல்லப்படும் சமயத்தினுல் அழிவும் கழிவும் அல்லவா மிகுகின்றது?

மனம்:- ஆமாம். இடையிலே வந்த கடவுளர்கள் தந்த 'வரம்' இதெல்லாம்!

நான்:- இடையிலே வந்த கடவுள்கள் என்கிருயே, அது ஏன்?

மனம்:- நம்முடைய முன்னோர்களுக்கு இந்தக் கடவுளரைப் பற்றியெல்லாம் தெரியாதே. கடவுள் என்றால் அனைத்தையும் கடந்தவர் — விருப்பு வெறுப்பு அற்றவர் என்பது அல்லவா பொருள். இந்தக் கடவுளர்களோ காமமும் கோபமும் மிக்கவர்களாக—மனிதர்களின் எதிர் ஒளியாக அல்லவா இருக்கின்றனர். அதனுல்தான் இடையிலே வந்தவர்கள் என்றேன்.

நான்:- சங்க இலக்கியங்களிலும் திருமால், முருகன் முதலிய கடவுளரைப்பற்றிச் சொல்லப்பட்டுஇறதே. காட்டுக்கு இவர் கடவுள், மலைக்கு இவர் என்றெல்லாம் இலக்கணத்திலும் உள்ளதே.

மனம்:- இருக்கலாம். ஆனுல், அந்தப் பெயர்களோடு இந்தப் பெயர்களை ஒட்டி ஒன்ருகப் பிணைத்தனரே யன்றி, வேறு இல்லை. இந்தக் கதைகளும் கயமைகளும் இடையிலே எங்கோ இருந்து இங்கே இறங்கியவை. வந்தபோது தனியாக வரவில்லை. வேறு சில தீமைகளையும் கொண்டு வந்தன. அவற்றிலே மிகவும் முக்கியமானவை—நம்முடைய அழிவுக்குக் காரணமானவை இரண்டு.

நான்:- அந்த இரண்டு...?

மனம்:- ஒன்று சாதி;

உள்ளனர். முக்கல் முணகல் ஒலி கேட்கிறது.]

* * *

நான்:- ஐயோ! தலை சுற்றுகிறது—கண் இருளுகிறது.

மனம்:- ஏன்? என்ன?

நான்:- மயக்கமே வருகிறதே.

மனம்:- என்ன? ஏன் மயக்கம் வருகிறது?

நான்:- ஏனு? இளகிய தன்மையே கொஞ்சங்கூட இல்லாமல் இறுகிவிட்டாயே. சே! இந்தக் கண் அருவிக் காட்சியை — அதாவது கண்ணில் இருந்து அருவிபோல் வடியும் நீர், கொதிப்படைந்து, ஆவியாக மாறுகின்ற நிலையை — 'கண்ருவி'க் காட்சி என்று சொல்வார்களே, அதனைக் கண்டும் கலக்கம் இல்லாமல் 'என்ன? ஏன்?' என்று கேட்கமுடிகிறதே உன்னுல்!

மனம்:- இது பக்தியால் விளைந்ததாயிற்றே —நான் பரிதாபப்பட்டு என்ன செய்வது?

நான்:- இதுவும் பக்தியா?

மனம்:- ஆமாம். சிவபக்தி. சிவனிடம் கொண்ட பேரன்பு. அன்பும் சிவனும் இரண்டல்ல, ஒன்றே என்று சொல்லும் சைவர்களது பக்தி. சமணர்களை—எண்ணுயிரம் பேரை—கழுவில் ஏற்றுகின்ற அளவிற்கு முற்றிவிட்ட பக்தி.

நான்:- அவர்களையும் கடவுள்தானே படைத்தார்? கடவுளின் குழந்தைகளான அவர்களைக் கொல்லுவது தப்பு அல்லவோ?

மனம்:- தப்போ ஒப்போ, எனக்குத் தெரியாது. பக்தி முதிர்ந்து செய்யப்பட்ட வெறிச் செயல் இது.





**நான்:-** சாதி, வந்தவர்கள் கொண்டுவந்தது என்று எப்படிச் சொல்லமுடியும் சங்க இலக்கியங்களில்கூட வெற்பன், இடும்பன் என்றெல்லாம் வருகிறது.

**மனம்:-** வருகிறது, இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அந்த வெற்பன் இடும்பன் முதலியவர்கள், வாழ்ந்த இடம், செய்த தொழில் முதலிய இவற்றால் அழைக்கப்பட்டனரே யன்றி, இடையிலே வந்த சாதியினரைப்போல அல்ல. ஒருவர்க்கு ஒருவர் கொள்ளவும் கொடுக்கவுமாக இருந்தனர். 'பிறப்பு ஒக்கும் எவ்வுயிர்க்கும்' என்பது அவர்களுடைய பெற்றி, இடையிலே வந்த சாதி, தொழில், இடம் முதலிய இவற்றை அடிப்படையாகக் கொண்டிராமல், வெறும் பிறப்பு ஒன்றையே எண்ணி ஏற்பட்டது அல்லவா?

**நான்:-** ஆமாம்.

**மனம்:-** அதனால் எத்தனை தீமைகள் விளைந்தன; எண்ணிப்பார்.

**நான்:-** ஆமாம். மனிதனை மனிதனுக்காது மாடாக்கிவிட்டது.



**மனம்:-** வயலிலே பயிர் செழிக்க வேண்டுமானால் முதலில் வயலை மேடும் பள்ளமுமாக இருக்கும் நிலையை மாற்றிச் சமப்படுத்துகின்றோம் அல்லவா?

**நான்:-** ஆமாம்.

**மனம்:-** வயல் சமமாக இருக்கவேண்டியதைப்போலவே, சமுதாயமும் சமமாக இருக்கவேண்டும். ஓர் இடத்தில் மேடும். இன்னொரிடத்தில் பள்ளமுமாக இருந்திட்டால் இடறி விழுவதற்கு வாய்ப்பாகிவிடும். அப்படி விழுந்ததுதான் நம்முடைய சமுதாயம். இவனை அவன் தாழ்ந்தவன் என்றும், அவனை இவன் மிகத் தாழ்ந்தவன் என்றும் மாற்றி மாற்றிச் சொல்லி இருவரும் தாழ்ந்தனர். பிறர் உயர்ந்தனர்.

**நான்:-** அதுபோகட்டும். இன்னொன்று! என்ன அதைச் சொல்.

**மனம்:-** விதி.

**நான்:-** விதி என்றால் சட்டம். ஒழுங்குமுறை.

**மனம்:-** இது, அந்த விதி அல்ல. தலைவிதி. இன்னார் இன்னார் இப்படி இப்படித்தான் இருக்கவேண்டும் என்று ஏற்படுகின்ற விதி.

**நான்:-** இதுவும் வந்ததுதான் என்கிறாயா?

**மனம்:-** ஆமாம். நிச்சயமாக.

**நான்:-** நான் மறுக்கிறேனே என்று கோபம் வேண்டாம். 'ஊழ்' என்று திருவள்ளுவர் சொல்கிறார். 'பால்' என்று சங்க இலக்கியங்களில் வருகின்றது. அவை விதியைத்தானே குறிக்கின்றன?

**மனம்:-** குழப்பம். ஒரே குழப்பம்.

**நான்:-** உனக்கா?

**மனம்:-** எனக்கு இல்லை. உனக்குத்தான்.

**நான்:-** பால் என்று வருகிறது. ஊழ் என்று வருகிறது. அவை விதியைச் சொல்கின்றன என்கிறாயே ஒழிய, இவற்றுக்கு இடையேயுள்ள வேறுபாடு தெரியவில்லை உனக்கு.

**மனம்:-** நீதான் சொல்லேன், தெரிந்துகொள்கிறேன்

**நான்:-** நான் சொல்கிறேன் பிறகு. முதலில் நீ சொல். விதி என்றால் என்ன?

**மனம்:-** நமக்கு எது, எப்போது, எப்படி நடக்கவேண்டும் என்று இருக்கிறதோ, அது, அப்போது அப்படி நடக்கும், நடந்தே தீரும்.

**நான்:-** சும்மா இருந்தாலும்?

**மனம்:-** சும்மா இருந்தாலும் நடக்கவேண்டியது நடக்கும், சுற்றி வந்தாலும் நடக்கக்கூடாதது நடவாது.

**நான்:-** அதாவது, நமது செயல்களின் முடிவு நம் முயற்சிகளில் — உழைப்பில் — இல்லை என்கிறாய், அப்படித்தானே?

**மனம்:-** ஆம். அதுவேதான். எண்ணெய் தடவிக் கொண்டு புரண்டாலும் ஒட்டுவதுதான் ஒட்டும்.


**நான்:-** எனவே, நாம் ஒரு முயற்சியும் செய்யத் தேவையில்லை. நடக்கவேண்டும் என்று விதி இருந்தால், அது தானாக நடக்கும் என்கிறாய்.

**மனம்:-** ஆமாம்.

**நான்:-** இதுதான் பெரிய படுகுழி. உழைக்க இருக்கும் உடம்பும், எண்ண இருக்கும் மூளையும், உழைப்பும் எண்ணமும் இன்றிச் சோம்பிக் கிடந்து துருப்பிடித்து இற்றுப் போவதற்கான படுகுழி. நிமிர்ந்து நின்ற தமிழனைக் குனிந்து கவிழச்செய்த படுகுழி. வீரனைக் கோழையாக்கிடும் விலங்கு, விதி.

**மனம்:-** அப்படியானால் 'ஊழ்' 'பால்' என்றெல்லாம் வருகிறதே, அவற்றிற்கு என்ன சொல்கிறாய்.

**நான்:-** கேள்: ஒரு செயலை முடிக்க முனைகின்றாய்; முயல்கின்றாய் என்று வைத்துக்கொள்வோம். உன் நேரம் நினைப்பு அத்தனையும் செலவிட்டு உழைக்கின்றாய். அதிலேயே மனத்தைப் பறிகொடுத்துவிட்டு இருக்கிறாய். எதிர்பார்ப்பதற்கு மாறாக எப்படியோ அது முடியவில்லை —நீ விரும்பியவாறு முடியவில்லை என்று வைத்துக் கொள்வோம். அப்போது உன் மனம் எவ்வளவு வேதனைப்



படும்? துக்கத்தில் மூழ்கி — அமிழ்ந்துவிடும் அல்லவா?

மனம்:- ஆம்.

நான்:- அந்தத் துயரக் கடலிலிருந்து நீ கரையேற வேண்டும், உன் மனம் ஒடிந்துவிடாதபடி பாதுகாத்துக்கொள்ளவேண்டும் அல்லவா? அதற்காக யாராவது வந்து ஆறுதல் சொல்ல வேண்டும். அந்த ஆறுதல் தான் 'ஊழ்' 'பால்' என்பவை. 'நமக்கு இவ்வளவுதான் கிடைக்கவேண்டும் போலும்' என்று கொள்ளும் மன ஆறுதல் அவை. மனம் துவண்டு விடாமல் இருப்பதற்காகத் துணைநிற்பது.



மனம்:- விளங்கவில்லையே.

நான்:- விதி, உழைக்கும் முயற்சியே இல்லாமல் செய்துவிடுவது. செயலைத் தொடங்குவதற்கு முன்னமே வந்து முட்டுக்கட்டையாக நிற்பது. ஆனால் ஊழ் என்பதோ உழைத்த பிறகு, மேலும் உழைக்கவேண்டும், தளரக்கூடாது என்று ஊக்கப்படுத்துவது. புண்பட்ட மனத்திற்கு மருந்தாகப் பயன்படவேண்டிய ஊழை, இடைக்காலத்தில், பசித்த வயிற்றுக்கு உணவாக இட்டனர். அதனால் விளைந்த தீங்கு இவ்வளவும். மருந்து, நோய் போக்கப் பயன்படவேண்டுமேயன்றி, அதுவே உணவாக மாறிவிடக்கூடாது அல்லவா?

மனம்:- ஆமாம். எப்போதாவது ஒரு முறை பக்கத்தில் நிற்பவருடைய கையைப் பற்றிக்கொண்டு எழ முயல்வதில் தவறு இல்லை. ஆனால் எழவேண்டுமாயின் பக்கத்தில் யாரேனும் இருத்தல்வேண்டும், அவர் கையைப் பற்றிக்கொண்டுதான் எழவேண்டும் என்பதைப் பழக்கமாக்கிக்கொண்டால் தீதுதான்.

நான்:- தீதுமட்டும் அல்ல, இயலாததும் ஆகும். இப்படி ஆனதற்கு என்ன காரணம் தெரியுமா?

மனம்:- மயக்கம்தான். எது, எது; யார், யார் என்று தெரியாத மயக்கம்.

நான்:- அதுமட்டும் அல்ல. இன்னொரு காரணமும் உண்டு. அதுதான் மிகவும் முக்கியமான காரணம் என்று எண்ணுகிறேன்.

மனம்:- என்ன அது?

நான்:- அளவு தெரியாதது.

மனம்:- என்ன அளவு?

நான்:- எதற்கும் ஒரு அளவு இருக்கிறது அல்லவா? அந்த அளவு தெரிந்துகொள்ளாத குறை நம்முடையது. அளவு இறந்தால் அழகு குலையும், ஆற்றல் தேயும், அழிவு நேரும். கோணியிலும் இவ்வளவுதான் கொள்ளும் என்று ஒரு அளவு இருக்கிறது அல்லவா? அந்த அளவுக்கு மேல் திணித்துத் தைத்தால் என்ன ஆகிறது? கோணியே கிழிந்து பொருள்கள் சிதறுகின்றன.


மனம்:- ஆமாம், ஒரு திருக்குறள் நினைவுக்கு வருகிறது. மயில்பீலி நொய்ம்மையானது (இலேசானது) என்று அளவில்லாமல் ஒரு வண்டியிலே ஏற்றினால் வண்டியின் அச்சே முறிந்துபோகும் என்று சொல்லி இருக்கிறார் வள்ளுவர்.

நான்:- இன்னொரு குறளும் இதேபோல் இருக்கிறது.

மனம்:- ஆ! அதுவும் நினைவுக்கு வருகிறது. இதோ சொல்கிறேன். கொம்பின் நுனிவரைசென்றவர்கள், அதற்கும் அப்பால் செல்ல முயன்றால், அது உயிருக்கே இறுதியாகிவிடும் என்று கூறியுள்ளார்.

நான்:- இது; முன்னேறுதே என்று தடுக்கும் முயற்சியல்ல. இவ்வளவுதான் தாங்கும் என்று செய்யும் எச்சரிக்கை. சில பாலங்களின்மீது இவ்வளவு பாரம் உள்ள வண்டிகள்தான் செல்லலாம் என்று ஒரு வரையறை இருக்கிறது அல்லவா, அதைப் போலத்தான் இதுவும். இந்த வரையறையை மீறினால் வம்புவருகிறது. உடம்புக்கு ஒருவரையறை, இவ்வளவுதான் உண்ணலாம், இவ்வளவுதான் தேயலாம் என்று. அதை மீறினால் நிச்சயம் தொல்லைதான். நம்முடைய முன்னோர்கள் இந்த வரையறையைப்பற்றி எண்ணியதே இல்லை. எதிலும், நுனிக்கொம்புக்குச் சென்றபின்னரும் அஃது இறந்து, ஊக்கி உயிர்க்கு இறுதி தேடிக்கொண்டனர். 'அளவு அறிதல்' என்பது மிக மிக முக்கியமான நெறி.

மனம்:- இப்போது உனக்கு அது தெரியவில்லைப் போலிருக்கிறது?



நான்:- என்ன தெரியவில்லை?

மனம்:- எவ்வளவு அளவு, எதுவரை செல்லலாம் என்பதுபற்றி ஒன்றுமே எண்ணாமல் சென்றுகொண்டிருக்கிறாயே — ஆபத்தாகிவிடப்போகிறது. கொஞ்சம் பொறு. பிறகு பேசலாம்.

★




நடந்துகொண்டிருக்கிறான்; தனியனாய்; இனிமை காண அல்ல; இஃதன்றி வேறு இல்லை என்பதால்.

கால்கள் கடுக்கின்றன, களைப்பு மேலிடுகிறது பயணம் போதும் என்று கூறிடமுடியாத நிலை அவனுக்கு. அவன் நடந்துதீர வேண்டியவன்; அஃதன்றி வேறு அலுவல் ஏதும் அவனுக்கு இல்லை.

எங்கு செல்கிறாய் என்று கேட்பார் இல்லை; தங்கி விட்டுப் போகலாம் என்று அழைப்பார் இல்லை; அவன் தனியன்; நடந்துதீர வேண்டியவன்.

ஊர்ந்திடுவனவும் ஓரிடம் நாடும்; பறந்திடுவனவும் பச்சை தேடும்; இவன் மனிதன்! நடந்துகொண்டிருக்கிறான்.

தன் இருப்பிடம் நோக்கி அல்ல; இவன், இருந்ததனைத்தும் இழந்தவன்; தனியன்; இவனுக்கு நடந்திடுவதன்றி வேறு அலுவல் இல்லை.

தனியன்! தனது என்பதோர் இருப்பிடம் நாடி நடப்பவனுமல்ல! எனினும், ஓர் இடம் உண்டு, அவன் உள்ளம் அறியும்; அது இன்று உள்ள நிலை யாதோ? உருவம் கெட்டுளதோ? அடியோடு இலாது போயிற்றோ? அவன் அறியான் — நடந்தவண்ணம் இருக்கிறான்!

கடுங்காற்றும் சில வேளை, பெரு மரங்களைத் தழுவி ஓய்வுபெறும் — இவனோ தங்க இடம் காணான், தனியனாய் நடக்கின்றான்; எங்கு என்று கேட்டிடின், என்ன உரைப்பானோ?

அவன் நடையில், ஆற்றல் இல்லை, அகமகிழ்ச்சி காட்டிடும் அறிகுறிகள் ஏதும் இல்லை! நின்று வழி தேடி, மேற்செல்லும் போக்குமில்லை — நடக்கின்றான், நடப்பதற்கே பிறந்தவன்போல்!

பேழையில்லை; ஏழை அவன்; எடுத்தேக ஏதுமில்லை; நெஞ்சந்தனில் மட்டும், யாதுளதோ, அளவெதுவோவகை யாதோ, எவரறிவார்!

வட்டமிடும்புள்ளினமும், வளைந்தேகும் பாம்பினமும், இரைதேடிதாமுண்டு, பொந்திலுள்ள மற்றதற்கும் எடுத்தேகும்; இவன்? கொண்டுசெல்வதேதுமில்லை! பெறுவார் இலைபோலும்!

வேல்விழியாள் தனைக்காண, நீண்ட நெடுவழியில் வந்தவனா? இல்லையே! கால்கடுக்க நடந்திடினும், கண்கள் கவிபாடுமன்றோ! எதெதனைக் கண்டிடினும், எழிலாளையன்றோ காண்பான்! இதழோரம் அழகொழுகும்! இவனோ, ஏதும் எனக்கில்லை, என்றுரைக்கும் பார்வையுடன், என் வேலை நடப்பதுதான், எங்கு? என்று கேட்பது ஏன் என்றனன்றோ கூறுவான் போல், ஏகியபடி உள்ளான்.

தனிவழியே செல்வோரைத் தாக்கிப் பொருள் பறிக்கும், கள்வனோ இவன்? இல்லை! கள்வனெனில், சுற்றுமுற்றும் பார்ப்பான், சூதுநிறை கண்ணினனாய்! இவன் கண்களோ, நீரற்ற கடல்போல! இவன் நடையோ, குறியற்ற நிலை காட்டும்! இவன் அலுவல்? யாதுமில்லை, நடப்பதன்றி—எனவே நடக்கின்றான்.

காலைக் கதிரொளியும் சதிராடிப் பின் சீறித், தழலாகித் தகித்தது எனினும், பொழியும் வியர்வை தனைப் பொருட்படுத்திப், பொழில் தேடி நின்றானோ, பூங்காற்றுப் பெற்றானோ! இல்லை! நடக்கின்றான், நிற்கவில்லை.

தருக்கள் கண்டன! தடுத்து நிறுத்தவா செய்யும்! கொளுத்திடினும் கொட்டிடினும், நாம் நின்று சகிக்கின்றோம்! இவனோ நம்மைவிட, பொறுமைக் குணமுடையான்! பொடி மணலும் நெருப்பாகிப், பாதம் பொறித்துவிடும் போதினிலும் நடக்கின்றான், நடக்கின்றான், நாட்டம் வேறு ஏதும் இலை! — என் றெண்ணிப் பேசின, இலைவாயால் ஒவ்வொன்றும். இதனையும் அவன் காணவில்லை — தனியனாய் நடக்கின்றான்.

ஊர் கடந்து செல்கின்றான், பாழ்வெளியைக் காண்கின்றான்.

கார் உலவும் விண்ணதனில், கவின் உலவும் என்றுரைப்பர், கவி அறிவோர்; இவன் காணவில்லை அதனையும், கால் கடுக்க நடக்கின்றான்.

இருபுறமும் பெருவெளியே! எங்கும் ஊர் அரவம் இல்லை! மாடும் மனையும், மகிழ்ந்திருக்கும் மக்களும்,

வாழ்ந்திடும் இடம்தான் ஊர்—அது எங்குளதோ? இங்கு இவன் காண்பதெல்லாம், கரம்பு கழனி பல! உழைப்பால் உருமாறி, உறுபயனைத் தந்தன, ஒரு நாளில் காடாக, மேடாக இருந்த இடம். உழைப்பால் உருவான வளம்காட்டும் வயல் கண்டான், உழைப்பை அளித்திட்ட உத்தமரை மட்டும் காணோம்.

மனை திரும்பும் மாட்டினுக்கு மணியுண்டு ஒலி செய்ய. அவன் செவியில் வீழ்ந்ததெல்லாம், பெருமூச்சு, பேய்க் காற்றின் இரைச்சல்; வேறில்லை.

நெடுந்தொலைவில் உள்ளது ஊர்! அங்கு செல்லுமுன், இருள் படரும். தேடிப் பயன் இல்லை!

முன்னம் ஓர் ஊர் கண்டான்; விளக்கொளியும் சிரிப்பொலியும் நிரம்பியதோர் ஊர்தான் எனினும், வா! வா! நீயா? என்று கண்களிலே களிப்பின் ஒளி காட்டி, பேச்சில் பாசம் குழைத்து அழைத்தவர் எவரும் இல்லை. கண்டான் பலரை; பலரும் கண்டனர்; அவ்வளவே. எனவே நடந்தான் மேலால்; நமதல்ல இந்த இடம் என்றெண்ணி.

நடந்திடுவோர், பலருண்டு வகை வகையாய்!

தொட்டிலிலே விட்டுவந்த 'மொட்டு' தன் உச்சி மோந்திட்டால் பட்ட துயர் அத்தனையும் பறந்தோடிப் போகுமென்ற எண்ணம் கொண்டவள், இதோ, எதனையும் நோக்காமல், எவரிடமும் பேசாமல், எண்ணம் துணை நிற்க, வண்ணம் முகம் சேர, ஓட்டம் பெரு நடையாய்ச் செல்கின்றாள் வீடு நோக்கி. ஈராண்டுகளுக்கு முன்பு இவளே, வீடு நோக்கி, நடந்திடும் வேளையிலே, கன்னம் சிவந்திருக்கும், காதல் கண்களிலிருக்கும் — தாயாகா நிலை அப்போது! காண்போம் 'அவரை' என்று செல்கின்றாள் வேகமாய்த்தான்— வழியில் அறிந்தோர் தமைக்கண்டு, சின்ன இடையுடையாள் அன்னநடை நடந்து, மெல்லச் செல்வேன் என்று பொய்மைப் புகல்கின்றாள், புதுச் சுவைக்கு ஏங்கும் அவள்!

இன்று அஃதன்று! அவர் அளித்த இன்பப் பெருக்கு, தொட்டிலிலே! பெற்றெடுத்த குழவி காண, பெருமாட்டி போகின்றாள்! கற்றைக் குழலிழுத்துக் கன்னத்தையும் சுவைத்து, என்னென்னவெல்லாமோ செய்திடுமே, என் மகவு! கட்டித் தங்கம் உருக்கிக், கல் இழைத்துச் சரடு ஆக்கிக் கழுத்தில் அணிந்தாலும், காணும் களிப்புப் பெரிதோ, பிஞ்சுக்கரம் கொண்டு என் மகவு, கழுத்தைப் பின்னிப் பிடிக்கையிலே, என்னை வந்தடையும் இன்பம், எதிலேதான் உண்டு, கூறீர் என்றன்றோ கேட்கின்றாள், ஏந்திழையாள், தாயாகி!

இத்தனை பெரும் பாரம் ஏனோ இவன் தலையில், என்றெண்ணும் நெஞ்சினர், இருப்பர் இரண்டொருவர். அங்காடி சென்றிடலாம், ஆங்கு இதனை விற்றிடலாம்; பாங்காகக் குடும்பம் நடத்திடப் பொருள் பெறலாம் என்பதே அவன் எண்ணம். அந்த நல்லெண்ணத்தால், அவனுக்கு மாமலையும் சிறுகடுகாம்! நடக்கின்றான், எதிர்பார்த்து! நடக்கின்றான், பலன் காண! சொட்டும் வியர்வையைத் துடைத்திடும் போதும், நெஞ்சிலே தேன் சொட்டுகள் வீழ்கின்றன — அவன் இல்லத்தில், அன்புக்கரசியுள்ளாள் — பெற்றோரும் இருக்கினறார், பெருமிதம் கொண்டோராய். அவன் அதை எண்ணுகிறான், அலுப்பும் எழவில்லை!

இதோ நடந்தேகும், இவனும் மானிடனே! என்றாலும், அன்பை அளித்திடவோ, ஆங்கதனைப் பெற்றிடவோ, அப்பா வந்தார் என்று அருகிருந்து கூறிடவோ, ஆரு முன்பு உண்ணச் சொல்! என்று அழைக்கும் ஆரணங்கோ, அவன் செல்லும் இடம் இல்லை; அஃதில்லா இடம், இடமா? ஆகவேதான்; அவன் நடக்கின்றான், நடக்கின்றான், நெடுவழியில்.

அவன் கரத்தில் ஊன்றுகோல் உளது; ஆயினும், தள்ளாடித்தான் நடக்கிறான்; ஏன்? ஊன்றுகோல், வலிவானது. கரம் வலிவிழந்திருக்கிறது. அலுப்பு, களைப்பு! அந்நிலையில், ஊன்றுகோல், அவனைத் தாங்கிக்கொள்ளவில்லை; அவன்தான் ஊன்றுகோலைத் தூக்கிக்கொண்டு போகிறான்! பொருளின் தன்மை, பயன் தருவதாக இருப்பினும், உடையவன் அதனைப் பயன்படுத்தும் வகை உடையோனாக இருத்தல்வேண்டுமே! யானை எடுத்தேகும் பழுத்த இடந்த காதினனைக் காணின், என் சொல்வோம்? கஞ்சன் மடியிருக்கும் பொன்னால் பயன் யாது? ஏழை, இளமை எழில் பெற்றிருந்து, பயன் என்ன?

கோல் உண்டு, ஊன்ற அல்ல! நடக்கின்றான், அதையும் தாங்கி!! எங்கும் வயல்வெளி! செந்நெல் மணிகள், சிரித்திடும் மங்கை என, ஆடி ஒலி கிளப்பி அழகழகாய் உள்ள வயல்! இன்னும் சிலவற்றில், எட்டே வயதுதான், எழில் இது! இனி இவளும் சிற்றுடை களைந்தெறிந்து சேலை தேடிடும் வேளை, செப்புச் சிலையன்றோ என்று மகிழ்ந்துரைப்பர், கழலாடும் சிறுமி கண்டு; அஃதேபோல், பயிரும் பக்குவமாய் வளர்ந்து, கதிர்காட்டி நிற்கும் நிலை!

இத்தனையும் உழைப்பின் பயன்! இவ்வளவும் 'உடைமை' என்று கூறிடும் உரிமை பெற்றோர், உழைத்து 'உரு' கொடுத்த உத்தமரோ? இருந்திருப்பின், இவ்வுலகில், சண்டையும் சச்சரவும் தானொழிந்து, சாந்தம் தழைத்து, இன்பம், நீதியால், நிலைபெற்றுப் பொங்குமன்றோ!!

வட்டமிட்டு வந்தன பறவைகள் — கதிர்களைக் கொத்தின, தின்றன; கொண்டும் சென்றன!

கவண்வீசித் துரத்தக் காவலாட்கள் இல்லை!

கன்னியர் ஆங்கிருந்து ஆலோலம் பாடி, அப்பறவைகளை விரட்டவும் இல்லை!

பறவைகள், களவாடித் தின்றுவிட்டுக் காணீர் எம் வீரம் என்று, காற்றில் ஆடுகின்ற பயிர்க்கூட்டம்

"வட நாடு தென் நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கிறது என்ற எண்ணம் ஏற்கனவே நிலவுகிறுது. வடநாட்டிற்கும் தென் நாட்டிற்குமிடையே பொருளாதாரத் துறையில் பெரும் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. இந்த எற்றத் தாழ்வுகளை நீக்கினாலன்றி நாட்டின் உணர்ச்சி பூர்வமான கலாச்சார வேற்றுமையை ஒற்றுமையாக்குவது எப்படி? இந்த ஏற்றத் தாழ்வுகளை போக்குவதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டாலன்றி நாட்டில் ஒற்றுமை உணர்ச்சியை சர்க்கார் எங்ஙனம் ஊட்டமுடியும்?"

—டில்லி இராஜ்ஜிய சபையில் கேரள கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் டாக்டர் ஏ. சுப்பாராவ்.

நோக்கிச் சொல்லும் பான்மைபோல, கீச்சுக் கீச் சென்று ஒலி எழுப்பிச் சென்றன.

கண்டனன், இதனை—தலைகவிழ்த்துக் கொண்டனன். களவாடிப் பிழைக்கும் புள்ளினம், கவண் கற்களுக்கன்றோ இரையாகும், ஓர் நாள்? புள்ளினம் அதனை அறியாமல், தென்னங்கீற்றினிலே ஊஞ்சலாடி மகிழ்கின்றன. ஏன்? களவு, குற்றம் என்ற உணர்வு இல்லை!

ஆனால் மனிதன்? அதுபோல் அல்லவே! களவு தவறென்று காலமெல்லாம் பிறர்க்குரைக்கும் பேராசானாகவன்றோ, பெயர்பெற்று விளங்குகிறான? பேராசான்! உம்! பேர் 'ஆசான்' போலும்! பிறர்க்கு!!

முன்னம் நடந்ததனை, சின்னஞ்சிறுகுருவி செய்ததனைக் கண்டகந்த 'வழிநடப்போன்' எண்ணினன்—எண்ண எண்ண, நெஞ்சம் குமுறிற்று, நீர்த்துளிகள், கண்களிலே.

களவு செய்திட்டான் — தடுத்தவனைக் கண்டதுண்டமாக்கிவிட்டான்; கருத்துக்கெட்டதனால், கடுங்கோபம் மூண்டதனால்!

தடுத்துப் பொருள் பறித்தான் தன் தாள் வீழ்ந்த முதியோனை — தூக்கிச் செல்பவன் நான், பொருளுக்கு உடையோன என் ஆண்டை! அடித்துப் பறிக்காதே, பொருள் போயின், அலைக்கழிப்பான் என் வாழ்வை, என்று அழுது கூறி நின்றான், ஐம்பதாண்டுக் கிழவன். உன் பொருளும் அல்லவென்று உரைத்த பின்னும், எனைத் தடுத்தல், முறையல்ல, போ! போ! எனறு இடிச்சிரிப்பினூடே சொல்லி, பொருளை எடுத்துச் சென்றான் ஓர் நாள். தாள்பற்றியதை, அம்முதியோன், விட்டானில்லை. இவனோ, கூர்வாள் எடுத்தான், பின்னர்? கோரம், கொடுமை, கொலை!

கொட்டிற்று குருதி—ஆவியற்றதால் வீழ்ந்தான் கிழவோன்.

ஙகையிலே, பொருள்!

காலடியிலே, பிணம்!!

பொருள், களவு!

அதைத் தொடர்ந்து, கொலை!

சுற்றுமுற்றும் பார்த்தான்—உடலல்ல, உள்ளம் நடுங்கிற்று.

எங்கோ வெகுதொலைவில் எவனோ குரலெழுப்பி, இசையாக்கப்பார்க்கின்றான். இங்கு இவன் செவிக்கு அதுவே, தேள், பாம்பு, பெரு நெருப்பு!

இப்பக்கம், அப்பக்கம், என்று அறிய இயலாநிலை; எனவே, எப்பக்கம் பாய்ந்தோடித் தப்புவது என்ற கிலி!

இன்னும் ஒரு இரத்தப்பலியோ? சிச்சீ! இதயம் தாங்காது! அவனும், முதியவனாக இருப்பானோ? இல்லை? ஐயயோ! அச்சம் நுழைந்திட்டால், பழுதும் பாம்பாகும்.

ஓடுகிறான், ஓடுகிறான், பொருளும் போட்டுவிட்டு. எவர் துரத்திவந்தாலும், என் வேகம் எனைக்காக்கும் என்று கூறுவான்போல், எடுத்தான் கடுவேகம்.

"இந்தியாவின் மக்கள் தொகையில் 26 சதவீதத்தைக் கொண்ட கேரளம், மைசூர், ஆந்திரம், சென்னை ஆகிய மாநிலங்கள் இந்தியாவின் 40 சதவீதத் தொழில்வளத்திற்குக் காரணமாகஇருக்கின்றன. அத்துடன் நாட்டின்வெளிநாட்டுச் செலாவணியில் 26 சதவீதத்தையும், இந்த நான்கு மாநிலங்களும் இந்தியாவிற்குக் கொண்டுவருகின்றன. ஆனால், இந்தியா செய்யும் இறக்குமதிகளில் இந்த நான்கு மாநிலங்களுக்கும் 16 சதவீதந்தான் கிடைக்கிறது. இதுகுறித்துத் தென் வட்டாரத்திலுள்ளோர் ஒருமித்து சிந்திக்க வேண்டும்."

—மைசூர் தொழிலதிபர் திரு சாரங்கபாணி மதுரையில் நடைபெற்ற தென்மண்டல வணிகர் மாநாட்டில் பேசியது.

தென்தினம் பாடினவன் வந்தான் எதிர்ப்புறத்தில்.

வேறோர்புறம் பாய்ந்து, வேல் தப்பஓடிடும் ஓர் வேங்கைபோல, ஓடினான்.

தென்தினம் பாடினவன், ஓடினவனைத் துரத்திப் பிடிக்கவில்லை.

ஓடினவனைப், பாடினவன் காணவே இல்லை.

பாடினவனுக்குக் கண்ணில்லை!

பாபம்! அவன் குருடன்!

அவன் மட்டுமா, குருடன்? ஓடினவன், இதை உணரவில்லை—அச்சம் அவனைக் குருடாக்கிற்று.

இப்போது மட்டுமா, அவன் குருடன்?

செச்சே! தாள்பணிந்து நின்றவனைக் கொன்றானே அப்போது? கடுங்கோபத்தால் கண்கள் குருடாகிப் போனவன்தான.

அன்று ஓடினவன், பிறகு அந்தப்பக்கத்திலேயே, ஒருநாளும் ஒரு இடத்திலும், தங்கினவனல்ல! ஓடிக்கொண்டே இருந்தான் — ஒளிந்து ஒளிந்து!

வழியெல்லாம், படுகுழிபோல் தோற்றமளித்தன அவனுக்கு.

பெற்றோரைக் காணவும் அச்சம்.

குகை, புதர், வெளி, இவைகளில் இருப்பான்.

எங்கும் சில நேரம்மட்டும் — பிறகோ, கண்டு பிடித்துவிடுவார்கள் என்ற கிலியா? அதுதான், முதலில். பிறகு, அது அல்ல! அவன் கண்ணில் தாள் டணியும் கிழவன், வாள்பட்டுக் கீழே வீழ்ந்த காட்சி தெரிந்தவண்ணம் இருக்கிறது.

கண்களை மூடிக்கொள்கிறான் இறுக. எனினும், கிழவன் தெரிகிறான! கண்ணீர் பொழிகிறான்! காலடி வீழ்கிறான்! இரத்தம்! பிணம்! கொலை!!

ஓடுகிறான்! ஓடுகிறான்! கிழவனை விட்டுவிட்டு! அந்த முதியவனோ விடாமல் இவனைத் துரத்துகிறான். எத்துணை வேகமாக ஓடியும், எங்கெங்கெல்லாம்சென்று ஒளிந்துகொண்டும், பயனிலலை; கொலையுண்ட கிழவன், இவனெதிரில் வந்துவந்து நிற்கிறான்.

என் வழியே நான் சென்றேன்; நீ தடுத்தாய், எனைக்கொன்ருய்; இனி உன் பொருள் நானுனேன்—உனைவிட்டு, எங்குபோவேன்? என்று கேட்கிருன், முதியவன்.

ஓடியபடி இருக்கிருன், கொலைசெய்த கொடியோன் — அவனை விரட்டியவண்ணம் இருக்கிருன், அந்த முதியவன்.

கலமொன்றுகண்டான்; அதில் அடைக்கலமும் பெற்ருன்; கண்காணுச் சீமைக்கெல்லாம் சென்று, கடுமையாக உழைத்தான்.

அலுத்துப் படுத்தாலோ, அவனெதிரில் வந்து நிற்பான், பொருளைப்பறிகொடுத்து கொலையுண்ட அக்கிழவன். பொங்கும் கடலாகும், இவன் மனமும்.

இங்கென்ன குறை உனக்கு? உண்டிக்கா, உடையினுக்கா, உல்லாசம் தரவல்ல எதற்கும்தான் என்ன குறை? ஏன் இந்தச்சோகநிலை? என்றெல்லாம்கேட்டிடுவார், கலமுள்ள தோழரெலாம்.

நீண்ட பெருமூச்சன்றி, வேறென்ன, பதில் உரைப்பான்?

சித்தம் குழம்பிற்று என்பார்; பித்தனே என்றுரைப்பார்; மெத்த உழைத்ததனுல், நோய் கொண்டான் என்பர் சிலர்.

அத்தனைக்கும் 'ஆம்' என்பான், நெஞ்சில் ஆழப் பதிந்திருந்த அந்த ஒரு 'சேதி' மட்டும் அவன் எவர்க்கும் உரைத்ததில்லை.

கடலாடும் வலிவுண்டு என்பதனுல் இவனை நாம், கண்டிங்கு கொண்டுவந்தோம் — இவனே கருத்துக் குழம்பியவனுய், ஆகிவிட்டான், இனி இங்கு, இவன் இருத்தல், வீண், பாரம், என்றுரைத்து, அனுப்பி விட்டார், எங்கேனும் செல்க என்று.

சென்ருன்; கிழவன் வந்து நின்ருன்.

கண்ணீர் பொழிவான், கரத்தால் துடைப்பான், கண்ணீரே, இரத்தமாக இருக்கக்காண்பான்.

ஓடினுன், முடியவில்லை — நின்ருன், கால்கள் தாமாக நடந்தன!

நடந்துகொண்டே இருக்கிருன், பாழ்வெளி, கடுவழி, எங்கும்.

ஊர் கண்டால், ஓடுகிருன்.

கதிர் குலுங்கும் வயல் கண்டால், கண்ணீர் பொழிகிருன்.

கண்ணீரைத் துடைக்கிருன், இரத்தச் சிகப்புக் காண்கிருன்.

நெஞ்சிலே பெரும் சுமை! அது நெருப்பாகித் தகிக்கிறது.

பாரம்; இறக்கிவைக்க இடமில்லை, வழியில்லை.

சுமந்தபடி, நடக்கிருன் — நடந்துகொண்டே இருக்கிருன்.

இதோ பார், பித்தன் போகிருன், என்பர், சிறுவர்கள்.

பிடித்தடைத்துப் போடலாகாதோ என்று கேட்கின்றனர் பெரியவர்கள்.

பாவம்! அவன் பித்தன், 'என்ருலும், பிழையேதும் செய்யாதான்! சிறு பூச்சியைக்கூட இம்சிக்க மாட்டான்! நல்லவன்!—என்கிருர்கள் பெண்கள்.

நல்லவனும்! நான் நல்லவனும்!!—என்று கூறிக் கதறி, மண்டையைக் கீழே போட்டு மோதிக்கொள்கிருன். இரத்தம் ஒழுகுகிறது. துடைத்துக்கொள்கிருன். சிகப்பைக் காண்கிருன், துடிக்கிருன். நடக்கிருன், நடந்துகொண்டே இருக்கிருன்.

# அருளும் பொருளும்

அருள் மலிந்த இந்நாட்டிலிருந்து, பொருள் மலிந்த அந்நாட்டுக்குச் சென்று திரும்பினுர்.

வறுமைக்கும் பசிக்கும் இடையே கிடந்து வதையும் மக்களைக் கொண்ட இந்நாட்டிலிருந்து வளம் கொழிக்கும் அந்நாட்டுக்குச் சென்று திரும்பினுர்.

அந்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறிய முயன்ருர் அவர்.

அங்கே அருளும் பொருளும் தனித்தனி பிரித்தறிய முடியாதபடி இணைந்திருப்பதைக் கண்டார்.

எனவே, அந்த இணைப்பு இங்கும் மலர வேண்டுமென்று விரும்புகிருர். அதாவது, ஆத்மீகமும் உலோகாயதமும் ஒன்று சேரவேண்டும். அப்போதுதான் இங்கு நல்வாழ்வைக் காணமுடியும் என்று முடிவை, வெளிநாடுகள் சென்று திரும்பிய நமது கல்வி—நிதி அமைச்சர் **சுப்பிரமணியம்** அவர்கள் வெளியிட்டுள்ளார்.

* * *


ஆனுல், வெளிநாடுகளில் எல்லாம் இல்லாமையைப் போக்க இறைவனை (அருளை) நாடுவதில் அவ்வளவு கவனம் செலுத்தாமல்,உலோகாயதத்தை(பொருளை)காணுவதில்தான் அந்நாட்டு மக்கள் பெரிதும் ஈடுபட்டுள்ளார்கள்.

ஆனுல், இங்கோ நிலைமை வேறு. அருளைப் பெற, இருக்கின்ற சிறிதளவு பொருளையும் பாழாக்குகிருர்கள்,

குறிப்பாகவும் சிறப்பாகவும் சொல்லவேண்டுமானுல், இங்கு அருளுக்காக எதையும் இழக்கத் தயாராக இருப்பவர்களின் தொகையே அதிகம்.

எனவே, அருளையும் பொருளையும் ஒன்ருக இணையும்படி செய்வதில் பெரு விருப்பம் காட்டும் நமதமைச்சர் இங்கு, அவ்விரண்டுக்கும் இடையே உள்ள பெரிய வேறுபாட்டை—ஒன்றுபடுத்த இயலாத முரண்பாட்டை அகற்றுவதில் அவரது விருப்பத்தைக் காட்டி அது களையப்படுவதற்கு வழிவகை கண்டு பிடித்தால், அது நாட்டுக்கும் நல்லது. அவருக்கும் பெருமை தரும்.

# மழை



## வாழ்த்து

மழை!

வயலைச் செழிப்பாக்க! வாழ்வைச் செழிப்பாக்க!

வறண்ட இடங்களுக்குப் புத்துயிர், புது எழில்!

நான் என்ன செய்வேன்—என்னால் இயன்ற அளவு ஊட்டம் கொடுத்தேன் — இனி என்னிடம் என்ன இருக்கிறது, உங்களுக்குத் தர! நான் வறண்டு விட்டேன் — நீங்கள் காய்ந்து போகிறீர்கள்! உங்கள் நிலை கண்டு, என் நெஞ்சம், பாளம் பாளமாக வெடித்துக்கிடக்கிறது! என்னை நம்பிப் பயனில்லை — நான் வரண்டு கிடக்கிறேன்!! — என்று கூறிடுவதுபோலத் தோற்றம் பெற்ற பூமிக்கு, புதுப் பொலிவு தருகிறது மழை! வாடிய செடி கொடிகளுக்கு நீரூட்டமுடியும் இனி!

சாய்ந்து கிடந்தவை அனைத்தும் இனி நிமிர்ந்து நின்றிடும்!

வலிவற்றுப் போனவைகளெல்லாம், இனி ஆடி மகிழ்ந்திடும்!

பட்டுப்போக இருந்தவைகளெல்லாம், துளிர்விடுகின்றன. பசுமை! வளம்! பாங்கு! எங்கும்!! ஏங்கிக் கிடந்தவையாவும் எழில் குலுங்கும் புது நிலைபெற்று விட்டன — மங்கி மடிய இருந்ததனைத்தையும் மழை மகிழ்ச்சி பொங்கிடும் நிலைக்குக் கொணர்ந்துவிட்டது.

இத்தனை அழகு இதுநாள்வரை எங்கு மறைந்திருந்தது! கோலம் கண்டு களிப்படையாதார் எவர்! எனினும் நேற்றுவரை சோர்ந்து கிடந்தனவே!!


மாமருந்தோ, மழை!
வானளித்த விருந்தோ!
வாழ்வளிக்கும், வள்ளலோ, மழை!!

ஓவியனைக் கூவி அழைத்து, உன் திறமனைத்தும் காட்டிட வாய்ப்பு இதோ! வண்ணம் வகைவகையாக! வடிவம் பலப்பலவாக! எண்ணம் பல கொண்டிருந்திருப்பாய், எழில் குறித்து. ஈங்கு காண்பாய், எழிலின் வகையும் வடிவமும்!

இச்சை கொள்ளச் செய்யும் பச்சை.

இடையிடையே; வெட்கத்துடன் நிற்கும் வேல் விழியாள் முகம்போன்ற சிவப்பு — சின்னஞ் சிறு மலராகி, சிரித்தபடி இருத்தல் காண்பாய்.

தங்க இடமின்றி தவித்த புள்ளினங்கள், எங்கும் வட்டமிட, இசைபலவும் எழுப்பிடும் சோலை அழகு காண்பாய்! இஃது மழை காணாத போது, பாலை எனக்கிடந்தது; பாங்கு பெற்றது மழையதனால்' அறிந்திடுவாய்.





வளம் பொங்கி வழிந்திடுது,
வாய்க்கால் எனும் பெயரால்!

வட்டிலில் வடித்த தேனைத் தொட்டு வாயிடை இட்டு மகிழ்ந்திடும் பான்மைபோல, சின்னஞ் சிறு பறவை இனம், சீர் பருகி நிற்பது பார்!

என்ன இனி வேண்டும், நின் எண்ணம், வடிவம் பெற!

நீலநிறம் மேலே! ஆங்கு நீந்திடும் வெண்முகிலும்!

கீழே பச்சை!

அதில், பலவண்ணம், பலவடிவு! அவை மலர்!!

பாடி மகிழ்வது கேள் — பண்பாடும் திறனை, பறவை இனம் மட்டுமல்ல, தாவரத் தருக்களும் தன்னளவில் பெற்றுள்ளன. வாழ்வளித்த மாமழைக்கு வாழ்த்திசைக்கும் வகை, ஒலிநாம்!

துள்ளி ஓடிவரும், கன்றினங்கள், தாயமுது இங்கும் உளதென்று நீர்நிலைகள் கண்டியம்பும்!

உண்பீர், உடன் செல்வீர்! யாமோ, மடியிற் புரண்டிருப்போம், மதுரம் பருகிடுவோம், என்று கூறவோதான், கெண்டைகளின் இத்துள்ளல்! எனக்காக உமை வளர்க்கும் என் தாயன்றோ அருவி! என்றுரைக்கக் காணேம், எனினும் எடுத்துண்டு குருகும். என் அன்னை! என் அன்னை! என்றொலித்துப் பறந்து செல்லும்.

ஏற்றம் இறைப்போர்க்கு, இல்லை இடுப்புவலி!

என்செய்வோம், ப்யிரில்லை எனும் பேச்சுக்கு இடமில்லை!

மாமழைதான் பெய்தது, மாறிற்று சோகநிலை!

வெற்றி முரசு கொட்டி, விருதுபல ஆடவே, கொற்றம் உலாவந்த கோலம்போல், மாமழையும், இடியொடு இளம்பி, ஏற்றம் பொழிந்தது! மாற்றம் மலர்ந்தது!!

என்ன உன் எண்ணம்? எவை வேண்டும், கூறிடுவாய் என்றே, இறை கேட்கின், மனை வேண்டும் மணம் வேண்டும், மலர்வேண்டும் மகிழ்ச்சிவேண்டும், பொன் வேண்டும் பொருள் வேண்டும், தொழில் வேண்டும், எழில்வேண்டும், தோகைமயிலனையாள் தொட்டிழுத்து மகவுதனை, என் மடியிற் கிடத்திவிட்டு கன்றை இழுத்துவந்து தொழுவத்தில் விடக்கண்டு, களித்திருக்கும் நிலை வேண்டும்! வந்தார்க்கு உணவளித்து வாழ்வின்பம் பெறல்வேண்டும்.




வண்ணக் கலைகள் பல வளர்ந்திடவும், நுகர்ந்திடவும், வாய்ப்புப் பெறவேண்டும். சாயாக்கோலும், சருகாசா வாலிபமும், காயா மனமும், கருகா முயற்சிகளும், பெற்றெவரும் சீர்வாழ்வு நடத்திடக் காணல்வேண்டும்!

ஆடிடும் மாமயிலும், இசை பாடிடும் கருங்குயிலும், இசைமட்டும் பெற்றனையே, என் அழகு உனக்குண்டோ என்று கொஞ்சு மொழியாலே கேட்டிடும் கிள்ளைகளும், தெங்கும் நுங்கும், தேன் சொட்டும் பல கனியும், எங்கும் நிறைந்துள்ள ஏற்றம், எழில், யாவும், கண்டு களிப்பெய்தி, பண்பாடி மகிழ்ந்திட வேண்டும்.

கலக்கம் காலம் விளைத்தல், காச்சல் கபடம், களவு எனும் கேடுபல, துளியும் இலாதொழிந்து, வாழ்கின்றோம் வாழ்கின்றோர் என்று எவரும் கூறி, அமைதியுடன் அகமகிழ்வு பெறத்தக்க வகையுடனே, அமைந்த ஓர் வாழ்வுமுறை வெற்றித்திருவுடனே, விளங்கிட நான் காணல்வேண்டும்!—என்று பலப்பலவும் இயம்பி, பின் எண்ணி, இயம்ப மறந்திட்டேன், இனிக் கேளிர், மேலும் சில, என்று இழுத்துப் பேசி இடர்ப்படவேண்டாம்—வேண்டுவது என்ன என்பதற்கே, ஒன்று உரைத்திடலாம், உள்ளத்தில் தோன்றிடும் ஓராயிரமும் அதில் அடங்கும்; வேண்டுவது மழை—வேறென்னவேண்டும்—வேண்டுவது என்னெனினும் பெற்றளிக்கும், மாமழை காண்! எனவே எமக்கு அது போதும்!! —என்று கூறிடலாம்!! எவரும் மறுப்புரைக்கார்.

அரசு, அதுகாக்கும் போர் முரசு, முரசறையும் வீரர் குழாம், அவர் வாழும் சீரூர்கள், யாவும் அமைந்திட, வேண்டும், பல பொருட்கள் — ஆம்! ஆயின், எப்பொருளும், ஒருபொருளின் துணையின்றி கிடைத்திடாது — அப்பொருளே, மாமழை — இயற்கையின் கரு ஊலம்!!



தாயின் முகம் காணு சேயனையராவர் காண, மழை காணு மாந்தரவர்!

ஏருண்டு, சீரில்லை!

ஊருண்டு, உணவில்லை!!

பேருக்குஅரசு உண்டு, பெறும் பலன் யாதும் இல்லை!

ஏடுண்டு, எடுப்பார் இல்லை!

இசை உண்டு, கேட்பார் இல்லை!



எங்குண்டு இந்நிலையோ வென்னில் எதற்கும் 'விசை' யாகும் மாமழைதான் பொய்த்திடும் இடமதனில்! எழுதிக் காட்டிடலாம், காணும் வகைபெறுமோ, ஓவியக் கண்!

அஃதேபோல், இயற்கை அளித்த பல ஏற்றமிகு ஓவியமும், இன்னுயிர் பெற்று மன்னுயிர் காத்திட, மாமழை வேண்டும்.

அஃதின்றேல், வயல் உலரும் வாழ்வுலரும், மனம் உலரும் ஆகலினான், உலரும் பண்பு எலாம்!

எனவே மாமழையே, தாயாவாள், அம்மட்டோ! மன்றம் அமைத்து ஆன்றோர் அன்று அளித்திட்ட மாண்புகள் மாய்ந்திடாது காப்பாவாள் காண்கிலையோ!!

அறிந்தே, இளங்கோவும், அழகு தமிழ்க் காப்பியத்தில், அமைத்தார். நல்வாழ்த்து, மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்! என்று.

ஆம்! உண்மை! மறுப்பில்லை! என்பீர்கள்.

எனினும், நண்பர்களே! அம்மழையே, பெய்திடும் வேளைதனில், நலமே பெறுகின்றோம் என்றா, எவரேவரும் வாழ்த்துகின்றார்.

## வசவு

செய்தொழிலைப் பாழாக்கும் பாழ் மழையே! வழி தடுத்து இடரிழைக்கும் வன்மழையே!

வண்ணம் வகை கெடுத்து தொல்லை தரும் மழையே!

பண்டம் விற்றிடவே பரிந்து சென்ற வேளையிலே, விரைந்து வந்தென் வேலையினை வீணாக்கினாய் மழையே!

ஆடை நனைத்திட்டாய், மாடுமனை கெடுத்திட்டாய், ஓடை உடைந்ததுனால், ஒரு கேடா, நீ செய்தாய்?

எழிசையில் வல்லவளாம், எழில்மிக்க இள மங்கை, கேட்டின்பம் பெற்றிடவே கடுகி நடந்து சென்றேன், காற்றோடு நின்றுவிடும், கனத்திடாது என்றெண்ணி நான் நடக்க, கருத்துப் பெருத்து, கடகட வெனச் சிரித்து, கண்ணைப் பறித்திடும் ஒளி உமிழ்ந்து, கட்டின்றிப் பொழிந்திட்டாய், கலைக்கூடம் சென்ற எனை மீண்டும் மனைக்கூடம் சிறை வைத்தாய், நினைத்தால் உலைக்கூடம் ஆகுது என் மனம்!! உனக்கென்ன, உமிழ்கின்றாய் ஓயாமல்!

வந்தோம் சென்றோம் என்றால் வாழ்த்தலாம், விருந்தினரை. வந்தேன், நீ நொந்தாலும் செல்லேன் விரைந்து என்றுகூறி இருந்திடல் பண்பல்லவே!

வேகம் குறையுது, அளவும் அதுபோல்; வெளுத்திடும் குறிகள் தோன்றின என்பர், நீயோ, கூறுவோர் தமைக் கேலி செய்திடும் போக்கிலே, கொட்டுகிறாய் உன் வெற்றி! உள்ளோர், உள்ளிருந்தே உன் தாக்குதலைப் பெறாமல், உண்டு மகிழ்ந்திருப்பர், உரையாடிக் கிடந்திடுவர்; உழைத்துப் பிழைத்திடவே, மனித உருவமாய் உள்ளவர்கள், என் செய்வர் வீடிருந்து? எப்படித்தான் உண்பர்? பொழிகின்றாய், சோறும் கறியுமல்ல!!

ஆண்டை அழைத்தாராம்—அவருக்கோ வெகு எளிதில் மூண்டுவிடும் கடுங்கோபம்—சென்று செய்திடல் வேண்டும் வேலை பல—செலும் வழியோ நெடுந்தூரம்—செல்வது இயலாதே, உன்னாலன்றோ வந்தது இத்தீது!

சாந்து பூசிவிட்டார், நாளை அது உலர்ந்து, நலமளிக்கும் மனைதனுக்கு என்றெண்ணி உறங்குகையில் யான் செய்த தீங்கென்ன, வந்தழித்தாய் பூசினதை, போதாதோ அக்கேடு? கட்டியது அனைத்தும் கரைந்தன்றோ வீழ்ந்தது, கனமழையால், வெட்டினேனா இந்தக் குளம்? என் வீடா, இந்தக் கதி? என்று நான் திகைத்து, ஏதோ ஓர் மண்டபம் சென்றன்றோ இருந்திட்டேன் — ஏன் செய்தாய் இக்கொடுமை, பேய் மழையே! பேய் மழையே!!

இன்று கூடுது இலுப்பூர் சந்தை! எடுத்துச் சென்று இதனை விற்றால், ஏதோ சிறிது ஈட்டலாம் பொருளென்று, இருப்பதைக் கொடுத்து இப்பொருள் பெற்றேன், என்ன செய்தனை! என்ன செய்தனை! ஏக இயலா நிலையன்றோ உன்னால். என் பொருள் இங்கே! கொள்வார் எங்கே? இன்று போயினேன், நாளை செல் என்பாய்! நாளை நானிருப்பேன், ஒப்பலாம்! என் பொருள் இருக்குமோ, கெட்டிடாமல்,



கெட்டிடின், எவர் கேட்பர் விருப்பி! விற்பதே தங்கனம், விலையன்றோ சரிந்திடும்! ஈட்டலாம் என்ற என் எண்ணம் மண்ணாகிப்போக, நீயோ மண்ணெலாம் குழப்பினாய், என மனமும் குழப்பினாய், மழையே நன்று என்று கூறினோர்க்கெல்லாம், மனமே இல்லையோ, வெற்றினமோ அவரெலாம்.

மழைக்குறி தோணுது! மாதவா! கடையில், உள்ள சரக்கினை விற்றிடாதே இனி. இடக்கட்டும் கிடங்கில். பெருமழையானால், பலநாள் பொழியும்! பலநாள் பொழியின், புதுச்சரக்கு வாரா தொழியும்! வேண்டுவோர் வருவர், கூறிடும் விலைக்குக் கொள்வர்! கூடை கேட்டால், முறம் அளவும் இல்லை என்று கூறி அனுப்பிடு! நாலு நாள் ஆகட்டும், நமக்கு ஆதாயம் கூடும்! நல்ல வேளையாய், மழையும் வந்தது, நம் வாணிபம் செழித்தது!!—என்று கூறி இலாபம் தேடிடும் வணிகருக் கருளவா, வந்தனை மழையே! இல்லாதானை இடரில் தள்ளி, பொல்லாதவரைப் பூரிக்கச்செய்ய, சதியன்றோ இது? மழையா இதன் பெயர்?



அன்றந்த முதியவர், அங்கம் வளர்க்க அரும்பாடு பட்டிடும் அவல நிலையினர், உன்போக்கு அறியாது, தன் வழி சென்றார்; வாய்க்காலாக இருந்த இடமதை படுகுழியாக்கி, நீ, வைத்தது அறியார், நடந்தார், வீழ்ந்தார், மிதந்தார்—அறியாய்!! தாத்தா சென்றார், தனி வழியதனில், என்ன இடரோ, எத்துணை இன்னலோ, என்றெண்ணிச் சிறுவன், இங்கும் அங்கும் அலைந்தனன் தேடி; எதிர்ப்பட்டவர்கள் கூறினர் சேதி — என்ன செய்வான் – பொழிந்தான் கண்ணீர்! நீ பொழிந்ததனால் மிதந்தார் தாத்தா—அவன் பொழியும் 'கண்ணீர், உனை என்ன செய்யும்! ஆயின், அறிவாய் இதனை! அந்நீர் சுட்டிடும் தீயினும்!!



அரசுக்கோ இங்கு ஆயிரம் அலுவல்! அணிபணி வகையினை அறிந்து வந்துரைத்திட, உலகில் சுற்றிட அனுப்புவர் சிலரை — அவர்க்காகும் செலவோ அதிகம். நரைமுடி மறைக்கத் தைலம் தேடிடும் கனதனவான்போல், ஆட்சிமுறைக் கேட்டினை அறியாது செய்திட பல செயல்வேண்டும் — பெரும்பணம்தேவை! கொட்டு முழக்கும் கோலாகலமும், விண்ணை முட்டும் கொடிமரம் தானும் அதில் பட்டொளி வீசும் பாங்கான கொடியும், அதனை வாழ்த்தி வணங்கிட படைவரிசையும், இஃதெலாம் பெற்றிட, பெரும் பணம் வேண்டும்! கட்டுவோம் கோட்டை, காண்பீர் கோலம், என்று கூறிட விழாப்பல உண்டு — அத்தனைக்கும் ஆகும் செலவு சிறிதல்ல! இத்தனைக்கும்போக, ஏது பணம், அவரிடம். எனினும் எதிர்ப்போர் வாயினைச் சிறிது அடக்கிட இங்கொன்றும் அங்கொன்றும் என்ற முறையில், ஏதோ சிற்சில அமைத்தனர். அதனையும் இடித்தாய், உடைத்தாய், இருக்குமிடம் தெரியாது அழித்தாய்; அறமா? அரசு போதாதோ எமக்கு அல்லல் விளைவிக்க! நீயும் வேறு தேவையோ, கூறாய்!!



குடிசையில் குமுறிச் சாகிறோம் என்று கூவிக் கிடந்தனர், கூலிகள், ஏழைகள் — பேச்சு கேட்டு, பெரும் பிழை இஃது; இவர் இருக்கு மட்டும் இருக்கும் இப்பேரொலி—என் செயும் அரசு — அதன் ஏக்கம் போக்கிட இவர் பேச்சொழிதல் வேண்டும் — பேச்சொழியவேண்டுமேல், இவர் மூச்சொழிதல் வேண்டும் என்று எண்ணியோ வெள்ளமாய் வந்து அவர் உயிர்கவர்ந்தாய்! நீயும் அரசு ஏவும் அழிவுக்கருவியோ! உனக்குப் பெயர் மழை எனல் பெரும் பிழையன்றோ!!

நெய்த நேர்த்தியினை எடுத்துக்காட்டி, வேண்டுவோர்க்கு விற்று, தரும் பொருள் பெற்று, மீண்டும் உழைத்திட வாழ்ந்து இடப்பர், வகைபல கொண்ட நெசவுத் தொழிலினர் — பொழிந்த கொடுமையால், தொழிலெலாம் கெட்டு, இரு கைகூப்பி, எம் குறை கேளீர், இரு நாட்கள் பட்டினி, இருப்பதைக் கொடுப்பீர் இரக்கமுள்ளோரே! என்று இரந்தனர்— நீ என்ன செய்தாய்? — என் ஆற்றல் காணீர், ஆறெல்லாம் பெருக, ஊரெல்லாம் மூழ்க, அச்சம் பொழிவேன் என்று ஆர்ப்பரித்தாய் — வலியோர் எளியோரை வாட்டுதல் அறமல்ல, என்பது இங்கு அரிச்சுவடி— அதுவும் அறியா மடைமைதான் மழையோ!!

கட்டிக் கொடுத்தனர் எட்டடுக்கு! அவர்க்கு காடல்ல, நாடுதான் வாழ்விடம்—எனினும், வீடில்லை, வீதியில்லை, சேறான ஆற்றோரம், அங்கு சிறு குடில்கள் தானமைத்து, பேருக்கு மானிடராய், பிழைத்திருந்தார், உழைப்பதற்கே! பெருமழையால் ஆறு சீறி பசி கண்டீர், பாதகம் கண்டீர், எட்டிப் போடா மூடா! எதிர்த்தால், அடைப்பேன் சிறையில்! என்று

ஆர்ப்பரிக்கும் ஆதிக்கக்காரர் தம் அமுல் கண்டீர்! எனினும் இருக்கின்றீர்! என்னே, உம் துணிவு! எல்லாம் தாங்கிடுவோம் என் செய்வோம் என்றுள்ளீர்! இது பாரீர்! பாய்ந்துவரும் அழிவு இது! தாங்குவதற்கு ஆற்றல் உண்டோ? என்று இரைச்சலிட்டு, குடிலெல்லாம் கூளமாகி அடித்துக்கொண்டு போகும் விதம் வெள்ளப் பெருக்கெடுத்து, ஏழையரின் நெஞ்சுக்கு நெருப்பானீர் — பெயர் மட்டும், மழையாமே!!

அடக்கம் வேண்டும் என்பார் — அளவறிதல் அறிவென்பார் — இடமறிந்து செயல் புரிதல் இனிய நற்பண்பென்பார் — நீயோ, எதனையும் ஏற்காமல், எங்கும் நுழைந்து அழிவை ஏவிவிட்டாய்; நன்றோ சொல்?

கொடுமை பல புரிய கூசாக் கெடுமதியோன் என்று அறிந்திருந்தும், ஏனோ உனைப் புலவர், வானின்று வழிகின்ற பாலென்றும் தேனென்றும், வாயார வாழ்த்தி வழங்கினர் பாமாலை! ஓஹோ! உணர்ந்தனன் உண்மையை! ஊரழிக்கும் உனைத் தடுக்க ஒரு வழியும் அறியாமல், உச்சி குளிர மெச்சிச் சில சொன்னால், அழிவுத் தொழில் நிறுத்தி, அக மகிழ்ந்து கிடந்திடுவாய், அது நன்று என்றெண்ணி, இடக்கர் அடக்கல் எனும் முறைப்படியே, இன்னல் பொழியும் உன்னையும் அன்னார் கன்னல் தமிழில் வாழ்த்தினர் முந்நாள்!



## விளக்கம்

அழைத்தார் வருந்தி, ஆகவே வந்தேன்! தூயதோர் இடம், தொலைவு, மிகத் தொலைவு! ஆங்கு நான், இருந்து மகிழ்ந்திட எத்தனை எழிலகம்! எல்லாம்விட்டு, இறங்கிவந்து, காடும் கரம்பும் கண்டு வருந்ாது, வளமது சுரக்க, நிலமெலாம் சிறக்க, வள்ளல்கள் எல்லாம் வகையிலே தோற்க, வழங்கினேன், மகிழ! ஏதோ சிற்சில நேர்ந்தன—அழிவு!

ஆயினென்? இத்தனை வளமும் என்னால் என்பதை, ஏனோ மறந்து, எனைச்சாடுகின்றீர்? நெருப்போ, நீரும்? முன்னது அழிக்கும்—நீரோ, அழிவைத் தடுக்கும், ஆயிரத்தில் ஏழெட்டுக் குறைய! அஃதும், கூடா நட்புக் கேடாய் முடியும் எனும் பாடம் படித்திடும், உமக்கு நானுரைக்கவோ—என்னுடன், காற்றெனும் கொடியோன் கூடினன். என்செய்வேன்!

பொழிவது அழிவையும் தருவது காண்கிறீர்! இனிமை பயப்பதே இயல்பு எனினும், தேனில் வீழ்ந்திடும் எறும்பைக் கொண்டு, தேனைக் குறைசொலல், தெளிவாகாதலவோ? பொழிவது பலநாள்—அழிவோ சிற்சில! பிறப்பது பலவினும், மாய்வது இல்லையோ? உழைப்பிலே, ஓர் அளவு வீணாகிடல் இல்லையோ? பிறவியே கேடோ? உழைப்பே வீணோ? உள்ளம் உண்டு; சொல்வீர் இன்று; எண்ணும் எண்ணம் யாவுமே நன்றோ? தீயன எண்ணுதல், இல்லையோ அறவே! ஆமெனில், உள்ளம் வேண்டாம், இருப்பின் கேடு, என்றோ கூறுவர். நன்மையும் தீமையும் கலந்ததே பொருளே யாயினும், செயலே எனினும், தீமை அகற்றிட வேண்டும், உண்மை! எனினும் முள்ளை நீக்கி மலர் கொள்வதும், தோலை நீக்கிப் பழம் உண்பதும், முறை எனக் கொண்ட மூதறிவு இல்லையோ—எனையும் நீவிர், அது போற் சொள்வீர். மேலும், வேகம் காட்டிப் பாய்ந்திடும் வேளை, அழிவு நேரிடாது அமைத்திட வழிகள், ஆயிரம் உண்டு, அமைத்தது எவரே? குடில்கள் மூழ்கின — கொடுமை — ஒப்புவன் — எனில், கண்டதால் கொண்ட அறிவுதான், என்னே? அழிவு பாய்ந்திடும் வழிதனை விடுத்து, ஏற்றதோர் இடமதில் இருப்பிடம் அமைத்து, ஏழையர் வாழ்விலும் இன்பம் இருந்திட என்ன, நீர் செய்தீர்? எங்கே அவ்வரசு? பண்டம் பதுக்கிடும் பாவிகள் தமக்கு, வாய்ப்பு என்னால் வருகுது என்கிறீர். முற்றிலும் அஃதே உண்மை என்று கொள்வதற்கில்லை, எனினும் சரியென்று கூறி, கேட்கிறேன் உம்மை, எனைச்சாடிட நீவிர் தேடிடல் மடைமை, கொடியர் உம்மெதிர் உளரே, அவர்தம் கொட்டம் அடக்குதல் அரசுக்குக் கடனே! ஏன் உம் அரசு ஏதும் செய்திலை? நானா தடுத்தேன், நல்லரசு வழி! காரணம் ஏதோ தேடி அலைகிறீர்—காண்கிறீர் என்னை, கடிந்துரைக்கிறீர்.

மழையே இல்லை, மழையே இல்லை! என்று கசிந்து நிற்கிறீர்! மழைதான், மழைதான்! என்று மகிழ்ந்துரைக்கிறீர். மழை! இனிக் குறைவில்லை! என்று பேசிக் களிக்கிறீர்!

மழை, அதனால்! என்று மயக்கிப் பேசி வணிகன் இலாபம், பறிக்கப்பார்க்கிறான் — மழை! அதனால் என்ன? என்று அதட்டிப் பேசிட ஆற்றல் உமக்கு இல்லை! அரசு எவர் பக்கமோ என்று புரியா நிலை உமக்கு. அதனால் வருவதே, பல தொல்லை! அதற்கு என் மீதோ கடும்சொல்லை வீசுவது. அது கேட்டு, நான் பொழிவதை நிறுத்திக்கொள்ளவா முடிகிறது!!

சூல்கொண்ட மேகம், துடிக்கிறது, பாரம் தாங்க மாட்டாமல். என் செய்யும்? நான் வெளியேறினால் தான், வேதனை தீருகிறது மேகத் திரளுக்கு. வருகிறேன், பொழிகிறேன்; வாழ்த்துகிறீர் சிலவேளை; தூற்றுகிறீர் சில சமயம். வாழ்த்தும்போது தேனாகவும் மாறிட முடியாது, தூற்றும்போது, மீண்டும் மேகத்துக்குள் சென்று ஒளிந்துகொண்டுவிடவும் இயலாது. கீழே வருகிறேன்! வரவேற்புப் பெறுகிறேன்! ஆனால் நான செல்லச் சரியான பாதை உண்டா? இல்லை! தங்கிட முறையான இடங்கள் உள்ளனவா? கிடையாது! விரிந்து, நெடுந்தூரம்





பரந்து இடக்கும் வழியை நாடிச் செல்கிறேன்—ஆறு என்கிறீர்களே, அதனைத்தான் கூறுகிறேன் அதனை ஒழுங்குற வைத்திருந்தால், எனக்கும் இல்லை தொல்லை; ஊருக்கும் ஆபத்து இல்லை. மண்மேடுகள் தடுக்கின்றன! என் வேகத்தைத் தடுத்து, தேக்கி வைத்துப் பயன் பெறலாம்—அதனையும் செய்கின்றீர்களில்லை. ஏரி என்கிறீர்கள் — கரை, காப்பளிக்கவில்லை. குளம் என்கிறீர்கள், என் வேகம் பொருமல் குமுறி உடைபட்டுப் போகிறது—நான் என்ன செய்வேன்.

என்னை வாழ்த்தி, வரவேற்றுப் பயன்பெற்ற மக்கள், ஒரு ஊர் என்றால், அதற்கு உள்ளேயும், வெளிப்புறங்களிலும், நான் வந்து இருக்க ஏரிகளையும் குளங்களையும் அமைத்து வைத்திருந்தனர். இப்போது? ஏரிகள் தூர்க்கப்பட்டுப் புது ஊர்களாக்கப் பட்டுவிடுகின்றன! ஆற்றோரம், குடில்கள் மயமாகி விடுகின்றன! கடல் ஒன்றே அன்றுபோல் இன்றும் அளித்திடுது அடைக்கலம்.

ஊர்களிலே, எனக்கென்று முன்பு இருந்த இடமெல்லாம் பறித்துக்கொண்டீர்கள், ஒவ்வொன்றாய்; என்செய்வேன்? ஒழுங்காகத் தங்கி இருக்க இடமில்லை! கண்ட இடத்தில் நடமாடக் காலம்வந்தது, அதனால் காண்கிறீர், அழிவு. என்மீதோ குற்றம்! காரணம் புரியாமல் கடுமொழி பேசுகிறீர் — கவலை நான் கொள்ள கருத்தற்றோ உள்ளேன்? குறைமதியாளரின் கூற்று அதுவென்று தள்ளிவிடுகின்றேன். நிறைமதியாளர்களாம், நீடுபுகழ் புலவோர்கள் வாழ்த்திப் பாடியுள்ள பாடல்வகைஎல்லாம் நான் எண்ணி மகிழ்ந்து உலவுகின்றேன், மாந்தர்தம் தோழனும். தம் குறை அறியாது தூற்றும் பேதைகள் என்றெண்ணிக்கொள்கிறேன். உச்சிமேல் வைத்து, நீவிர் போற்றும் புலவர்களின் பாவினிலே, நல்லிடம் நான் பெற்றுத் திகழ்கிறேன் — அது போதும் எனக்கு.

'வான் சிறப்பு' கூறியவர், வள்ளுவர், அவர் தாமும் இறை வணக்கம் கூறியதும், எனைத்தான் அழைத்தார் காண். அகர முதல எழுத்தென்று ஆதாரந்தனைக் காட்டி, ஆதிபகவனை நினைவூட்டி நின்ற பின்னர், உலகுய்ய மழை தேவை, என்றுணர்ந்த பெரியோனும், நற்றாள் தொழுதிடுவோர் நல்வாழ்வு தானும்பெற, வானம் பொய்த்திடாத நிலைவேண்டும் என்றறிந்து, வான்சிறப்பு தானுரைத்து, தந்தார்



நல்லிடம் எனக்கே! எனினும் அவர்கூட, நற்றாளை வணங்கென்று நவின்றார் இறைகுறித்து, பொன்னுடாய் எந்நாடும் பொலிவுபெற ஏற்றதோர் நலம் பொழியும் எனை வணங்கக் கூறிடாதது, குறையே! ஆம்! அன்று! குறையுண்டோ குறளதனில்! தனக்கு வமையில்லாதான், தாள்சேர்ந்தார்க்கன்றி, தாரான் பெரு மகிழ்வு என்று, கொடுத்துப் பெற்றிடும் வாணிபம் ஆக்கினார்! எனக்கோ என்னில், ஏத்திட வேண்டாம், தாள் பணிந்திட வேண்டாம், எல்லா வளமும் என்னால் பெறலாம், எனக்கென ஏதும் தாராமலேதான்! இந்த என் இயல்பை அனைவரும் அறிந்திடவன்றோ வள்ளுவர், எனக்கென்ப் பூசனை கூறாது நின்றார்.

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றுங் கொல்லோ உலகு.

என்றுரைத்தார் பெருந்தகையார்.

இத்தகு மேலோன்! எனினும் எனையும் ஏசுவதுண்டெனில், மாசுடை மனதினர் மாந்தர் ஆதலால், மழையையும் தூற்றித் தம் தாழ்நிலை காட்டுவர். இடி இடியென்ற சிரிப்பொலி கேட்டிடும்போதெலாம், எண்ணுவது இதனையே, எங்ஙனம் அறிவீர், நீவிர். பிழை பல பொறுத்து யாம், பொழிகுவம் மீண்டும்! வாழ்க நீவிர், வழங்கிறேம் பல்வளம்.

★ ★ ★

"பெரிய தொழிற்சாலைகள் அனைத்தும் வடநாட்டிலே குவிக்கப்படுகின்றன. தொழில்அபிவிருத்தித்துறையில் தென்நாட்டு மாநிலங்கள், குறிப்பாகத் தமிழ்நாடு மிகவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இதன் விளைவாகவே வேலையில்லாத் திண்டாட்டம், பற்றுக்குறை வேலைக் கஷ்டங்களும் நமது மாநிலத்தில் பெருமளவு பெருகி நிற்கின்றன."

—நிதிக்கமிஷன் தலைவராயிருந்த கே. சந்தானம் கும்பகோணத்தில் 8-11-57ல் நடந்த இராம விலாஸ் மோட்டார் கம்பெனியின் 16ஆம் ஆண்டு விழாவில் பேசியது,

✦

"டில்லி சர்க்கார் உருவாக்கும் தொழில் வளத் திட்டங்களில் தென்நாட்டிற்கு உரிய பங்கு தரப்படவில்லை என்று தென்நாட்டவர் மனக்குறைப்படுவதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. இவ்விதம் தென்நாட்டவர் நினைப்பதற்குக் காரணம் இருக்கிறது. குறிப்பாகப் புதிய எஃகுத் தொழிற்சாலைத் திட்டங்களை ஒதுக்குவதில் தென்நாட்டிற்கு உரியபங்கு அளிக்கப்படவில்லை என்ற புகார் சரியானதே."

—ஆந்திர சிறு தொழில் இலாகா அமைச்சர் திரு. கொண்டா இலட்சுமணன் 10-6-60ல் கோவையில் பேசியது.



# வீரரைத் தந்த பொங்கல்!

—[ ச. சிவப்பிரகாசம் ]—

பொங்கலே, வருக! வாழ்க!
  புவிதனில் தமிழருக்கு,
மங்கல நன்னா ளாக
  வாய்த்தனை உணர்வு நல்கி!
எங்கணும் மகிழ்ச்சி பொங்கும்!
  இல்லெலாம் பால் நெய் சேர்ந்த
பொங்கலும், கன்னற் சாறும்
  புதுமணம் வீசும் இந்நாள்!

புத்துடை யுடுத்தி மக்கள்
  பொலிவொடும் உறவோர் கண்டு,
மெத்தவே நலன்கள் பேசி
  விழவுகொண் டாடுவார்கள்!
சத்துள பயனை நல்கும்
  தமிழரின் ஒருவி ழாவே,
பித்தரே உன்னை வேறாய்ப்
  பிதற்றினர்; தெளிந்தார் மக்கள்!

வாழ்ந்தநற் றமிழர் வாழ்வின்
  வாய்மையை விளக்கு தற்கும்,
வீழ்ந்துள இந்நாள் வாழ்வை
  மீளவும் உயர்த்து தற்கும்,
சூழ்ந்த இப் புவியில் நல்ல
  தொல்தமிழ் ஓங்கு தற்கும்,
ஆழ்ந்தபே ரறிவு நல்கும்
  அரிய சீர்ப் பொங்கால், வாழி!

உன்னிலை உணர்ந்த தாலே
  உறங்கியோர் எழுச்சி பெற்றார்!
புன்செயற் சாதி பேதப்
  பொய்மைகள் வீழ்த்த லுற்றார்!
நன்னிலை நாடலானார்!
  நலிவுறு வாழ்வு காணப்,
பன்னிடும் திராவி டத்தைப
  படைத்திடத் துடிப்புக் கொண்டார்!

வெற்றியும் நெருங்கக் கண்டார்!
  வீரமார் செயல்மேற் கொண்டார்!
உற்றதம் பகைவ ரானோர்
  உளமது நடுங்கக் கண்டார்!
பெற்றதம் தாயின் மேலாய்ப்
  பிறந்ததம் நாட்டைக் காக்கும்
நற்றிரு வீரர் தம்மை
  நாட்டினில் வளர்த்தோர் வாழ்க!

# ஜெனிவா—மாநாடுகளின் பிறப்பிடம்



அன்பு

ஜெனிவா! — பத்திரிகைக்காரர்களுக்கும் பத்திரிகை படிப்பவர்களுக்கும் மிகவும் பழக்கமான பெயர். உலக அரசியலை ஓரளவு கவனித்து வருபவர்கள்கூட இப்பெயரைக் கேட்டதும் 'எங்கோ கேள்விப்பட்டதாக இருக்கிறதே, எப்போதோ படித்ததாக நினைவு வருகிறதே' என்று கூறுவர். உலக அரசியலில் நேரடியாக ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகளுக்கும் தலைவர்களுக்கும் இந்தச் சொல் பசுமையாக என்றென்றும் அவர்கள் மனதில் இருக்கக்கூடியது.

தான்மட்டும் எந்தவிதமான உலக அரசியல் குழப்பங்களிலும் ஈடுபடாமல், தன் பெயரை மட்டும் பெரும்பாலான சர்வதேசப் பிரச்சினைகளில் கொண்டிருக்கும் ஆச்சரியமான நகரம் ஜெனிவா. 'ஆயுதக் குறைப்பா, அமைதி ஒப்பந்தமா? ஜெனிவாவில் கூடுவோமே! எல்லைத் தகராறு, போர் உடன்படிக்கையா? ஜெனிவாவில் சந்திக்கலாமே! கூட்டு ஒப்பந்தமா, உச்சகட்ட மாநாடா? ஜெனிவாவுக்குச் செல்லலாமே!'' என்று உலக நாடுகளின் கவனத்தையெல்லாம் தன்பால் ஈர்த்திருக்கும் புகழ்பெற்ற நகரம், ஜெனிவா.

வரும் அரசியல் விருந்தினர்களை ஆச்சரியக் கண்களோடு கூடி நின்று நோக்காத, வரவேற்புத் தோரணங்களும் ஆடம்பர வளைவுகளும் ஏற்படுத்தாத, மிகச் சாதாரண மனிதர்களாகப் பாவித்துச்செல்லும் மக்களைக் கொண்ட ஒரு புதுவித நகரம் ஜெனிவா. அமெரிக்க ஜனாதிபதியோ, பிரான்சின் அதிபரோ, இங்கிலாந்துப் பிரதமரோ, கம்யூனிச நாட்டின் பிரதிநிதியோ ஜெனிவா நகர வீதிகளிலே மிகச் சாதாரணமாகத்தான் செல்லுவார்கள். ஜெனிவா மக்களுக்கு உலகின் பெரும் அரசியல் தலைவர்கள்கூடச் சாதாரண மக்களைப்போல! இவர்தான் அமெரிக்க அரசாங்கக் காரியதரிசி டல்லஸ் என்பவர் என்றால் 'அப்படியா! பல தடவை இங்கு வந்திருக்கிறாரே' என்பார்கள். அதோ செல்பவர்தான் பிரான்சின் டிகாலே என்றால் ''ஓகோ!'' என்ற வார்த்தையை மட்டும் உபசாரத்திற்காகச் சொல்லிவிட்டுத் தங்கள் அலுவல்களில் ஈடுபட்டவண்ணமிருப்பார்கள். இன்றுவரை உலக அரசியலில் இருக்கும் சர்வதேசத் தலைவர்களெல்லாம் ஜெனிவாவின் மக்களுக்கு அந்த அளவுக்குப் பழக்கப்பட்டு மிகச் சாதாரணமாகக் கருதப்படுபவர்கள்தான். உலக அரசியல் தலைவர்களைப் பார்ப்பது, அந்நகர மக்களுக்கு, காலையில் எழுந்ததும் பகலவனைப் பார்ப்பதுபோல!

ஜெனிவா—என்று இந்த நகரின் பெயர்கொண்டு கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக வெளிவந்துள்ள அரசியல் உடன்படிக்கைகள், பேச்சு வார்த்தைகள், மாநாடுகள், சந்திப்புகள் ஏராளம். ஆனால், அத்தனையிலும் ஜெனிவா நகரம் மட்டும் எந்த வகையிலும், எந்த அளவிலும் சிறிதுகூடத் தொடர்புடையது அல்ல! சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த முதல் பத்து நகரங்களுள் ஜெனிவாவும் ஒன்று. ஆனால், அந்தப் பத்து நகரங்களில் அளவில் மிகச் சிறிய நகரம் ஜெனிவா ஒன்றுதான்! ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு ஒரே மணி அளவில் நடந்துசென்றுவிடக்கூடிய ஒன்பது சதுர மைல் அளவே பரப்பை உடைய மிகச் சிறிய நகரம் ஜெனிவா! ஆனால், அளவில் சிறிய இந்நகரத்திலிருந்து வெளியான அரசியல் கொள்கைகள் தரத்தில் மிகப் பெரியவை! உலகத்தின் 'தலையெழுத்து' இங்குதான் எத்தனையோமுறை மாற்றி மாற்றி எழுதப்பட்டிருக்கிறது. உலகம் போர் இருளால் மூடப்பட்டபோதெல்லாம், ஜெனிவாவிலிருந்துதான் சிறு ஒளிக்கதிரேனும் உலகுக்கு நம்பிக்கை ஒளியைத் தந்துகொண்டிருந்தது. விடுதலைக்காக அடிமை விலங்கொடித்துக் கொண்டிருந்த எத்தனையோ பல நாடுகளுக்கு இங்கிருந்துதான் 'சுதந்திரம்' என்னும் அனுமதிக் குரல் வெளியிடப்பட்டது உலக ஓட்டத்திற்கு ஆங்காங்கே அமைதித் தாகம் உண்டானபோதெல்லாம், அது ஜெனிவாவில்தான் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

ஜெனிவா இன்று உலக விவகாரங்களோடு ஈட்பட்ட ஒரு இடமாக இருப்பதற்கு 1864-ல் அங்கு நடந்த ஒரு நிகழ்ச்சிதான் காரணமாயிருந்தது. அதுமுதல்தான் செஞ்சிலுவைச் சங்கமும் தோன்றி உலகமெங்கும் செயல்பட ஆரம்பித்தது எனலாம். ஜெனிவாவைச் சேர்ந்த ஹென்றி டுனன்ட் (Henry Dunant) என்பார் அங்கிருந்தபடியே, நாடுகளிடையே எழும் போர்களின் விதிமுறைகளை மாற்றியமைக்க ஓர் அழைப்பு விடுத்தார். அதன் பின்னர் அங்கு கூடிய முதல் மாநாட்டின் விளைவுதான், நாடுகளிடையே எழும் போர்களில், ஆபத்துக்குள்ளானவர்களை, அரசியல், நாடு என்ற வேறுபாடு கருதாமல்

பாதிக்கப்பட்ட ஒரு 'மனிதன்' என்று கருத உதவி செய்யும் மனிதப் பண்பு தோன்றியது. இதுவே செஞ்சிலுவைச் சங்கத்தின் அமைப்புக்கும் அடிகோலியது. இது நடந்த 1864-ம் ஆண்டுக்குப் பின்னர்தான் மனித இன நல்வாழ்விற்கான எந்த ஒரு தேவைக்கும், அரசியல் தலைவர்கள் ஜெனிவாவில் கூடி விவாதிக்கத் தொடங்கினர். கூடாமலே முடிந்த உச்சகட்ட மாநாட்டின் முன்பும் அதற்குப் பின்பும் கடைசியாக நடந்த நான்கு நாடுகளின் (பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, இரஷ்யா) ஆயுதக் குறைப்பு மாநாடுகூட இங்குதான் நடந்தது.

இயற்கை எழிலும், செயற்கை வசதிகளும் நிறைய வாய்க்கப்பெற்ற ஒரு அழகு நகரம் ஜெனிவா. ஐரோப்பாவின் நடுவில் அமைந்திருப்பது இந்நகரத்துக்குரிய இயற்கை வசதிகளுள் ஒன்று. உலகில் வேறெங்கிலுமில்லாத அமைதியான சூழ்நிலையும், அரசியல் பேச்சுக்களை நடத்துவதற்கேற்ற எல்லாவித வசதிகளையும் பெற்றிருப்பதும் இந்நகரம் கொண்டிருக்கும் அடிப்படைச் செயற்கை வசதிகள்.

உலக அரசியலில் வழக்கமாக நடுநிலைமைப்போக்கை முக்கியக் கொள்கையாகக் கொண்டிருக்கும் ஸ்விட்சர்லாந்தின் ஒரு பாகமான இந்நகரம், கடல் மட்டத்திற்கு ஆயிரம் அடி மேலே அமைந்திருப்பதொன்றே, நல்ல இயற்கைச் சூழ்நிலையைப் பெறுவதற்கு முக்கிய காரணமாயிருக்கிறது. அதன் அருகில் 45 மைல் நீளமுள்ள எழிலான மாபெரும் நீர் நிலையும், அந்நீரின் அமைதியை ஆங்காங்கே கலைக்கும் சிறு சிறு படகுகளும், அன்னங்களும் அங்கு செல்பவர்களின் கண்களுக்கு இயற்கை விருந்தை அளித்துக்கொண்டிருக்கின்றன. இயற்கை எழில் பரிமளிக்கும் இந்த மாபெரும் ஏரிக்கரையில் அமர்ந்திருப்பதும் ஒரு பொழுதுபோக்கு; நீரைக் கிழித்துச் செல்லும் படகில் அமர்ந்து சுற்றிவருவதும் ஒரு இன்ப விளையாட்டு. சுட்டெரிக்கும் வெயில் எத்தனையோ ஆயிரக்கணக்கான மக்களை இந்த ஏரிக்கரைக்குக் கொண்டுசெல்லுகிறது. நீரில் நீந்தி விளையாடுவதும், படகில் அமர்ந்து சவாரி செய்வதும் இந்த நீர்நிலையில் ஆண்டுதோறும் கோடைக்காலத்தில் நடக்கும் திருவிழா!

டில்லிக்குச் செல்பவர்களுக்கு குதுப்மினாரைப்பற்றிய நினைவு வரும். ஆக்ராவைப்பற்றி எண்ணுபவர்கள் தாஜ் மகாலை நினைவுகூட்டத் தவறமாட்டார்கள். மதுரை என்றால் 'திருமலை நாயக்கன் மகால் அங்கல்லவோ இருக்கிறது' என்பார்கள். திருச்சி செல்லுபவர்கள் ஊர் தெரிவதற்குள் மலைக்கோட்டை கண்ணுக்குப் புலப்படுகிறதா என்று ஆவலோடு பார்ப்பார்கள். இலண்டனின் அதிசயங்களுள் ஒன்று என்ன என்றால், அங்கு இருக்கும் மாபெரும் 'பிக்பென்' என்னும் கடிகாரம், 'ஈபில் கோபுரம்' பாரிசின் அதிசயம்—இப்படி, ஒரு நிமிடத்துக்கு 8000 காலன் அளவுள்ள நீரை 425 அடி உயரத்தில் காற்று மண்டலத்தைக் கிழித்துக்கொண்டு எழுப்பிக்காட்டும் அதிசயமான நீர்ச்செண்டு ஜெனிவாவில் உள்ளது.

"தொழிலபிவிருத்தித் துறையில் தென் நாடு படுமோசமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது."

—தொழிலதிபர் திரு. அனந்தராமகிருஷ்ணன் 10—12—56 ஆம் நாள் திருச்சியில் பேசியது.

•

"விந்தியத்திற்குத் தெற்கில் தொழில் நிர்மாணத்திற்கு எந்த ஒரு பகுதியும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இது கண்டிக்கத் தக்கதாகும். எனக்கு ஆழ்ந்த ஏமாற்றத்தைத் தருகிறது."

—சர். சி. பி இராமசாமி அவர்கள் 16—4—56ல் சென்னையில்.

உலக வரலாற்றின் பல அத்தியாயங்கள் ஜெனிவாவில்தான் எழுதப்பட்டிருக்கின்றன. அரசியல் பகைவர்களுக்கும், இராணுவ எதிரிகளுக்கும் அமைதியுணர்வையும் நட்புறவையும் அளித்து, அதன்மூலம் சர்வதேசப் பிரச்சினைகளுக்கு நல்ல முடிவுகளை உருவாக்கித்தந்த இடம் ஜெனிவா. சுடு சொற்களை வீசிக்கொண்ட தலைவர்களும், பகைமை நாடுகளின் பிரதமர்களும், போர்க்களத்தில் மனிதப் பண்பை மறந்து துப்பாக்கிக் குண்டுகளை பரிமாறிக்கொண்டவர்களும்கூட, இந்நகரில் வந்து கூடியதும் புத்துணர்ச்சியையும், நட்புணர்ச்சியையும், மனிதப் பண்பின் மதிப்பையும் உணர்ந்தவர்களாக மாறியிருக்கின்றனர். உலக இயக்கத்துக்கு, அரசியல் கொந்தளிப்புகளாலும் பெரும் போர்களாலும் ஊறுகள் நேர்ந்தபோதெல்லாம், தான் இருப்பதை அரசியல் தலைவர்களுக்கும் பத்திரிகைக்காரர்களுக்கும் நினைவூட்டி, கூடிக் கலந்து பேசுவதற்கான அமைதிப்பாதை அமைத்துக் கொடுத்துப் பல பெருமைகளைத் தேடிக்கொண்ட நகரம் ஜெனிவா.

இந்நகரத்து மக்களின் பரம்பரையான பொறுமையுணர்வும், விருந்தோம்பும் பண்பினாலும்தான், இப்போதும் இந்நகரம் சர்வதேச மக்களும் கலந்துவாழும் ஒரு பொது இடம்போல் காணப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற இந்நகரத்தில் வாழும் மக்களில் நான்கில் ஒரு பகுதியினர் முற்றிலும் அயல்நாட்டவர்கள். ஸ்விட்சர்லாந்து அல்லது ஜெனிவாவின் மாணவர்களைவிட, அயல்நாடுகளிலிருந்து வந்து இந்நகரின் பல்கலைக் கழகத்தில் கல்விபெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது ஜெனிவாவின் மற்றொரு புதுமைத் தன்மை.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அரசியல் அகதிகளுக்கும், மதவேற்றுமையால் பலியானோர்களுக்கும் வாழ்வளிக்கும் ஒரு புகலிடமாக இருந்து வந்திருக்கிறது இந்நகரம். 16-ம் நூற்றாண்டில் பிரான்சிலிருந்தும், இத்தாலியிலிருந்தும் அகதிகளாக வாழ்வு தேடி வந்த எண்ணற்றோர் தங்களுடன் நுட்பக் கலைகள் பலவற்றையும் கொண்டுவந்தனர். அவர்களது கடிகாரத் தொழிலும், அழகுமிக்க நகை வேலைகளும், எழில்மிக்க ஓவியத் திறனும் இந் நகரத்தை ஒரு முன்னேற்றமான செல்வ நிலைக்குக் கொண்டுவந்தது. அகதிகளுக்கு இடமளித்ததால் பொருள் செலவினங்களைத் தேடிக்கொண்ட எத்தனையோ பல நாடுகளிருக்க, ஜெனிவாவைத் தேடிவந்த அகதிகளெல்லாம் பெரும்பாலும் அறிஞர்களாகவும் கலைஞர்களாகவும், நுட்பத்திறன் மிக்கவர்களாகவும், தொழில் வல்லுநர்களாகவும்தான் இருந்தார்கள். இது ஜெனிவாவின் பல்துறை வளர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

1536-ல் ஜான்கால்வின் என்பார் ஜெனிவாவைப் புரொடஸ்டண்ட் மத இயக்கத்தின் ஒரு முக்கிய தலைமைப்

"இந்தியஅரசு தென்னகத்தை மாற்றுந்தாய் நோக்கத்தோடு கவனிப்பது வருந்தத் தக்கது."

—திருவனந்தபுரம் வணிகர் கழகத்தைச் சேர்ந்த சுலைமதீன் சையத், மதுரை வணிகர் மாநாட்டில்.

•

"தொழில் துறையில் தென் நாட்டிற்கு டெல்லி இழைத்து வரும் ஓரவஞ்சனை இனியும் நீடிக்குமானால் இந்திய யூனியனிலிருந்து தென் நாடு பிரிந்துபோக வேண்டிவரும் என்று இந்தச் சபையில் எச்சரிக்கிறேன்."

—திரு. கன்டன் நாயர் எம். பி. (காங்கிரசு) 4—9—56ல் டில்லி மக்கள் சபையில் பேசியது.

பிடமாக ஆக்கினர். அவர் தோற்றுவித்த சீர்திருத்தக் கருத்துக்களால் அப்போது ஜெனிவாவுக்கு, ஹாலண்ட், ஸ்காட்லண்ட், வடஅயர்லண்ட் முதலிய மற்றைய நாடுகளோடு மதத் துறையில் தொடர்புகள் ஏற்படலாயின. மதச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிய அவரது வீடு, அவர் உபதேசம் புரிந்த கோயில் முதலியவைகள் இன்னும் இந்நகரத்தில் இருக்கின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன் சரித்திர முக்கியத்துவம் பெற்ற பல கட்டிடங்களும் வீதிகளும் ஜெனிவாவின் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக இன்னும் அங்கு காணப்படுகின்றன.

அகதிகள் இந்நகரத்தைத் தேடிக்கொண்டு சென்றதைப்போல, எத்தனையோ பல அறிவாளிகளின் கவனத்தையும் ஜெனிவா தன்பால் ஈர்த்திருக்கிறது. பைரன், ஷெல்லி, ஜார்ஜ் கிலியட் போன்றவர்களின் எழுத்துக்களில் சில இங்கு வந்து பிறந்திருக்கின்றன. கோதே பால்சாக், டோஸ்டோவஸ்கி முதலிய மேதைகளின் பெயர்களைத் தன்னோடு உறவுபடுத்தியிருக்கும் பெருமையைத் தேடிக்கொண்டிருக்கிறது இந்நகரம்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னோடி உலக அமைப்பான லீக் ஆப் நேஷன்ஸ் (சர்வதேச ஸ்தாபனம்) துவங்குவதற்கான முதல் மணியோசை இங்குதான் அலபாமா என்ற மண்டபத்தில் உலகத் தலைவர்களால் எழுப்பப்பட்டது. இந்த மண்டபத்துக்கு 'அலபாமா' என்ற பெயர் தோன்றிய கதையும் ஒரு உலக முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சிதான்!

1876-ல் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இருந்த பிரச்சினையில் சச்சரவுகளும் குழப்பங்களும் இருந்தபோது, இரு நாடுகளும் ஜெனிவாவில் சந்தித்து ஒரு குழு அமைத்து, அதன் சிபாரிசுளின்படி தாங்கள் நடந்துகொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு வந்தன. அக்குழு தனது முடிவாக, தவறு பிரிட்டன்மீது இருப்பதாகக் கூறவே, பிரிட்டன் அமெரிக்காவிடம் மன்னிப்புத் தெரிவித்து $15\frac{1}{2}$ மில்லியன் டாலர்கள் நஷ்ட ஈடும் கொடுத்தது. இருநாடுகளுக்குமிடையே இருந்த 'அலபாமா' என்ற பிரச்சினைக்கு முடிவு கண்ட அந்த இடத்துக்கு அதுமுதல் அப்பிரச்சினையின் பெயரே வைத்து அழைக்கப்பட்டு வருகிறது.

சர்வதேச மாநாடுகள், சந்திப்புகள் பலவற்றின் பிறப்பிடமாகத் திகழும் இந்நகரின் "Palais De Nations" என்ற ஒரு அழகும் வசதியும் மிகுந்த மாளிகைதான் 'ஜெனிவா' என்ற பெயருக்கு உலக சரித்திரத்தில் ஒரு நிலையான பெயரை ஈட்டிக்கொடுத்துக்கொண்டிருக்கிறது. 'ஜெனிவா' என்ற பெயரைக் கொண்டு இதுவரை சர்வதேசப் பிரச்சினைகளில் வந்திருக்கும் உடன்படிக்கைகள், பேச்சு வார்த்தைகள், முடிவுகள் முதலியனவெல்லாம் இந்த மண்டபத்தின் நான்கு சுவர்களுக்கும் மத்தியிலிருந்துவெளியானவைதான். உலகஅரசியல்வாதிகளுக்கும், பத்திரிகைக்காரர்களுக்கும் 'ஜெனிவா' என்றதும் இந்த மண்டபத்தின் நினைவுதான் முதலில் வரும். இன்னும் சில அரசியல் தலைவர்கள் 'ஜெனிவா' என்ற சொல்லுக்குப் பொருள் கொள்வதே இந்த மண்டபத்தைத்தான்! ஜெனிவாவுக்கு வந்து இந்த மாளிகையின் உள்ளும் புறமும் உலவிச் சென்றிருக்கும் சர்வதேச அரசியல் தலைவர்கள்தான் இந்நகர மக்களுக்குச் சாதாரண மனிதர்களைப்போல!

உலக மாநாடுகளை நடத்துவதற்கான வசதிவாய்ப்புகளோடுகூடிய ஒரு சில முக்கிய நகரங்களுள் ஜெனிவா மிக மிக்கியமான ஒன்று. சிறப்புமிக்க ஒலியமைப்பு முறைகளும், உலகின் எந்தமொழியையும் உடனுக்குடன் மொழிபெயர்த்தறிவிக்கும் மொழிபெயர்ப்பாளர்களும் இம் மாளிகையின் சிறப்புக் கூறுகள். ஆயிரம் முதல் இரண்டாயிரம் வரையில் செய்தி நிருபர்கள் தங்குவதற்கான டெலிபோன், தந்தி, டெலிபிரிண்டர் முதலிய தொடர்பு வசதிகளோடு கூடிய பத்திரிக்கைக்காரர்களுக்கான தனி மாளிகையும், ரேடியோ, டெலிவிஷன் முதலிய வசதிகளும், பத்திரிகையாளர்கள் கூட்டத்திற்கெனவே இருக்கும் தனி அரங்கும் இந்நகரின் மற்றைய சிறப்பு அம்சங்கள். ஜெனிவாவின் நிகழ்ச்சிகளைச் செய்திகளாகவும், நிழற்படங்களாகவும் உலக முழுமையிலுமுள்ள பத்திரிகைகளுக்கு உடனுக்குடன் அனுப்புவதற்கான சாதனங்கள் அனைத்தையும் நிரந்தரமாகக் கொண்டிருக்கின்றன இந்த இரு மாளிகைகளும்.

அரசியல்வாதிகளின் ஒவ்வொரு தோற்றத்திற்கும் ஒரு சிறு கண் அசைவிற்கும்கூட ஒரு சிறப்புக்காரணம் கற்பித்துத் தலைப்புச் செய்திகளாக வெளியிடும் 'பொல்லாத' பத்திரிகைக்காரர்கள், சர்வசாதாரணமாக உலவும் இடமல்லவா ஜெனிவா? எனவே, இந்த இரு மாளிகையிலும் அலுவல் புரியும் பெரும் பதவியாளரிலிருந்து சாதாரணப் பணி புரியும் மனிதர்கள் வரையில், எல்லோரும் மிகத் திறமைமிக்கவர்களாக இருப்பார்கள். கல்லிலும் நார் உரித்துவிடலாம்; ஆனால் இங்கு பணி புரியும் அலுவலர்களிடமிருந்து எந்த ஒரு சிறு செய்தியும் வெளி உலகுக்கு தெரியவராது. அமெரிக்கப் பிரதிநிதியையோ அல்லது பிரெஞ்சு அதிபரையோ பேட்டி காண்பதற்கு ஆயிரக்கணக்கான பத்திரிகை நிருபர்கள் மாளிகையினுள்ளிருந்து கடுந்தவம்புரிந்துகொண்டிருப்பார்கள். ஆனால், அம்மாளிகையில் பணிபுரிபவர்களோ ஒரு நாளில் பாதி நேரத்திற்குமேல் அத் தலைவர்களோடு பழகி அவர்களுக்கான உதவிகளைச் செய்துகொண்டிருப்பார்கள்! ஆனால், புகைப்படத்தோடுகூடிய அனுமதிச் சீட்டில்லாத அலுவலர்கள் ஒருவரைக்கூட அம்மாளிகையினுள் பார்க்க முடியாது.

"தென் நாடு தொழில் துறையில் மிக பின்தங்கிக் கிடக்கிறது என்பது வெறும் பிரச்சாரத்திற்காக சொல்லப்படும் சுலோகம் அல்ல; மாருக மத்திய நிதியமைச்சரே ஒப்புக் கொண்டுள்ள உண்மையாகும்"

—நிதியமைச்சர் சி. சுப்ரமணியம் 7—6—56ல் தூத்துக்குடி உருக்கு வர்த்தகர்கள் மாநாட்டில்.

★

"இந்தியப் பேரரசு இரக்கமற்றது. ஓரவஞ்சனையாக நடந்து கொள்ளுகிறது. தென் நாடு வேண்டுமென்றே அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது."

—பி. பி. நாயர் எம். பி. 18—4—56ல் டில்லி பாராளுமன்றத்தில்.

"1815-ல் ஜெனிவா ஸ்விட்சர்லாந்தோடு சேர்ந்தது. ஜெனிவா சார்ந்திருக்கும் ஸ்விட்சர்லாந்து ஒரு பெடரல் ரிபப்ளிக் அமைப்பைச் சார்ந்தது. ஜெனிவாவைப் போல 22 முழு சுதந்தரமுள்ள 'பகுதி'கள் (CANTONS) கொண்ட நாடு அது. நான்கு ஆட்சி மொழிகளைக் கொண்டு பிரான்சுக்கு மேற்கும், ஜெர்மனிக்கு வடக்கிலும், ஆஸ்டிரியாவுக்குக் கிழக்கிலும், இத்தாலிக்குத் தெற்கிலும் 15,944 சதுர மைல் பரப்புள்ள ஸ்விட்சர்லாந்து; அதன் நடுநிலைமைக் கொள்கைக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்தும், ஐ. நா. வில் ஒரு உறுப்பு நாடு அல்ல என்பது பெரும்பாலோருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும் செய்தியாகும்! அதேபோது, இது நேட்டோ (Nato) போன்ற இராணுவ ஒப்பந்தம் எதிலும் கலந்துகொள்ளவுமில்லை. ஐ. நா. வில் உறுப்பு நாடாக இல்லாவிட்டாலும், அதன் பல கிளை உறுப்புகளில் இந்நாடு அங்கம் வகிக்கிறது. சர்வதேச தபால் சங்கம் இந்நாட்டின் தலைநகரான 'பேர்ன்' (Berne) என்னும் இடத்தில் தான் உள்ளது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைக் காரியாலயமும் ஸ்விட்சர்லாந்திலிலுள்ள ஜெனிவாவில்தான் உள்ளது."

இதுபோன்ற பல்வேறு வகையான 152க்கும் மேற்பட்ட சர்வதேச அமைப்புக்களின் தலைமைப் பீடங்கள் ஜெனிவாவில்தான் இயங்கி வருகின்றன. மனித இன முன்னேற்றத்திற்கும், உலக அமைதிக்குமென்றே வாய்ப்பளித்துப் பணிபுரியக் காத்திருக்கும் நடுநிலையான நகரம் ஜெனிவா. பெருமைகள் பலவற்றின் பிறப்பிடம் — என்றழைக்காமல் அளவில் சிறிய இப்புகழ் நகரத்தை வேறு என்ன சொல்லி அழைப்பது?

லீக் ஆப் நேஷன்ஸ் அமைப்புத் தோற்றுவிப்பதற்கான தேவைகள் முதன் முதல் இங்குதான் விவாதிக்கப்பட்டன. பின்னர், அந்த அமைப்புத் தோல்வியுற்ற பின், வேறு ஒரு உலக அமைப்புத் தேவை என்ற எண்ணம் உலகத் தலைவர்களிடையே எழுந்த போதும், எல்லோரது நினைவிலும் 'ஏன் அந்த அமைப்பின் தலைமைப்பீடம் ஜெனிவாவில் அமையக்கூடாது' என்ற எண்ணம்தான் முதலில் பளிச்சிட்டது. ஐ. நா. வின் தலைமைப்பீடம் நியூயார்க் நகரத்திற்குச் சென்ற போதிலும், அந்த உலக அமைப்பின் ஐரோப்பிய தலைமை நிலையம் ஜெனிவாவில்தான் அமைந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் நடப்புப் பொதுக்கூட்டத்தின்போது கூட, அதன் தலைமைக் காரியாலயம் வேறொரு நடுநிலையான அரசியில் கொள்கையுடைய ஒருநாட்டுக்கு மாற்றப்படவேண்டுமென்று இரஷ்யப் பிரதமரால் வேண்டுகோள்விடப்பட்டபோது எத்தனையோ பல அரசியல் வாதிகளின் நினைவில் ஜெனிவாதான் தோன்றியது.

சர்வதேச அரசியலின் ஒவ்வொரு இயக்கத்தையும் நிர்ணயிக்கும் வாஷிங்டனும் பிரான்சும், இலண்டனும் மாஸ்கோவும் ஒருபுறமிருக்க, உலக மாநாடுகள் என்றால், தலைவர்கள் சந்திப்பு நிகழவேண்டுமென்றால் 'ஜெனிவா' என்ற பெயர்தான் எல்லோராலும் முன்மொழியப்படுகிறது. எத்தனையோ பல அரசியலமைப்புக்கள் மாறுகின்றன, மனிதர்கள் மறைகின்றார்கள். கொள்கைகள் தோன்றுகின்றன; அமைச்சர்கள் பதவி மாறுகின்றது. பெரும் அதிபர்கள் அரசியல் உலகுக்கு வருகிறார்கள், போகிறார்கள் என்றாலும், ஜெனிவாவில் ஒவ்வொரு முறையும் மாநாடு கூடும்போதெல்லாம் அதில் பங்கெடுப்பவர்கள் "இதற்கு முன்பு இங்கு நாம் சந்தித்திருக்கிறோமல்லவா?" என்று கேட்டுக்கொள்ளத் தவறுவதில்லை!

பிரெஞ்சு அரசியல்வாதி ஒருவர் இவ்வாறு கூறினர்: "இவ்வுலகம் ஐந்து பகுதிகளாக உள்ளது. அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசியா அதன் முதல் நான்கு பகுதிகள். ஐந்தாவது பகுதி—ஜெனிவா!"

இனிவரும் உலகம் ஜெனிவாவுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. எதிர்காலம் ஜெனிவாவை மறக்காது; அதன் பெயர் என்றும் அழியாது.

●



# எங்கே சொல் தமிழா!

—[ நா. தேசிகன் ]—

தொகைநூலில் ஒன்ருன புறத்தை ஆழ்ந்து
சுவைத்திருந்து மகிழ்கின்ற போதில், முல்லை
நகையாலென் உளங்கவர்ந்த காதல் நங்கை
"நான்சுவைக்கச் சிலசொல்வீர் என்ருள்!" நானும்,
"பகையாலென் அரசுகொள நினைந்து வந்தால்
படுத்துறங்கும் புலிமேல்வீழ் குருடன் ஆவான்
வகையாலென் இடம்வந்தே இரந்தால், ஆட்சி
மட்டுமல்ல நல்லுயிரும் தருவேன்!" என்ற

ஆண்டகையாம் சோழனுரை சொன்னேன்; வீரம்
ஆர்த்தெழும் பலகதையின் கூடல் தன்னை
ஆண்டிருந்த நெடுஞ்செழியன் வெகுண்ட தாலே
அடங்கியதே இமயமலை தமிழர் நாட்டில்!
பாண்டிருந்த வடநாட்டில் கயல்வில் வேங்கை
பதித்தநிலை இகழ்ந்துரைத்த இருவர் தம்மை
ஈண்டிருந்த கண்ணகியின் சிலைக்குக் கல்லை
எடுத்துவரச் செய்சேரன் பெருமை சொன்னேன்!

கேட்டிருந்தாள் இத்துணையும், பெருமை யோடு
கிளர்த்துகின்ற எனைநோக்கி நகைத்தாள் "அத்தான்
ஏட்டினிலே நம்பெருமை கடையில் வீரம்
இருப்பதைநான் உணர்கின்றேன்; ஐயோ நம்மின்
நாட்டினிலே அவையில்லை! தமிழர் எங்கே?
நாட்டிற்குப் பெயரென்ன? ஆட்சி எங்கே?"
கேட்டிருந்தாள் இப்படியே; கனவு நீங்கக்
கேட்டிட்டேன் வானொலிக்கும் இந்திச் சொல்லே!




"சாட்சிகள் கூறினதை எல்லாம் கேட்டுக்கொண்டு இருந்தாயல்லவா? உம்! என்ன சொல்கிறாய்? களவாடினதை ஒப்புக்கொள்கிறாயா—மறுக்கிறாயா?" என்று கேட்டார், வழக்குமன்றத் தலைவர்.

அவள், மகிழ்ச்சியுடன், அவர் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

பரிவும் பாசமும் கொண்டதாகக்கூட அவளுடைய பார்வை காணப்பட்டது.

மகளே! இந்தச் சேலை உனக்குப் பிடிக்கிறதா இல்லையா? சொல்லம்மா என்று செல்லமாகத் தகப்பனார் கேட்டால், மகள் எத்துணை மகிழ்ச்சி அடைவாளோ, அதுபோன்ற களிப்பு, அந்தப்பெண்ணுக்கு.

ஆனால், அவள் நிற்பதோ குற்றவாளிக் கூண்டிலே!

அவர் கேட்பதோ, நீ, களவாடினாயா இல்லையா? என்பது.

அவள், திருடினவள்!

அவர், தண்டனை தருகிறவர்!

ஆயினும், அவள், அவரை அன்புடன் மகள் போலப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள்.

அவருக்குச் சிறிது கூச்சமாகக்கூட இருந்தது. வழக்கு மன்றத்திலிருந்த மற்றவர்கள், திகைப்பே அடைந்தனர்.

அவளோ, என்றுமே கேட்டறியாத இனிய இசை கேட்டுச் சொக்கி நிற்பதுபோன்ற நிலையில் நின்றாள்.

கண்களிலே ஓர் கனிவு!

முகத்திலே ஒரு பொலிவு!

இதழிலே புன்னகை!

களவாடினாள் என்பதற்காகக் கூண்டில் நிறுத்தப் பட்டிருந்த அந்தப் பெண்ணுக்கு.

நீதிபதி இப்படியொரு காட்சியைக்கண்டதில்லை.

கண்ணீர் பொழிந்தவர்கள்—கைகூப்பி நின்றவர்கள் — காலடி வீழ்ந்தவர்கள் — இப்படித்தான் பார்த்திருக்கிறார்.

இன்னும் சிலர், சுட்டுவிடுவதுபோல அவரை முறைத்துப் பார்த்ததுண்டு.

தர்மப் பிரபு! நான் குற்றம் செய்யாதவன். என் விதி, இங்கு இழுத்து வந்து நிறுத்திவிட்டார்கள். பிள்ளைகுட்டிக்காரன என்னைத் தண்டித்துவிடாதீர்கள் என்று, கெஞ்சிக் கதறிப் பேசினவர்களைக் கண்டதுண்டு.

சரிதான்யா.........நான் சொன்னா நீ நம்பவா போறே......திருப்பித் திருப்பிக் கேக்கறியே......உன் மனசைத்தான், இவனுங்க எல்லாரும்சேர்ந்து கெடுத்துட்டாங்களே. நான் ஒரு பாவமும் செய்யாதவன்னு சொன்னா, நம்பவா போறே.........என்று 'காலிகள்' பேசியதுண்டு, கண்டிருக்கிறார்.

இது, புதிது! விந்தை நிரம்பியது!!

தண்டனை கொடுக்கப்போகிறவர் என்று தெரிந்தும், பாசத்துடன் பார்க்கிறாள்!!

"கேட்ட கேள்விக்குப் பதில் சொல்......" என்று சிறிது அதட்டும் குரலிலே கேட்டார்.

தூக்கிவாரிப் போட்ட நிலை ஏற்பட்டவளாகி, கூண்டிலே நிற்பவள், "என்ன சொல்லணும்? சொல்கிறேன்!" என்றாள்.

"உண்மையை! முழு உண்மையை!" என்றார் அவர்.

"களவாடிய விஷயமாகத்தானே கேட்கிறீர்கள். திருடினேன்..." என்றாள்.

அவருடைய மனம் என்னமோ போலாகி விட்டது.

மறுக்கக்கூட இல்லை! சோபம், துக்கம், இல்லை! வெட்கம்கூடக் காணோம்! என்னமோ, பலர் பார்த்துப் பாராட்டக்கூடிய காரியத்தைச் செய்துமுடித்தவள், அதை ஒரு மன்றததிலே எடுத்துச் சொல்லி மகிழ்வது போலல்லவா, திருடினேன்! என்று கூறுகிறாள். இப்படியும் ஒரு பெண்ணா, பேதைப் பெண்! — என்று எண்ணிக்கொண்டார்.

வழக்குக்கு நேரடித் தொடர்பில்லாததை எண்ணிப்பார்க்கத் தேவையில்லை, கூடாது. எனினும், அவரால், அந்தமுறையின்படி இப்போது இருக்கமுடியவில்லை.

அவருக்குத் திகில்கூட ஏற்படத் தொடங்கிற்று, ஏனெனில், அந்தப் பெண்ணிடம் அவருக்கு ஒரு பச்சாதாப உணர்ச்சி ஏற்படலாயிற்று.

அச்சம், தயை, தாட்சணியம் இவைகளுக்கு ஆட்படக் கூடாதே—சட்டம் நிலைக்கவேண்டுமே!!

அந்தமுறைப்படிதான், அவர் தூக்குத் தண்டனை கொடுக்கும் நிலை ஏற்பட்டபோதும் நடந்துகொண்டு வந்தார்.

ஐயயோ! மூனு வருஷமா! நீ நாசமாப் போக! அடப்பாவி! உனக்கு மனசு என்ன கல்லா?—என்று தூற்றியபடி, மாரடித்து அழுத பெண்களைப் பார்த்தவர்.

கணவனுக்குக் கடும் தண்டனை என்றதும், இவளுக்கு மனக்கஷ்டம் இருக்கத்தானே செய்யும்! அதனால் ஏதேதோ உளறுகிறாள் — என்று எண்ணிக்கொள்வார்.

இந்தப் பெண்ணுக்கு, கவலையே காணோம் — கலக்கமும் காணோம். ஆமாம்! களவாடினேன் என்று கூறுகிறாள் — தட்டாமல் தயங்காமல்.

கோபக்குறியே காணோம். சே! பாசத்தோடு வேறு பார்த்துத் தொலைக்கிறாள். பைத்யமோ? இருப்பதற்கில்லையே! தெளிவாகப் பதில் தருகிறாள்—ஏன் இப்படி...

அவருக்குக் காரணம் விளங்கவில்லை.

சட்டத்தின் நுணுக்கங்களைக் கண்டறிந்து கண்டறிந்து பழக்கம் அவருக்கு, இருபது ஆண்டுகளாக.

மனதின் நிலை, எண்ணங்களின் தன்மை, இவைகளைக் குறித்துக் கண்டறியும், பழக்கம் இல்லை. நேரமும் இல்லை, நினைப்பும் எழுந்ததில்லை, அந்த விஷயமாக.



குற்றம் செய்யப்பட்டது என்பதற்கான ஆதாரம் அப்பழுக்கற்றமுறையிலே காட்டப்பட்டானதும், தண்டனை தருவதைத் தமது கடமையாகக்கொண்டிருந்தவருக்கு, அன்று என்னமோ, இந்தப் பெண்ணைத், தப்பிவிடச் செய்யவேண்டும்போல் தோன்றிற்று.

வக்கீலாக முடியுமா, நீதிபதி!

வக்கீலாக வேண்டாம்... நீதிபதியே, சாட்சிகளை மீண்டும், துருவித் துருவிக்கேட்டுப், பொய்யை மெய்போல அவர்கள் புகுத்தி இருக்கிறார்களா என்று கண்டறிந்து, குற்றம் செய்தாள் என்பது சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஏற்படவில்லை என்ற காரணம் காட்டி, விடுவித்துவிடலாம்.

பெண் என்பதாலும், சின்ன வயது என்பதாலும், முதல்முறை என்பதற்காகவும், எச்சரிக்கை செய்து, விட்டுவிடலாம்; தண்டிக்காமல்.

ஆனால், குற்றவாளியோ, பெண்!

இளம் வயது!

மூக்கும் முழியுமாக!!

உலகம், என்ன சொல்லுமோ?

வம்பளப்பு, கலைபோலப் போற்றி வளர்க்கப்பட்டு வருகிறதே—யாரார் என்னென்ன சொல்வார்களோ?

ஏளனம் செய்வார்கள்!

இவர் என்னமோ, கண்டிப்பானவர், நெருப்பு என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தோமே... முக பாக்யம் இருக்கவேண்டும், எதற்கும். ...யோகியானாலும் தியாகியானாலும், பெண்கள் விஷயத்திலே, தாராளம்தான் காட்டுகிறார்கள்—என்று வக்கீல்கள், கூடிக்கூடிப் பேசிச் சிரிப்பார்கள்.

இப்போதே, சிலர், குறும்புத்தனமாகப் பார்க்கிறார்கள்.

காரணமே இல்லை, என்றாலும், மறுபடியும் அவர் கேட்டார்,

"உண்மையைத்தானே சொல்கிறாய்...... முழு உண்மையை..." என்று.

"உண்மையைத்தான்...... முழு உண்மை அல்ல... ஏனென்றால், இந்தக் களவு நடந்ததற்கான காரணம் யாவும் கூறினால்தானே, முழு உண்மை என்று ஆகும். ஆனால் வழக்குக்கு அது தேவையில்லையே ...கூடாதே... சட்டம் தன்வேலையைச் செய்யவேண்டுமானால்!"—என்று அந்தப் பெண் கூறினாள். நீதிபதிக்குத் தலையே சுற்றுவது போலாகிவிட்டது.

ஏனெனில், குற்றவாளி, போலீஸ் கொட்டடியில் மிகவும் போக்கிரித்தனமாகப் பேசினாள், என்று கூறப்பட்டது—அவளும் அதை மறுத்தவளல்ல.

இப்போது மிக அடக்க ஒடுக்கமாகப் பேசுகிறாள். பேசுகிறாளா? பள்ளி ஆசிரியைபோலப் பாடம் சொல்லிக்கொடுக்கிறாள்.

"மூன்று மாதம். கடுங்காவல்." என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

வழக்குமன்றத்திலிருந்தவர்கள், அவளைப் பார்த்தனர்.

அவள் முகத்தில் கோபம், துக்கம் எதுவும் இல்லை. தண்டனை பெறுகிறோமே திருடி என்பதற்காக என்று அவள் வெட்கம் கொண்டதாகக்கூடத் தெரியவில்லை.

தீர்ப்புக் கூறப்பட்டாகிவிட்ட பிறகும், அவள் கூண்டிலே நின்றாள்.

நீதிபதி கடுமையாகப் பார்க்கவில்லை. போலீசாரும், அவளை இழுத்துச் செல்லவில்லை.

"ஐயா!" என்று அழைத்தாள் அந்தப் பெண்.

அவளுடைய 'பார்வை'யிலிருந்து விடுபடுவதற்காகவே, ஏதோன்றைப் புரட்டிக்கொண்டிருந்த நீதிபதி, "ஐயா!" என்று அந்தப் பெண் அழைத்ததும், தன்னையும் மறந்து, "என்னம்மா" என்று மிகக் கனிவாகக் கேட்டார்.

"ஒன்றுமில்லை. நான் களவாடிய பொருள், அதன் சொந்தக்காரருக்குத் திருப்பிக்கொடுக்கப் பட்டு விடுமல்லவா?" என்று கேட்டாள்.

அர்த்தமற்ற சிரிப்புடன் நீதிபதி பேசினார் — செல்லமான முறையில்.

"பைத்தியக்காரப் பெண்ணே! அதுதான் சட்டம்"

"பொருளை, அதன் சொந்தக்காரரிடம் கொடுத்து விட்டால் போதும்; என் மனம் நிம்மதியாகும். சிறைத் தண்டனை எனக்குக் கொடுமையாகக்கூட இருக்காது"

'இவ்வளவு நல்ல குணம், இப்போது இருக்கிறது உனக்கு."

"எப்போதுமே எனக்கு நல்ல குணம்தான்...... ஐயா...!"

"அப்படியெல்லாம் பேசாதே அம்மா! களவாடி விட்டு இப்படியெல்லாம் பேசினால் கைதேர்ந்த பேர்வழி என்றுதான், எவரும் எண்ணுவார்கள். நல்ல குணத்துக்கு, இலட்சணமா, களவு! திருடுவது!"

"எல்லாக் களவும், நல்ல குணத்தின் காரணமாக ஏற்பட்டது, ஏற்படும் என்று நான் வாதாடவில்லையே! இந்தத் 'திருடு' மட்டும் தனி......நான் திருடிதான்...ஆனால் நல்லவள்...நல்லவள், ஆகவேதான் திருடினேன்......"

"அகட விகடம் பேச இதுவா இடம்......"

"அப்படிச் சொல்வீர்கள் என்பதால்தானய்யா, நான் அதிகம் எதுவும் பேசாமல் இருந்தேன். இப்போது, என் வழக்கு முடிந்துவிட்டதால் பேசுகிறேன். சட்டம் நிலைநாட்டப்பட்டுவிட்டதால் பேசுகிறேன். உங்கள் கடமையை நீங்கள் செய்துமுடித்துவிட்டதால் கூறுகிறேன்......பொருள், யாருக்குச் சொந்தமோ, அவர்களிடம் கொடுத்துவிடுங்கள்......"

அதுவரையில் அந்தப் பெண்ணின் போக்குப் புரியாமல் திகைத்திருந்த, நீதிபதிக்கு இப்போது, பரிதாப உணர்ச்சியே மேலிட்டது. நிச்சயமாக இந்தப் பெண்ணுக்கு, ஏதோ மனக்குழப்பம் என்று எண்ணிக்கொண்டார்.

அதுவரையில், அமைதியுடன் பேசிக்கொண்டிருந்த அந்தப் பெண்ணும், இப்போது, சிறிது நடுக்கும் குரலில் பேசுகிறாள்; கண்களிலே நீர் துளிர்க்கும் நிலை பெறுகிறாள்.

"நீ களவாடிய பொருளை, காத்தமுத்துவுக்குத் தான் தருவோம்...அந்தக் கடையிலிருந்துதானே, களவாடினாய்......"

"ஆமாம்...காத்தமுத்து கடையிலிருந்துதான் களவாடினேன்...ஆனால், அது, காத்தமுத்துவுடையது அல்லவே!..."

"திருடு நடை பெற்றது காத்தமுத்து கடையில்; பொருள் அவனுடையது."

"பொருள், இருந்த இடம் காத்தமுத்து கடை. ஆனால் பொருள் அவருடையது அல்ல......"

"சட்டப்படி, காத்தமுத்துவுடையதுதானம்மா, அந்தப் பொருள்."

"சந்தர்ப்பம் காரணமாக அந்தப் பொருள், காத்தமுத்துவிடம் இருந்தது......ஆனால், பொருள் அவருடையது அல்ல...முழு உண்மை வேண்டும் என்றீர்கள்.—காத்தமுத்து கடையில் இருப்பதெல்லாம் காத்தமுத்துவுடையது என்று கொள்வது, முழு உண்மையாகாது......"

"திறமையாக வாதாடுகிறாய் அம்மா! ஆனால், தேவையற்ற வாதம்! காத்தமுத்து கடையில் களவு நடந்தது. நீ பிடிபட்டாய். கடையிலிருந்து நீ பொருளைக் களவாடினதைக் கண்ணால் கண்டவர்கள் சாட்சி கூறினார்கள். நீயும் அதை மறுக்கவில்லை..."

"மறு விசாரணைபோல அல்லவா, பேசுகிறீர்... ஐயா! வழக்கு முடிந்துவிட்டது......தண்டனை தந்தாகிவிட்டது. நீதிபதியின் வேலையும் முடிந்தது—வெற்றிகரமாக—பெருமை தரத்தக்க விதத்தில்...... ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்; நான் சிறிது படித்திருக்கிறேன்......களவும் கற்றுமற என்ற என் கட்டுரைக்குத் தங்கமெடல் கிடைத்தது.........ஐயா! பொருளை எடுத்த இடம் காத்தமுத்து கடை....அதனால் அது அவருக்குச் சொந்தம் என்று எண்ண வேண்டாம். அவரும் கூறமாட்டார். பொருள் அவருடையது அல்ல என்பதாலேயே, நான் செய்தது களவு அல்ல என்று ஆகிவிடாது. என்றாலும், பொருளை, அது யாருக்குச் சொந்தமோ அவர்களிடம் கொடுத்துவிடுங்கள். நீதிபதியின் வேலைகளிலே இது ஒன்று அல்ல...ஆனால்......"

"பெண்ணே! பொருள்வேறு ஒருவருடையதாக இருந்திருக்கலாம்...முன்பு...காத்தமுத்து, அதற்கு உரிய விலைகொடுத்து வாங்கியவராக இருப்பார்...... அதனால் அது அவருக்குத்தான், உரியது—அவருக்குத்தான் போய்ச்சேரவேண்டியது......"



"ஐயா! சட்டம் படித்தவள் அல்ல, அதனால் நான் சொல்வது, சட்டப்படி சரியா அல்லவா என்பது எனக்குத் தெரியவில்லை. உண்மை என்பதால் பேசுகிறேன். சட்டமும், உண்மையைக் கண்டறியும் முறையை மறுக்காது. பொருள் காத்தமுத்துவுடையது அல்ல. அவர், அந்தப் பொருளை, அவருக்கு 'உரியது' ஆக்கிக்கொண்டார், பணம்கொடுத்து. நான்சொல்வது, பொருளை, உரியவருக்குச் சேர்த்து விடுங்கள் என்பது; காத்தமுத்து கேட்கும் பணத்தைக் கொடுத்து விட்டு."

"பணத்தை, யார் கொடுப்பது......?"

"கொடுக்கும்படி, தங்களைத்தான் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் கேட்டீர்களா! இவர்கள் கேலியாகச் சிரிப்பதை...மேலும், விளக்கம் கேட்கா தீர்கள்...இவர்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள்"

நீதிபதி, போலீசாரைப் பார்த்தார்; அவர்கள், அவனை அழைத்துச் சென்றனர்.

பாலில் தண்ணீர் கலந்துவிற்றவன் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பாலில் தண்ணீர் கலப்பது என்று கூறிடும், சட்டமே பொருளற்றது; ஏனெனில், பாலும் ஒருவகைத் தண்ணீர் தான் என்று, சட்ட நிபுணர் சடகோபாசாரியார், வாதாட ஆரம்பித்தார். நீதிபதியின் மனம், அந்த வழக்கிலே செல்லவில்லை. கோர்ட் கலைந்தது—வீடுசென்றார். காத்தமுத்து வந்து சேர்ந்தான்; கூட்பிட்டனுப்பி யிருந்தார்.

"பொண்ணுக்கு மூளைக்கோளாறு என்பது, இப்பதாங்க புரிஞ்சுது. இது முன்னமேயே தெரிஞ்சிருந்தா பாவம், அதைப் போலீசிலே பிடித்துக் கொடுத்திருக்கவே மாட்டேனுங்க. நானும் புள்ளெ குட்டிக்காரனுச்சே பார்த்தா, பொண்ணை, பரிதாபமா இருந்திச்சிங்க..."

"காத்தமுத்து! களவுபோன பொருள், உன்னுடையது அல்ல என்று அந்தப் பெண் சொன்னதைக் கேட்டாயல்லவா......"

"அது உண்மை தானுங்களே. கடையிலே உள்ள பொருளெல்லாம் என்னுடையதாகுங்களா... யாராரோ, விற்கிறுங்க......விலைகொடுத்து வாங்கி, பாலிஷ் கீலீஷ்போட்டு, சுவல்ப இலாபத்துக்கு விற்கறதுங்க. நம்ம கடை மட்டுமில்லாங்களே......எந்தக் கடையிலேயும் அதுதானுங்களே பழக்கம்..."

"ஆமாமாம்...நான் அந்தப் பெண்ணு என்னமோ உளறுதுன்னு எண்ணிக்கொண்டேன், முதலிலே. அதுசரி! பொருள் யாருடையது?"

"அதுவும் நமக்கு எப்படிங்க தெரியும். நான் ஒருத்தர்கிட்ட இருந்து வாங்கினேனுங்க — அது அவங்களுடையதோ, அல்லது, அவங்களும் வேறே யாரிடமாவது இருந்து வாங்கினுங்களோ, நமக்கு எப்படிங்கதெரியும்...விசாரிச்சுப் பார்க்காம..."

"நீ, யாரிடம் இருந்து வாங்கினே...அது தெரியுமேல்லோ...அதற்கு ஆதாரம் உண்டு அல்லவா?"

"என்னங்கஇது, ஆதாரம் கீதாரம்னு பேசறிங்க. நான் திருட்டுச்சாமான் வாங்கற ஆசாமி இல்லாங்க. கடைத்தெருவிலே சிலபேர், உண்டு அந்த மாதிரி, நமக்கு ஈனப் பொழைப்புக் கூடாதுங்க. மானம் பெரிசா, பணம் பெரிசா, சொல்லுங்க..."

"அதை எல்லாம் சாவகாசமாக ஒருநாளைக்குப் பேசலாம்...இப்ப, அந்தப்பொருள், நீ; யாரிடமிருந்து வாங்கினே...அதைச் சொல்லு..."

"நம்மாள்வார்னு இருக்காருங்க, தரகுக்காரர்— அவரிடமிருந்து பல சமயத்திலே, பலவிதமான சாமான்கள் வாங்குவது வாடிக்கைங்க, அவனும் தப்புத்தண்டாக்காரனில்லாங்க..."

"இந்தப் பொருளை, என்ன விலைக்கு வாங்கினே ...அவனுக்கு எங்கே இருந்து கிடைச்சது......அந்த விவரம் என்ன?"

"உண்மையைச் சொல்லிவிடறேனுங்க......நீங்க எனக்கு ஒரு ஆபத்தும் வராமெ பார்த்துக்கொள்ளணுமுங்க. இந்தப்பொருள், வேறே ஒரு பொருளிலே



மறைச்சி வைக்கப்பட்டிருந்ததுங்க. நம்மாள்வார்கிட்ட நான் இருவது ரூபா கொடுத்துத் தானுங்க, அந்தப் பொருளை வாங்கினேன். அவனுக்குத் தெரிஞ்சிருந்தா, இருவதுக்குக் கொடுத்திருக்கமாட்டானுங்க..."

"பொருத்தம் இருக்க வேணும் பேச்சிலே, பதக்கம், என்ன குறைஞ்சாலும் ஆயிரம் ரூபாய்க்குப் போகும்......"

"ஆமாங்க... ஆனு பதக்கம் இருக்கிறது தெரியாமத்தானுங்களே நம்மாள்வார், கதாயுதத்தை என்கிட்ட வித்தாரு..."

"என்னய்யா கதை அளக்கறே...கதாயுதம் சக்கராயுதம்னு..."

"எஜமான், உங்க காலிலே விழறேன்...... நான் சொல்றது சத்தியமுங்க. வெள்ளிக் கவசம் போட்ட கதாயுதம்—பீமனோட கதாயுதம்......"

"நீ, என்னுடைய கோபத்தை வேண்டுமென்றே கிளறிக்கொண்டிருக்கறே."

"நான், விவரம் சொல்லாததாலே, உங்களுக்குக் கோபம் வருதுங்க. பீமனோட கதாயுதம்னு, பிள்ளை யாரப்பன் நாடக சபா இருக்குது பாருங்க......"

"நாடகக் கம்பெனியா......?"

"ஆமாம்; நல்ல நல்ல நாடகமெல்லாம், ஆடுவாங்க, முன்னே எல்லாம்"

"காலட்சேபம் செய்யாதே, விஷயத்துக்கு, வா"

"அந்தக் கம்பெனியிலே, பீமன் தூக்கிக்கிட்டு வர்ர கதாயுதம்ங்க...அதை, நம்மாள்வார் கிட்ட நாதமுனி, விலைக்கு வித்தாருங்க......"

"அவன் யார், நாதமுனி. அவன்தான் பீமன் வேஷம் போடுபவனா?"

"இல்லிங்க ... டீ கடைக்காரன்ங்க ... அவனுக்கு, கம்பெனி முதலாளி பணம் சேரணும். தரவில்லை, கோவத்திலே, இதைத் தூக்கிகிட்டு வந்து வித்துப் போட்டானுங்க, நம்மாள்வரிடம்—அவர், நம்மகிட்ட தள்ளிப் போட்டாருங்க......"

"கதாயுதத்தோட கதை இருக்கட்டும். பதக்கத்துக்கு வா!......"

"வர்ரனுங்க — கதாயுதத்தை வாங்கறபோது, நம்மாள்வாருக்கும் தெரியாது எனக்கும் தெரியா

துங்க. நாட்டுருவன் சாட்சியா, கதாயுதத்துக்குள்ற பதக்கம் இருக்குதுன்னு."

"அப்புறம், எப்படித் தெரிஞ்சுது......"

"அதாங்க வேடிக்கை. வேளை, வரவேணும் பாருங்க ஒவ்வொண்ணுக்கும். இந்தப் பொண்ணுங்க, செயிலுக்குப் போச்சே......?

"நீதானேய்யா, அனுப்பிவைத்தே... அதாவா ஜெயிலுக்குப் போறேன்னு போச்சி..."

"அப்படிப் பார்க்கப்போனுங்க, தண்டனை கொடுத்தது, எஜமான்தானுங்க..."

"ஆஸ்யமா, இந்த இலட்சணத்திலே... விஷயத்துக்கு வாய்யா..."

"இந்தப் பொண்ணுகிட்ட யார் சொன்னுங்களோ தெரியல்லேங்க, கதாயுத விஷயமா. இது இத்தனைக்கும் இப்ப, டீச்சர் வேலை பார்க்குதுங்க... பாருங்க, நூறு ரூபா வரைக்கும் தருவதா சொல்லுதுங்க, நான் கொடுத்தது இருவதுதானுங்க. நல்ல இலாபம்ங்க. கொடுத்துடலாம்னு தாங்க எண்ணம்..."

"உனக்கு எப்படித் தெரியும் கதாயுதம் இங்கே இருக்கற விஷயம்னு கேட்டியோ?"

"தெரிஞ்சிகிட்டேங்க. நாதமுனியே தானுங்க சொல்லிவைச்சது. அப்பறம்ங்க... நூறு இல்லே, ஆயிரம்னுகூடத் தரமுடியாதுன்னு சும்மா ஒருபோடு போட்டனுங்க... பொண்ணு சிலையா நின்னுட்டுதுங்க. போ! போ!ன்னு அனுப்பிச்சிப்போட்டுங்க, பையனை எல்லாம் அனுப்பிச்சிப்போட்டுங்க, ராத்திரி போய், கதாயுதத்தைச் சோதனை போட்டனுங்க... ஒரு துப்பும் தெரியல்லிங்க... அங்கேயே, அசந்து தூங்கிட்டனுங்க. அப்பறம் பாருங்க, தடால்னு சத்தம்ங்க, விழிச்சிகிட்டுப் பார்க்கறேனுங்க, கதாயுதம் இரண்டு துண்டாகுதுங்க, உள்ளாற இருந்து பதக்கம் வருது வெளியே, பொண்ணுதான் செய்யுது இவ்வளவு வேலையும்..."

"அடப்பாவி! கடையிலே புகுந்து, களவாடினதாகச் சொன்னயே... இந்தக் கதாயுதம் பற்றி ஒண்ணும்சொல்லலியே"

"எஜமானுக்கு அதையெல்லாம் கேட்க நேரம் இருக்காதேன்னு தானுங்க சொல்லல்லே.."

"ஆமாம்...... பதக்கம் யாருடையது......"

"பிள்ளையாரப்பன் நாடகக் கம்பெனியிலே, இந்தப் புள்ளெ, வேஷம் கட்டி இருக்குதுங்க.."



"இருக்கட்டுமேய்யா......ஆயிரம் ரூபா பதக்கம் இதுக்கு ஏது?"

"ஆமாம்ங்க......அது அதிசயம்தாங்க......கம்பெனிக்காரனைக் கேட்டுப் பார்த்தா, ஏதாச்சம் தடம் கிடைக்கும்னு தோணுதுங்க."

நீதிபதி, காத்தமுத்துவை அனுப்பியே பிள்ளையாரப்பன் நாடகக் குழு உரிமையாளரை வரவழைத்தார்; விசாரித்தார்; தன்னிடம் அப்படி ஒரு பதக்கமே கிடையாது என்று அவன் கூறிவிட்டான். மீண்டும் இருட்டறையில் தள்ளப்பட்டது போன்ற நிலை ஏற்பட்டுவிட்டது நீதிபதிக்கு.

பொருளை உரியவர்களிடம் கொடுத்துவிடுங்கள் என்று திரும்பத் திரும்ப, முத்துரத்தினம் சொல்லிவிட்டுப் போனதை எண்ணி எண்ணிப் பார்த்தார்.

பதக்கம்! அந்தப் பெண்ணுடையதாக இருந்தால் வெளிப்படையாகச் சொல்லி இருக்கலாமே; ஏன் மறைத்தாள்; என்று யோசித்தார். பெயர்தான் முத்துரத்தினம்—இவ்வளவு விலையுள்ள பதக்கம் வாங்கக்கூடிய பணம் இடையாதே இப்பெண்ணிடம். ஒருவேளை களவோ? இப்போது, அந்தப் பெண்ணுக்கே, உள்ளம் சுடுகிறதோ.... இவ்விதமெல்லாம் எண்ணி எண்ணிப் பார்த்தார். விளக்கம் கிடைக்கவில்லை. திகைப்பு அதிகமாயிற்று.

காத்தமுத்துவிடம், பதக்கத்தைக் கேட்டு வாங்கி வைத்திருந்தார்.

சென்னை

*

பித்தர் விடுதி மேலதிகாரி மோசஸ் தம்பி, நீதிபதியைக் காண வந்திருந்தார். வரப்போவதாகத் தந்தி கொடுத்தபோதே, நீதிபதிக்குப் பெருத்த, கவலை; தன் தங்கை முத்தழகிக்கு, என்ன ஆபத்தோ என்று.

செல்வம் செல்வாக்கு இருக்கிறது—மனதுக்கு நிம்மதி மட்டும் இல்லை, நீதிபதி பாதிரியப்பருக்கு; மனைவி, காசநோயால் மாண்டு போனதால், மன துடைந்து இடந்தார். ஆனல் அதற்கும் முன்பே, அவருடைய மனதுக்குப் பெரிய அதிர்ச்சி, தன் உடன் பிறந்தாள் முத்தழகிக்குப் பைத்யம் பிடித்ததால். அதுவும் எப்போது? முத்தழகிக்குத் திருமணம் நிச்சயமான நேரமாகப் பார்த்து. அந்த இடி தாளமாட்டாமல், பாதிரியப்பனின் தந்தை நல்லப்பர், நோய்வாய்ப்பட்டார்; இறந்து போனர்.

முத்தழகிக்குப் பைத்யம் முற்றிவிட்டது; விடுதியில் சேர்ப்பது தவிர, வேறு வழியில்லை. வேதனைதான் பாதிரியப்பருக்கு; எனினும், விடுதியில் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருந்து வருகிருள், என்ற அளவிலே ஒருவிதமான திருப்தி அவருக்கு. மேலும் என்ன பேரிடியோ, என்ன சேதி கொண்டு வருகிருரோ டாக்டர் மோசஸ் தம்பி என்று கலங்கியபடி இருந்தார்.

"டாக்டர்...முத்தழகிக்கு......"

"ஆபத்து இல்லை...ஆனல் கவலைப்படத்தக்க நிலைமைதான்...ஆனல்...குணப்படுத்த வழி உண்டு, என்று எண்ணத் தோன்றுகிறது."

"சொல்லுங்கள் டாக்டர்! என்ன செய்தால் குணமாகும். எங்கு போகவேண்டும்......"



"இதைப்பாருங்கள்..." என்று கூறி, டாக்டர் மோசஸ் தம்பி, ஒரு கடிதம் கொடுத்தார்.

"டாக்டர் அவர்களே!

நான் சிறையிலிருந்து இதை எழுதுகிறேன் — இதயம் இருப்பதால்.

நீதி தெரிந்த பாதிரியப்பரிடம் சென்று உம்மால் தண்டிக்கப்பட்ட பேதைப் பெண் கூறியபடி பதக்கத்தை உரியவரிடம் சேர்த்துவிட்டீர்களா என்று கேளுங்கள்.

சட்டம் போதும், என்று இருப்பவர். பதக்கம்பற்றி நாம் ஏன் விசாரிக்க வேண்டும்; களவாடியவள் சிறை சென்றாள்; பொருள் கிடைத்துவிட்டது; இனி அது பற்றி நமக்கு என்ன, என்று இருப்பார். உடனே, பதக்கத்தை எடுத்துக்கொண்டு போய், அவருடைய தங்கை, உங்கள் விடுதியில் இருக்கும் முத்தழகு அவர்களிடம் காட்டச் சொல்லுங்கள்.

உங்கள் மருத்துவ முறைகளால் சாதிக்க முடியாததை, அந்தப் பதக்கம் சாதிக்கும்.

அதில் உள்ள, பச்சைக்கும் நீலத்துக்கும் அபூர்வமான சக்தி உண்டு.

காட்டச் சொல்லுங்கள். இந்த என் கடிதத்தை நனைத்திருப்பது கண்ணீர்—இதைக் கூறுகிறேன்.

கடமையில் மூழ்கி இருக்கிறீர்—கண்ணீர் அவருடைய கடமையைக் கெடுத்துவிடப் போகிறது.

சிறையில் வாழும்
முத்துரத்தினம்."

விரைந்தனர் இருவரும் விடுதிநோக்கி.

பதக்கத்தைக் காட்டினர்; முத்தழகு, அதனை வாங்கி, இப்புறமும் அப்புறமும் திருப்பித்திருப்பிப் பார்த்தாள்—வீசி எறிந்தாள் மேஜைமீது.

டாக்டரை, பாதிரியப்பன் பார்த்தார்.

டாக்டர், சோகமாகத் தலை அசைத்தார்.

"ஆவலாக ஓடோடி வந்தேன், டாக்டர்...!" என்று கூறிக் கண்ணீர் வடித்தார் பாதிரியப்பன்.

மேஜைமீது கிடந்தது பதக்கம். இதில் உள்ள பச்சையும் நீலமும் அபூர்வசக்தி வாய்ந்தவையாம்! பைத்யக்காரப் பெண், கடிதம் அனுப்பிவிட்டாள், கடிதம்! என்று வாய்விட்டுக் கூறினார், டாக்டர்.

"இந்தப் பதக்கத்துக்கு உள்ள சக்தி, ஜெயிலுக்கு அனுப்புவதுதான். அந்தப் பெண் இதைத் திருடித்தான் ஜெயிலில் இடக்கிறாள்" என்றார் நீதிபதி.

முத்தழகியின் கண்கள் மீண்டும் பதக்கத்தின் மீது பாய்ந்தன. கரத்தில் எடுத்தாள்; பின்புறம் திருப்பினாள், உற்று உற்றுப் பார்த்தாள்; மீண்டும் வீசி எறிந்தாள்.

நீதிபதி பதக்கத்தை எடுத்தார், சட்டைப்பையில் வைக்க. வெடுக்கென்று அதை முத்தழகி பறித்துக் கொண்டாள். பின்புறம் திருப்பிக் கீழே போட்டுத் தேய்த்தாள்; டாக்டர் தடுக்கமுயன்றார்; அவர் விரலை நறுக்கென்று கடித்துவிட்டாள்; பதக்கத்தை விடவில்லை; தேய்ப்பதையும் நிறுத்தவில்லை. தேய்ப்பதும் பார்ப்பதும், மறுபடியும் தேய்ப்பதும் உற்றுப்பார்ப்பதுமாக இருந்தாள். ஏதோ பைத்யக்காரச் சேஷ்டை என்று இருவரும் எண்ணிக்கொண்டனர். ஆனால், இருவரும் திடுக்கிட்டுப்போகும்படியான ஒரு மகிழ்ச்சிக் கூச்சலிட்டுக்கொண்டு பதக்கத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஆடினாள் முத்தழகி. மெத்தக் கஷ்டப்பட்டுப் பதக்கத்தை அவளிடமிருந்து வாங்கிப் பின்புறம் பார்த்தார் பாதிரியப்பன், வெண்ணூர் ஜெமீன் சின்னம் தெரிந்தது.



"டாக்டர்!" என்று நீதிபதி கூவியது கேட்டு, டாக்டருக்குத், தங்கையின் சதிதானோ அண்ணனுக்கும் என்று பயமாகிவிட்டது. "டாக்டர்! பதக்கம், எங்களுடையது. நான் இதுவரையில் அப்படி இருக்கும் என்று நினைக்கவே இல்லை. இதோ இருப்பது ஜெமீன் சின்னம். அப்பா இந்த நகையை ஜெமீனில் இருந்து வாங்கினார் — முத்தழகுக்காக!" என்று விளக்கம் கூறினார், பாதிரியப்பன்.

"பதக்கத்தைக்கொடு அண்ணா, இப்படி" என்று முத்தழகி கேட்டாள் — பித்தம்பிடித்தவள் இப்படியா தெளிவாகப் பேசமுடியும் என்று இருவரும் ஆச்சரியப்பட்டனர்.

"எங்கே? எங்கே? நான் உடனே பார்த்தாகவேண்டும்" என்று ஆவேசம்வந்தவள்போல் கேட்டாள் முத்தழகி.

''இதோ! இதோ!'' என்று கூறியபடி, டாக்டர், பதக்கத்தைக் காட்டினார்.

அதைக் கண்களில் ஒத்திக்கொண்டாள். பிறகு, இந்தப் பதக்கம் கொண்டுவந்தவரை நான் பார்க்க வேண்டும், என்றாள்.

''பார்க்கலாமம்மா, பார்க்கலாம். விரைவில் ஏற்பாடு செய்கிறேன். அம்மா! முத்தழகு! இந்தப் பதக்கம், நம்முடையதுதானே? அப்பா, வாங்கி உனக்குக் கொடுத்தார்...உம்....! அப்படித்தானே...முத்தழகு! இது, உன்னிடம்தானே இருந்தது......யாருக்காவது கொடுத்தாயா......காணமற்போய்விட்டதா.....சொல்லம்மா...நன்றாக யோசித்துச்சொல்லு...'' என்று நீதிபதி கேட்கலானார். முத்தழகுக்குத் திகைப்பு அடியோடு போகவில்லை, தெளிவு பிறக்கவில்லை; நினைவுகளை ஒன்று சேர்த்து இணைக்கமுடியாமல், திணறிக் கொண்டிருந்தாள்.

டாக்டர், இப்போதைக்கு இதற்குமேல் எதுவும், முத்தழகுவிடம் கேட்கவேண்டாம் என்று கூறி விட்டார்.

பதக்கத்தைத் தன் கரத்திலே வைத்துக் கொண்டே, முத்தழகு மயக்கமுற்றாள். டாக்டர், அவளுக்கு வேண்டுவன செய்ய ஏற்பாடு செய்தார், நீதிபதியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு.



நீதிபதி வீட்டுக்குள் நுழையும் போதே, காத்தமுத்து தடுத்து நிறுத்தினான்; அவன் கன்னங்கள் சிவந்து போயிருந்தன; விரல் விரலாகத் தழும்புகள்.

''உள்ற போகாதீங்க—போலீசுக்குச் சொல்லி அனுப்புங்க. உள்ளே, ஒரு கொலைகாரன் இருக்கிறானுங்க. சிங்கம் போலச் சீறிகிட்டு. அவன் தானுங்க, என்னைத் தாக்கினவன்.'' என்று காத்தமுத்து கூறினான்.

நீதிபதி உள்ளே சென்றார்; உட்கூடத்தில், ஒரு மேஜை மீது நாற்காலியைப் போட்டு, அதன்மீது ஏறி நின்றுகொண்டு, சுவரிலே மாட்டியிருந்த நல்லப்பர் படத்தை, ஒரு முரடன் கழட்டிக்கொண்டிருக்கக் கண்டார், பாதிரியப்பன்.

''யாரது, போக்கிரி! இதோ போலீசைக் கூப்பிடுகிறேன், பார். இறங்கு கீழே! படத்தைக் கொடு!'' என்று அதட்டினார் பாதிரியப்பன்.

படத்தைத் தூக்கித் தரையில் போட்டான்; தூள் தூளாயிற்று.

அடப்பாவி! என்று அலறினார், பாதிரியப்பன்.

எங்கே முத்தழகு? என்று கேட்டான், அவன்.

என்ன திமிர் உனக்கு... என்று ஆர்ப்பரித்தார், பாதிரியப்பன்.

நீ சீமான்—நான் பராரி! நீ படித்தவன், நான் ஊர் சுற்றி! நீ நீதிபதி, நான் கொலைகாரன்!!—தெரிகிறதா, புரிகிறதா... நீதானே முத்துரத்தினத்தை ஜெயிலுக்கு அனுப்பியவன்? சொல்! ஏன் திருதிருவென்று விழிக்கிறாய். நீதானே, ஜெயிலில் தள்ளினாய். நீதான் செய்வாய் அந்தக் காரியம். அந்தக் கள்ளங்கபடமற்ற முகத்தைக் கண்டும், அவள் களவாடினாள் என்று முடிவுகட்ட, உன்னைப்போன்ற மனித மிருகத்தால்தான் முடியும். இவன் மகன் தானே நீ! வேறு எப்படி இருக்கும் குணம். தப்பிப் பிறந்தவள், முத்தழகு; அதனால்தான, தவியாய்த் தவித்தாள், உங்களிடம் சிக்கி!'' — என்று கூறிக் கொண்டே இருந்தான். பாதிரியப்பன் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்பும், சம்பவங்களால் அதிர்ச்சி அடைந்தார்.

''மெள்ளப்பேசு! விளக்கமாகப் பேசு...'' என்று கூறினார் பாதிரியப்பன்.

''அது உங்கள் முறை! மாளிகைப் பாஷை! எனக்கு அது தெரியாது...தேவையும் இல்லை! நீ படித்த சட்டம், உனக்கு அப்படிப் பேசும் சக்தி கொடுத்தது. நான் பார்த்த சதி, அனுபவித்த கொடுமை, என்னைக் கொலைகாரனாக்கிற்று. நான்தான் வீரய்யன்—ஆம்! உங்கள் வீட்டிலே மோடார் பழுதடைந்தால் சரிசெய்து கொடுத்துவந்தவன்...கொலைக் குற்றத்துக்காகச் சிறையில் அடைபட்டவன்—செய்யாத கொலைக்காக — என் பக்கம் சட்டம் பேசாததால்! கொலை நடந்தபோது, இவனை அந்த இடத்தில் பார்த்தேன் — பத்தோ இருபதோ பெற்றுக்கொண்டு பச்சைப் புளுகு சொன்னான், பண்டரி. பெரிய பெரிய சட்டப் புத்தகங்களை எதிரே வைத்துக்கொண்டு, உண்மையைக் காண மறுக்கும் உயர்தர நீதிபதி, ''என்ன சொல்கிறாய்?'' என்று என்னைக் கேட்டார். நீ கேட்டாயல்லவா, என் மகளை, என்ன சொல்கிறாய்? என்று, அதுபோல.

ஐயா! இவன் பொய் பேசுகிறான். நான.

ஆஹா! இவர் பெரிய சத்யகீர்த்தி. இது, உன் போன்ற பெரிய வக்கீல்.

கொலை செய்யவில்லை, ஐயா! செய்யவில்லை!—நான் கதறினேன்.

கிழவி தன்னைத்தானே கொலைசெய்து கொண்டாளா?—இது அந்த வக்கீல் பேசிய விகடம்.

என் எதிரே தூக்குக் கயிற்றைக் காட்டிக்கொண்டு விகடம் பேசினானய்யா, விகடம், அந்த வக்கீல்.

ஆத்திரம் பொங்குகிறது, ஆனால் கோர்ட்டிலே, கொலை நடந்தபோது, வேறு எங்காவது இருந்தாய் என்பதற்கு ஆதாரம் உண்டா? இருந்தால் காட்டு! சாட்சி உண்டா? இருந்தால், கூப்பிடு என்று சொன்னார்களே, ஏன் முடியவில்லை உன்னால்?

அட, அறிவற்றவனே! சாட்சி இருந்தது...கூறுவதற்குத்தான, எனக்கே நாக்குக் கூசிற்று. ஆதாரம் இருந்தது. ஆனால் அதைக்காட்ட நான அஞ்சினேன். பெரிய இடத்து ஊழலை, ஊர் கேட்டுச் சிரிக்குமே, என்பதால்.

சட்டம், பெரிய இடம் சின்ன இடம் என்று பார்க்காது......

சமுகம் பார்க்கிறது. உன் சட்டம், அந்தச் சமுகத்தின் மனப்போக்கை மாற்றமுடியாது சாணக்கி

> "பெரிய பெரிய தொழிற்சாலைகளும் வேலைத் திட்டங்களும் உருவாவதில் இந்த மாநிலத்திற்குரிய பங்கு தரப்படவில்லை, என்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்,"
>
> —திருமதி அம்புஜம்மாள் 1955ல் நடந்த ஆவடி காங்கிரசு மாநாட்டின் வரவேற்புரையில் பேசியது.
>
> •
>
> "அபிவிருத்தித் திட்டங்களில் தென் நாடு அலட்சியப் படுத்தப்பட்டிருக்கிறது."
>
> —முகமது இஸ்மாயில் (முஸ்லீம் லீக் தலைவர்) 3—9—56ல் டில்லி இராஜ்ய சபையில்.

அடைகிறது. என்னைக் குற்றமற்றவன், கொடுமைக்கு ஆளானவன் என்று எடுத்துக்காட்டக்கூடிய சாட்சியை, ஒரே சாட்சியை, ஒப்பற்ற சாட்சியை, தடுத்து விட்டார்கள்.........படம்தான் கிடைத்தது, பொடிப் பொடியாக்கினேன்............கிடைத்திருந்தால், உன் அப்பனைக் கிழித்துக் கிழித்து நாய்நரிக்கு இரையாக்கி இருப்பேன். குடும்ப கௌரவம் கெடக்கூடாதாம், அதற்காக, நான் கொலைகாரனாக வேண்டுமாம்!

"எங்கள் குடும்ப கௌரவத்துக்கும், உனக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்கிறாயா, அல்லது உன் அப்பன் கொக்கரித்ததுபோல,எப்படிப் பொருந்தும் என்று பேசப் போகிறாயா? பார், என்னை. நன்றாகப் பார்! வேட்டையாடினர் என்னை, இந்த முரட்டுத்தனம் பெற்றேன். வஞ்சித்தனர், அதனால் வருவது வரட்டும் என்ற சுபாவம் பெற்றேன். சதி செய்தனர் என்னை அழிக்க, அதனால் எதையும் செய்யும் துணிவு பெற்றேன்.

கொடுமை செய்தனர், கொலைகாரன் என்று பழி சுமத்தினர்; நான் இப்போது ஒரு பயங்கர மனிதனானேன்.

என்னை இம்சித்து இம்சித்து மிருகமாக்கினர்.

நானும் மனிதனாகத்தான் இருந்தேன்.

மங்கையர் விரும்பும், பண்புள்ளவனாகத்தான் இருந்தேன்.

உன் தங்கையே, தன் இதயத்தைத் தரத்தக்க இளைஞனாக இருந்தேன்.

ஆம்! நான்தான்! வீரய்யன்!!

வெட்கமா, வேதனையா, திகைப்பா, பயமா—எல்லாம் சேர்ந்து தாக்குகிறதா, உன்னை.

என், வழக்கை, நீயே விசாரணை செய்து, நல்ல தீர்ப்பு வழங்கு, பார்க்கலாம். நாட்டிலே உனக்கு நல்ல பெயர் என்கிறார்கள்.

வீரய்யா! மறைந்து கிடந்த பல உண்மைகள் எனக்கு இப்போதுதான், சிறு சிறு சிதறல்களாகத் தெரியத் தொடங்கியுள்ளன. முழு உண்மையை நான் அறிந்துகொள்ள வேண்டும். ஆத்திரத்தைக் கொட்டிக் கொண்டிராதே—நடந்ததெல்லாம் தெரிய வேண்டும் எனக்கு; உடனே, விளக்கமாக; இப்போதே!

நடந்தது எல்லாம்!! நான் கூறவேண்டும், நீ கேட்கவேண்டும்'! விசித்திரமான ஆசை. நீ, தாங்க மாட்டாய், மெத்தப் படித்தவன், ஆகவே வஞ்சகம் இப்படி எல்லாம் வடிவம் எடுக்கும் என்று அறிந்து கொள்ளக்கூட அஞ்சுவாய். நம்பக்கூடமாட்டாய். மறந்துபோனேனே! நீ, நீதிபதியாயிற்றே! சாட்சி கொண்டுவா, ஆதாரம் கொண்டுவா, என்று கேட்பாய். எந்தச் சாட்சியைக் காட்டுவேன். நானும், அவளும் யாருமறியாமல் பேசும்போது, கட்டு அறுத்துக்கொண்டு ஓடிவந்து, எங்களைத் தலைதெறிக்க ஓடச்செய்த, பசுங்கன்று சாட்சி... அது இப்போது தன் கன்றுக்கு அல்லவா பால் கொடுத்துக்கொண்டிருக்கும். அப்பப்பா! உங்கள் முரட்டுத்தனத்தால் என்று கூறியபடி என் அணைப்பிலிருந்து விடுபட்ட முத்தழகி, உடைந்த வளையல் துண்டுகளை வீசி எறிவாள் — அந்தச் சாட்சிகளை நான் எப்படிக் காட்ட முடியும் — இப்போது. வேண்டாம், வேண்டாம்... நம் கனவு பலிக்காது. உன் வழி நீ போ! என்று கூறிப் பொய்க்கோபம் காட்டும்போது, விடமாட்டேன் என்று சொல்லி, என் சட்டையைப் பிடித்திழுக்க. நான் விடுபட என் வலிவு காட்ட, இடையிலே சட்டை கிழிந்து, சிறுதுண்டு அவள் கரம் சேரும்—அந்தச் சாட்சியைக் கொண்டுவந்து காட்டவோ! அவள் விரும்பும் பழம் பறித்து, மரத்திநின்றும் நான் இறங்கும் வேளை, பாம்பு! பாம்பு! என்று பயம் காட்டியபடி, கொடியை வீசுவாள் என்மீது, நானோ ஓடும் பாம்பையே காலால் மிதித்து, கழுத்தை அழுத்திப்பிடித்துக்கொண்டு வந்து அவள் எதிரில் நிற்பேன். சாட்சிகள் ஆயிரம் உண்டு. அவையாவும் மறைந்து போயின. ஆனால், மங்காத சாட்சி, கண்டாய், நீ! சட்டம் உன் கண்களை மறைத்தது. எமது காதற் கனியைக் கண்டாய், கண்ணிருந்தும் கருத்தில்லை உனக்கு. களவாடினாள் என்று கடுங்காவல் தண்டனை கொடுத்தாயே, அந்தக் கன்னி யார்? அந்திப் போதில் என் மடிமீது சாய்ந்து, சிறு குடில் போதும் நமது வாழ்வு சீராக, என்று அன்பு மொழி பேசி என்னை இன்பக் கடலாழ்த்திய, மாசுபடா மங்கை நல்லாள், முத்தழகி பெற்றெடுத்த பத்தரைமாற்றுப் பதுமை அல்லவா!! அந்தச் சாட்சியைக் கண்ட பிறகு, வேறும் வேண்டுமோ!...ஆண்டு பல உருண்டோடிவிட்டன—என்றாலும், என் மனத்திரையில் அந்தச் சம்பவங்கள் அவ்வளவும் கலையாத ஓவியமாகத்தான் உள்ளன. சிலதான், பிறருக்குக் காட்டக் கூடியன. மற்றவை, நான் எண்ணி எண்ணி, இன்ப நினைவுகள் பெற்றுப் பெற்றுப் பூரித்து இருக்க மட்டுமே!!

என் வாழ்க்கையிலே இரண்டே பகுதிகள்தானே.

ஒன்று எவருக்கும் கிட்டாத செந்தேன்—அதன் சுவை—அதனால் வந்த மகிழ்ச்சி. மற்றொன்று, எவராலும் தாங்கிக்கொள்ளமுடியாத கொடுமை. உன் சட்டப் புத்தகங்களிலே, குற்றத்தின் தன்மை, அதற்கான தண்டனை, விசாரணை முறை இவை உண்டு; கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் குற்றம் எப்படி உருவாகிறது என்பது,இருக்கிறதா அந்த ஏடுகளில்? ஊருக்கெல்லாம் நல்லது செய்பவன் என்ற பெயருள்ளவன்கூட, போலி கௌரவம் காக்க, எத்துணை கேவலமான கொடுமையினையும் செய்யும் துணிவு, எப்படி ஏற்படுகிறது என்பதை, அந்தப் புத்தகங்கள் காட்டுகின்றனவா? இருக்காது! எத்தனையோ சம்பவங்

கள், மறைக்கப்பட்டுப் போகின்றன! அதிலும் மாளிகைகளிலே, எத்தனை எத்தனை பாதகச் செயல்கள் நடந்தாலும், வெளியே தெரியவா போகிறது. கற்கோட்டையல்லவே, பணக்கோட்டை!!

போதும், வீரய்யா! போதும்! கொட்டிக்காட்டினதே போதும்; கொடுமைக்கு ஆளானும்; அதற்கும் என் தந்தையே காரணம்; அவரும் போலிக் கௌரவமெனும் நோயால் அவ்விதமானார், என்பது எனக்குத் தெரிகிறது.

நானும், நடந்ததை மறந்திடுவோம்; நெஞ்சோடு இருந்திடட்டும் என்றுதான இருந்து வந்தேன். கொடுமை மீண்டும், இதே இடத்திலிருந்து கிளம்பி, என்னைத் தாக்கியது போதாதென்று, என் மகளையும் தாக்குவது கண்டேன், கடுங்கோபம் கொண்டேன. என் வாழ்வு, கருகிவிட்டது. முத்தழகோ, பித்தர் விடுதியில்! இங்கு இருந்து உலவி, இந்த மாளிகைக்கே பெருமையும் ஒளியும் தரவேண்டிய என் மகள், சிறையில்! இவ்வளவு பலி கொடுத்து இந்தக் குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பாற்றத் துடித்தார், உன் அப்பா. சரி! இங்கு நான் நுழையும்போது ஏதேதோசெய்ய நினைத்தேன். கிடைத்தது, படம் மட்டும் தான் — தேக்கி வைக்கப்பட்டிருந்த ஆத்திரம் அத்தனையும், இதைத்தான் தாக்கிற்று. நீ, என்னசெய்வாய் பாவம். ஏடுதூக்கி! என்னைமணம்செய்துகொள்ள உன் தங்கை துடித்துக் கிடந்தாள்—உன் தந்தை, அவருக்குத் தெரிந்த தந்திர முறைகளை எல்லாம் ஏவினார்—பலிக்கவில்லை—எமது காதல் கனிந்தது. காதல் என்ன, மாளிகையிலிருந்து கிளம்பி, மற்றோர் மாளிகையைத் தேடித்தானா, நுழையும்! காதல் இதயங்களின் சேர்க்கை—இலட்சங்களின் கூட்டல் கணக்கு அல்ல! கருவில் வளர்ந்தாள், என் திரு. கண்டறிந்தார் உன் தந்தை. பெற்றெடுத்த செல்வத்தைக், குப்பத்தில் குடிஇருந்த சுப்பியிடம் சேர்ப்பித்தார். என்னையோ, சூதாட்டம் நடத்தினவன் என்று பொய் வழக்கில் சிக்கவைத்தார்—அபராதம் விதிப்பார்கள், இதை விற்றுக் கட்டிவிடு என்று, மணவிழாவுக்கு என்று வாங்கிவந்த பதக்கத்தைத் தந்தாள் என் தங்கம். நான் அதை என் நெஞ்சோடு சேர்த்தேன், கண்களுக்கு மலராக்கினேன், இதழ் அதனுடன் உறவாடிற்று—விற்றுப் பணம் ஆக்கவில்லை—சிறை சென்று வந்துவிடுவோம் — இந்தக் காதற் சின்னம், நமது செல்வத்துக்காக இருக்கட்டும் என்று வைத்திருந்தேன்.

இதோ அது! என் தங்கை தந்த பதக்கம்!!

கொடு! என்னிடம் கொடு! ஒரு நிமிடம் கொடு!

தருகிறேன். ஆனால், இப்போதல்ல, முழுவதும் கேட்ட பிறகே.

கேட்கக் கேட்க உனக்கு, வேதனை பீறிட்டு வரும்மப்பா. குப்பத்தில் வளர்ந்த குலக்கொடியை அழித்துவிடவும் சதி நடந்தது; புலி உலவும் காட்டிலே, புள்ளிமான் குட்டிக்கு, தாவித்தப்பித்துக்கொள்ளும் திறம் வந்து தன்னாலே சேரும் என்பார்கள். கொடுமையே தாலாட்டாய்ப் பெற்ற என் செல்வம், உன் அப்பாவும், குப்பத்துக் கிழவியும் சதிப்பேச்சு நடத்தியதைக் கேட்டுவிட்டாள். எட்டுவயது! சிட்டுப்போலப் பறந்தாள். முகவெட்டுக்கண்டு நாடகக் குழுவினர் சேர்த்துக்கொண்டனர். அங்கு என் அழகுராணி, ஆடினாள், பாடினாள், ஆபத்தைத் தடுத்துக்கொண்டாள்.

அது, அறிந்துகொண்டேன், முத்துரத்தினத்தின் கலை உலக வாழ்க்கைபற்றி.

மாளிகைக்கு இனிப் பயம் இல்லை. மாதா பனம உடைந்து கிடக்கின்றாள். மகளோ கூத்தாடி! இனி என்ன குறை! குடிப்பெருமைக்குக்கேடு இல்லை! —என்றெண்ணிச் சும்மா இருந்தாரா? அதுதான் இல்லை. சிறை மீண்ட நான், என் செல்வத்தைக் காணாது, குப்பத்துக் கிழவியிடம், கூர்வாள் நீட்டிக் கேட்டேன. கொலைநடக்கும், உண்மையினைக் கக்கிவிடு என்றுரைத்தேன். ஊர்கூட்டி உன்னைவிரட்டமுடியும் என்னால், என்றாள் அந்தக் குடிகெடுக்கும் கிழவி. நேரே, உன் இல்லம் வந்தேன். அன்பே! நம் அரும் செல்வம் குப்பத்தில் காணோமே. என்ன செய்தனரோ, நம் வாழ்வழிக்கும் வஞ்சகர்கள், என்று கேட்டேன். நாடகக்குழுவொன்றில், நம்செல்வம் அழகாக ஆடிடும் அருமை கேட்டேன என்று அவள் உரைத்தாள். நான் மகிழ்ந்தேன. மாளிகைத் தோட்டத்தில், மாட்டுத் தொழுவத்தில். மலர்விழியாள் தன்னோடு மனமகிழ்ந்து நானிருந்தேன்.



தமிழகம்

| | |
|---|---|
| அளவு:- ... | 50 191 சதுர மைல் |
| மக்கள் தொகை:- ... | 3 கோடி |
| கடற்கரை அளவு:- ... | 620 மைல் |
| துரைத்தன வரவு-செலவு சென்ற ஆண்டு | வரவு 80·87 |
| | செலவு 81·21 |
| | துண்டு 0 34 |

அத்தான், சிறைக் கொடுமை மெத்தவோ, என்று கேட்டாள். சேற்றினைச் சந்தனமாக்கி, அங்கென்ன கஷ்டம், அப்படி ஒன்றுமில்லை, வேளைக்குச் சோறுண்டு, விரும்பும் விதம வேலை, கரும்பே! சலங்காதே! என்று கூறி மகிழ்வித்தேன். நம்பத்தான சொல்கின்றீர், நன்றாய்க்கற்றுவந்தீர், அடுக்கடுக்காய்ப் பொய்கூற என்று அவள்கூற, என்னைமா வம்புக்கு இழுக்கிறாய் என்று சொல்லி, முந்தானை தொட்டிழுத்தேன; முந்திரிப் பழம் படமாய் வரைந்திருந்த சேலை. அத்தான விட்டுவிடும் — அறுபதுக்குமேல ஆகுது விலை — அப்பா எனக்காக வாங்கிவந்தார்

என்று கூறி, விலகிவிட முயன்ருள். விடவில்லை நான். அவள் போக எழுந்தாள். பற்றியதை விட்டேனு! இல்லை! முந்தானை துண்டாகி, என் கரம் வந்து விட்டது. அவள் சிரித்தாள், நான் சிரித்தேன்; என்தன் தலைக்கு இதுவே, ஏற்ற 'பாகை' ஆகுமென்றேன். கட்டிவிட்டாள் தலையில் அதை; கண்கொள்ளாக் காட்சி என்ருள். சேலை போயிற்றே என்றேன் —உள்ளது போதும் உடல் மறைக்க என்ருள். ஊருக்கு என்று சேர்த்துக்கொள், என் உரிமை மறுக்காதே என்றேன்—ஏதேதோ பேச்சு — இன்பத்தின் போதை.

உனக்கோ இந்த இன்பம். உலகில் நீ பிறந்தது உள்ளம் மகிழ்ந்திருக்கத்தானே! பார்! பார்! என்று கேட்பது போலக் கோட்டான் கூவிற்று — புறப்பட்டேன்.

குப்பத்திலே கூச்சல், குழப்பம், கும்பல். எப்பக்கம் திரும்பிடினும், எங்கு அவன் என்ற கேள்வி. என்ன இருந்தாலும், இப்படிச் செய்திடலாமா? கொலைசெய்துவிட்டானே கொடியோன் என்று கூவினர்.

முந்தானைத் துண்டுதனை முத்தமிட்டு நான் மகிழ, பிடரி பிடித்தென்னைப், பேயர் இழுத்துச் சென்ருர்.

இவன்தான்! இவனே தான்! கொன்றுவிடுவேன் கொடுவாளால், என்றந்தக் கிழவியை இவன் மிரட்டிப் பேசியதை நானே கேட்டேன் என்ருன்; நானுந்தான் என்ருன் மற்றொருவன். கூண்டிலே தள்ளிவிட்டார், கொலைகாரன் என்று சொல்லி. கூவி அழுதாலும் கேட்பதற்கு ஆளில்லை. அன்று, தண்டனை முடிந்து வெளியேறும் வேலப்பன், என் நிலைமைக் கண்டிரங்கி, என்னுல் ஆனது செய்வேன், வழி இருப்பின் சொல் என்ருன்; தயக்கம் தடுத்தது என்னை; பின்னர் தலை தப்ப வேண்டுமென்ருல் தயக்கம் ஆகாதென்று, வேலப்பனிடம், விவரமெலாம் சொல்லி, என் சார்பில் வாதாட ஏற்பாடு செய்திடு, எவரும் மறுக்கவொணுச் சாட்சியுண்டு, அவள்தான்! முந்தானை குறைந்துள்ள முந்திரிப் பழம் வரைந்த சேலைதனை, என் அன்பு! கொண்டுவந்து காட்டட்டும். குறைபட்டது,துண்டாய் உள்ளதை நான் காட்டுகிறேன். கொலைக்கும் எனக்கும் தொடர்பில்லை என்று சொல்லி, விடுவிப்பார்; வாழ்ந்திடுவேன், வேலப்பா!' என்று சொன்னேன்.

## தமிழகம்

| மாவட்டம் | அளவு | | மக்கள் தொகை |
|---|---|---|---|
| செங்கற்பட்டு | 3,188 | சதுர மைல் | 1,958 079 (1951கணக்கு) |
| கோயமுத்தூர் | 6,014 | ,, | 3,154,296 |
| கன்யாகுமரி | 645 | ,, | 826,380 |
| சென்னை | 49 | ,, | 1,416,056 |
| மதுரை | 4,910 | ,, | 2,506,275 |
| நீலகிரி | 984 | ,, | 311,729 |
| வடாற்காடு | 4,674 | ,, | 2,859,157 |
| ராமநாதபுரம் | 4,849 | ,, | 2,080,519 |
| சேலம் | 7,063 | ,, | 3,371,769 |
| தென் ஆற்காடு | 4,204 | ,, | 2,776,767 |
| தஞ்சாவூர் | 3,740 | ,, | 2,982,670 |
| திருச்சிராப்பள்ளி | 5,514 | ,, | 2,943,882 |
| திருநெல்வேலி | 4,413 | ,, | 2,506,275 |

வேலப்பன், வழிப்பறி நடத்திய கொடியவன். எவருக்கும் எதிரி; எதற்கும் அஞ்சாதவன்; ஏழெட்டு முறை சிறை இருந்தவன், போக்கிரி! இத்தனை இருந்தும் அவன் இதயம்உள்ளவன். எனக்காகப் பாடுபட்டான்-பலன்தான் இல்லை. ஏனென்ருல்,எனக்குஉண்டு இதயம், ஆனுல் அதனை எடுப்பேன், பின்னர் இருந்த இடம் வைப்பேன், என்று கூறிடும் குணாளர், உனைப் பெற்ற தந்தை, எவனடா, தன் மகள், இந்த முரடனுடன்நேசமாக இருந்தாள்என்றுஇயம்புவான். போ! போ! இன்றுதான் வந்தாய், மீண்டும் இரும்புக் கம்பிக்குள் செல்வாய், என்று விரட்டியே விட்டார், வேலப்பனை. என் அன்பு! இது தெரிந்து, காலடி வீழ்ந்தாளாம், கண்ணீர் பொழிந்தாளாம், உயிரைடபறிக்காதீர், உண்மை உரைத்திடுவோம், என்றெல்லாம் கூறி எனக்காகப் போரிட்டாள். பிடித்திழுத்துச் சென்று ஓர் அறையில் தள்ளிப் பூட்டிவிட்டுப், போய்விட்டார் உன் தந்தை.

என்ன நடக்கும் என்பது உனக்கே தெரியுமே.

சாட்சி உண்டா? என்றனர்.

உண்டு! உள்ளம் உரைக்கிறது! ஊர் ஒப்பவேண்டுமே!! உண்மையைக் கண்ணீரா காட்டும்?

கடைசி விநாடியிலாவது, கட்டுக்காவல் மீறியேனும், வந்திடுவாள் என்னைக்காக்க, என்று எண்ணித் துடித்திருந்தேன்.

எனக்காகச், சட்டம் வேகம் குறைத்துக் கொள்ளுமா?

ஆயுள் தண்டனை பெற்றேன்.

அன்றுதான், உன் தங்கை, மனம் குழம்பிப் புரண்டழுதாள். மாகாளிக்குப் படையலிட்டால், எல்லாம் சரியாகிப்போகுமென்ருர் போலும், உன் அப்பா!

உழைத்தேன் சிறைக்குள்ளே — உருமாறியும் விட்டேன்—கண்ணீர் பொழிந்திட, கண்களே மறுக்கும்நிலை — வெளிவந்தேன், மகளைக்காண — அவள் சிறையில்— அதுவும் உன்னுல், என்ருர். கொலை செய்யா எனைக் கொடுமை கொட்டிற்று; இனிக்கொலைச்செய்து முடித்துவிட்டுச் சிறையே இருப்பிடமாய்க்கொள்வோம், என்ற உறுதியுடன் வந்தேன்.

மகளைச்சிறைக்கனுப்பிய, காரணம்கேட்டறிந்தேன் —பதக்கம் திருடினுள் அந்தப் பாசாங்குக்காரி என்ருர்கள். பல்லை உடைத்திருப்பேன், கரத்துக்கு வேறு கல்லவேலை தருவோம், இது அற்பம், என்றெண்ணிக், கரத்தழுத்து கடைசென்று, கொடு பதக்கம்! என்

றேன். அது என்ன? என்றான் அவன். இதுதான் அது என்றேன், அவன் இருகன்னம் புடைத்தது. பதக்கம் என்னிடம் இல்லை, நீதிபதியிடம், இருக்கிறது, என்றான். வந்தேன் பெற! என் வாழ்வில் வதைபட்டதெல்லாம் சொன்னேன்.

கண் திறந்தாய், வாழ்வு மீண்டும் பெற, வழி கண்டேன், உன்பேச்சால். வண்ணக்கிளி கூண்டினின்றும் வரும் நாள், திருநாளாகும்.

வந்ததும், என்செல்வமுடன், கண்காணு நாடு சென்று காலம் கடத்துகிறேன். என்றால், உன் பெயர்க்கு இழுக்கு இம்மியும் வேண்டாம். என் காதற் சின்னமான, பதக்கம்மட்டும் கொடுத்துவிடு. பொன்னான நாளும், இந்தப் பாவிக்கு இருந்ததென்று, எண்ணி மகிழ்ந்திருப்பேன் எங்கோ ஓரிடத்தில்.

கொடுமைகள், செய்பவர்கள், எவரேனும் கொடியரன்றோ. உனக்கு அவர் இழைத்த கொடுமை கூறிவிட்டாய். எனினும், நீயும், உனக்காக உயிர் சுமந்து வாழ்ந்திருக்கும், என் உடன் பிறப்பை மறந்து வேற்றார் சென்றிடுவேன் என்றுரைத்தல், மிகக் கொடுமை. உணர்கின்றாயா?

அவள் என் நெஞ்சில் இருக்கின்றாள். என்னுடனே தான் வருவாள். பித்தம்பிடித்தது, பெரும் வாய்ப்பு, அவளுக்கு. மனம் குழம்பிப்போனதனால், என்னை எண்ணி அழமாட்டாள்.

மனம் குழம்பிப்போனது உனை இழந்த காரணத்தால்.

எமைப் பிரித்த காரணத்தால்!

இரண்டும் ஒன்றே. இனி, அவள் பிழைக்க, மாமருந்து, நீ என்பதனை மறந்தனையே.

மாமருந்து நான் அவளுக்கு; மதுரமிகுவிருந்து அவள் எனக்கு; ஆனால், உலகோர் காத்துநிற்கும், சம்பிரதாயத்துக்கு, நாங்கள் பெரு நெருப்பாம்! கூறுகின்றார்!

கூறட்டும், குறைமதியுடையோர்! குன்றேறிக் கூறுவோம், காதல், வேறுபாடு ஏற்காதென்று. கட்டுகளைத் தாமாகப் போட்டுக்கொண்டு, கடும் வலி என்று கூறுவோர், உலகம்வேறு. கருத்திலே புதுத் தெளிவும் துணிவும்பெற்றுக், காலத்தை நல்லதாக்கும் வீரர், உலகம்வேறு. உன் உலகம் உனை அழைக்க, ஓடுதல் கோழைத்தனமன்றோ.

உரையாடல், வளர வளர, இருவரின் உள்ளமும் நெருங்கின, தழுவின, இணைந்தன.

நீதிபதி பாதிரியப்பன், ஆயுள் தண்டனை பெற்றுத் திரும்பிய, வீரய்யனைத் தன் வீட்டிலே இருந்திடச் செய்ததுகண்டு, பலரும் வெகுண்டனர்.

சிறைவாயிலில் நின்று இருவரும், முத்துரத்தினத்தை வரவேற்று, வீட்டுக்கு அழைத்து வந்தனர்—ஊர் சீறிற்று.

பித்தர் விடுதியில் இருந்த முத்தழகி, முழுத் தெளிவு பெற்று, வீடுவந்தாள்; விழா அன்று!

வீணர்கள் வீம்புபேசினர். காலிகள் கற்கள் வீசினர். வழக்கறிஞர்கள், மேலிடம் எழுதினர்.

நீதிபதி பாதிரியப்பன், மேலிடத்தாருக்கு அதற்கும் முன்னதாகவே எழுதிவிட்டார்—பதவியிலிருந்து விலகிக்கொள்வதாக.

நீதிபதி, வக்கீலானார்! அந்த வட்டாரத்திலேயே, வஞ்சிக்கப்பட்டவர்கள், ஆடவரால் கைவிடப்பட்டவர்கள், கொடுமைக்கு ஆளானவர்கள், ஜாதிபேதக் கொடுமையால் இம்சிக்கப்பட்டவர்கள், வலியோரால்



வாட்டப்படும் எளியோர் எவர் எனினும், அவர்களுக்காக, வாதாட வக்கீல் பாதிரியப்பன் இருக்கிறார் என்று ஊரேபேசலாயிற்று. ஊரென்றால், மாடிமீதேறி நின்று தம்மை உயர்ந்தோர் என்று கூறிக்கொள்வோர் உள்ள இடம் அல்ல. பிறருக்கு வாழ்வளிக்க உழைத்துப் பிழைத்துவரும் இதயம் உள்ளவர்கள், இருக்கும் இடம்! அவர்களின் பாதுகாவலன், பாதிரியப்பன்.

எவ்வளவோ மேலுக்கு வந்திருக்கவேண்டியவன், இந்தப் பாதிரியப்பன். பாருங்க அவன் புத்தியை, அன்னக் காவடிகளுக்கு. இவன் தான், வக்கீல்! செச்சே! என்றனர்.

பாதிரியப்பனுக்கு, துணைக்குச் சம்பள ஆட்களே தேவைப்படவில்லை.

வக்கு ஏது, பணம் கொடுத்து வேலைக்கு ஏற்றவர்களை அமர்த்திக்கொள்ள—என்று கேலி பேசினர், வைரக் கடுக்கன் போட்ட வக்கீல்கள்.

வீரய்யன் வழக்குப்பற்றி, மறைந்திருக்கும் தகவல்களைச் சேகரித்து வந்து தருவான்.

முத்துரத்தினம், குறிப்புகள் எடுத்துத் தருவான்,

பாதிரியப்பன், சட்டத்தில் உள்ளவைகளை மட்டும் அல்ல, இருக்கவேண்டியவைகளையும் எடுத்துக்கூறுவான். அவனுடைய பேச்சு, இதயத்திலிருந்து வந்தது! புத்தகத்தைக் குடைந்தெடுத்து, வார்த்தைகளைக் கோர்த்துத் தந்தவர்கள், வழக்குகளில் தோற்றே வந்தனர்.

பாதிரியப்பன், வழக்குமன்றத்தின்முன் கொண்டு வந்து காட்டும் சாட்சிகள், ஏழையின் கண்ணீர், எளியோரின் வியர்வை, பேதையின் பெருமூச்சு, அடிபடும் அல்லல்—இவை.

நீதிபதி வக்கீலானான்! வறண்ட தலைகளுக்கெல்லாம் கொண்டாட்டம்.

பாதிரியப்பன் வக்கீல் வேலை மட்டுமல்ல, குற்றம் செய்யும் சூழ்நிலைகளை, கோபதாபங்கள், போட்டி பொறாமைகள், இவைகளைப் போக்கவும் நீக்கவுமான அறிவுப் பணியும் தொடர்ந்து செய்யத் தொடங்கினான்.

ஆதிக்கக்காரர்களுக்குக் கோபம், தீமூட்டிவிட்டது.

பாதிரியப்பனுக்கு எப்போதேனும், சிறிதளவு அச்சம் ஏற்படும். அப்போது அவன், வீரய்யனைப் பார்ப்பான்—வீரம் கொப்பளிக்கும்; வாதங்கள் எதிர் தரப்பினரை வீழ்த்தும் கணைகளாகும்.

நமக்காகத்தான் நீதிபதி, வக்கீலானார், என்று குப்பம் பேசும்!

உங்களுக்காக! ஆம்! உண்மை! ஆனால், நீங்கள் குற்றம் செய்துகொண்டே இருக்கவும், நான் வாதாடவும் அல்ல! நீதிக்காக! உமக்கும், உண்மை அடக்கி அழிக்க எண்ணும், ஆதிக்கக்காரருக்கும், நீதியை மதித்து நடந்திடும், மனப்போக்கு, செயல்முறை ஏற்பட, நான் வக்கீலானேன், என்று பாதிரியப்பன் கூறுவான்.

சட்டத்தைக்கூடத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, ஆதிக்கபுரியினர், நீதியைத் தடுத்திட, மறைத்திட முயற்சிகளை செய்யும்போது, அவைகளை முறியடித்து, நீதியை நிலைநாட்ட, நீதிபதி வக்கீலானான்!

ஆயுள் தண்டனை பெற்றவன், இவனுக்கு மைத்துனன்!

களவாடிவிட்டுச் சிறை சென்றவள், இவன் உடன்பிறந்தாளின், மகள். இவன் பேசுகிறானய்யா, சட்டம்; சட்டம் அனுமதிக்கிறது இப்படிப்பட்டவனை வழக்குமன்றத்தில் பேச — என்று, வழக்கறிஞர்கள் வட்டாரம் கொக்கரித்துக்கொண்டுதான் இருந்தது. ஆந்தை சில அலறுவதுகேட்டு, அஞ்சுகம் கொஞ்சு மொழி பேசாதிருக்குமோ?

வக்கீலான, நீதிபதிக்கு, மோடார் இல்லை, ஏறிச் செல்ல; இருந்த மாளிகையும், ஏலத்தில் போய்விட்டது, ஆனால், பாதிரியப்பன, ஏழை எளியோரின் நெஞ்சில் நிறைந்திருந்தான், நீதி காத்து நின்றான்!

ஒரே ஒரு பாதிரியப்பன் போதாது......என்பான் வக்கீலான நீதிபதி.

"இரண்டே ஆண்டுகள்—நானும், உன் அணியில்" என்கிறாள், முத்துரத்தினம்.

"எப்படி நம்புவது? எவன் இருக்கிறானோ கொள்ளைகொள்ள" என்கிறான் பாதிரியப்பன்.

"பாரம்மா, என்னென்ன பேசுவதை!" என்று, முத்துரத்தினம், தாயிடம் சிபாரிசு தேடுகிறாள்.

"இடம்பார்த்துக் கேட்கிறாயே" என்று கேட்டுச் சிரிக்கிறான், பாதிரியப்பன்.

★

## தமிழகம்

### கால்நடை

| | | |
|---|---|---|
| பசு, மாடுகள் | — | 9,698,251 |
| எருமைகள் | — | 2,040,944 |
| செம்மறி ஆடு | — | 7,041,616 |
| வெள்ளாடு | — | 3,757,582 |
| பன்றி | — | 506,903 |
| கோழிகள் | — | 9,874,403 |
| வாத்துகள் | — | 513,490 |

### விளைபொருள்கள்

| | | |
|---|---|---|
| நெல் | 5,600,252 ஏகர் | 3,235,590 டன் (அரிசியாகிறது) |
| மற்றப் பயிர் | 5,048,054 — | 1,527,460 டன் |
| கரும்பு | 143,353 — | 403,090 டன் (வெல்லமாகிறது) |
| நிலக்கடலை | 1,919,692 — | 910,900 டன் |
| எள்ளு | 2[illegible]8,081 — | 35,930 டன் |
| பருத்தி | 1,020,667 — | 346,080 பேல் |

# கண்ணி



## வேதனையான கதை

"இப்படி மாறிவிடுவான் என்று நான் கனவிலேகூட நினைக்க வில்லை. எண்ணுகிறேன்; எண்ணும்போதே மனம் எரிமலையாகிறது"

"யாரிட்ட போதனையோ இப்படி மாறிவிட்டான். தங்கமான குணம் எப்படித்தான் மாறிவிட்டதோ தெரியவில்லை."

"போதனையிட்டார்கள் எவரோ என்று ஏன் பிறர் மீது பழி சுமத்துகிறாய். எடுப்பார் கைப்பிள்ளையா, இவன்; விவரம் தெரிந்தவன்; நாலு பேருக்கு அறிவு புகட்டக்கூடியவன்."

மகன், சிலகாலமாகத் தன்னிச்சையாக நடந்து வருகிறான்; ஏதேனும் சொன்னால் தட்டி நடக்கிறான்; கட்டிக்கரும்பென இனித்திடும் சொல்லினனாக இருந்தவன், இப்போது பேசுவது எட்டி போலிருக்கிறது என்று தாயும் தந்தையும், கவலைப்படுகிறார்கள்.

தாய் படும் கவலையில் வெறுப்பின் அளவு குறைவு, பாசத்தின் அளவு அதிகம்.

தந்தையின் கவலையிலே கோபம் அதிக அளவு; பாசம் அடியோடு போய்விடவில்லை; ஆனால் ஓரளவு மங்கி இருக்கிறது.

"இறக்கை வந்ததும், அதது அததன்போக்கிலே போக வேண்டியதுதானே. முன்புபோல இல்லையே என்று முணு முணுப்பது என்ன நியாயம். அவன் என்ன, இன்னமும் துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவமா! நாலுபேர் பார்த்து மெச்சத்தக்க நிலையில் இருக்கிறான். எது சரி, எது தவறு, என்று அறிந்து செயலாற்றும் பக்குவமா அவனுக்கு இல்லை. பெற்றோமே, என்றால்! பெற்றீர்கள்! அதனால்? முந்தானை முடிச்சிலேயா இத்தனை பெரிய பிள்ளையைக் கட்டிப்போட்டு வைத்திருக்க முடியும்? வீணான முயற்சி! அப்பா பார்த்துச் சொன்னால்தானா அவனுக்கு ஐந்தும் மூணும் எட்டு என்பது புரியும். விவரம் தெரிந்தவனாகிவிட்டான்! அதனால், பல காரியங்களைத் தானே செய்கிறான். தவறு என்ன? மாறிவிட்டானே, மாறிவிட்டானே என்று ஆயாசப்பட்டுக் கொள்கிறார்களே பெற்றோர். பொருளற்ற முறையில்!"

அந்தக் குடும்பத்துடன் நெடுங்காலத் தொடர்புகொண்டு, நலம் நாடித் தந்துவரும், உறவினர் பேசுகிறார், இது போல...என்னமோ, அவன் கெட்டுவிட்டான் என்று கவலைப்படுவதுபோன்ற முறையில், பெற்றோர், பேசக்கேட்டு.



> "இந்தியா முழுவதிலுமாகத் தொழிலபிவிருத்திக்குச் செலவிடப்பட்டுள்ள பணம் ஆள் ஒன்றுக்கு ரூ. 27 ஆகும். ஆனால், சென்னை மாநிலத்தில் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ 19 தான். தேசிய விகிதத்தைப்போல ஐந்தாறு மடங்கு பம்பாய், வங்கம் போன்ற வடநாட்டுப் பிரதேசங்களில் செலவிடப்பட்டிருக்கிறது."
>
> —முந்நாள் மத்திய நிதியமைச்சர் சி. டி. தேஷ்முக் 1956 ஜூலையில் உதகமண்டலத்தில் பேசியது.

"தெரியுமாய்யா, விஷயம்? என் மகன், கிழித்த கோட்டைத் தாண்டமாட்டான் என்று பெருமையடித்துக்கொள்வாரே **குத்தாலலிங்கம்**, இப்ப என்ன தெரியுமோ நடப்பது. மகன், ஏட்டிக்குப் போட்டி! ஆமாம், இவர் ஒரு பேச்சுப் பேசினு, ஒன்பது கொடுக்கருன். மனஷன் தவியாய்த் தவிக்கிருன். வேணும்யா! என் மகன், என் பேச்சை, வேதமா மதிப்பான்; மத்த மத்த வீட்டுப் பசங்கபோல அல்ல; குனிந்த தலை நிமிராதவன்; கட்டுக்கு அடங்கியவன்; என்னைக் கேட்காமல், எந்தக் காரியமும் செய்யமாட்டான் என்று பெருமை அடித்துக்கொண்டிருந்தாரல்லவா' இப்போ, படாத பாடு படுகிருன் மனஷன்!! எங்கே போயிட்டப்பா, இந்த நேரத்துக்கு வர்ரேன்னு கேட்டானும், குத்தாலம், பழைய நிலைன்னு நினைத்துகிட்டு. மகன், ஒரு முறைமுறைச்சி இருக்கிருன். நான் இப்ப ஒண்ணும் தப்பாப் பேசிவிடவில்லையேடாப்பா.. ......எங்கே போயிருந்தேன்னுதானே கேட்டேன்னு, குழையருன் மனஷன். மகன், 'போயிருந்தேன் உங்க பாட்டன் வீட்டுக்கு' என்று கூறிவிட்டு, சிகரட்டை எடுத்துப் பத்தவைத்திருக்கிருன், மனஷன் என்ன ஆவான். உள்ளே ஓடிப்போயி, கட்டில் மேலே படுத்துக்கிட்டு, தலைதலைன்னு அடிச்சிகிட்டிருக்கருன்."

இந்தக் குடும்பத்தோடு, தொடர்பு கொண்டவன்—ஆனல், நல்ல எண்ணத்துடன் அல்ல — பொருமையுடன் பழகி வந்த **முனியாண்டி** பேசினன் இதுபோல.

"கவலைப்படாதிங்க. எல்லாம் கிரஹத்தோட கோளாறு. சூரியன் சரியான இடத்திலே இல்லை அதனலேதான் பிள்ளையாண்டான், நெருப்பை அள்ளிக் கொட்டருன், பேச்சிலே. நம்ம மகனு இப்படி மாறிவிட்டான் என்று நீங்க கதறிண்டிருக்கேள்—அவனு மாறிவிட்டான்! கிரஹம், அவனை அப்படி மாற்றிவிட்டது."

இது நல்லதுக்கும் பொல்லதுக்கும் ஜோதிடம் பார்த்துச் சொல்லும் குடும்பப் புரோகிதர் **குருமூர்த்தி** தீட்சிதருடைய திருவாக்கு. எந்தக் காரியத்துக்கும், யாராவது ஒரு மனிதரைப் பொறுப்பாளியாக்கிவிட்டால், பல தொல்லை, பல சங்கடம், அதனலே, எதனையும், கிரஹங்களின் பேரிலே தூக்கிப் போட்டுவிட்டு, நிம்மதியாக இருப்பவர் நல்ல வருமானமும் கூடத்தான்!

"மாறிவிட்டான்! மாறிவிட்டான்! மகன் முன் போல இல்லை! சொன்ன பேச்சைக் கேட்பதில்லை என்று முணு முணுத்துக்கொண்டு கிடக்கிருராம். படட்டும் படட்டும்! படவேண்டும் என்றுதானே, நான் இப்படி இருந்து வருகிறேன். எதை எப்படிச் செய்தாலும், அவருக்குத் தெரியாதா, எல்லாம் சரியாகத்தான் செய்வார், எதற்கும் ஒரு பொருள் இருக்கும் என்றுதான், இவ்வளவு காலமாக நம்பிக் கிடந்தேன். கிழித்த கோட்டைத் தாண்டாதவன் என்று பெயரெடுத்தேன். என்ன கண்டேன், பலன்? ஊருக்கெல்லாம், நீதி போதிக்கும் இந்த மனிதர், செய்த அக்ரமத்தைக் கண்டு, நான் இரத்தக் கண்ணீரல்லவா வடித்தேன்.

பேராசை கூடாது என்பார் பெரிய வேதாந்தி போல! ஆனல் அந்தப் பேராசை காரணமாகத் தானே, பேய்ச் செயலில் ஈடுபட்டார். அவர் செய்யும் காரியம் யாவும், நல்லதாகத்தான் இருக்கும் என்று நம்பிக்கிடந்தேன். வயது இருபது ஆகிறது, என்ருலும், அப்பன், போடு தோப்புக் கரணம் என்ருல், எண்ணிக்கொள் என்று கூறுகிருன், ரோஷமற்று, இந்த **ரங்கன்**, என்று நண்பர்கள்கூடக் கேலி பேசுவார்கள். போங்கடா, வீட்டுக்கு அடங்காத வெட்டிப் பசங்களா! என்று நான் வேடிக்கையாகச் சொல்லிச் சிரிப்பேன். அப்படி நம்பிக்கிடந்தேன், நான். இவர் செய்த காரியம், சரியா? தர்மமா? நியாயமா? ஒரு வார்த்தை சொன்னரா, என்னிடம்? உனக்குச் சம்மதம்தானடா என்று கேட்டாரா? நானே, வலியச்சென்று அப்பா! வேண்டாம் இந்தக் காரியம்' என்று கெஞ்சினேன்—என்ன சொன்னர். நூறு ரூபாய் பணத்தைக் கொடுத்து. போ! இஷ்டப்பட்ட உடை வாங்கிக்கொள் என்ருர். விளையாட்டுப் பருவமா எனக்கு? விவரம் தெரியாதா? என் பேச்சிலே, அறிவு இருக்காதா, நியாயம் கிடைக்காதா? இதுவரையில் நமது செயலை ஏனென்று கேட்டதில்லை. என்ன காரணமோ, இதுமட்டும் பிடிக்கவில்லை. இந்த ஒரு முறை, இவன் விருப்பப்படி நடப்போம், என்று நினைத்தாரா? செய்திருந்தால், இவருடைய அந்தஸ்தா கெட்டுவிடும்? மகன், மனம் என்னபாடு படுகிறதோ என்றெண்ணிப்பாராமல், என்னை மரப்பொம்மை என்றெண்ணிப், பட்டுச் சட்டை தைத்துப் போட்டுக்கொள்ளச் சொன்னர், துணிந்து உனக்கு இதுதான்! உண்ணலாம், உருசியாக! உடுக்கலாம், அழகாக!! மற்ற விஷயத்தில், தலையிடாதே! என்றல்லவா பொருள் அதற்கு. அன்றுதான், நான் மாறினேன். மாறிவிட்டேன், மாறிவிட்டேன் என்கிருர்; மறுக்கவில்லை, மாறித்தான்விட்டேன்; ஆனல், என்னை மாற்றியது அவருடைய போக்கு, வேறு எதுவுமே இல்லை."

ரங்கன், கோபத்துடன் பேச்சைத் துவக்கிச், சோகத்துடன் கலந்துவிடுகிருன். கோபம், அவனை மாற்றிவிட்டது; கோபத்துக்குக் காரணம், தந்தையின் போக்கு; ரங்கன் மனதுக்கு, நியாயமல்ல என்று தோன்றிய காரியத்தை, அவன் தடுத்தும், குத்தாலலிங்கம் செய்ததுதான், அவனுடைய கோபத்துக்குக் காரணம். அந்தச் செயல், ரங்கனுடைய தங்கையின் திருமணம். **செல்லி**க்கு, வயது, அழகு, குணம், எனும் எதிலும் துளியும் பொருத்தமில்லாத **சோமசுந்தரம்**, கணவனுனர்—அவருக்கு ஆலையுடன் ஆறேழு இலட்சம் பெறுமானமுள்ள சொத்து இருந்த காரணத்தால்.

செல்லிக்குக் கணவன் அந்த முதியவனு!

அழகுச் சிலைக்கு மணாளன், அந்த ஆள் விழுங்கியா!

புத்தம் புது மலரைப் புதை சேற்றில் வீசுவதா!

அதை நினைக்கும்போதே, ரங்கன் மனம் கொதித்தது

அந்தக் கொதிப்பே, அவன் உள்ளத்தில், இருந்து வந்த கட்டுக்கு அடங்கிடும் தன்மை, தந்தையிடம் இருந்து வந்த பந்தம், பாசம் எனும் பொன்னை உருக்கித் தள்ளி விட்டது. கண்ணீராய் அவ்வளவும் வெளியே வந்ததனல், ரங்கன் மனதினிலே, பொன் இல்லை; மாறிவிட்டான்!!

ஒரு சம்பவம்—அவனை மாற்றிவிட்டது.

நாம் செய்த காரியமே, ரங்கனை மாற்றிவிட்டது என்று குத்தாலலிங்கம் ஒப்புக் கொண்டாரா? இல்லை!

ஏன்?

அவர், ரங்கன் மாறிவிட்டான்—யாரோ கெடுத்து விட்டார்கள்—ஐயர் சொல்கிறபடி, கிரஹத்தின் வேலையாகக்கூட இருக்கலாம் என்றெண்ணிக் கிடந்தாரேயன்றித், தன் செயலே, மாறுதலுக்குக் காரணம் என்று அறியவில்லை.

தந்தை அல்லவா! அதனல், தவறு, மகன்தானே செய்யமுடியும், என்று எண்ணினர்.

"யார்தானய்யா மாறவில்லை. எல்லோரும் அப்படித்தான். அவரவர்கள் மாறி இருப்பது அவரவர்க்குத் தெரிவதில்லை. மற்றவர் மாறினல்தான், கண்ணுக்குச் சட்டென்று படுகிறது."

ரங்கன், தனக்கு மெத்தவும் வேண்டிய உறவினரிடம் கூறுகிறன் இதுபோல. உண்மை அவன் பேச்சில் தொக்கி இருப்பதை, அவர் உணருகிறர்; உரைக்கவில்லை.

"அப்பா மட்டும் என்ன, மாருமலா இருக்கிறர். மாப்பிள்ளை வருகிறர் என்றல், குழைகிறர், குளறுகிறர். முன்பு அப்படியா, அவர் இருந்தார்' என்னைக் கண்டஉடன், ஏன் அவருக்கு, முகச் சுளிப்பு! எல்லாம் நானும் அறிவேன்."

என்று பேசுகிறன் ரங்கன்; கோபம் குறைந்து சோகம் மேலிட்ட நிலையில்.

"என்றைக்காவது ஒரு நாள், என் செயலுக்கான காரணத்தை, அவனே அறிந்துகொள்வான்; அன்று என்னையும் அவன் அறிந்துகொள்வான். சின்னஞ்சிறுவர்க்கும் மிக எளிதில் விளங்கிடும், பொதுவான நீதியுமா, நானறியாதிருந்திருப்பேன். என்னமோ என் செயலின்,காரணம்காணுமல், என்னை வெறுத்தான், இருக்கட்டும். மாறிவிட்டான் என்ருலும், மகன்தானே! அதிலென்ன மாற்றம்?"

என்று பேசுகிறர், குத்தாலலிங்கம்.

இத்தனை மாறுதல்களுக்கும் எந்தச் செல்லியின் திருமணம் காரணமாக அமைந்ததோ, அந்தச்செல்லி, மாருமலிருந்தாளா?

கூண்டு நோக்கிப் பூனை வருவது கண்டு, அலறிக் கூச்சலிட்ட கிளியானுள் — அதுநாள்வரையில் வட்டமிடும் வானம்பாடியாகத் திகழ்ந்த செல்லி.

கிளிபோல இருக்கிருள்—கிழவன் அதிர்ஷ்டக்காரன், என்றனர் பலரும்—சிறப்பாக, வாலிபர்கள்.

செல்லி, கிளியாக இருந்துவிடவில்லை. நெடு நாட்கள்.

புலியானுள்! ஆமாம்! நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. இனி? கண்ணீர் என்ன செய்யும்? பலியிட்டார்கள் என்னை நெஞ்சில் ஈரமின்றி. இனி, எவருக்கும் நான் எதற்கு, இனியவளாய் இருக்கவேண்டும்? நான், ஓர் சீமாட்டி! சீமாட்டியாக்கப்பட்டுவிட்டேன்! எனவே, சீறவேண்டும், ஏழை எளியோர், எடுபிடி, இவர்களிடம்! என் கணவர் என்ற பெயர் சுமக்க. இவர் கொடுத்தார், இந்தச் செல்வம். இதை என் விருப்பப்படி செலவிட, முழு உரிமை எனக்குண்டு! இந்த எண்ணம், அந்தக் கிளியைப் புலியாக்கிற்று' சீமானே, வேதாந்தியாகிக்கொண்டு வந்தார், வேக வேகமாக.

பொருத்தமற்ற மணம் நடைபெற்றதால், மனம் புண்ணுகிப் போயிருக்கும்; கண்ணுடிக் கன்னத்தில், குழிகள் விழுந்துவிடும்; கண்ணில் ஒளியே போய், நீர் நெருப்பு நிறைந்திருக்கும்; மேனி கருத்திருக்கும்; பெரு மூச்சு மிகுந்திருக்கும், என் செல்லிக்கு, என்று எண்ணினன், ஏக்கமுற்றன் ரங்கன்

செல்லியைக் காணச் சென்றன், சில மாதங்களுக்குப் பிறகுதான்.

ஒருகணம்தான், அவள் விழியில் கலக்கம்—உடனே அது மறைந்தது. கலகலவெனச் சிரிக்கிருள், கைதட்டி ஆட்களை அழைக்கிருள், எடு 'பாக்கார்டு' என்கிருள், ஏனண்ணு கடற்கரைக்கா? என்று கேட்கிருள்; இது ஜெய்பூர், இது தில்லி, இது காசி, இது ஜப்பான், என்று, அங்கு உள்ள பொருள்களின் பிறப்பிடம் கூறுகிருள்; பேசாமடந்தையோடி என்பார்கள் செல்லியை, முன்பு! இப்போது. பேசவிடமாட்டாளென்கிருள் மற்ற எவரையும். செல்லியின் இந்த மாறுதல், ரங்கனுக்குப் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது.

நெடுநாட்களுக்குப் பிறகுதான், தாய்க்குலம், தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தாங்கிக்கொள்வதிலே, தனித்திறமை கொண்டது என்பது அவனுக்குப் புரிந்தது.

> **"இந்தியாவின் தென்பகுதி தொழில்துறையில் மிகவும் பின்தங்கிக் கிடக்கிறது. எங்கள் உதவி பெறுவதில் அப்பகுதியே முதலிடம்பெறவேண்டும் சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை நிறுவக் கடனும் உதவியும் தருகிறோம்."**
>
> —இது ரஷ்யத் தலைவர்களான புல்கானினும், குருசேவும் 1955 இறுதியில் இந்தியா வந்து திரும்பியதும ரஷ்யாவிலிருந்து டில்லி சர்க்காருக்குத் தெரிவித்த உதவித் திட்டம். இச்செய்தி சென்னை ஆங்கில நாளிதழ் "மெயிலில்" 21—1—56ல் வெளியாகியுள்ளது.

நெடி வேறு, மணம் வேறு அல்லவா? மணம், மெள்ளக் கிளம்பும், வேகமின்றிப் பரவும். ஆனால், நீண்ட நேரம் நிலைத்திருக்கும், மனதுக்கு நிம்மதியைக் கொடுக்கும்; நெடி, சடுதியில் கிளம்பும், துளைக்கும், பரவும், மிக விரைவிலே மடிந்துபோகும்.

கோபம், நெடி போன்றது. கொப்பளிக்கும்! துளைக்கும்!! எனினும், மடிந்துபோகும்—விரைவிலா, நீண்ட காலத்துக்குப் பிறகா என்பது இயல்புக்குத் தக்கபடி.

மணம் போன்றது, பொறுத்துக் கொள்ளும் பண்பு; தாங்கிக்கொள்ளும் இயல்பு! எளிதில்கிடைக்காது, கிடைத்தால் சடுதியில் மடியாது. புலியாக இருந்த செல்லி கோப நெடியைக் கொட்டிவிட்டுப், பிறகு பொறுமையின் இருப்பிடமானாள்.

> "தென் நாட்டு மக்களின் விருப்பங்களையும், தேவைகளையும் வடக்கிருக்கும் சர்க்கார் அலட்சியப்படுத்துகிறது."
>
> —ஐ. இமாம் (மைசூர் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர்) 4—4—55ல் மைசூர் சட்ட மன்றத்தில்

"இப்படி, என் செல்லி மாறிவிடுவாள் என்று நான் எண்ணிடவே இல்லை. புரண்டு அழுதிடுவாள்! தூற்றுவாள் எம்மை எல்லாம்! என்று எண்ணி இருந்தேன். இன்றோ, இடர் ஏதும் காணாதாள்போல், இன்முகம் காட்டுகிறாள், என்னையும் தேற்றுகிறாள். எங்கிருந்து கிடைத்தது இந்த மாற்றம்? எப்படி, செல்லி மாறிவிட்டாள்?"

ரங்கன், இதுபோல எண்ணி எண்ணிப் பார்க்கிறான், புரியவில்லை.

"செல்லி! என்னமோம்மா, நீ மகிழ்ச்சியாக இருந்தால், அதுபோதும் எனக்கு. வீட்டைவிட்டுப் புறப்படும்போது, விம்மினாய். உன் வாழ்வு பாழாக்கப் படுகிறது, பாவி நான், அது தெரிந்தும், தடுக்கும் திறனற்றுக்கிடக்கின்றேனே என்றெண்ணித் துக்கப் பட்டேன். இன்று நீ இங்கு, எக்குறையுமின்றிச் சிரித்து மகிழ்ந்திருக்கும் நிலை காண்கிறேன்."

"அண்ணா! நான் மாறிவிட்டேன் என்கிறீர்கள். அதுதானே! அதுகண்டு, உனக்கு மகிழ்ச்சிதானே, அண்ணா!"

"மட்டற்ற மகிழ்ச்சி செல்லி!"

"மாறுதல் என்பது அண்ணா! தவிர்க்க முடியாதது; இயற்கை......"

"அடேயப்பா! பெரிய ஆராய்ச்சியாளர் போலப் பேசுகிறாயே......"

"என் பேச்சில் என்ன உண்டு. அதோ, அவரிடம் பேசிப் பாருங்கள் தெரியும்."

செல்லியின் கணவன், வந்துசேர்ந்தார். கோபமும் வெறுப்பும் மின்னல் வேகத்தில் வந்தது; ஆனால் சோமசுந்தரத்தின் சாந்தம் தவழும் முகத்தைக் கண்டதும், ரங்கனுடன் இருக்க மறுத்துவிட்டது, கோபம். வணக்கம் செய்தார், அவர்! பிறகே, ரங்கனுக்கு, வணக்கம்கூற மறந்தோமே என்ற நினைவு வந்தது

"நான் மாறிவிட்டேனாம்; அண்ணா சொல்கிறார்"

"அவரும்தான் மாறிவிட்டிருக்கிறார்"

"தம்பி! எல்லோரும்தான்! என் பேச்சிலே முன்பு இருந்த முடுக்கு இருக்காது; தேவையில்லை, வழக்கற்றுப் போய்விட்டது. முன்பு, பணம் சேர்க்கும் வெறி. ஆலையில் உள்ளவர்களைக் கசக்கிப் பிழிய வேண்டும்; அதை அவர்கள் தெரிந்துகொள்ளவும் கூடாது. உருட்டு விழியும் மிரட்டும் பேச்சும், தேவைப்பட்டது; ஒவ்வொரு நாளும். இப்போது அது தேவையில்லை; ஆலையைக் கூட்டுறவு அமைப்பு ஆக்கிவிட்டேன்; தொழிலாளர்களே கவனித்துக் கொள்கிறார்கள். ஆகையால், கோபப் பேச்சு, உருட்டல் மிரட்டல், என்னிடம் இல்லை."

"முகத்திலேகூட ஒரு புதிய பொலிவு......"

"ஆமாம், தம்பி! கனிவு கண்களில் என்றுகூடக் கூறுகிறார்கள் ஏன் செல்லி! நீகூடச் சொன்னாய், ஒருநாள்."

"ஒருநாள் மட்டுந்தானா சொன்னேன்......!"

"தம்பி! அழிப்பதையே வேலையாகக்கொண்டது புலி! கூர்ந்து பார்க்கவேண்டும், எங்கு இரை கிடைக்கும், எப்பக்கம் பாயவேண்டும் என்று. இரை கண்டதும் தாக்கவேண்டும்; தாக்குவதற்கு ஒரு வேகம் வேண்டும்; அந்த வேகம் பெறக் கோபம் வேண்டும்; அந்தக் கோபம், அதன் கண்களில் கொப்பளிக்கும், நெருப்பாக. முயலின் கண்களைப் பார்க்கிறாயல்லவா, தம்பி! ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்வதில்லை-எனவே, கண்களிலே கடுமை இருப்பதில்லை. ஒருவர்க்கும் ஒரு தீங்கும் நாம் செய்யாதிருப்பினும், நமக்குத் தீங்கிழைக்கப் பல உண்டு இங்கு என்ற எண்ணம், முயலுக்கு. அந்த எண்ணம், அதன் அழகிய கண்களில் ஒரு மிரட்சியைப் புகுத்துகிறது; அதிலே ஓர் தனி அழகு இருக்கிறது. நான் வேங்கைபோல இருந்தேன்; இப்போது முயல்!"

"சுவையாகப் பேசுகிறீர்கள்......"

"நிறையச் சிந்திக்கிறேன், தம்பி! ஒவ்வொன்றையும் ஆராய்கிறேன். நான் கொண்ட நினைப்புகள், செய்தவைகள், பெற்ற வெற்றிகள், அடைந்த ஏமாற்றங்கள், கிளம்பிய எதிர்ப்புகள், போரிட்ட முறைகள் இவைபற்றி எல்லாம், நினைத்து நினைத்துப் பார்ப்பேன். விளக்கம் கிடைக்கிறது, ஒவ்வொன்றுக்கும்."

"இலாப வேட்டையாடிக்கொண்டிருந்தவர், இப்படிப்பட்ட அறிவாளராக மாறிவிடுவார் என்று எவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்."

"தம்பி! மாறுதல் என்றால் என்ன பொருள்? என் நிலை, நினைப்பு, நடவடிக்கை முன்பு இருந்தது போல இல்லை என்பதுதானே. முன்பு இருந்ததுபோல இல்லை என்பது மட்டும் அல்ல; முன்பு இருந்தது போல இல்லை என்று உனக்குத் தோன்றுகிறது. அதுதான் முக்கியம், தம்பி! நான், மாறி இருக்கிறேன்......அதை அறிந்துகொள்ளத் தக்க பக்குவமான மாறுதல் உன்னிடமும் ஏற்பட்டிருக்கிறது. தம்பி! எவரும், எளிதாக அறிந்துகொள்ளத்தக்க மாறுதலும் உண்டு; கூர்ந்து பார்த்துமட்டுமே புரிந்து கொள்ளத்தக்க மாறுதலும் உண்டு. தோற்றத்திலே

உள்ள மாற்றம் எளிதில் அறியத்தக்கது. உள்ளத்திலே ஏற்பட்டிருப்பது, பக்குவமாக, அக்கரையுடன், தக்க முயற்சி எடுத்துக்கொண்டாலொழியத், தெரிந்துவிடாது. என் தோற்றத்தில், நீ, காணும் மாற்றம், நீ விரும்பத்தக்கதாக இருந்தால்தான், என் உள்ளத்திலேயும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்று அறிந்துகொள்ள முயற்சி எடுத்துக்கொள்வாய். அப்படியின்றிக், கொத்து மீசையும், கொவ்வைபோல் சிவந்த கண்களும்கொண்ட தோற்றத்துடன், நான் இருந்தால், அருவருப்புத்தானே ஏற்படும் உனக்கு. பிறகு, நீ, என்னை அணுகிப் பேசுவாயா? என் உள்ளத்திலே ஏற்பட்டுள்ள மாறுதலைத்தான் காண்பாயா! வெளித் தோற்றத்துக்கு ஏற்றபடியேதான், உள்ளத்தின் தன்மையும் இருக்கும் என்று கூறமுடியாது. ஆனால், வெளித் தோற்றம், உள்ளத்துடன் உறவாட வேண்டும் என்ற ஆவலைத் தரத்தக்க விதமாகவேனும் இருக்கவேண்டும். வீட்டுக்கு ஜன்னல்போல என்று வைத்துக்கொள்ளேன்.''

''அண்ணா! இவர் பேசத் தொடங்கிவிட்டால், முடிவே இருக்காது......''

''தம்பி! இப்படிச் செல்லி பேசுவதற்கு, இரண்டு, இல்லை, இல்லை, மூன்று காரணங்கள் இருக்கலாம். ஒன்று, என் உள்ளத்தைச் செல்லி அறிந்துகொண்டதாலே, மீண்டும் அதுபற்றிய பேச்சைக் கேட்க வேண்டியதில்லை என்று நினைக்கலாம். அல்லது என் உள்ளம் எப்படி இருந்தால் என்ன, என்ற அக்கரையற்ற தன்மை இருக்கலாம். அல்லது, உனக்கு அந்த அக்கரை இருக்கிறதா என்று பார்க்க இப்படிப் பேசி இருக்கலாம்.''

''செல்லி! நீ மாறிவிட்டதற்குக் காரணம் இப்போது புரிகிறது''

''என்ன? செல்லியை உட்காரவைத்துக்கொண்டு பாடம் போதித்து, மாற்றினேன் என்கிறாயா? தம்பி! அவளால் நான் மாறினேன்! நான் மாறினதால், அவள் மாறினாள்!! மாறுதல் இருக்கிறதே, தம்பி, மிக மிகச் சுவை தருவது; ஒன்று மற்றொன்று ஆகிறது; ஒன்றுடன் ஒன்று கலந்து புதிதொன்று ஆகிறது; ஒன்றே வளர்ந்து புதிய மாற்றம் கொள்கிறது. அதாவது, தம்பி! மாறுதல், வளர்ச்சியால் ஏற்படலாம்; கலப்பால் ஏற்படலாம், களைவதால் ஏற்படலாம். மாறுதல், உண்மையானதாகவும் இருக்கலாம், போலியாகவும் இருக்கலாம்.''

''அண்ணா! இவரிடம் பார்க்கும் மாறுதல்......?''

''மறந்துவிட்டேனே, மாறுதல், அதைக் காணுகின்றவர்களின் நோக்குக்கு ஏற்றபடிதான் தெரியும், புரியும். ஆலையிலே உள்ள பொறியில், ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் ஒலியைக் கொண்டே என்னால் கண்டுபிடித்துவிடமுடியும்; இந்த இடத்திலே உள்ள உருளை தேய்ந்திருக்கிறது என்று கூறிவிடுவேன்; பழக்கம் திறமையைக் கொடுத்தது; பயிற்சி பக்குவம் கொடுத்தது. செல்லிக்கு? மீட்டும்போதே, இன்ன நரம்புக்கு மேலும் முறுக்கு ஏற்ற வேண்டும் என்று தெரிகிறது.''

'மாறுதல், ஏற்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்வதைவிடக் கடினம் அல்லவா, தோன்றியுள்ள மாறுதல், உண்மையா, போலியா என்று அறிவது.''

''அதை ஏன் கேட்கிறாய், போ! மிகக் கடினம். எது உண்மை, எது போலி என்று கண்டறியும் திறமை மட்டும் செம்மையாகக் கிடைத்துவிட்டால், உலகிலே இன்று உள்ள சங்கடங்கள் சரிபாதி இருக்குமிடம் தெரியாமல் போயேவிடுமே. எண்ணெயில் கலப்படம் இருந்தால், கண்டறிய விஞ்ஞானம் கருவி கொடுத்திருக்கிறது; உண்மை எது பொய் எதுஎன்று கண்டறியும்கருவி, மெய்ஞ்ஞானம் என்கிறார்கள்; அந்தக் கருவியே, இன்னும் செம்மைப்படவில்லை!! ஆனால், தம்பி! நம்மால் இயலாது என்று மட்டும் இருந்துவிடக் கூடாது. நிரம்ப முயற்சி வேண்டும். மாறுதலிலே நிலையானதும் உண்டு, நிலையற்றதும் உண்டு. மேகக் கூட்டம், பார்த்துக்கொண்டிருக்கும்போதே, எத்தனை எத்தனையோ வடிவமாக மாறுகிறது. உருவ மாற்றம் ஒன்று; குண மாற்றம் மற்றொன்று. கபட சந்யாசி என்கிறார்கள் அல்லவா!!''

''உங்களைக்கூடத்தான் சிலர் அதுபோலச் சொல்கிறார்கள்.—''

''ஏன் சொல்லமாட்டார்கள். சந்தேகம்! காடேகிக் கடுந்தவம் புரிந்தவனெல்லாம் என்ன கதி ஆனான் என்று படித்திருக்கிறார்களே...அதனால் ஒரு பயம், சந்தேகம்......நேற்றுக்கூட, யாரோ ஒரு பேச்சாளர், ஆலைத் தொழிலாளிகளிடம் முழக்கமிட்டாராம் ''முதலாளி உருவத்தை மாற்றிக்கொண்டார், இப்போதுதான் உஷாராக இருக்கவேண்டும்,'' என்று. உருவத்திலே மாறுதல் ஏற்படுவதால், அல்லது ஏற்படுத்திக் கொள்வதால் குணத்திலே மாறுதல் ஏற்பட்டே தீரும் என்று கூறிவிடமுடியாது.''

## ஏன் வளைந்திருக்கிறது?

*

வேல் போன்ற விழியைக் காக்கத்தான் வில் போன்ற புருவமே ஒழிய, புருவத்தை அசைத்தோ நெரித்தோ எவரையும் வசப்படுத்த அல்ல. ஏனெனில் நெற்றியிலிருந்து விழும் வியர்வை நீர் கண்களின்மேல் விழாமல் பக்கங்களில் விழச் செய்வதற்குத்தான் வளைந்திருக்கின்றது.

"குணம் மாறினால்தானே பலன்; வெறும் உருவம் மாறினால் என்ன பலன்?"

"ஆமாம்! யோசித்துப் பார்த்தால், தம்பி' பயன் தரும் மாறுதல், பொருளற்ற மாறுதல், எனும் வகைகள்கூடக் காணலாம். மூன்று சக்கர வண்டி பார்க்கிறோம்; இரு உருளைகள்; நான்கு உருளைகள்; இந்த முறையிலே ஒரு மாற்றம் ஒன்று கூட்டினார்கள் என்றும் சொல்லலாம், ஒன்றைக்குறைத்தார்கள் என்றும் சொல்லலாம்; ஆனால் அது பயன் தரும் மாறுதலாகிறது. நாமும் எதாவது மாறுதல் செய்வோம் என்று எண்ணிக்கொண்டு, மோடாரில் உள்ள நாலு சக்கரங்களிலே ஒன்றை எடுத்துவிட்டால்? பயன் கெடும். பொருளற்ற மாறுதலை, நான் கூறப்போவதில்லை. நீ இங்கு இருக்கும் நாலு நாட்களில், செல்லியின் 'ஜடை'யை மட்டும் கவனித்துவந்தாலே போதும் — கஷ்டப்பட்டுப், பொருளற்ற மாறுதலைத் தேடிடும் போக்கு நன்ருகப் புரிந்துவிடும்."

"உங்களுக்குப் பிடிக்கவில்லை என்ருல் சொல்லி விடுங்கள்—ஏன் குத்திக்காட்டுகிறீர்கள்."

"செல்லியின் பேச்சு, மற்றொன்றைக் கவனப்படுத்துகிறது; நமக்காகச் செய்துகொள்ளும் மாறுதல், பிறருக்காகச் செய்துகொள்ளும் மாறுதல் என்று வகைபடுத்திக்கூடப் பார்க்கலாம். தவிர்க்க முடியாதது, தவிர்க்கக் கூடியது, எதிர்பார்த்தது, எதிர்பாராதது, என்றெல்லாம் வகைப்படுத்தலாம், மாறுதல் என்பதை. ஆலைக் கட்டிடத்திலே,இரண்டு நுழைவு வாயில்கள் உள்ளன; முன்பு ஒன்றுதான். ஏன் வீண் செலவு? தவிர்த்திருக்கலாமே என்று கணக்கு ஆய்வாளர் வாதாடினர். வண்டிகள் நிறைய வருவதால், இரண்டு வாயில்கள் இருக்கவேண்டி வருகிறது, அதனால் இவ்வளவு நேரம் மிச்சமாகிறது என்று எடுத்துக் காட்டினேன், ஒப்புக்கொண்டனர். நமது ஆலை வளர வளர, அதைச் சுற்றியுள்ள இடங்களின் அமைப்பு மாறும் என்பது எதிர்பார்த்தது; எதிர்பாராத மாறுதலும் உண்டு, இங்கேயே; ஆலையின் கழிவுப் பொருள் தேங்கித் தேங்கி, சுற்று வட்டாரத்துக் கிணற்று நீர் கெட்டுவிட்டது; இதை நாங்கள் எதிர்பார்க்கவில்லை; எதிர்பார்த்திருந்தால், கழிவுகள் கேடு செய்யா முறையைத் தேடி இருப்போம். அடுத்த ஆண்டு வந்தால், இன்று கழிவுப் பொருள் தேங்கும் இடம், அருமையான காய்கறித் தோட்டம் ஆகிவிடுவது காண்பாய்! கழிவு என்பதே பொருட்களின் மாற்றத்தால் ஏற்படுவது; இனிஅந்தக் கழிவும் வேறு பொருள்கள் கிடைக்க வழிசெய்யப் போகிறது."

"எது கிடைத்தாலும், அதிலே இலாபம்பெற முடிகிறது, இவரால்......பாரேன் அண்ணு! கேவலம் கழிவுப் பொருள்—அது காய்கறித் தோட்டத்துக்குப் பயன்படும் என்று கண்டுபிடித்து, இலாபம் பெறப் போகிருர்."

'சக்தி'க்குச் சக்தி!

ஒவ்வொரு ஆணின் உடலிலும் சுமார் 13 பவுண்டு கொழுப்பு இருக்கிறது. கன்னிப் பருவம் எய்தியிருக்கும் ஒரு நோயற்ற பெண்ணின் உடலிலோ சுமார் 35 பவுண்டு கொழுப்பு இருக்கிறது! 'சக்தி'க்குச் சக்தி அதிகம்!!

"செல்லி! ஒரு பொருளை, அதனால் கிடைக்கும் பயனுக்காக மட்டும் உபயோகப்படுத்தினால், போதுமா? இரும்பு, ஒரு பொருள்! ஆனால் வாள் வடிக்கிறோம், வேல் செய்கிறோம், பூட்டும் அதனால், சாவியும் அதுகொண்டு, பொறிகள் அதனால், உழவுக் கருவிகள் அதுகொண்டு......எத்தனை பொருளுக்கு, இரும்பு பயன்படுகிறது......"

"முதலாளிகளின் இதயம்கூட, இரும்புதானும்... சொல்கிருர்களே......"

"குறும்புக்காரி! இரும்பு இத்தனை கருவியாக மாறுகிறது; மாற்றப்படுகிறது; அந்த மாறுதலால் மனித இனம் எவ்வளவு பலன்பெறுகிறது.இரும்பைக் காய்ச்சி அடிக்கிருர்கள், பல பொருள்களாக வடிக்கிருர்கள். வெறும் இரும்பாக, அதன் வடிவத்தை மாற்ருமல் வைத்திருந்தால், என்ன பயன் பெற்றிருக்கமுடியும்? இந்த வேடிக்கையைப் பாரேன்; வெப்பம் பட்டால் பனி, நீராகிறது; பயன்தரும் பொருளாகிறது; ஆனால் அதே வெப்பம் மேலும் சற்று அதிகமானல்? நீர், ஆவியாகிப் போய்விடுகிறது."

"பயன் இல்லாமல் போய்விடுகிறது."

"அப்போதைக்குப் பயன் இல்லையே தவிர, ஆவி, பிறகு மேகமாகி, மழையாகி, பிறகு நீராக விழுகிறது."

"தம்பி, சொல்வதுதான், சரி, செல்லி! இயற்கை விசித்திரமான, மாறுதல்களைச் செய்திடும், மாயாவி. விஞ்ஞானி என்றும் சொல்லலாம். வெப்பம், பனியை நீராக்குகிறது. வெப்பத்தில் போட்டுவைத்தால், உள்ளே உள்ள சாறு இழந்துவிடுகிறது, பழம். கன்று காளையாதல், மொட்டு மலராதல், குழவி இளைஞனுதல், பச்சோலை பழுப்போலையாதல், செடி மரமாதல், காண்கிறோம். மரம், விறகு ஆக்கப்படுகிறது! பழுப்போலை, எரிபொருள் ஆக்கப்படுகிறது, இல்லையா? கரும்பு, சாருகி, பாகாகி, கட்டியாகி, பொடியாகி, மீண்டும் கரைந்து, பண்டத்துடன் குழைந்து பயன்படுகிறது. ஆற்று நீர் சேற்றில் கலந்தால் பருகுநீர் ஆகாது. பயன் குறைகிறது..."

"பாசனத்துக்குப் பயன்படும்......"

"தம்பி சொல்வது உண்மை. பருகத்தான் பயன்படாது. பாசனத்துக்கு நல்லதாகும். ஆனுல், ஆற்றுநீர், கடலில் கலந்தால் பருகு நீருமல்ல, பாசனத்துக்குமல்ல.........கூடா நட்பு, கேடாய் முடிந்தது. ஆற்ருேடு இருந்தபோது அந்தத் தண்ணீர், பருகப் பயன்பட்டது; கடலுடன் சேர்ந்தது; பயன் கெட்டே போய்விட்டது. மக்கள்கூடத்தான் அப்படி. பட்டணம்போனுன், மாறிவிட்டான்; பணம்சேர்ந்தது, மாறிவிட்டான்; படித்தான் அதற்கேற்ப மாறிவிட்டான்; பதவி பெற்ருன், அதனுல் மாறிவிட்டான்; அவனுடன் சேர்ந்தான், அதனுல் மாறிவிட்டான், என்று பேசுகிருர்கள் அல்லவா? சூதாடும்போது, சுபாவமே மாறிவிடக் காண்கிருேம். நாலு நாள் பட்டினி! துரும்பாக இளைத்துவிட்டான், ஆள் அடையாளமே தெரியவில்லை, அப்படி மாறிவிட்டான், என்கிருேம்."

"சில வேளைகளில், பொருள் மாறுவதில்லை, மனம்தான் மாறுகிறது,"

"ஆமாம், வாய்ப்புண் இருந்தால், பண்டம் பிடிப்பதில்லை; மாற்றம் பண்டத்தில் இல்லை. இவனிடம்!! தென்றல் சுடுவதும், நிலவு காய்வதும் உண்டோ? இல்லை! ஆனுல் விரகதாபம்கொண்டவர்களுக்கு, தென்றலும் நிலவும் மாறிவிட்டதாகத் தோன்றுகிறது; தென்றல் கொட்டுகிறது, நிலவு கொளுத்துகிறது என்கிருர்களாம். தம்பி! கல் சிலையாகிறது, சிற்பியால்! சிலை, தெய்வமாகிறது, பூஜாரியால்! பூஜாரி புரட்டனுகிருன், சிலையை மீண்டும் கல்லென்று கூறிவிடுகிருர்கள், கவனித்தனையா?"

"சிலை, தெய்வமாகிறது, பூஜாரியால் என்றீர்கள்; இவ்வளவு பேசியான பிறகு, இதையும் கேட்டு விடுகிறேன். செல்லிக்குத் தாங்கள் தெய்வமானது எப்படி? சிலை என்றுகூட அல்லவே, கல்லென்று அல்லவா, எண்ணிக் கலங்கினுள் செல்லி; கடுங் கோபம் கொண்டேன் நான்."

"தம்பி! கல்லைத் தொடும்போது, கடினமாக இராமல், கனியுமானுல், என்ன எண்ணமுடியும். அதுபோலத்தான், செல்லி, கல்லென்றுதான் என்னை எண்ணிக்கொண்டாள். அவள் எண்ணியதிலே தவறும் இல்லை. தன் வாழ்க்கை, அந்தக் கல்லிலே மோதிச் சுக்குநூருகப் போகிறது என்றுதான் எண்ணிக்கொண்டாள். ஆனுல், கல்லுருவம், கசிந்து கண்ணீர் மல்கி நின்றது. நான்தான்! கண்ணீர் பொழிந்து நின்ருள் செல்லி! என்னைக் கண்டதும் பயத்தால் அவள் உடல் நடுங்கிற்று. முகம் வெளுத்தது. நான், கசிந்துருகி நின்றேன். கல்லுருவமாகத்தான் இருந்தேன், ஆனுல், செல்லியின் நிலையால், எனக்கு ஏற்பட்ட மாறுதல், நானே எதிர் பாராதது; தொட்டுத் தாலி கட்டினவன், எதையும் செய்ய உரிமைபெற்றவன், என்றெண்ணி அவள் நடுக்குற்ருள். கல்லுருவம் கண்ணீர் சொரிந்திடக் கண்டாள், நடுக்கம் குறைந்தது, என்னைப் பூஜித்தாள். என்ன சொல்லித் தெரியுமா.........உம்! அப்பா! என்று அழைத்தாள்!! அதைவிடப் பூஜைக்கு உரிய புனிதமான சொல் வேறு உண்டா? பணத்திமிரால் பல மாதர்களை மஞ்சத்துக்கு இழுத்து வரலாம்; செல்லி போன்ற ஒரு பெண் மகளாக எனக்குக் கிடைப்பது என்ருல், சாதாரணமா, சாமான்யமா... அவள் என்னைப் பூஜித்தாள்—அவளே எனக்கு வரம் தந்தாள்—என் மகள் ஆனுள். திடுக்கிட்டுப்போய் விடாதே. அவள் வாழ்வு பாழாக்கப்படுகிறதல்லவா, என்று கேட்பாய். அவளுக்கு நான் தடை ஏதும் விதிக்கவில்லை, மனதுக்கு ஏற்ற மணுளனைக் கொள்ள உரிமை அளித்தேன். அவள் தியாகத் திரு உரு! இன்றுள்ள சமுகம், இதை ஒப்பாது; உங்களுக்கு உள்ள உயர் இடம் சரியும், ஊர்ப்பழி வந்து சேரும்; நான் உமது மகள்—கன்னிப் பெண்ணுகவே காலந் தள்ளுவேன் என்ருள். கன்னியாகத்தான் இருக்கிருள். அந்தப் பெரும் கொடுமையைச் செய்ததை எண்ணி எண்ணி உருகினேன்......என் மனம் தூய்மை பெற்றது—மகத்தான மாறுதல் ஏற்பட்டது—மனிதனுனேன், மகளைப் பெற்றேன்."

"ஐயா! நீங்கள், மனிதரல்ல, தெய்வம்......"

"தம்பி! நான் வெறும் கல்லுருவம்......செல்லி என்னை மாற்றிவிட்டாள்."

## கனவிலேகூட !

விழி இது காதலர்க்கு மொழி பேச மாத்திம் அமைந்தது அன்று. ஒரு சாதாரண மனிதனின் 5 இலட்சம் விதமான வண்ணங்களைப் பார்க்கக்கூடிய ஆற்றலுடையது.

இந்த விழிகள் சாதாரணமாக அசைவற்று இருப்பதே இல்லை—சதிராடிக்கொண்டே இருக்கின்றன. தூங்கும்போது தான் அவைகள் சலனமற்று இருக்கின்றன. ஆயினும் கனவுகள் காணும்போது விழிகள் ஆடிக்கொண்டேதான் இருக்கின்றனவாம்.

"செல்வி!.........வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லவில்லையே, இதுநாள்வரை..."

"இனியுங்கூடத்தான் அண்ணு! அவர் என் தந்தை. அவருக்கு மானக் குறைவு ஏற்படுத்தவா, நான் அவர் மகள் ஆனேன்......"

"செல்வி! இது தியாகத் திருத்தலம்...வழிபாட்டு இடம்......ஆனுல், செல்வி! அப்பா ஏன், இந்தக் காரியம் செய்யத் துணிந்தார்....."

"என்னைக்கேள், தம்பி! நான் கூறுகிறேன். பணத்தின் சக்திபற்றிப் பேச்சுப் பலமாக நடைபெற்றது, என் நண்பர்கள் மத்தியில். எப்படிப்பட்ட நல்ல தகப்பனும், இக்கட்டிலே சிக்கிக்கொண்டால் பணத்துக்காக, கிழவனே கொடியவனே, எவனுக்கேனும் தன் மகளைத் திருமணம் செய்துகொடுப்பான் என்று நான் பந்தயம் கட்டினேன் — ஒரு இலட்சம்! ஆமாம்! எங்கள் பொழுதுபோக்கு, இப்படித்தான். திட்டமிட்டு வேலை செய்தேன். ஆலைச் சரக்குகளை விற்கும் உரிமையைப் பெற்றுர், உன் அப்பா! என் ஏற்பாடு! அவருடைய சக்திக்கு மீறிய தொகைக்கு சரக்கு வாங்கிக் கிடங்கில் சேர்த்தார். என் தூண்டுதல்! மூன்று மாதம் பல்லைக் கடித்துக்சொண்டிருந்தால், இலாபம் மும்மடங்கு என்று ஆசை காட்டினேன்; நம்பினுர். மூன்றும் மாதம், மலையென என் ஆலையில் புதுச் சரக்குகள் — விலை மலிவு! உன் தந்தை பராரியாகிவிடவேண்டும். அதுமட்டுமல்ல, கடன் திருப்பித் தரமுடியாத நிலை! மருந்துக்கடை மாணிக்க பூபதியின் மகளை, உனக்கு மணமுடிக்க ஏற்பாடு நடந்தது. கவனமிருக்கிறதா? என் ஏற்பாடு! மாணிக்க பூபதியின் மருந்துக்கடையே என்னிடம் அடகுவைக்கப்பட்டிருந்தது. எனவே அவர் பெண் தர இசைந்தார். திருமணம், நடைபெற்றுல், உன் அப்பாவுக்கு, பணமுடை தீரும்; ஆபத்து விலகும்; ஆனுல், திருமணம் நடைபெற வேண்டுமானுல், உன் அப்பாவின் கடன் நிலை வெளியே வரக்கூடாது. அதாவது என் வாய் அடைக்கப்படவேண்டும். என் நிபந்தனை? செல்வி! எனக்கு! கண்ணீர் பொழிந்தார்! நான்,மனதைக் கல்லாக்கிக்கொண்டேன். ஒருஇலட்ச ரூபாய் பந்தயத் தொகை — அதுதான் என் மனக் கண்முன்! வேறு தர்மம், நியாயம், எதுவும் இல்லை. உன் தந்தை தத்தளித்தார்; செல்வியைத் தர இசைந்தார்......சரக்குகளைத் திரும்ப எடுத்துக்கொண்டேன். உன் திருமணத்துக்கு ஏற்பாடு செய்தேன். நீதான், மறுத்துவிட்டாய்......"

"ஐயா! உடனே ஓடிச்சென்று, என் அப்பாவிடம் மன்னிப்புக் கேட்டாகவேண்டும்... அவருக்கு நான் கொடுமை பல செய்துவிட்டேன்."

"அவரே வருவார், தம்பி! டெலிபோனில் செய்தி கூறலாம்."

"நான் அவரிடம் கோபித்துக்கொண்டதால், அவர் அலங்கோலமான நிலை பெற்றுர்."

"கவலைப்படாதே! செல்வி என் மகளாகிவிட்ட விஷயம் தெரிந்தால், அவரும் மீண்டும் பழைய நிலை பெறுவார்."

குத்தாலலிங்கம் வெளியூர் சென்றிருந்தார். நாலு நாட்களுக்குப் பிறகுதான் ஊர் வந்தார். நேரே வீட்டுக்குச் செல்லவில்லை. சோமசுந்தரத்தின் வீடுவந்தார். அவரை வரவேற்று, அமரச் சொல்லிவிட்டு, டெலிபோன் எடுத்து, சோமசுந்தரம், ரங்கனை அழைக்கலானுர்:

## தமிழ்த் தேனறு

(எடுப்பு)

தித்திக்கும் தீந்தமிழ்த் தேனறு—நம்
முத்தமிழ்க்கே ஈடேது நீகூறு.... (தித்திக்கும்)
எத்திக்கும் இளைஞர்தம் உள்ளம்—தனில்

(உடன் எடுப்பு)

இனிய அலை எழுப்பித் துள்ளும்.... (தித்திக்கும்)
சித்தத்தில் ஊறிய நம்மொழி—அதன்

(அடிகள்)

செம்மைக்கு எதிரேது நீ மொழி....
முத்தத்தின் இனிமைக்கும் மேலே—உயிர்
முழுதுமே இணைந்திடும்பண் பாலே (தித்திக்கும்)
ஒற்றுமைக்கு வித்திட்ட தமிழே—விடுதலை
உணர்வினுக்கே உரமிட்ட அமிழ்தாம்....
கற்றிட்ட விடுதலைக்கு முரசாய்—நம்
கண்ணுர்ந்த திராவிடத்தின் பரிசாய்த் (தித்திக்கும்)
இயலோடு இணைந்திட்ட இசையே—நம்
இதயத்தின் துயரினையே அசைத்தே
புடமான நாடகத்தை மீட்டி—போர்ப்
பரணியால் விடுதலையைக் கூட்டும் (தித்திக்கும்)

—[ரவி]—

மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியால் குத்தாலலிங்கம் சோமசுந்தரத்தை, சுட்டார்! ஒருமுறை அல்ல, பலமுறை:

"ஒழிந்து போ! என் குடும்பத்தைக் கெடுத்தவனே, ஒழிந்து போ! சதிசெய்து, என்னை நாசமாக்கின சண்டாளனே, ஒழிந்து போ! உன்னால், பெற்ற மகனுடைய அன்பை நான் இழந்தேன்......"

வெறி பிடித்தவர்போலக் கூவினார், குத்தாலலிங்கம்.

இரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்த நிலையிலும், சோமசுந்தரத்தின் முகத்திலே புன்னகை தவழ்ந்தது.

செல்லி ஓடோடி வந்தாள். சோமசுந்தரம் குற்றுயிராக வீழ்ந்து கிடக்கக் கண்டாள்.

அப்பா! என்று அலறி அவர்மீது விழுந்து அழுதாள்.

செல்லி!.........அழுகுரலில் அழைத்தார், குத்தாலலிங்கம்.

அப்பா! அப்பா! என்று சோமசுந்தரத்தின்மீது வீழ்ந்து செல்லி அழக்கண்டு, திகைத்தார், குத்தாலலிங்கம்.

செல்லி! உடனே, எழுதக் காகிதம்...குத்தாலம், பயப்படாதே, என் வேலை முடிந்துவிட்டது......நீ, மணி அடித்தாய், அவ்வளவு தான்......துப்பாக்கியைக் கொடு......என்று குற்றுயிராகக் கிடந்த சோமசுந்தரம் கூறினார்.

"மனம் உடைந்து தற்கொலை."

சோமசுந்தரம்.

என்று எழுதிக் கையெழுத்திட்டார்.

அப்பா! என்று துடித்து அழுதாள். சோமசுந்தரத்தின் உயிர் பிரிந்தது

மகளே! என்று, செல்லியின் காலடி வீழ்ந்தார், குத்தாலலிங்கம்.

நாட்கள் பல சென்றன; குத்தாலலிங்கத்துக்கு முழு உண்மை தெரிய. ஆனால் அவர் மனம் குழம்பிவிட்டது.

"நல்ல மனஷன்தானய்யா. ஆனா, பெரிய இடத்திலே பெண்ணைக் கொடுத்தான். பேராசை. அந்தக் கிழவன் தற்கொலை செய்துகொண்டான். இவனுக்குப் பைத்யம். எப்படி இருப்பான் தெரியுமா, இந்தக் குத்தாலம்! வாட்டசாட்டமான ஆள். இப்ப, பாவம், இப்படி மாறிவிட்டான்.

ஊரில், பலர் இதுபோலப் பேசிக்கொண்டனர்.

கன்னி செல்லி, விதவைக்கோலம் பெற்றாள். ✻





# பைங்கிளிக்குப் பாலூட்டும்

# செந்தாமரையாள்

செந்தாமரையன்ன முகமுடைய செல்வி, தன்னிடமுள்ள அஞ்சுகம்கொண்ட கோபத்தைப் போக்கவேண்டி, பசும்பாலை வட்டிலிலிட்டு, அதற்கு அளிக்கும் காட்சி—காண எங்ஙனம் இருக்கும்! எழில் மிகு காட்சியன்றோ அது. திறமைகொண்ட ஓவியர், அதனைத் தீட்டித் தருவரேல், கண்டு களிகொள்ளாதாரும் இருக்கமுடியுமா? ஆம்! ஆயினும், ஓவியமாக இருப்பின், காலத்தால் மங்கிக் கெட்டுவிடக்கூடும்; செந்தாமரையாகத்தான் முகத்தழகு தீட்டியிருப்பான் ஓவியன், ஆயினும், காலக்கரம் அந்தக்கோலத்தைக் கெடுத்து வெண்தாமரையாக்கிவிடக்கூடும்! ஒளி நிறம், மங்கி, அழகு குறைந்து தெரியக்கூடும்! ஓவியம், கண்ணைப் பறிக்கும், களிப்பினை அளிக்கும், ஆயினும் காலத்தின் தாக்குதலை எதிர்த்து நின்று, என்றும் இளமையுடன் இருந்திட இயலாதன்றோ!

ஆனால், அந்தக் காட்சி, கவிதை வடிவாக்கித் தரப்படின்? எழில் என்றென்றும் விளங்கும்! காலம், அதனைக் கலைத்துக் கெடுத்திடாது; காட்சியின் கவர்ச்சி துளியும் மங்காது.

வீரர்தம் வெற்றி, அதுகாண அவர் நடாத்திய போர், அப்போர் மூளக் காரணமாக அமைந்த பகை; இவைபற்றிய கவிதைகளையும், மன்னன் மாண்பு, மக்கள் இயல்பு, செல்வச் சிறப்பு எனும் நிலைபற்றிய கவிதைகளையும், அறநெறி கூறிடும் அரும் செய்யுட்களையும் மட்டுமல்ல, துவக்கத்தில் குறிப்பிட்டது போன்ற, என்றும் மகிழ்ச்சி தரத்தக்க காட்சிகளையும், கவிதை வடிவாக்கி வழங்கினர் தமிழ்ப் புலவோர், ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்பே!

மாடமாளிகைக்குள் சென்று மங்கை நல்லாளைக் கண்டு, அந்தச் செல்வக் குமரியை மகிழ்விக்கக் கொஞ்சுமொழி பேசவேண்டிய கிளி, கோபமுற்றிருக்கவும், அதற்காகக் கோபம் கொள்ளாமல், காரணம் கண்டறிந்து, அன்புடன், பால் தந்து, கிள்ளைக்குப் பரிவு காட்டும் பாங்கினையும், புலவர் கண்டன்றோ, கவிதையாக்கி அளித்திருக்க வேண்டும்.

அவர், அதுபோன்ற இடம் சென்று அல்ல, மாளிகைக்கு வெளியே இருக்கிறார், எனினும், அந்தக் காட்சியைக் காண்கிறார்!

தமிழகத்துக் கவிஞர்கள், தன்னிகரில்லாத் திறமை பெற்றவர்கள், எனவே, எதனையும் காணாமலே கூடக் கருத்தால் புனைந்து காட்டுவர், என்று சொல்லத் தோன்றும். ஆயின், அஃது, தமிழகப் புலவர்களின் பெருமைக்கும் திறமைக்கும் சான்று ஆகாது. எவரெவர்க்கோ உண்டு, காணாமலே காட்சிகளை யூகித்துக் காட்டும் திறன்.

அதிலும் புராணம் கூறிடும் புலவோர்களிடம் இந்தத் திறமை பொங்கி வழிந்தது.

இல்லது புனைதல், நல்லதோ கெட்டதோ — அஃது புராணப் புலவர்களிடம் நிரம்ப இருப்பதனால், அதே திறனைக் காட்டித், தரம் எப்படி என்று தமிழ்ப் புலவோர் கேட்டிடவில்லை.

கண்டதைக் கவிதையாக்கிக் காட்டுவது திறமைதான்—ஆயினும், காணாதாரும், கவிதையைக் காணும் போது, அக்காட்சியைக் காண்பார் போலாக வேண்டும், அஃதே கவிஞரின் சிறப்பினைக் காட்டும்.

இந்தச் சிறப்பு, நம் தமிழ்க் கவிஞர்களிடம் நிரம்ப! அதுமட்டுமல்ல.

கண்டு கவிபாடுவதும் உண்டு; முன்பு கண்டதை மனதிலே கொண்டு கவிபாடுவதுமுண்டு.

ஒன்றைக் காணும்போது, அதற்கு ஒப்புகூறத்தக்க வேறொன்று முன்பு கண்டறிந்ததால் நினைவிற்கு வருதல் உண்டு; அந்த இரண்டினையும் சுவையும் பயனும் மிகுந்திடும் முறையில் இணைத்து அளிக்கும் திறனே, போற்றத்தக்கது. இந்த அருந்திறனை,

சங்ககாலப் புலவர்கள், நிரம்பப் பெற்றிருந்தனர். அவர்தம் கண்கள், எதனையும் கூர்ந்து கவனிக்கும் என்பது மட்டுமல்ல, கண்டதனை நெஞ்சத்தில் பதிய வைத்துக்கொள்வர், தேவைப்படும்போது, எடுத்துத் தொடுத்துத் தருவர், கவிதையாக.

தமிழகம் எழில் குலுங்கும் பூங்காவாக விளங்கிய காலம். இயற்கை இன்முகம் காட்டி இருந்த நாட்கள். புலவர்கள், இயற்கையின் எழிலையும் வகைமையும் கண்டு கண்டு களிப்பர். காண்பனவெல்லாம், களிப் பூட்டுவதுடன், கருத்தளிக்கும். பெறவேண்டிய பேரறிவு அனைத்துக்கும், ஏடு தூக்கியா வாடிடவேண்டும்? என்னினும் திறமிகு ஆசானும் உண்டோ? என்று இயற்கை கேட்டது. ஓங்கி வளர்ந்த தருக்களும், அவற்றினிலே தங்கி இருந்த ப்றவைகளும், குன்றுகளும், ஆங்கு குதித்தோடிய அருவிகளும், அதன் சலசல ஒலியும், ஆங்கு நீர் பருகி, மகிழ்ச்சியை இசையாக்கித்தரும் புள்ளினமும் காண்பதிலே, சங்ககாலப் புலவர்களுக்கு, பெருவிருப்பம்; கண்ட காட்சிகளைக், காலத்தை வெல்லும் கவிதைகளாக்கித் தந்து சென்றனர்; அதனாலேயே இன்றும் அந்தக் காட்சிகளை, நாம் காணமுடிகிறது.

நேர்த்தியான நீரோடை! ஆங்கு உலவுகிறார் கவிஞர். நீரிக்குமிழி இளமை, நீர் மேல் எழுத்தாகும் வாழ்வு, என்று கூறிப், பயமுறுத்த அல்ல. எத்துணை அழகு, இந்த நீரோடை, என்று வியந்து பார்க்கிறார். கரையிலே மாமரம்! மாம்பிஞ்சொன்று கீழே வீழ்கிறது. மாமரம் நீரோடைக் கரையிலே இருப்பதால், கீழே விழும் மாம்பிஞ்சு, நீரில் வீழ்கிறது. அது விழும் இடத்தில், தாமரை! தாமரை மீதுதான், மாப்பிஞ்சு விழுகிறது! பக்கத்திலே ஆம்பல்! அந்த ஆம்பல் மலருகிறது!!

இதைக் காண்கிறார், புலவர். களிப்பு அவருக்கு! என்ன அழகான காட்சி என்று எண்ணுகிறார். நாம் காண்கிறோம், மகிழ்ச்சி பெறுகிறோம். இதனைக் காணாதார் பலர் உளரே; அவர்கள் எத்தகைய மகிழ்ச்சியை இழந்துவிடுகின்றனர் என்று நினைக்கிறார். எல்லோ

# விவசாயத் தொழிலாளர் அவலநிலை

நம் நாட்டின் மொத்த ஜனத்தொகையில் சுமார் ஐந்தில் ஒருபகுதியினர் அதாவது 7-கோடி 20-இலட்சம்பேர் நிலமில்லாத விவசாயத்தொழிலாளர்கள். மற்ற எந்தத் தொழிலிலும் இவ்வளவுபேர் ஈடுபட்டிருக்கவில்லை. ஆகையால் நம் நாடு நல்லமுறையில் சுபிட்சத்தை நோக்கி முன்னேற வேண்டுமானால் இந்தியாவிலேயே மிக மிகப் பெரிய தொழிலான விவசாயத்தில் ஈடுபட்டுள்ள இவர்கள் நிலை முதலில் மேம்பாடடைய வேண்டும். இதை நோக்கமாகக்கொண்டு, விவசாயத் தொழிலாளர் நிலையை ஆராய்ந்து ஆலோசனைகள் கூறுவதற்காக அரசாங்கம் சில ஆண்டுகளுக்கு முன்பு குழு ஒன்றை அமைத்தது. நீண்டகால ஆராய்ச்சிக்குப்பின் அக்குழு வெளியிட்டுள்ள அறிக்கை சில நாட்களுக்கு முன் வெளியாகியுள்ளது.

அந்த அறிக்கைமீது ஒரு கண்ணோட்டம் விடுவோமேயானால் அது திடுக்கிடவைபபதாக இருக்கும். 1950ல் விவசாயத் தொழிலாளர்களின் சராசரி குடும்ப வருமானம் வருடம் ஒன்றுக்கு 447 ரூபாயாக இருந்தது. ஆனால் 1956ல் இது 437 ரூபாயாகக் குறைந்துவிட்டது. 1950ல் தனிப்பட்ட ஒரு விவசாயத் தொழிலாளியின் சராசரி சம்பாத்தியம் வருடம் ஒனறுக்கு 104 ரூபாயாக இருந்தது. 1956ல் இது 99·4 ரூபாயாகக் குறைந்துவிட்டது. 1950ல் விவசாயத்தை நம்பி வாழும் விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் நம் கிராம ஜனத்தொகையில் 45%தான் இருந்தது. 1956ல் இது 64% ஆக உயர்ந்துவிட்டது. 1950ல் விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் பட்டிருந்த மொத்தக் கடன் 80 கோடி ரூபாய். 1956ல் 143 கோடி ரூபாய். விவசாயத தொழிலாளரின் வருட வருமானம் அவர்கள் வருடாந்திர உணவுச் செலவுக்கே போதியதாக இல்லை. ஆகையால் இக்கடன் பெரும்பாலும் தங்கள் உணவுச் செலவுக்காக அவர்கள் வாங்கியவையேயாகும்.

நிலச் சீர்திருத்தச் சட்டங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், கிராமநலத் திட்டங்கள், மாதர்நலத் திட்டங்கள், கூட்டுறவு இலாகா அரிஜன அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவற்றில் உள்ள குறைபாடுகளை அகற்றி கிராம மக்களின் மேம்பாட்டுக்குச் சிறப்பான முறையில் உதவும் வகையில் அவற்றைத் திருத்தி அமைக்கவேண்டும். இப்பொழுது இவற்றின் செயல் முறையில் காணப்படும் பல குறைபாடுகளின் காரணமாகவே கோடி கோடியாக அரசாங்கம் செலவழித்தும் விவசாயத் தொழிலாளர் நிலை மேம்பாடு அடையாததோடு நில்லாது கீழ்நோக்கிச் சரியவும் செய்திருக்கிறது. பொதுவாக கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் மேம்பாடடைய பொருளாதர முன்னேற்றம் மிக அவசியம். ஆகையால் நம் கிராமங்கள் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் உண்மையில் முனனேறவேண்டுமானால் அதற்கு முதற்காரியமாக விவசாயத் தொழிலாளர்களின பொருளாதார நிலை மேம்பாடாக வேண்டும்.

ரையும் கூவி அழைத்து, தாம் கண்ட காட்சியைக் காட்டவேண்டும்போல் தோன்றுகிறது. நீரோடை! அதிலே தாமரை! செந்நிறத்தாமரை மீது பச்சை நிறமான மாம்பிஞ்சு! அதற்குப் பக்கத்தில், ஆம்பல் பூத்திருக்கிறது, பால்போன்ற நிறத்துடன். இந்தக் காட்சியை நமக்கெல்லாம் காட்டவேண்டும் என்ற பரிவு, பாவாகச் சுரக்கிறது.

புதுநீர புதுவொற்றப் புணர்திரைப் பிதிர்மல்க
மதிநோக்கி அலர்வித்த ஆம்பல் வான்மலர் நண்ணிக்
கடிகயத் தாமரைக் கமழ்முகை கரைமாவின்
வடிதீண்ட வாய்விடு உம்!

புலவர், நம் கண்முன் புது நீரோடை, கரையிலுள்ள மாமரம் தாமரை, ஆம்பல், எல்லாவற்றையும் காட்டிவிடுகிறார்.

மாம்பிஞ்சு விழுகிறது, தாமரைமீது; ஆம்பல் மலருகிறது! இது தெரிகிறது.

நாம் கண்ட காட்சியை மற்றவர்களும் காணும்படி, கவிதையாக்கித் தந்துவிட்டோம் என்று திருப்தி ஏற்பட்டதா புலவருக்கு? அதுதான் இல்லை! காட்சி தெரியும், கவிதை வடிவில்! காண அழகாகவும் இருக்கும், ஏனெனில் கண்டதைக் காணத்தக்க விதமாகத் தந்துள்ளோம். ஆனால், இந்தக் காட்சியைக் கண்டதும், நமக்கு, வேறோர் காட்சியுமன்றோ தோன்றுகிறது; தோன்றுவதுடன் அதுபோலல்லவா இது இருக்கிறது என்று எண்ணுகிறோமே! அதனையுமன்றோ, மற்றவர்க்கும் வழங்குதல்வேண்டும்; சுவையும் பயனும் அப்போதுதானே கிடைக்கும், என்று எண்ணுகிறார். கவிதை பிறக்கிறது.

நீரோடை! கரையில் மாமரம்! மாம்பிஞ்சு விழுகிறது! செந்தாமரை அதனைத் தாங்கிக்கொள்கிறது! ஆம்பல் பக்கத்தில் பூத்திருக்கிறது! இது காட்சி! என்னென்ன வண்ணங்கள்!

பச்சை — வெண்ணிறம் கலந்த சிகப்பு — பால் வெண்மை!! இத்தனையும்!

இவை அமைந்திருக்கும் விதம், கவனிக்க வேண்டாமா?

செந்நிறத் தாமரைமீது பச்சைநிற மாம்பிஞ்சு, அதற்குப் பக்கத்தில் பால்நிற ஆம்பல்!!

அழகாக இருக்கிறதல்லவா? ஆமாம்! எது போல இருக்கிறது? புலவர் எண்ணுகிறார்; எண்ணியதும், அவருக்கு வேறோர் காட்சி தெரிகிறது.

செந்தாமரை முகமுடைய செல்வி, கோடம் கொண்ட கிளி! அதற்கு ஊட்டக் குவளையில் பால் ஊற்றித் தருவது!! இந்தக் காட்சி தெரிகிறது'

அதுதானே இது! இதேதான் அது!! புலவர் பூரிப்படைகிறார்.

இணைபட நிவந்த நீலமென் சேக்கையுள்
துணை புணர் அன்னத்தின் தூவி மெல்லணை அசை இச்
சேடியல் வள்ளத்துப் பெய்தபால் சிலகாட்டி
ஊடு மென் சிறுகிளி உணர்ப்பவள் முகம்போல!

என்று கூறுகிறார்; கூறிவிட்டு, அந்த முகம்போல, இந்தத் தாமரை, அந்தக் கிளிபோல, இந்த மாம்பிஞ்சு, அந்தப் பால் வட்டில்போல, இந்த ஆம்பல் என்று கூறுகிறார். காட்சியின் அழகும் அருமையும் அப்போது எவருக்கும் முழுவதும் விளங்குகிறது

இரண்டு காட்சிகளையும் காணச்செய்கிறார்! ஆனால், ஒரே ஒரு கணம்தான், மறுகணமோ, இரு காட்சிகளும் இழைந்து, ஒரே காட்சியாகிவிடுகிறது.

நாம், கவிதையைப் படிக்கும்போது, நாம் நேரடியாகக் காணாத அந்த அரிய காட்சியைக் காண முடிகிறது. கவித்திறன் மட்டுமல்ல, தமிழகத்தின் எழில் தெரிகிறது. எழில் மட்டுமல்ல, எழில் கண்டு மகிழ்ந்திடும் பண்பு பெற்ற இனம், தமிழினம் என்ற வரலாறு தெரிகிறது.

புன்னகையும் பிறக்கிறது, பெருமூச்சும் கிளம்புகிறது.

அத்தகு புலவோரின் திரு இடம், தமிழகம். அன்றோர் நாள்!! இப்போது?

இன்பத்தைத் துய்த்திடும் இந்தச் சமயம், வேண்டாம், இன்றைய தமிழரின் நிலை பற்றிய நினைப்பு.

நீரோடை காண்போம்! அதோ மாம்பிஞ்சு விழுகிறது, செந்தாமரை மீது! ஆம்பல் பூத்திடக் காண்கிறோம்!

பூால் பருகு பைங்கிளியே! கோபமேன், அஞ்சுகமே! என்று கேட்கிறாள், செந்தாமரை!! அதைக்கண்டு, இன்புற்றிருப்போம்—மற்றதை இவ்வேளை மறந்து.

❋ ❋ ❋






சேவாபுரம்,
20-10-'60.

அன்புள்ள கமலி,

ஆபீசிலிருந்தபடி சினிமாவுக்குப் போய் வருவதாக 'அவர்' சொல்லியனுப்பியிருந்தார். மகனுக்குக் காய்ச்சல் என்று வேலைக்காரியும் வீட்டுக்குப் போய் விட்டாள். விளக்கைப் போட்டுவிட்டு, பொழுது போகாததால், சன்னல் ஓரம் வந்து நின்றேன். உனக்குத்தான் தெரியுமே, எதிர் வீட்டிலிருப்பவள் எப்படிப் பட்டவள் என்று!! ஏண்டி, இந்த ஆண்டவன் கற்பை விற்று வாழும் பெண்களைப் படைத்தான்? ஆண்டவனே, துணிந்து வழிகாட்டியதால்தான் அபாக்கியவதிகள் பெருத்தார்கள் என்று, சீரங்கம் மட்டைமடித் திருவிழாவையும் புன்னைபரக் கண்ணனையும் உதாரணம் காட்ட ஆரம்பித்து விடுவாய் நீ. உண்மையில், கமலி, இந்தப் பெண் ஜென்மமே புண்ஜென்மம்தான். எதிர்வீட்டுக்கு 'அவள்' — குடிவந்தது முதல், இரவு நேரத்தில், நான் வெளியில் வரவேமாட்டேன். "நாம் சரியாகயிருக்கும் வரையில் நமக்கென்ன பயமடி பத்மா?" என்று, என் கணவர்கூடச் சொல்வார்.

அவர்கள் ஆண்பிள்ளைகள்! எதையும் தைரியமாகச் செய்யலாம்; சொல்லலாம். நம்முடைய நிலை அப்படியா? நல்ல பெண்மணி, ஒரு தடவை புத்தி பேதலித்துவிட்டால், பிறகு எவ்வளவு பரிகாரம் செய்தாலும் அந்தக் கறையைப் போக்கிக்கொள்ள முடியாதே! நான் புத்தி பேதலிக்கவுமில்லை; என் உள்ளத்தில் அப்படியொரு 'தப்பு' எண்ணமும் உண்டாகவில்லை; ஆனாலும், வம்பில் மாட்டிக்கொண்டு விழிக்கிறேன்!

ஆமாண்டீ; தப்பித் தவறி, இந்தச் சேதி, என் கணவர் காதுக்கு எட்டிவிட்டால், ஆறோ குளமோ தேடி நான் சாவதைப் பற்றிக்கூடப் பயப்படவில்லை; ஆனால், என்மீது உயிரையே வைத்திருக்கும், அவர் மனம் என்ன பாடுபடும் என்பதை எண்ணும்போது தான் என்னால் தாங்கமுடியவில்லை.

வழக்கம்போல், எதிர்வீட்டுக்காரி, :'வாலிபால்' அளவுக்குத் தலையில் பூ, காலணா அளவுக்கு நெற்றியில் குங்குமம், பளிச்செனத் தெரியும்படி முகத்தில் பவுடர் போட்டுக்கொண்டு, வாசலில் நின்றுகொண்டிருந்தாள். 'முந்தானை'......'கண்'......'கை' முதலிய சாடைகளைக் கண்டு, அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு வீதியில்போன ஒரு வாலிபன் அவள் வீட்டுக்குள் நுழைந்தான்.


சீ! எவ்வளவு ருசியாக வீட்டில் செய்து போட்டாலும், வேகாத பலகாரத்தைத் தேடி ஓட்டலுக்கு ஓடும இந்த ஆண்களைப்பற்றி என்னடி சொல்வது!! இந்தக் கன்றாவியைப் பார்க்கவா கதவைத் திறந்தோம் என்று, சன்னலைச் சாத்திவிட்டுத் திரும்பினேன். சாத்தும்போது, காற்றில் பறந்துகொண்டிருந்த சேலையின் முந்தானை, கதவு இடுக்கில் சிக்கிக்கொண்டுவிட்டது. வீட்டில்தான் யாருமில்லையே என்ற எண்ணத்தில் சிக்கிய முந்தானையை இழுக்க, சன்னலைத் திறந்தேன். என்னையுமறியாமல் என சேலை, நழுவிச் சரிந்தது. யாரோ ஒரு வயதானவன், எதிரேயிருந்த விளக்குக் கம்பத்தினடியில், எதிர்வீட்டின்மீது வைத்த கண்ணைக் கதவுச் சப்தம் கேட்டு என் பக்கம் திருப்பினான். 'எக்கச்சக்கமான' என்னுடைய தோற்றத்தை எங்கே அவன் பார்த்துவிட்டானோ, செச்சே, ஒருநாளுமில்லாமல் இன்று ஏன் இங்கே வந்து நின்றோம். என்கிற எண்ணத்தால் பயத்தோடும் அவசரத்தோடும் சேலையைச் சரி செய்துகொண்டேன்.

பனிக்காலத்தில், பாழும் கதவுகளுக்கும் உயிர் வந்துவிடும் போலிருக்கிறது! உடனே மூடமுடியவில்லை. கொஞ்சம் இழுத்துத்தான், சன்னல் கொக்கியை மாட்டவேண்டியிருந்தது. அதற்காக மீண்டும் ஒருதரம் சன்னலைத் திறந்தேன. இளித்துக்கொண்டு, என வீட்டுச் சன்னலைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தான் அவன். பகீரென்றது, எனக்கு! வேகமாகச் சன்னலை இழுத்து மூடி, கொக்கியைப் போட்டுவிட்டு, கூடத்துக்கு வந்தேன. அங்கே கண்ட காட்சி, என்னை அப்படியே திடுக்கிட வைத்துவிட்டது. வேலைக்காரி, கதவைச் சாதாரணமாகச் சாத்திவிட்டுப் போயிருந்ததை, நானும் கவனிக்கவில்லை. கதவு திறந்திருந்திருக்கிறது போலிருக்கிறது. கூடத்தி

லுள்ள சோபாவில், விளக்குக் கம்பத்தினடியில் நான் கண்ட ஆள் வந்து 'ஜம்'மென்று உட்கார்ந்திருந்தான். எப்படியிருந்திருக்கும் எனக்கு, என்பதை, நீயே நினைத்துப்பார்.

நேரமோ, இரவு. வீட்டிலோ யாருமில்லை. நானிருப்பதோ, அறைக்குள். அவனிருப்பதோ, கூடத்தில். தற்செயலாக மாட்டிக்கொண்ட முந்தானையை இழுக்க அதை 'சாடை' என்று எண்ணிக்கொண்டான் போலிருக்கிறது கிழவன்! நாற்பது ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். நரைத்த தலை. வழுக்கையும்கூட. நல்ல நிலைமையிலிருப்பவன் என்பதை தோற்றம் காட்டியது. நான் என்ன செய்யமுடியும்? நாடகத்தில் வரும் கண்ணகியா, கனல் கக்கும் வசனத்தைப் பொழிந்து, அவனைவிரட்ட! கதிகலங்கித், திகைத்துப் போய் நின்றதைக்கண்ட அவன், "ஏன் நிக்கிறே? இப்படி வா!" என்று அருகேயிருந்த சோபாவில் உட்காரச் சொல்லி என்னை அழைத்தான். என் வீட்டுச் சோபாவில்! இரவு நேரத்தில்! யாரோ ஒரு பயல். என்னை கூப்பிட்டு உட்காரச் சொல்கிறான்!! முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு, "ஐயா! தவறாக வந்துவிட்டீர்கள் போலிருக்கிறது. இது, குடும்பப் பெண் வாழுகின்ற இடம். போங்கள், வெளியே!" என்று சொல்லவேண்டும் என்று எண்ணினேன். ஆனால், "என் கணவர் வந்துவிடுவார்!" என்பதை மட்டுமே, அதுவும் அரைகுறையாகச் சொல்ல முடிந்தது.

என் குழம்பிய நிலையை அவன் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. அவன் என்னைப்பார்த்து என்ன பேசினான் என்பதை உன்னிடம் சொல்லாமல் யாரிடம் கமலி, சொல்வேன்? வந்தால் வரட்டும், அஞ்சோ, பத்தோ எடுத்து நீட்டி, காப்பி சாப்பிட்டுவா என்றால் போய்விட்டுப்போகிறான், நீவா" என்றான். அஞ்சோ, பத்தோ எடுத்து நீட்டினால் என் கணவன் பேசாமல் போய்விடுவாராம்! இதைச் சொன்ன அவன் நாக்கைப்பிடுங்கி எறிய நான் ஒரு 'காளி'யாக இல்லையே என்று துடித்தேன். கொஞ்ச நஞ்சமிருந்த தைரியமும் எனக்குப் போய்விட்டது. அப்போதுதான், மணி எட்டரை ஆகிவிட்டது, இன்னும் அரைமணி நேரத்தில் உன் கணவர் வந்துவிடுவார், அவர் வரும் சமயத்தில் இங்கே இவனைக் கண்டால்? — என்று கேட்பதுபோல் கடிகாரம், மணி அடித்து நிறுத்தியது. பயங்கரமான புலி எதிரே உட்கார்ந்திருப்பதுபோலவும், இன்னும் கொஞ்ச நேரத்தில் அதன் வாயில் விழுவதைத் தவிர வேறு வழியில்லையென்பதுபோலவும் பயம் பரவியது. எனக்கு. என்ன செய்வேன், நான்! எங்காவது ஓடிப்போய், ஒளிந்துகொள்ளலாம் — சமையல் அறையிலோ, அல்லது இருக்கும் அறையின் கதவுகளையோ மூடிக்கொண்டு நான், இருக்கலாம். கணவர்வரும்வரையில், எனக்காக, இந்தக் காதகன் காத்திருந்தால்! ஒருவேளை, அவரிடமே இணங்காத என்னைப்பற்றி, ஏதையாவது சொல்லிவைத்தால்!! எதையடி, கமலி, நான் நினைப்பது? ஒன்றும் புரியாமல், நின்ற என் உதடுகள், என்னையறியாமலே, "ஐயா! நான் ஒரு குடும்பப்பெண்" என்கிற வார்த்தைகளை உச்சரித்தன. இதைக்கேட்டதும் அந்தப்பாவி என்ன சொன்னான் தெரியுமோ? இந்தத் தொழிலிலே மாமூலா இதைச் சொல்றதுதான் வழக்கம். உன்னைப்பார்த்தா இளவெட்டாயிருக்கு. நீ கேட்கிறதுக்குமேலே பத்தோ இருபதோ தர நான் தயார். அதானே, நீ கேட்கவந்தது?" என்றான்.



புரியாத மொழி! இதுவரையில் நான் கேட்டிராத பேச்சு! சொன்னதோடு இல்லாமல், "எங்கே, உன்னைப் பார்க்கலாம்!" என்று ஏதோ ஆடுமாடு வாங்குபவனைப்போல் என்னருகே, நெருங்கலானான். அவன் என்னைப்பார்த்த பார்வையில், அப்படியே பூமிபிளந்து உள்ளே போய்விடக்கூடாதா, என்றிருந்தது. எனக்கு என்ன செய்வது, இனி எப்படித் தப்புவது என்று புரியவில்லை.

ஏதாவது சொல்லி, அவன் வாயில் விழாமல் இன்று தப்பிவிட்டால் போதும் என்றிருந்தது. என்ன சொன்னால் போவான், என்று யோசித்தேன். என் வாயால் அதைச் சொல்லவே, நா கூசியது. இருந்தாலும், ஆபத்துக்குத் தோஷமில்லையல்லவா? அதனால், "நாளைக்கு வாருங்கள்" என்று மென்று விழுங்கிக்கொண்டே, சொன்னேன். இதைச்சொல்லும்போதே என் உயிர் போய்விடும்போலிருந்தது. "நிச்சயமா நாளைக்கு வரலாமா?" என்று குழைந்தான் அவன். உடனே, திக்கென்றது, எனக்கு. நாளைக்கு, நான் சொன்னேன் என்று வந்து, அந்தச்சமயம் என் கணவரும் இருந்து, அவருக்கு இவன் அஞ்சோ பத்தோ தந்து ஓட்டலுக்குப் போய்வா, என்றால்...!! அப்போதுதான், எனக்கு உன் கவனம் வந்தது.

உன் வீட்டு விலாசத்தைச்சொல்லி அவனை, நாளை மாலை, அங்கே வரச்சொல்லியிருக்கிறேன்! அடிப்பாவி, நீ வம்பிலிருந்து தப்ப, என்னை மாட்டிவிட்டாயே என்று நீ கோபிப்பாய். இந்த நிலைமையில்; வேறு எனக்கு எந்த யோசனையும் தோன்றவில்லை. என்னை மன்னித்துவிடு. கடிதத்தை, உடனே அடுப்பில் போடு. இந்த இரகசியம் வெளியில் தெரியாமல் என்னைக் காப்பாற்று.

உன்,

**பத்மா.**

உன் பெயரென்ன என்று என்னை அந்தப்பாவி கேட்டதற்கும், 'கமலி' என்று உன் பெயரையே சொல்லியிருக்கிறேன்.

*

புலியூர்புரம்,
22-10-60.

மதிப்பிற்குரிய மங்களத்துக்கு,

நம்முடைய சிநேகிதி பத்மாவால், இருதலைக்

கொள்ளி எறும்புபோல், விழிக்கிறேன் நான். நேற்று மணி 3க்கு, அவள் எழுதிய கடிதத்தை வேலைக்காரி கொண்டுவந்து கொடுத்தாள். வாங்கிப் படித்ததும், எனக்கு, தலை சுற்றுவது போலிருந்தது. அவள் தப்பிக்க, என் பெயரைச் சொல்லிவிட்டாள். நான் யார் பெயரைச் சொல்லமுடியும்? எப்படி அவள் தன் கணவனுக்காகப் பயப்பட்டாளோ, அதுபோல என் கணவருக்கு நான் பயப்படாமல் இருக்கமுடியுமா? நான் என்ன செய்வேன்! உனக்கு, என்ன நடந்தது பத்மாவுக்கு என்கிற விபரம் தெரியாதே என்றுதான், இத்துடன் அவளது கடிதத்தையும் வைத்திருக்கிறேன். இந்தக் கடிதத்தையும், அந்தக் கடிதத்தையும், என்னைப்போல் நீயும் யாருக்காவது வைத்து அனுப்பாமல், தவருமல், அடுப்பில் போட்டுவிட வேண்டும். நம்முடைய மாதர் சங்கத்தின் தலைவியான நீ பொறுப்பையுணர்ந்தவள் என்பதால், நேற்று மாலை என்ன நடந்தது என்கிற விபரத்தை எழுதுகிறேன்.

சரியாக மணி ஆறடிக்கு முன்பே, வேலைக்காரியையும் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, நாமும் எங்காவது போய்விட்டால் என்ன என்று நினைத்தேன். ஒரு வேளை அவன் வந்து பார்த்து, கதவு பூட்டியிருப்பதைக் கண்டு, மீண்டும் பத்மா வீட்டுக்குப்போய், ரசாபாசமாகிவிட்டால் என்ன செய்வது? என்றைக்குமில்லாமல் இன்றைக்கென்று என் கணவர் நாலு மணிக்கே கம்பெனியிலிருந்து வந்துவிட்டார்! அவரிடம் உண்மையைச் சொல்லி, அவன் வந்தால் பிடித்துக்கொண்டுபோய் போலீசில் ஒப்படைக்கச் செய்தால் என்ன என்றும் எண்ணினேன். எந்த விஷயம் வெளியே தெரியக்கூடாதென்று பத்மா துடிக்கிருளோ, அது போலீசுக்குப் போனல், நாளைய பத்திரிகையிலேயே வந்து, பகிரங்கமாகிவிடும்! என்ன செய்வது? அவன் வந்து கேட்கும்போது, என் கணவர் இருந்துவிட்டாலும், வம்புதான்.

அதனல், டப்பாவிலிருந்த காப்பித்தூளையெல்லாம் பூனை உருட்டி வீணாக்கிவிட்டதாகச் சொல்லி, அவரை மவுண்ட்ரோடுக்கு அனுப்பினேன். கோடம்பாக்கத்திலிருந்து பஸ்ஸைப் பிடித்து அவர் போய்த் திரும்ப, எப்படியும் ஒன்பது மணியாகிவிடும். வேலைக்காரியையும், எட்டணு காசைக் கொடுத்து ஏதாவது சினிமாவுக்குப் போய்விட்டுவா என்று அனுப்பிவிட்டு, அவனுடைய வரவுக்காகத் தயாரானேன். பத்மாவைப்போல், பயப்படாமல் தைரியமாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்துகொண்டேன். ஆனல்! "கமலீ! கமலீ,!!" என்கிற ஆண் குரல் கேட்டதுதான் தாமதம், என் தைரியமெல்லாம் எங்கோ, போய்விட்டது. வெளியில் போவதா, வேண்டாமா என்கிற வேதனையான நிலைமை. அழுதாலும் பிள்ளை அவள்தானே பெற்ருகவேண்டும் என்பதுபோல், இதற்கு நான்தானே ஏதாவதொரு வழி செய்தாக வேண்டும்.

"ஓகோ! கமலீ சொன்னது நீங்கதானு, வாங்க;" என்று, நடுங்கிக்கொண்டே, சொன்னேன். என் நடுக்கத்தை நடிப்பு என்று எடுத்துக்கொண்டான் போலிருக்கிறது. "ஆமா! நீ யார்? அவளுக்குத் தங்கையா! நீயும் அவளைப்போலத்தானு......ஆள் அவளைவிட நன்ருகத்தானிருக்கிருய்......உன் பெயரென்ன?", என்று மூச்சுவிடாமல், என்னுடைய பதி



லுக்கும் இடைவெளி தராமல் கேட்டபடியே, நாற்காலியில் அமர்ந்தான். "கமலி எனக்கு அக்கா வேணுங்க! என் பேரு பத்மா," என்றேன். "பத்மா! நல்ல பெயர்தான். பெயரைப்போலவே ஆளும். அப்ப சரி! அவ வராவிட்டால் பரவாயில்லை...குடிக்கக் கொஞ்சம் உன் கையால் தண்ணி கொண்டா", என்ருன்.

உண்மையில் மங்களம், என் கைவசம் விஷமிருந்திருந்தால், கொஞ்சம்கூடத் தயங்கியிருக்கமாட்டேன் அவனுக்குக் கொடுக்க. என்ன பண்ணுவது? உள்ளே போய் ஒரு டம்ளரில் தண்ணி எடுத்துவந்தேன். என்ன தண்ணீர் தெரியுமா? தொட்டியில் கைகால் கழுவ வைத்திருந்த அழுக்கு நீர்தான்! அதை எடுத்துக் குடித்துவிட்டு, "அமுதமாயிருக்கு... எல்லாம் உன் கை, விசேஷம்... இந்தா பர்ஸ்!" என்று தன் பணப் பையை எடுத்து, வைத்தான். இதற்கு மேலும் வளரவிட்டால், நிச்சயம் வரும் ஆபத்து என்பது புரிந்தது! "ஐயா, கோவிக்கக்கூடாது. எதிர்பாராத விதமா எங்க சொந்தக்காரங்க வந்திருக்காங்க. அதனுலேதான், அவ இங்கே வரல்லே. வேண்டுமானுல், உங்களை, அவசியம் இந்த அட்ரசுக்கு வரச்சொன்னு." என்று நான் முன்பே யோசித்திருந்தபடி, உன் பங்களா விலாசத்தைக் கொடுத்தேன். கொஞ்சம் ஏமாற்றத்துடன் அதை வாங்கிக்கொண்ட அவன், "அப்போ இந்த இடத்துக்கு உன் அக்காகூட நாளைக்கு நீயும் வருவாயா?" என்ருன். "ஓ! வருகிறேன்!!" என்று சொல்லி அவனை, அனுப்பிய பிறகுதான், உயிர் வந்தது எனக்கு.

அதனல் மங்களம், நாளைக்கு நானும் கமலியும் நிச்சயம் நம்முடைய மாதர் சங்க விழாவுக்கு வந்து கலந்துகொள்ளமாட்டோம். உன் பங்களாவின் மாடியில்தானே சங்கம் இருக்கிறது — நிச்சயம், அவன் கீழேயுள்ள உன் வீட்டுக்கு வருவான். உன் பெயரைத்தான் கொடுத்திருக்கிறேன். கவனித்துக்கொள், சரியாக. இந்தச் சிக்கல் தீர, உன்னைத் தவிர, வேறு வழி தெரியவில்லை. நாளைக்கு நடைபெறும் மாதர் விழாவில் பிரசங்க பூஷணம் அருளானந்தசாரியாரும், சித்துக்குளி சீரங்கதாசாவும் கலந்துகொண்டு சிறப்பிப்பதைக் காண எங்களுக்குக் கொடுத்துவைக்க

வில்லை. அந்த இரண்டு பெரியார்களுடைய ஆசீர்வாதத்தையும் வாங்கி, எங்களுக்கு அனுப்பு.

இப்படிக்கு,
கமலீ.

*

காந்தி நகர்.
24-10-'60

மெய் நண்ப,

மடங்கல் கண்டதும் தடங்கல் சொல்லாது, உடன், வருக. ஒப்புவகையிலாத இரு கனிகள் கிடைத்துள்ளன். உனக்கு எது தேவையோ, அதை நீ புசிக்கலாம். கனியிரண்டும், இதுவரை நாம்காணாதது. பழனியில் சென்ற கிழமை நாம் இரண்டு பேரும பருகினோமே, அதைவிடச் சிறந்த பஞ்சாமிர்தம் இவை. தவறிவிடாதே. உன்னையும் நம்பி, இரண்டையும் வரச்சொல்லியிருக்கிறேன். நிற்க! ஒன்று மறந்து விட்டேன். திருப்பதியில் நீ பெற்றதாகச் சொன்னாயே, வரப்பிரசாதம்—அதுபற்றி டாக்டரைக் கலந்தாயா? என்ன சொன்னார். காயம் சரியாயிருந்தால் தான், நம்மைப் போன்றவர்கள், பிறவி எடுத்ததன் பயனைச் சரியாக அனுபவிக்க முடியும். சீரங்கத்தில், ஒரு சாமியார் கொடுத்தாரே, ஒரு காயகல்ப் லேகியம், அதில் மிச்சமிருந்தால் கைவசம் கொண்டுவா. காலையிலேயே வந்தால், விருந்து அருந்திவிட்டு, பிறகு நம் வேலையைக் கவனிக்கப்போகலாம்.

இப்படிக்கு
உன்
முருகன் துணை.

*

சோடம்பாக்கம்,
25-10-'60

கமலிக்கு மாதர் சங்கத் தலைவியான மங்களம் எழுதுவது:

விபரத்தைப் படித்ததும், அழுவதா, சிரிப்பதா என்றே எனக்குப் புரியவில்லை. அதோடு, இன்று நம் சங்க ஆண்டுவிழா வேறு! தலைமை வகிப்பவரையும், சொற்பொழிவாளர்களையும் நான் தேடிப்பிடிப்பதா, நீ சொன்ன ஆள் வந்தால் "ஆவன" செய்வதா என்று ஒன்றும் புரியாமல் திண்டாடிப் போய்விட்டேன். பங்களாவின் மாடியில் நம் சங்கம் இருந்தாலும், கீழேயுள்ள என் வீட்டுக்கும் அதற்கும் தொடர்பு இல்லையென்பதுதான் உனக்கேத் தெரியும். வருகிறவர்களை உபசரிக்கவும், நாற்காலி பெஞ்சுகளைச் சரியாகப் போடவும், மாலை வாங்கிவரச் சொல்லவுமான காரியங்களைக் கவனிக்கவே, என்னால் முடியவில்லை. இதனால், என்ன செய்வது என்று புரியாமல், நம்முடைய ஞானத்தை, கீழே என் வீட்டில் வைத்தேன்! அவள் கணவன் போலீஸ் இஸ்ன்பெக்டரல்லவா? அவரையும் அழைத்துவரச்சொல்லி, அந்த ஆசாமிகளுக்குச் சரியான பாடம் போதிக்கவேண்டுமென்று, கீழே ஒளிந்திருக்கும்படி செய்திருந்தேன்.

இப்படிப்பட்ட ஆசாமிகளுக்கு சரியானபாடம் கற்பித்து, நம்முடைய ஆண்டுவிழாவில், பெண்மையின் சிறப்பை விளக்கச் சரியான சந்தர்ப்பம் கிடைத்ததென மகிழ்ந்தேன். நீ சொன்ன ஆள் வந்தான், அவனிடம் நைசாக ஞானம் பேச்சுக்கொடுப்பது—அதே சமயம் இன்ஸ்பெக்டர் பிடித்துக்கொள்வது—பிறகு முக்காடு போட்டுக்கொண்டு வந்து நம்முடைய விழாவின்போது மேடையில் நிறுத்தி, அவமானப் படுத்துவது என்பது, என் திட்டம். மேலே ஆக வேண்டிய காரியங்களைக் கவனித்துக்கொண்டிருந்தேனே ஒழிய, என் மனமெல்லாம் கீழேயே இருந்தது. நீ சொன்ன ஆள் வந்திருக்கிறான்—ஒருவனாக அல்ல, கூட இன்னொருவனையும் இழுத்துக்கொண்டு!! இரண்டு பேரிடமும், உங்களுடைய சொந்தக்காரியைப்போல ஞானம பேச்சுக்கொடுத்திருக்கிறாள். அதே சமயம், இரண்டு கான்ஸ்டேபிள்களுடன் மறைந்திருந்த இன்ஸ்பெக்டர், நான் முன்னதாகவே கொடுத்திருந்த கருப்புத்துணியைப்போட்டு மூடி, மேடைக்கு இழுத்துவந்தார். அந்த இரண்டு ஆட்களும், எவ்வளவோ, முண்டினார்கள். இன்ஸ்பெக்டர் விடுவாரா? மனோகரா நாடகத்தில் கேசரிவர்மன் பேயாக வருவதைக் காட்டுவார்களே அதுபோல, கருப்புடையினை நன்றாகக் கயிற்றால் போட்டுக்கட்டி, திரையின்பின்னே, மேடையில் இரண்டு நாற்காலிகளில் உட்கார வைத்திருந்தார். வந்திருந்த பலருக்கு, அவர்கள் யாரென்பதையும், இப்படிப்பட்ட அயோக்கியர்களிடம் பெண்கள் எவ்வளவு சாக்கிரதையாகப் பழகவேண்டுமென்றும், நான் வீராவேசமாகப் பேசினேன். நாம் ஏற்பாடு செய்திருந்த அருளானந்தவாரியாரும், சித்துக்குளி சீரங்கதாசாவும் இடையில் ஒரு நிகழ்ச்சியைக் கவனித்துவிட்டு, வருவதாகச் சொல்லி

# தமிழகம் முன்பு

தமிழராகிய பாண்டியரின் தொடர்பால் வந்த எகிப்தியருடைய நாகரிகமே உலகிற் பெரும்பாலும் பரவிற்று. எகிப்தியர் நாகரிகமே முதலிலெழுந்ததென்று சிலரும் பாபிலோனியரின் நாகரிகமே முற்பட்டதென்று சிலரும் கூறி வாதிப்பர். அவ்விருவர் நாகரிகமும் தமிழரான் வந்ததேயன்றி வேறல்ல என்பது பாண்டியர் குடியேறிய நாடே எகிப்து என்றும், சோழர் குடியேறிய நாடே சாலிதியா என்றும், சாலிதியர் குடியேறிய மெசப்பொட்டோமியாவாகிய நாடே பாபிலோனியாவென்றும் வழங்கப்பட்டன.

இவ்வெகிப்தியரும், பாபிலோனியரும், போனீஷியருமே, கிரேக்கருக்கு நாகரிகங் கற்பித்தவர். கிரேக்கருக்குக் கற்பிக்கப்பட்டதை கிரேக்கரிடமிருந்து, உரோமர் அறிந்தனர். பின்னர் உரோமர் தாம் கற்றுக்கொண்டதை ஐபீரியர், கெல்த்துகள், தியூதர்கள், சிலேவர்கள் முதலானோர்க்குத் தெரிவித்தனர். இவ்வாறே உலகெங்கும் தமிழரிடமிருந்து நாகரிகம் பரவிற்று.

அ. சிதம்பரனார்.

யனுப்பியிருந்தார்கள், ஆள்மூலம். எல்லா நிகழ்ச்சிகளையும் நடத்திவிட்டால் தாங்கள்வந்து பேசிவிட்டுச் செல்ல வசதியாயிருக்கும் என்று சொல்லியனுப்பியிருந்தார்கள். அருளானந்தவாரியார், அடுத்த தடவை கார்ப்பரேஷன் தேர்தலுக்கு நிற்கவேண்டுமென்று, இப்போது முதல்வேலை செய்துவருகிறார். அதனால், வெளி வேலைகளைக் கவனித்துவிட்டுவர, நேரமாகுமாதலால்,கருப்புடையிலேயிருக்கும் இரண்டு ஆத்மாக்களையும், அறிமுகம் செய்துவைத்து அவமானப்படுத்தலாம் என்று, இன்ஸ்பெக்டரிடம் சொல்ல, அவர் கருப்பு அங்கியை எடுத்தார். என்னடி, சொல்வேன்? என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. எனக்கு மட்டுமென்ன, வந்திருந்த பலரும் திகைத்துப்போய்விட்டார்கள்.

மயக்கம் போட்டு விழுந்துவிடாமலிருக்கவேண்டி கெட்டியாகத் தூணைப் பிடித்துக்கொண்டேன். இவர்களா காமப் பேய்கள்? எனக்கு,ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "இரண்டு பேரையும் இழுத்துக்கொண்டு போய் லாக்கப்பில் போட்டுப் பூட்டுங்கள்," என்று வெறிபிடித்தவளைப்போல், இன்ஸ்பெக்டரிடம் கத்தினேன். அதற்கு சட்டம் இல்லையாம், அதோடு தன் பதவிக்கு ஆபத்து வந்தாலும் வந்துவிடும் என்று ஞானத்திடம் அவள் கணவன் காதைக் கடித்தார்—திரும்பிப்பாக்கும்போது இன்ஸ்பெக்டரே இல்லை.


அந்த இரண்டு பிறவிகளும் யாரென்பதை உன்னிடம் சொல்லவே,எனக்கு வெட்கமாயிருக்கிறது. கமலீ, என்னை மன்னித்துவிடு. நல்லவர் என்று நம்பி நான் அழைத்திருந்தேனே நம் விழாவுக்கு, அந்த சித்துக்குளி சீரங்கதாசர்தான், உன் வீட்டுக்கு வம்பு செய்ய வந்த ஆள்! அவருடன் இன்று வந்து அகப்பட்டுக்கொண்டவர்தான் சிவப்பழமும் சீலமுள்ளவராகவும் பேசப்படும் அருளானந்தசாமியார்!! உண்மையில், அவர்கள் பேச்சுகளைக் கேட்கும்போது இருக்கும், தோற்றத்துக்கும் இன்று இங்கே உன்னைப் பார்க்கவந்த தோற்றத்துக்கும், ஏராளமான வித்தியாசம் உண்டு. மந்திரிகளைப் பார்க்கப்போனால் கதர், 'மைனர்' விளையாட்டுக்குச்சென்றால் சில்க் என்று பலர் இல்லையா? இதே சுபாவம், அரகரநமப்பார்வதி பதமே சொல்லும் ஆத்மாக்களுக்கும் இருக்கிறது. பிரசங்க மேடையில் பக்தர் கோலம்! அந்திநேர பவனிக்கு அலங்கார உடை!! செச்சே, இந்த மாதிரி ஆட்களையே பெண்களாகிய நாம் இனிமேல் நம்பக்கூடாது. பெரிய மனிதர்கள் என்றும் போற்றக்கூடாது. பிற, நேரில்.

உன்,

**மங்களம்.**

## செழுமை அடைய...........

நம் நாட்டிலும் மந்திரிப் பதவிகளை எவரும் இரண்டுமுறைக்குமேல் பார்ப்பது கூடாது, திறமை மிக்கவர்களுக்கு இடம் அளித்து அதன் மூலம் தேசீயப் பொருளாதாரம், தொழில்துறை ஆகியவை வலுப்பட வகை ஏற்படுத்தவேண்டும். இதனால் ஜனநாயக அரசியல் அமைப்பு செழுமை அடைய முடியும்.



# பூச்சு வேலை!

## --கடன்பட்டு!!

அழகழகான கட்டிடங்கள்! புதிய புதிய தொழிற் சாலைகள்! சீரான பாதைகள்! பூந்தோட்டங்கள்! வேடிக்கைக் கூடங்கள்! ஒரு நாடு, வளம் கொழிக்கும் நிலையில் உள்ளது என்பதற்கான சான்றுகள் இவை. பதினாலாம் லூயி பிரான்சு நாட்டை ஆண்டுகொண்டிருந்தபோது, எவரும் இவ்விதம்தான் எண்ணிக் கொண்டனர். புத்தம் புதிய பாதைகள் அமைக்கப் பட்டன! வாய்க்கால்கள் வெட்டப்பட்டன! வணிகக் கோட்டங்கள் துவக்கப்பட்டன. இந்திய பூபாகத்தோடு வணிகத் தொடர்புகொள்ள பிரன்ச்சு கிழக்கிந்தியக் கம்பெனி 1664ல் தொடங்கப்பட்டது. கிழக்கிலும் மேற்கிலுமாகப் பல தீவுகள், நாடுகள், பிரன்சுப் பிடியில் இருந்தன. கலே, டன்கர்க், பரெஸ்ட் எனும் கடற்கோட்டைகள் கட்டப்பட்டன. பிரன்ச்சுக் கடற் படை வலிவுடன் வளரலாயிற்று.

காவியமும் ஓவியமும், கழகங்களிலே திகழ்ந்தன. இயல், இசை, நாடக வல்லுநர்கள் போற்றப்பட்டனர். அரசஅவை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கோலாகலக் காட்சிகள்; கொண்டாட்டங்கள். அறிவு மணம் கமழ்ந்தது. செல்வம் கொழித்தது. அரண் மனையில் மட்டும் 15,000 எடுபிடிகள்! மன்னன் கவிஞர்களைப் பாராட்டினான்; அவர்கள் அவனை வாழ்த்தினர். இலக்கியம் மட்டுமின்றித், தத்துவம், மத இயல், எனும் பல்வேறு துறைகளிலும், சிறப்பான முன்னேற்றம் கண்டனர். கண்டோர் வியந்தனர். ஐரோப்பாக் கண்டத்திலேயே பிரான்சு நாடு, எழில் குலுங்கும் இடமாக, ஏற்றமிகு அரசாக, விளங்கிற்று.

பிரான்சு நாடு வளம் கொழித்திடும் நிலையில் உள்ளது. அரசு, அதற்காக அரும்பாடுபடுகிறது. மக்கள் வாழ்க்கைத் தேன் பருகி மகிழ்கின்றனர் என்று பிற நாட்டவர், பேசினர், பாராட்டினர்.

இந்த எழில், ஏற்றம், வளம், யாவும், பதினாலாம் லூயி மன்னன் நாட்களில்.

இவ்வளவு புன்னகைப் பூந்தோட்டமாக விளங்கும் பிரான்சிலே, பெரும் புயல் புகப்போகிறது; கலை குலுங்கும் அந்தச் சோலை இரத்தக் காடு ஆகப்போகிறது; செல்வம் கொழிக்கும் அங்கு, பட்டினிப் பட்டாளங்கள் பவனி வரப்போகின்றன; புதுமை இலக்கியம் பூத்துக் குலுங்கிடும் நாட்டிலே, புரட்சி வெடிக்கப்போகிறது. காவியக்காரரும் ஓவியரும் வாழ்த்திய, அரசகுடும்பம் மக்களால், வேட்டையாடப் படும் நிலை பிறக்கப்போகிறது, என்று எவரும் எதிர் பார்க்கவே மாட்டார்கள் — அத்தனை பளபளப்பு, மினுமினுப்பு, பிரான்சில்.

எனினும், இந்தக் களிப்பும், ஒளியும், அணைந்தது; புரட்சி வெடித்தது; பிரான்சு, இரத்தக் காடாயிற்று. அரண்மனைக்குள் அன்னக் காவடிகள் படை எடுத்தனர். கோலாகலச் சீமான்களைக் கூட்டுக்கோல் கொண்டு விரட்டினர், பசியால் துரத்தப்பட்ட பஞ்சைகள்.

இவ்வளவு வளம் இருந்துமா? வாணிபம் செழிப்பாக இருந்துமா? தொழில் பெருகி இருந்த நிலையிலுமா? என்று கேட்கத் தோன்றும், எவருக்கும். ஆம்! இவ்வளவும், மேலே தெரிந்த பளபளப்பு — உள்ளே புரையோடிப் போயிருந்த நிலை. இவ்வளவும் புண்ணை மூடப் பூசப்பட்ட புனுகு! அடித்தளத்திலே வெடிப்புகள், மேலே, பூச்சு வேலை! கட்டிடங்கள் பெரிது பெரிதாக — அதற்காகப் பெறப்பட்ட கடன் தொகைமிகப் பெரிய அளவு. அரண்மனையிலே ஆடம்பரம் அமோகம்; அதற்காக மக்கள் கசக்கிப் பிழியப் பட்டார்கள். கவிவாணர்கள் அரண்மனைகளிலே வாழ்த்துப்பாடிக்கொண்டிருந்தனர்; சந்துமுனைகளிலே, முழக்கமெழுப்பிக்கொண்டிருந்தனர், புரட்சிக் கருத்தினர்.

பெரும்பொருள் கடனைப் பெற்றது அரசு! ஆடம்பரச் செலவு! ஊழல்! ஊதாரித்தனம். தொழில், அதிபர்களைக் கொழுக்கவைத்தது, உழைப்பவர்களைப் பட்டினி போட்டது. போக போக்கியப் பொருள்கள் குவிந்தன; உணவுப் பொருளுக்குப் பஞ்சம். மதுக் கூடங்கள் மாளிகைகளில், மக்களின் கண்களோ, குளமாயின! அடித்தளத்தில் வெடிப்பு, மேல் மட்டத்தில், வண்ணப்பூச்சு!

எனவேதான், புரட்சி, வெடித்தது—போக போக்கியத்தில் புரண்டுகிடந்தோர், விரண்டோடினர்.

மேட்டுக்குடியினர் மேனுமினுக்கிகளாக வாழ்ந்து கொண்டிருப்பதை மட்டும் கவனித்து, இந்த நாடு,

மிக நல்ல நிலையில் உளது என்று முடிவு கட்டுவது, எத்துணை மடைமை என்பதைப், பளபளப்புடன் இருந்த பிரான்சிலே, புரட்சித் தீ மூண்டதிலிருந்து உணர்ந்துகொள்ளலாம்.

எந்த அரசும், கடன் சுமையை, பெரும் அளவு ஏற்றிக்கொண்டால், அச்சுமுறிந்த வண்டியாகும்.

கடன்பட்டு, கலை வளர்த்தால், ஆடம்பரம் வளர்த்தால், நிலைக்காது, வாழ்வு சிறக்காது.

தேன் சொட்டும் கவிபாடுவோர் உளர் என்று பெருமை பேசினுல் பயன் இல்லை, மக்கள் கண்ணீர் சிந்தாது வாழ வழி இருக்கிறதா என்பதுதான் கவனிக்கத்தக்கது. சக்கரம் உடைபட்டுக் கிடக்கும் போது, அதற்கு அழகான வர்ண வேலைப்பாடு செய்திடுவானேன்? அதற்கான பணம் பெற, அதில் பூட்டி ஓட்டவேண்டிய குதிரையையே விற்றுவிடுவது, மடைமையன்றோ. பிரான்சில், அதுபோல நடந்தது; புரட்சி வெடித்ததும், சகல ஆடம்பரமும் பொடிப் பொடியாயின.

நன்றிகெட்ட மக்கள் — எவ்வளவு அரும்பாடுபட்டு, நாட்டின் கீர்த்தியைப் பரப்புகிறோம், கவிவாணர்களைக்கொண்டு, படைத்தளபதிகளை அனுப்பி, வணிகர்களை அனுப்பி. பிரன்ச்சு நாட்டுச் சீமான், ஆடலழகியரும் இசைவாணரும், காவியம் இயற்றுவோரும் ஓவியம் தீட்டுவோரும் புடைசூழ, வெளி நாடுகள் சென்று, வைரம் இழைத்த தங்கக் கோப்பையிலே, பிரன்ச்சு நாட்டு மதுவைப்பெய்து, விழியாலேயே போதையூட்டும் சரசியின் கரம் கொடுத்துத் தரச்சொல்லி, அதைப் பிறநாட்டுப் பிரபு வாங்கிப் பருகும்போது, பிரான்சு நாட்டை அல்லவா பெருமைப்படுத்துகிறான். ஏனோ இந்த மக்களுக்கு இது தெரியவில்லை. எமக்கென்ன செய்தீர்? முழு வாழ்வும் எமக்கு இல்லையே! என்று முணுமுணுக்கிறார்கள்! மூட மதியினர்! நாடு வாழ்கிறது. இவர்கள் மகிழவேண்டாமோ! பிரான்சின் பெருமை, பாரெல்லாம் பரவுகிறது, அது இவர்களுக்கன்றோ பெருமை. கடலிலே பிரான்சு நாட்டுக் கப்பல் வருவது கண்டதும், பிறநாட்டினர் அதைச் சுட்டிக்காட்டி என்ன கூறுகின்றனர்! பிரனச்சுக் கப்பல் என்று! ஓ! பிரான்சுக் கப்பலென்று!! சே! ஏன் இதுகூடத் தெரியவில்லை இந்த மக்களுக்கு பிரன்ச்சு ஓவியம்! பிரன்ச்சுப் பட்டாடை! பிரன்ச்சு ஆடல் பாடல்! பிரன்ச்சு மது வகை! பிரன்ச்சுக் கலை! என்று பிறர் புகழும்போது இந்த மக்களல்லவா பெருமையும் பூரிப்பும் கொள்ள வேண்டும். எமக்கு என்ன? எமக்கு என்ன? என்று கேட்கின்றனர் பிச்சைக்காரர்போல. துளிமேனும் நாட்டுப் பற்று இருக்கிறதா இதுகளுக்கு. என் வீடு! எனக்கு வேலை! என் வயிற்றுக்குச் சோறு! என்று பேசத்தான் தெரிகிறதேயன்றி, என் நாடு எழிலோடு, என்று பெருமிதம் கொள்ளத் தெரியவில்லையே. இத்தனைக்கும் இந்த நாட்டுப்பற்று இதுகளுக்கு ஏற்படுவதற்காக எத்துணை சுவையான கவிதைகளை இயற்றித் தந்தனர் கவிவாணர்கள், — என்று ஆட்சியாளர் ஆயாசப்பட்டுக் கொண்டனர். குளிர் கொட்டும்போது கரமது கொண்டு உடலை மூடிக்கொண்டு நடுக்குறும் ஏழை, கம்பளத்தின் அழகுபற்றிய கவிதையைக் கேட்டு இன்புறவேண்டுமாம்!

பருக ஏதுமின்றி, நாவுலர்ந்து கிடப்பானும், அவன் கண்முன், திராட்சைக் கொத்துதனை எத்தனை அழகாகத் தீட்டியுள்ளார் ஓவியர், பார்! என்று காட்டுவோம்—அவன் உடனே, எங்கு உள்ளார் அந்த ஓவியர்! அவரைக் கண்டு என் வணக்கம் கூற வேண்டும் என்று சொல்லவேண்டுமாம்!

நம்மைக் கொன்று பிய்த்துக் குகையிலுள்ள குட்டிகளுக்கு, தாயன்புடனே, கொண்டுபோய், இப்பெண் புலி தரும்போது, குட்டிகள் குதித்தாடிக் குதூகலிக்கும், அவைகளின் உடலை நாவினுல் தடவிக் கொடுத்து, தாய்ப்புலியும் மகிழ்ச்சி பெறும்; இத்தனை மகிழ்ச்சியை புலிக் குடும்பம் பெறுவதற்கு, நானே எனைத்தந்திட, வாய்ப்பொன்று கிடைத்ததே, பொன்னுன வாய்ப்பதனை எனக்களித்த புலியார் வாழ்க! இதுபோன்ற வாய்ப்பதனை என் இனத்தில் மற்றவர்க்கும் தந்துதவும் புலி இனமும் வாழ்க நீடூழி!! என்று புள்ளிமான் கூறவேண்டுமாம்.

மக்களின் வயிறு காய்கிறது, நாட்டின் கீர்த்தி வழிந்தோடுகிறதாம்!!

கடனுக்குமேல் கடனுகப் பெற்று, நாட்டினிலே காட்டுமாளிகை கட்டி, சிற்பிக்கு நல்வாய்ப்பு தந்திட்டோம் அறிந்திடுக!—என்று செப்பினர். மக்கள் எங்ஙனம் அதனை ஒப்புவர்! பட்டகடனைத் தீர்த்திட, பட்டத்தரசனு முன்வரப்போகிறார். பாடுபடுவோர் தலைமீது அல்லவா, அந்தச் சுமை ஏறுகிறது. அந்தச் சுமையையும் தாங்கிக்கொண்டு, வாழ்க்கைப் பயணமும் நடத்திப், பொருள் ஈட்டவேண்டும், பிழைத்திருக்க; அதற்குச் செலவானது போக மிச்சம் இருக்கவேண்டும், நாட்டின் பெருமையை உலகுக்குக்காட்ட, நாடாள்வோன் வாங்கியுள்ள கடன் தொகையைச் சிறுகச் சிறுகத் திருப்பித் தந்திட.

கடன் வாங்கி ஆடம்பரத்துக்கும், பெருமைக்கும் செலவிட்டுவிட்டு, நானு விழுங்கிவிட்டேன்! அத்தனை பணமும் சிலையாக, சிங்காரத தோட்டமாக, செயற்கை மலையாக, நாட்டிலே உள்ளது என்று கூறுவதுபோல அரசு நடந்துகொள்ளுமானுல், மக்கள் மனம் முறியும் —அது முறியுங்காலை அரசின அச்சாணி முறிந்தேபோகும்.

வெளிநாடுகள் பல வற்றிலேயும் கடன் வாங்குவது, இன்று இந்திய அரசுக்குக் கைதேர்ந்த கலையாக, கீர்த்திமிக்க தொழிலாக ஆகிவிட்டது.

லஞ்சத்தனம்கொண்டவனும், புது தில்லியில், இந்திய அரசு

## தமிழகம்

**காட்டுவளம்:**

| | | |
|---|---|---|
| காடு அளவு | — | 6,718 சதுரமைல் |
| கிடைக்கும் மரம் | — | 731,000 அந்தர் |
| விறகு | — | 16,895,000 அந்தர் |
| சந்தனம் | — | 1,183 டன் |
| வருமானத் தொகை | — | 1,30,62,640 ரூபாய் |

காட்டும் புன்னகையைக் கண்ட உடன், என்ன வேண்டும்? என்று கேட்பான். அவ்விதமான சுவைமிகு வரவேற்புகள்—இசை நிகழ்ச்சிகள்—நாட்டிய விழாக்கள், பலப்பல! கடன் பெறுகிறார்கள்!

வெளிநாடுகளிலே, இந்தியாவிலிருந்து ஒருவர் வந்திருப்பது கண்டால், கீதோபதேசம் செய்திட வந்தவரோ. கிழக்கத்திப் பண்பாட்டு ஆராய்ச்சிக் கூடத்துத் தலைவரோ, என்றெல்லாம் யோசிப்பதில்லை; இந்த முறை வந்தது, இன்னும் எவ்வளவு கடன் பெறவோ, என்றுதான் எண்ணுகின்றனர்.

இந்த நிலை, நாட்டின் தன்மானத்தைக் குறைக்கிறது என்பது ஒருபுறமிருக்க, கடன் கேட்பதிலேயே காலந் தள்ளுவதால், எவரிடமும் காரணமில்லாமல் சிரிக்கவேண்டி இருக்கிறது. கண்டதும் கைகூப்ப வேண்டி வருகிறது, குறை கண்டாலும் குட்டுப்பட்டாலும் பொறுத்துக்கொள்ளவேண்டி நேரிட்டு விடுகிறது. இது பண்பாட்டுக்கும் குந்தகம் விளைவித்து விடுகிறது.

இதுமட்டுமல்ல. கடன் கேட்டுப் பெறுவதிலே தனித்திறமை வளரவளர, எந்தக் காரியம் இப்போது செய்யப்படவேண்டும், எதைச் செய்தால் தக்க பலன் கிடைக்கும் என்ற ஆராய்ந்து முடிவெடுக்கக்கூடத் தோன்றுவதில்லை. கேட்டால் தருகிறார்கள்! போட்டு விடு திட்டம்!—என்ற முறையிலே திட்டம் போட்டுப், பாதி முடியும்போது, தேவையில்லை என்பதையோ, பலன் கிடைக்காது என்பதையோ உணர்ந்து, இது உலகுக்குத் தெரிந்தால்,கொடுத்த கடனையும் கேட்பர், புதிய கடனும் கிடைக்காது என்று அஞ்சி, ஊழலை, ஊதாரித்தனத்தை மூடிமறைக்கவும், கண்டறிந்து கூறுவோர்மீது 'தேசத்துரோகி' எனும் பழியைச் சுமத்தவும், புது தில்லி முனைந்துவிடுகிறது.

திட்டங்கள் எதிர்பார்த்த அளவுச் செலவோடு முடிந்ததில்லை என்பதை, நூற்றுக்கு அறுபது விஷயங்களில் பார்க்கலாம். நூறு கோடியில் முடியும் என்கிறார்கள் — பிறகு மேலும் அறுபது தேவை என்று அறிவிக்கிறார்கள். தேக்கத்துக்கான தேவையை மட்டும் கவனித்துக் கணக்கெடுத்தோம், வாய்க்காலுக்காகும் செலவினத்தை மறந்துவிட்டோம் என்று காரணம் காட்டுவர், நாளும் பார்க்கிறோம்.

காலஞ்சென்ற குமாரசாமி ராஜா அவர்கள், புது தில்லி அரசு, நடத்திவரும் திட்டங்களிலே ஏற்பட்டு வரும் விரயம் மிக அதிகம்; பயனோ மிகக் குறைவு என்று கோவையில் பேசியதை, நாடு மறந்திடாது.

கடன்படாது இருக்கவேண்டும் என்று கூறுவோர், பொருளாதார அறிவில்லாதார். முன்னேற்றம் விரும்பாதார், உலக வரலாறு தெரியாதார் — என்று அடுக்கடுக்காக, ஆட்சியிலே உள்ளதனால் அறிவுக்கரசர் என்று தமமைத்தாமேபாராட்டிக்கொண்டு இரு

மார்ந்து இடப்போர், கண்டனமொழி வீசுகின்றனர். இன்னின்ன நாடுகள் இவ்வளவு இவ்வளவு கடன் வாங்கியுள்ளன என்று பட்டியல் தருகிறார்கள். தனியொருவர் கடன்பட்டு வாழ்க்கை நடத்துவதற்கும், நாடு திட்டங்களுக்காகக் கடன் பெறுவதற்கும் அடிப்படையிலே வித்தியாசம் மெத்த உண்டு என்று விளக்கம் அளிக்கின்றனர்.

பெரும் அளவில் கடன் வாங்கி, சுமையை ஏற்றி விடுகிறார்கள் என்று கூறுவோர்க்கு, ஆட்சியாளர் கூறுவது அத்தனையும் தெரியும். அரிச்சுவடி அது. அது அறியாமலல்ல, கடன்பட்டுக் காரியம் செய்து வரும் போக்கினைக் கண்டிப்பது.

கடன் பெறுவதிலே ஒரு கட்டுதிட்டம் இல்லை.

கடன்பட்டுக் காரியம் செய்கிறோம், எனவே, செய்யும் காரியம் அவ்வளவும் செய்தே தீரவேண்டியனவாக இருக்கவேண்டும். அவ்விதம் காரியங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும், என்ற அடக்க உணர்ச்சி இல்லை.

**இருந்திருந்தால், புது தில்லியில் அசோகா ஓட்டலும், பூந்தோட்ட அமைப்புகளும், புதிய கலையழகு சொட்ட சந்திகாரும், பார்ப்போம் என்னவானாலும் என்ற போக்குடன் கண்டலா துறைமுக வேலையும், அமைத்திருக்கமாட்டார்கள்.**

கடன்பட்டுச் செய்வதால், கடனைத் திருப்பித் தரத்தக்க அளவுக்கு, வருவாய் கிடைக்கத்தக்கதாகத் திட்டங்கள் இருத்தல் வேண்டும், அதற்கான கண்காணிப்பு இருக்கவேண்டும்.

**இருந்திருந்தால், தரமான நிலக்கரி போதுமான அளவு கிடைக்காததால், சிந்திரி தூங்குகிறது என்ற சேதி வந்திருக்காது.**

**இந்தக் காரியத்தை நாங்கள் செய்தால் இதைவிடக் கூடுதலாக வருவாய் வந்திருக்கும் என்று தனியார்கள் இடித்துக் காட்டத் தக்க நிலையில் பொதுத்துறை நிர்வாகம் ஊழலாகி இருக்காது.**

**ஒவ்வொரு துறையிலும், ஏற்பட்டுள்ள விரயம், ஊழல், சீர்கேடு ஆகியவற்றினை கணக்கு ஆய்வாளர்கள் கண்டறிந்து குட்டும் கண்றாவிக் காட்சியைக் கண்டிருக்கமுடியாது.**

எங்கள் நாட்டிலே ஏராளமான எஃகு தயாராகிறது; எனினும் அங்குகூட நாங்கள், இவ்வளவு அதிகமாக கட்டிடங்களுக்கு எஃகு உபயோகிப்பதில்லை. இங்கு, தேவையற்ற இடத்

## தமிழகம்

நிலவகை:

| | | |
|---|---|---|
| விளைநிலமாக உள்ளது | — | 14017,806 ஏக்கர் |
| விளைநிலமாகக் கூடியது வீணாக இருந்து வருவது | — | 1,979,120 ,, |
| விளைநிலமாகாது என்று விடப்பட்டிருப்பது | — | 2,465,358 ,, |

திலெல்லாம் எஃகு உபயோகிக்கிறீர்கள். பணம் என்ன கொட்டியா கிடக்கிறது இங்கு. என்றல்லவா குருஷேவ் கேட்டார்.

கடன் பெறுவது, பெரிய பொறுப்பான காரியம்.

அந்தப் பொறுப்பை உணர்ந்து செயல்படச் சொல்வதே, ஆயிரம் ஆயிரம் கோடியாகக் கடனை வாங்குகிறது தில்லி என்று சொல்வதற்கான காரணம்.

ஆட்சியாளர்கள், அரிச்சுவடியை எடுத்துக் கொண்டு, திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தப்பார்ப்பது தான் விந்தையாக இருக்கிறது. கடன் படுகிறோம். அதனைத் திருப்பிக்கட்ட, இந்த மக்கள் இரத்தத்தை வியர்வையாக்கிப் பொழிகிறார்கள் என்று உணர்ந்து அதற்கேற்ப நடந்துகொள்ளவேண்டும்.

மூன்றாவது திட்ட காலத்தில் அசலும் வட்டியுமாகத் திருப்பித் தந்துகொண்டு வரவேண்டிய தொகை, ஆண்டொன்றுக்கு நூறு கோடி ரூபாய் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

கடனைத் திருப்பித் தரத்தக்க அளவுக்கு வருவாய் கிடைக்கவேண்டும்.

அதற்கு வழி, வெளிநாட்டுக்கு நாம் சரக்குகளை ஏற்றுமதிசெய்து பணம் சம்பாதிக்கவேண்டும். வெளிநாட்டுக்கு நமது பணம் போகாதிருக்க, வெளிநாட்டுச் சரக்குகள் இறக்குமதி செய்வதை நிறுத்தவேண்டும்; அல்லது வெகுவாகக் குறைக்கவேண்டும்.

பொருளாதார நிபுணர்களும், வணிகர்களும், ஏற்றுமதியை அதிகப்படுத்தவேண்டும், இறக்குமதியைக் குறைக்கவேண்டும் என்று சொல்வது எளிது, நிறைவேற்றுவது மிகமிகக் கடினம் என்று அறிவிக்கிறார்கள்.

துணி, சர்க்கரை, தேயிலை, காபி, எஃகு இவைகளை ஏற்றுமதி செய்து, பணம் பெறத் துரைத்தனம் திட்டமிடுகிறது. இவை ஒவ்வொன்றுக்கும் வேறு நாடுகளிடமிருந்து பெரும் போட்டியிருக்கிறது, எனவே ஏற்றுமதி மூலம் எதிர்பார்க்கும் தொகை கிடைக்காது என்று தெரிகிறது.

இறக்குமதியைக் கட்டுப்படுத்த முடிகிறதா என்றால், உணவு உற்பத்தித் திட்டங்கள் பல நிறைவேற்றிய பிறகும், சமுதாய நல திட்டத்தை வானளாவப் பாராட்டி நிறைவேற்றியும், வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்கள் இன்னமும் பல ஆண்டுகள் இறக்குமதி செய்தாகவேண்டிய நிலை தான் நீடிக்கிறது.

உணவு உற்பத்தியை அதிகமாக்க, உர உற்பத்தி அதிகமாகவேண்டும் என்பதை அறிந்து, சிந்திரி போல, பல உர உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைத்திருக்கலாம்; புதிது புதிதாக எஃகு தொழிற்சாலை அமைக்கப் பெரும்பொருள் செலவிட்டதை, உர உற்பத்திக்குச் செலவிட்டிருந்தால், உடனடிப் பலன், கிடைத்திருக்கும் என்பதை எடுத்துக் காட்டினர்.

உணவு உற்பத்திக்காக, உணவுத்துறை அமைச்சர் அலுவலகத்தை விரிவுபடுத்துவதும், அடுக்கடுக்காக அறிக்கைகளை வெளியிடுவதும், பல குழுக்களை உலாவர வைப்பதுமாக உள்ளனர். இதனால் பலன் ஏற்படவில்லை.

சுயராஜ்யத்துக்கு முன்பு, தில்லி மத்திய சர்க்கார் முழுவதிலும் எவ்வளவு பேர் வேலைபார்த்து வந்தார்களோ அதைவிட அதிகமானவர்கள் இப்போது, உணவுத் துறைக்கான அமைச்சர் அலுவலகத்தில் மட்டும் வேலை பார்க்கிறார்களாம்.

போர்க் கருவிகள் வெளிநாடுகளிலிருந்து தொடர்ந்து வாங்கப்பட்டு வருகிறது; இதற்காகும் செலவு மிக அதிகம்.

இதனுடைய இலட்சணம் எப்படி இருக்கிறது என்பதை தேஷ்முக் விளக்குகிறார், மெத்த விசாரத்தோடு,

> பிரிட்டனிலும், அமெரிக்காவிலும், இனித் தேவையில்லை, உபயோகமில்லை என்று கருதிப், பரணைக்கு அனுப்புகிற, பழைய காலப் போர்க் கருவிகளாக, நாம் வாங்கிக் குவித்துக்கொண்டிருக்கிறோம்.

என்று, பொருள் விரயமாவது பற்றி தேஷ்முக் கவலைப் படுகிறார்.

பொருளாதார நிபுணர்களும், பொறுப்புமிக்கவர்களும், இத்தகைய கவலைகளை வெளியிடும்போது, தில்லி கண்டித்தும் கேவலப்படுத்தியும், அவர்களின வாயை அடைத்துவிடப் பார்க்கிறது.

பொதுமக்களிடம், திட்டங்களைப்பற்றிப் பேசிப் பேசி, தித்திக்கிறதல்லவா என்று தில்லி கேட்கிறது. ஆடம்பரத்தையும் அலங்காரத்தையும் காட்டி பெருமைப்படச் சொல்கிறது.

பிரான்சிலே அழகான கட்டிடம், அகன்ற பாதை அற்புதக் கலைகள், எல்லாம் இருந்தன. ஆனால், செயலிலே பொறுப்புணர்ச்சியும், விளைவு தெரிந்து வினை செய்யும் திறனும் இல்லை; மக்கள் அபபடிப் பட்ட ஆட்சியை கவிழ்க்கத் தவறவுமில்லை.

உணவுப் பிரச்சினையை ஆராய்ந்த அசோக்மேத்தா குழு இதனை அறிவித்திருக்கிறது.

உணவுப்பொருள் இறக்குமதி கவலை தரும் பிரச்சினை என்பதைச் சுட்டிக்காட்டி, இந்திய நிதி அமைச்சராக இருந்த தேஷ்முக்,

## தமிழகம்

**மீன் வளம்:**

| | | | |
|---|---|---|---|
| கடலில் கிடைப்பது | — | 72 730 டன் | 7,18 இ. ரூபாய் |
| நாட்டில் கிடைப்பது | — | 40 856 டன் | 2,45 இ. ரூபாய் |

அது பிரான்சில்! பாரதம் வேறு!! — என்று எண்ணி ஏமாறக்கூடாது. பிரான்சு என்பது எங்கோ உள்ள ஒரு நாடு அல்ல; ஏழையின் கண்ணீர் விழும் இடமெங்கும், பிரான்சு தான் தோன்றும் — புரட்சி வெடிக்கும். ★




[இன்று மக்கள் மனதைப் பெரிதும் ஈர்த்திருக்கும் நடவடிக்கைகள், நாடுகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்கக் குறிப்புகள் பிரச்னையைப் புரிந்துகொள்ள மிகவும் தேவை.

செயல் புரிவோரின் பட்டியல் பெரிது; எனினும், சில குறித்து அறிந்திருந்தல்இன்றையத் தேவையாக இருக்கிறது.

இங்கு தரப்படும் குறிப்புகள், மேலும் விளக்கம் தேடத் தூண்டுகோலாக அமைய வேண்டும் என்பதே இதை வெளியிடுவதன் நோக்கம்.]

## இன ஒதுக்கல்
## APARTHEID
அபார்தியட்

**நி**றபேதம் காட்டும் ஏற்பாடுகள்:

பலத்த கண்டனத்துக்கும் எதிர்ப்புக்கும் இடையே, தென் ஆப்பிரிக்காவில் அமுல் செய்யப்பட்டுவரும், காட்டுமிராண்டிக் கொள்கை.

1948-ல் அங்கு அதிகாரத்துக்கு வந்த தேசியக் கட்சி, நிறபேதத்தைக்காட்டி, இனங்களைப்பிரித்துவைக்கும்முறையைப் புகுத்திவிட்டது.

வெள்ளை இனத்தவருடன் பிற நிறத்தவர், இனத்தவர், கலந்து வாழ்ந்துவந்தால், கலப்பு ஏற்பட்டுவிடும், வெள்ளை இனத்தின் தூய்மை கெட்டுவிடும் என்று தத்துவம் பேசப்படுகிறது.

கருப்பர் என்று யாரை ஒதுக்கி வைக்கிருர்களோ, அந்த ஆப்பிரிக்க மக்களே, ஆப்பிரிக்காவுக்கு உரிமையாளர். வெள்ளையர், இடம் பிடித்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்துபவர். அந்த ஆதிக்கத்தை ஆப்பிரிக்க எழுச்சி ஒழித்துக் கட்டிவிடும் என்ற திகிலில், கொடுமை செய்தாகிலும், ஆப்பிரிக்க மக்களை அடிமை நிலையில் வைத்திருக்கும் கெடுமதியே, இன ஒதுக்கல் திட்டத்தின் அடிப்படை.

1952ல், ஐக்கிய நாடுகள் மன்றம், இந்த இன ஒதுக்கல் முறைபற்றி விவாதித்து, அநாகரிகமானது, மனிதத் தன்மையை மாய்ப்பது, ஜனநாயகக்கொள்கைக்கே கேடு செய்வது என்றெல்லாம் அறிவித்துவிட்டது. ஆனால், தென் ஆப்பிரிக்கா தன்போக்கை மாற்றிக்கொள்ள மறுக்கிறது. மற்றவர்கள் இதுகுறித்துப் பேச உரிமையில்லை என்று கூறுகிறது.

என்றாலும், ஐக்கிய நாடுகள் சபையிலும் பிரிட்டிஷ் காமன்வெல்த்திலும் இடம் பெற்று இருக்கிறது.

தென் ஆப்பிரிக்காவின் போக்கைக் கண்டிக்கும் முறையில், அந்நாட்டுடன் வாணிபத் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது என்று மலாய் நாடு போன்றவைகள், செயல்பட்டுவருகின்றன.

இந்திய துரைத்தனம், இன ஒதுக்கல் கொள்கையைக் கண்டிக்கும் அளவோடு இருக்கிறது.

அண்மையில், ஐ. நா. வில், "எம்மைக் கண்டிக்கிறது இந்தியா. ஆனால், அங்கு ஜாதி காரணமாக உள்ளபேதம் கொஞ்சமா? அந்தக் கொடுமையை ஏன் போக்கவில்லை" என்று, தென் ஆப்பிரிக்க உறுப்பினர் பேசினர்.

ஜாதிபேதம், இங்கு ஊறிப் போயிருக்கிறது என்றால், சட்டம் அந்தப் பேதத்தைப் பாதுகாப்பதில்லை.

தென் ஆப்பிரிக்காவிலே, நிறபேதத்தைப் பாதுகாக்கவே சட்டங்கள் போட்டு அமுல் செய்கிருர்கள்.

அறிவாளர் அனைவருமே இதனைக் கண்டிக்கிருர்கள்.

எல்லா மதத்தலைவர்களும், இந்த இழிதன்மையைக் கண்டிக்கின்றனர்.

என்றாலும், ஊரிலே தனி இடம், பள்ளிக்கூடம் தனி, வைத்தியசாலை தனி, பஸ் தனி, சினிமாக்கொட்டகைகளில் தனி இடம், என்று கருப்பர் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளனர். இரத்ததானம் பெறும் இடத்தில்கூட, கருப்பரின் இரத்தம், தனியாக, கருப்பருக்காகவென்று வைக்கப்படுகிறது.

## பாக்தாத் ஒப்பந்தம்

1955-ல், ஈராக்நாட்டுக்கும் துருக்கிக்கும் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையைத் தொடர்ந்து, மத்திய கிழக்கு நாடுகள் கூட்டாகப் பணியாற்றுவதற்காக ஒருமுகாம் அமைத்திட, பாக்தாத் ஒப்பந்தம் பயன்படுத்தப் பட்டது.

இந்த ஒப்பந்தத்தில், பிரிட்டனும், பாகிஸ்தான மும், பெர்ஷியாவும் சேர்ந்தன.

சோவியத்துக்கு எதிராக, வல்லரசுகள் எழுப்பும் 'காவிதக்கோட்டை' என்ற நிலைதான், பாக்தாத் ஒப் பந்தத்துக்கு, ஏற்பட்டிருக்கிறது.

எகிப்தில், நாசர் ஏற்பட்டபிறகு பாக்தாத் ஒப்பந் தம், கேலிக்குரிய ஏற்பாடாகிவிட்டது.

பாக்தாத் ஒப்பந்தத்தில் சேர்ந்துள்ள நாடுகள் எதனையாவது வேற்று நாட்டவர் தாக்கினால், உத விக்குப் போவது என்பதிலேகூடத் தெளிவும் உறுதி யும் இல்லை.

பாக்தாத் ஒப்பந்தம், மத்தியகிழக்கு நாடுகளை ஒரு அணியாக்கிப் பொருள்கொடுத்துக் கட்டுப்படுத்தி, படைத்தளங்களாக்கிக்கொண்டு, சோவியத்மீது தாக் குதல் நடத்த அமைக்கப்பட்ட, ஏகாதிபத்திய சதி என்றும், அந்தச் சதியும் சரிந்துவிட்டது என்றும், இப்போது, அரசியல்வட்டாரத்தினர் கூறுகின்றனர்.

பாக்தாத் ஒப்பந்தத்திலே இன்று உள்ள, இஸ் லாமிய நாடுகளிலேயே, மிக்க பலம் வாய்ந்தது, பாகிஸ்தான்.

## பாண்டுங் மாநாடு

1955-ல் இந்தோனேஷியாவில், பாண்டுங் என்ற ஊரில் ஆசியா — ஆப்பிரிக்கா கண்டத்து நாடுகள் பல கூடி நடத்திய மாநாடு.

ஏப்ரல் மாதம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட நாடுகள்:

ஆப்கனிஸ்தான்
கம்போடியா
சிலோன்
சைனா
ஈசிப்ட்
எதியோபியா
கோல்ட்கோஸ்ட் (கனா)
இந்தியா
இந்தோனேஷியா
ஈராக்
ஜப்பான்
ஜோர்டான்
லாவோஸ்
லெபனன்
லைபீரியா
லிபியா
நேபாளம்
பாகிஸ்தான்
பெர்ஷியா
பிலிப்பைன்ஸ்
சவுதி அரேபியா
சூடான்
சிரியா
தாய்லந்து
துருக்கி
வடக்கு வியட்-நாம்
தெற்கு வியட்-நாம்
ஏமன்.

இந்த நாடுகளில், பல, மேற்கத்தி வல்லரசுகளுக்கு வேண்டியவை என்றும், மற்றவை சோவியத்துக்கு ஆதரவு தருபவை என்றும் சொல்லப்பட்டன.

என்றாலும், பஞ்சசிலக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, இந்த மாநாடு, உலகோரின் நன் மதிப்பைப் பெற்றது.

பண்டித நேரு இந்த மகாநாட்டிலே சீன கலந்து கொண்டபோது, இந்தியாவும் — சீனவும் கைகோர்த் துக்கொண்டு, உலக சமாதானத்துக்குப் பாடுபடும் என்று உலகம் பாராட்டிற்று.

ஆனால், எல்லை விஷயத்திலே சீன நடந்து கொண்ட அக்ரமம், பலரைத் திடுக்கிடச்செய்து விட்டது.

பாண்டுங்கில், பஞ்சசிலம் பேசிய சீன, இந்திய எல்லைமைக் கைப்பற்றியது, பாண்டுங் மகாநாட்டில் கலந்துகொண்டு, அதன்மூலம் ஆசியாவிலும் ஆப்பி ரிக்காவிலும், சமாதானச் சூழ்நிலையும், அரசியல் தர்ம மும் நிலவும் என்று நம்பிக்கொண்டிருந்தவர்களைத் திடுக்கிடச் செய்துவிட்டது.

## கொலம்போ திட்டம்

பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களால் 1950, ஜனவரியில், சிலோனில், கொழும்பு நகரத்தில் நடைபெற்ற கூட்டத்தில், உரு வாக்கப்பட்ட, திட்டம்.

பாகிஸ்தான், பர்மா, இந்தியா, சிலோன், நேபால் தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ், கம்போடியா, பிலிப்பைன்ஸ், மலாயா, சிங்கப்பூர், இந்தோனேசியா, போர்னியோ ஆகிய நாடுகள், இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளன.

உலகிலேயே, மிகப்பெரும் அளவு சணல், ரப்பர், தேயிலை, தகரம், எண்ணெய், கொழுப்புச் சத்து போன்றவைகள், கொலம்போ திட்டத்தில் இணைந் துள்ள நாடுகளிலே கிடைக்கின்றன.

ஒன்றுக்கொன்று உதவி செய்துகொள்வது, இந்தத் திட்டத்தின் அடிப்படை.

மொத்தத்தில், இந்தத் திட்டத்திலே இணைந் துள்ள நாடுகளில், கரம்பு கழனியாக்குவது, மின்சார உற்பத்தி பெருக்குவது போன்றவற்றுக்கான ஏற் பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தத் திட்டத்தில் இணைந்துள்ள நாடுகளி லிருந்தே திரட்டப்படும் உதவித் தொகையுடன்,

அமெரிக்காவும், சர்வதேச பாங்கும் தரும் தொகையைச் சேர்த்து, முன்னேற்றம் காண்பதற்காகப், பல்வேறு இடங்களில் பகிர்ந்து அளிக்கப்படுகிறது.

திட்டத்தில் இணைந்துள்ள நாடுகள் ஒன்றுக்கொன்று, தொழில் நுட்பப் பயிற்சி அளித்துவருவதற்கு ஏற்பாடு இருக்கிறது.

மொத்தத்தில், இந்தத் திட்டம், இந்த நாடுகளிடையே ஒரு நேசத்தொடர்பை வளமாக வைத்திருக்க, வழி செய்துவருகிறது.

கொலம்போ திட்டத்தின்படி ஒரு நாட்டிலிருந்து மாணவர்கள் மற்ற நாடுகள் சென்று, தொழில் விஞ்ஞானப் பயிற்சிகள் பெற்று வருகிறார்கள்.

## கிழக்கு ஐரோப்பியக் கூட்டணி

வார்சா நகரில், 1955 மே மாதம் கூடிய மாநாட்டில் அல்பேனியா, அங்கேரி, போலந்து, ருமேனியா, கிழக்கு ஜெர்மனி, சோவியத் ரஷியா ஆகிய நாடுகள் கொண்ட கூட்டணி, ஒன்றுக்கொன்று உதவிசெய்துகொள்ளவும், எந்த ஒரு நாடாவது தாக்குதலுக்கு உள்ளானால், அணியில் உள்ள மற்ற நாடுகள், துணைக்கு எழவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டணி ஏற்பாடு, இருபதாண்டுகள் இருக்க ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது.

சோவியத்துக்கு எதிராக, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் முகாம் அமைக்கப்பட்டதற்குப் பதிலளிக்கும் முறையிலேயே இந்த அணி அமைக்கப்பட்டது.

மேற்கு முகாம் அமைக்கப்பட்ட ஐந்தாம் நாள் கிழக்கு அணி அமைக்கப்பட்டது.

## ஐந்தாம் படை

1936-ல், ஸ்பெயினில் நடைபெற்ற உள்நாட்டுப் போரின்போது, இன்று அந்த நாட்டுச் சர்வாதிகாரியாகிவிட்ட ஜெனரல் பிராங்கோ, நாலு படைவரிசைகளுடன், தலைநகரான மாட்ரிட்மீது தாக்குதலை நடத்தினார்.

அப்போது ஸ்பெயினுக்கு உள்ளே இருந்துகொண்டு கலகம் விளைவித்தும், பலாத்காரச் சதிகள் நடத்தியும், அரசுக்கு ஆபத்தை உண்டாக்க ஒரு படை வேலை செய்துவந்தது.

பிராங்கோவிடம் இருந்த நாலு படைகள் இல்லாமல், இது ஒரு படை. எனவே, இது ஐந்தாம் படை என்று பெயர் பெற்றது. உள்ளிருந்து சதியாகத் தாக்குதல் செய்யும், துரோகக் கும்பலுக்கு ஏற்ற பெயராக்கப்பட்டுவிட்டது, 'ஐந்தாம் படை' என்ற சொல்.

## ஓயாமற் பேசிச் செயலைத் தடுக்கும் முறை
## FILLIBUSTERING

அமெரிக்க செனட்சபையில், மசோதாக்கள், சட்டமாவதைத் தடுக்க, மேற்கொள்ளப்படும் முறை, ஓயாமற் பேசுவது. மசோதாவை எதிர்த்துப் பேசுவோர், பேச்சை முடிக்காமல் மணிக்கணக்கில், நாட்கணக்கில், பேசுவர். செனட் உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர், பேச்சை முடிக்கத் தேவையில்லை என்று அறிவித்துவிட்டாலும் போதும், எதிர்ப்பாளர் பேசுவதைத் தடுக்கமுடியாது.

## அசுவான் அணை

நைல் நதியின் தண்ணீரைத் தேக்கிப், பாசனத்துக்கும், மின்சாரத்துக்கும் பயன்படுத்த, எகிப்து, மேற்கொண்டுள்ள மிகப் பெரிய அணை.

ஏற்கனவே, பிரிட்டன், அசுவான் அணை என்ற பெயருடன் சிறிய அளவில் ஒன்று கட்டிற்று.

ஆனால் இது மிகப் பெரிது.

அசுவான் அணை என்று இன்று உலகோர் பேசுவது, இதனைத்தான்.

ஏற்கனவே உள்ள அணையிலிருந்து 300 மைலுக்கு அப்பால் அசுவான் அணை அமைக்கப்படுகிறது.

இப்போது உள்ள அணையில் தேக்கப்படும் தண்ணீரின் அளவைவிட 20 மடங்கு அதிகமாக நீர் தேக்கப்படும்,

2,000,000, ஏகர் பாசனம் பெறும்.

1970க்குள் அணை கட்டிவிடத் திட்டமிடுகிறது எகிப்து.

அசுவான் அணைக்காகப் பணம் ஏது, எகிப்திடம்? எனவே, பணம்பெற, சூயஸ் கால்வாய் பிரச்சினையில், நாசர், சரணடைவார், என்று ஏகாதிபத்ய நாடுகள் எதிர்பார்த்து ஏமாந்தன.

இப்போது அசுவான் அணை கட்டத் தேவைப்படும் பணத்தைக் கடனாகத்தர, பல நாடுகளும், அமைப்புகளும் முன்வந்துள்ளன.

அசுவான் அணை கட்டப்பட்டானதும், எகிப்தின் பருத்தி விளைச்சல் பன்மடங்கு அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உலக பாங்க்

ஐ. நா. வின் ஏற்பாட்டின்படி, 44 நாடுகள் அமெரிக்காவில், பிரெட்டன்வுட்ஸ் எனும் இடத்தில், 1944, ஜூலையில் கூடி அமைத்தது உலக பாங்க்.

இது ஐ. நா. சபையினால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு என்றாலும், இது தனியாகவே இயங்கி வருகிறது.

இந்த அமைப்பு, தனியாரிடமிருந்து பெறமுடியாத அளவு மூலதனம், எந்த நாட்டுக்காவது தொழில் நடத்தத் தேவைப்பட்டால், ஆராய்ந்து, கடன் உதவி அளிக்கும். கடனைத் திருப்பிப் பெறுவதற்கு, இந்த அமைப்பில் ஈடுபட்டுள்ள நாடுகள் உறுதி அளிக்கின்றன.

1946லிருந்து 1957 வரை 3,480, 100,000 டாலர் கடன் உதவி செய்திருக்கிறது உலக பாங்க்.

வெள்ளத் தடுப்பு, போக்குவரத்து, சுரங்கம், பாசனம், விவசாயம், மின்சாரம், தொழில், போன்ற பல்வேறு துறைகளுக்கான திட்டங்களுக்காகக் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

உலக பாங்க் அமைப்பில் இணைந்துள்ள நாடுகளுக்குக் கடன் உதவி கிடைக்கும்.

அந்த நாடுகளிலே உள்ள, தனியார் துறையினருக்கும் கடன் தரப்படும். ஆனால் அந்தத் தொழிலதிபர் எந்நாட்டவரோ, அந்த நாடு, கடனுக்கான உறுதி அளிக்கவேண்டும்.

நிர்வாகத்திலே, இந்த அமைப்பில் உள்ள நாடுகள் பங்குபெற, முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

10 000,000,000 டாலர் அதிகாரம் பெற்ற மூலதனம் என்று உலக பாங்க்குக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது.

## வெள்ளை மாளிகை

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவரின் அலுவலக மாளிகைக்கு வெள்ளை மாளிகை என்று பெயர். வாஷிங்டன் நகரில் இருக்கிறது இது.

1792-ல் இது கட்ட ஆரம்பிக்கப்பட்டது. அப்போது, தலைவர் வாஷிங்டன். ஆனால் கட்டி முடிப்பதற்குள் அவர் இறந்துவிட்டார்.

ஜான் ஆடம்ஸ், என்ற தலைவர்தான் முதன் முதல் இதில் குடியேறினார். இது 1800ம் ஆண்டு.

அப்போது, மாளிகைச் சுவர் பழுப்பு நிறம்.

1814-ல், பிரிட்டிஷாருடன் நடந்த போரிலே, கட்டிடம் தாக்கப்பட்டுச், சுவர், கரிபடிந்துவிட்டது. புகைக்கரி தெரியாதிருப்பதற்காக வெள்ளை நிறம் அடித்தார்கள்.

அதுமுதல், வெள்ளை மாளிகை என்ற பெயர் வந்தது.

வெள்ளை மாளிகை, அமைக்கப்பட்டுள்ள இடம் 18 ஏகர் அளவுள்ளது.

பெரிய வரவேற்பு வைபவம் நடப்பது, இதில் உள்ள கிழக்கு அறை எனும் கூடத்தில்.

மற்றும் சிகப்புஅறை, பச்சை அறை, நீல அறை என்று பல கூடங்கள் உள்ளன.

1902-ல், மேற்குப் பகுதியில் மூன்றடுக்கு மாடியும், 1942-ல் கிழக்குப் பகுதியில் ஒரு மூன்றடுக்கு மாடியும், 1948ல் தெற்குப் பக்கமாக இரண்டு அடுக்கு மாடியும் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டன.

இப்போது வெள்ளை மாளிகையில் மொத்தம் 132 அறைகள் உள்ளன.

## SEATO
## சியாடோ

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பாதுகாப்பு ஒப்பந்தம்—சியாடோ.

1954ம் ஆண்டு, பிலிப்பைன்ஸ் தீவிலே உள்ள மணிலா எனும் இடத்தில் இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஆஸ்ட்ரேலியா
பிரான்சு
நியுஜிலாந்து
பாகிஸ்தான்
பிலிப்பைன்ஸ்
தாய்லாந்து
பிரிட்டன்
அமெரிக்கா

ஆகிய நாடுகள், சியாடோ ஒப்பந்தத்தில் இணைந்துள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் உள்ள நாடுகளின்மீது எந்த நாடாவது தாக்குதல் நடத்தினால், மற்றவை உதவிக்குச் செல்வதென்றும், இந்த நாடுகளிலே, உள்நாட்டில் பலாத்காரப் புரட்சி மூண்டால் தலையிடுவது என்றும் ஏற்பாடாகியிருக்கிறது.

பொருளாதார சம்பந்தமான உதவிகளைச் செய்து கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால், அடிப்படை நோக்கம், சோவியத்தின் மீது உள்ள பகையும் பயமும் காரணமாக அணி அமைத்துக்கொள்வது என்பதுதான்.

## NATO
## நாட்டோ

வட அட்லான்டிக் ஒப்பந்தம் நாட்டோ என்பது.

1944-ல் ஏற்பட்டது.

இதிலே இணைக்கப்பட்டுள்ள நாடுகள்,

பெல்ஜியம்
பிரான்சு
லக்சம்பர்க்
நெதர்லாந்து
பிரிட்டன்
கனடா
டென்மார்க்
ஐஸ்லாந்து
இத்தாலி
நார்வே
போர்ச்சுகல்
அமெரிக்கா

இதிலே இணைந்துள்ள நாடுகளில் ஏதாவது ஒன்று தாக்கப்பட்டால், மற்ற நாடுகள் உதவிக்குக் கிளம்பும்.

இந்த ஏற்பாடும், சோவியத்துக்கும்—அமெரிக்காவுக்கும் இடையே உள்ள பகையுணர்ச்சியின் ஒரு விளைவுதான்.

## பிராவ்தா

ரஷியாவில், பொதுவுடைமைக் கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகை...

ப்ராவ்தா என்றால் உண்மை என்று பொருள்.

1912ல் இது, ஸ்டாலினை ஆசிரியராகவும், மலடாவைச் செயலாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

## நோபல் பரிசு

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த தொழிலதிபர், நோபல் என்பவர் தம்முடைய சொத்தை 1896ல், இந்தத் தர்ம நிதிக்குத் தந்தார்.

இதைக்கொண்டு, அறிவுத் துறையில் அகில உலக வித்தகர் என்று கருதப்படும் ஐந்து பேர்களுக்குப், பரிசு அளிக்கப்படுகிறது.

ஐந்து பரிசுகளில், ஒன்று உலக சமாதானத்துக்காகப் பாடுபடுபவருக்கு.

நோபல் பரிசுக்குத் தமது சொத்தை வழங்கிய நோபல், சொத்துச் சம்பாதித்தது, வெடிமருந்துத் தொழில் மூலம்!

## மாவ் மாவ் சங்கம்

ஆப்பிரிக்க கெனியாவில் அமைக்கப்பட்ட சங்கம்.

கெனியா விடுதலைக்காக உள்ளது.

இது வெள்ளையரை வெட்டிக் குவிக்கவேண்டும் என்று திட்டமிட்டுச், சதிச்செயல் புரிவதாகவும், பயங்கரவாதிகள் சங்கமென்றும் கூறி வெள்ளை அரசு இதைக் கலைத்தது.

மாவ் மாவ் இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் என்ற காரணம்காட்டி, ஆப்பிரிக்கர்கள், கொடுமைப்படுத்தப்பட்டார்கள்.

கொடுமை தாங்கமாட்டாமல், பலர் காடுகளுக்குள் ஓடிவிட்டனர்.

அங்கும் துரத்திச்சென்று வெள்ளையர், வேட்டையாடிப் பலரைக் கொன்றனர்.

கெனியா விடுதலை வீரர் ஜோமோ கெனியாடா இந்த பயங்கரவாதிச் சங்கத்தவர் என்று குற்றம் சாட்டி 7-ஆண்டு தண்டனை கொடுத்தனர்.

மாவ் மாவ் இயக்கத்தை ஒழித்துக்கட்டிவிட்டதாக வெள்ளை அரசு பேசுகிறது.

என்றாலும், கெனியாடாவை; கெனியா வர அனுமதிக்க அஞ்சுகிறது.

## மார்ஷல் திட்டம்

1947-ல், அமெரிக்க அரசுச் செயலாளர் மார்ஷல், ஐரோப்பிய நாடுகளின் நலிவுபோக்க, பொருளுதவி, தொழிலுதவி தருவதற்காக, அமைத்த ஏற்பாடு.

பொதுஉடைமைத் தொடர்புள்ள நாடுகள், இது அமெரிக்கா எளியநாடுகளைப், பணத்தால் அடிமை கொள்ளச்செய்யும் சூது என்று கண்டித்துச், சேர மறுத்துவிட்டன.

பிரிட்டன் இதை வரவேற்றது.

வேறுபல ஐரோப்பிய நாடுகள் மார்ஷல் திட்டத்தின் கீழ் உதவிகள் பெறுகின்றன.

## லாவோஸ்

இந்தோ—சைனாவின் வடமேற்கே உள்ள நாடு.

90,000 சதுரமைல் பரப்பளவு கொண்டது.

2,000,000 குடிமக்கள் கொண்ட நாடு.

பெரும்பாலோர், புத்தமதத்தினர்.

முன்பு பிரன்சுப் பிடியில் இருந்தது.

விடுதலை பெற்று, மன்னர் தலைமையில் தனியாட்சி தொடங்கிற்று.

இன்று, களமாகித் தவிக்கிறது.

## பெல்ஜியம்

பெல்ஜியம் இன்று பெரிய கேள்விக் குறியாகி விட்டது. ஐ. நா. வின் முயற்சிக்கே வேட்டு வைக்கும் நாடு என்று பலரும் கண்டிக்கத்தக்க போக்கை மேற்கொண்டிருக்கிறது—காங்கோ பிரச்சினையில்.

உள்நாட்டிலேயே, பெரியதோர் நெருக்கடி, வேலை நிறுத்தத்தாலும், தொழிலாளர் கிளர்ச்சியாலும் உருவாகி விட்டிருக்கிறது.

இந்தக் கிளர்ச்சியினால், மன்னரின் அதிகாரத்துக்கும் மக்களாட்சித் தலைவரின் அதிகாரத்துக்கும், வரம்பு என்ன என்ற பிரச்சினையும் வடிவமெடுத்துள்ளது.

ஐரோப்பாக் கண்டத்திலே தனியாட்சி நடாத்திடும், பெல்ஜியம், 11,779 சதுரமைல் பரப்பளவு கொண்ட நாடு.

8,951,493 குடிமக்களைக் கொண்டது.

பெரும்பகுதியினர், கத்தோலிக்கர்கள்.

ஜெர்மனி மூட்டிவிட்ட இரண்டு போர்களின் போதும், பெல்ஜியம் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க வேண்டி நேரிட்டது.

பெல்ஜியம் சிறிய நாடு — அத்துடன் தொழில் வளம் போதுமான அளவு இல்லை.

பெல்ஜியத்தில் பொருள் படைத்தோர், பெரிதும் காங்கோவில் தமது முதல் போட்டுத் தொழில் நடத்தி, சுறண்டுவதிலேயே சுவைகொண்டவராக உள்ளனர்.

இப்போது, காங்கோ கைவிட்டுப்போகிறது என்பதால் கலக்கம்.

அதேபோது, உள்நாட்டிலே கலகம், கிளர்ச்சி, வேலைநிறுத்தம்.

பெல்ஜியம் காங்கோவில் நடந்துகொள்ளும் போக்கு, கவலை தருவதாக இருக்கிறது என்று, ஐ. நா. காரியதரிசியும் கண்டித்திருக்கிறார்.

காங்கோ இரத்தக்களரிக்குக் காரணமே, பெல்ஜியம்தான் என்று கூறப்படுகிறது.

## காங்கோ

விடுதலைபெற்று, இன்று இரத்தக் காடாக இருக்கும் காங்கோ, லுமும்பா, கசவுபு, மொபுடு, ஷாம்பே, எனும் பல்வேறு தலைவர்கள் நடத்திவரும் பதவிச் சண்டையால், படுகளமாகி இருக்கிறது.

வலுத்தவன், மற்றவர்களை, வாட்டி வதைப்பதே, ஆட்சிமுறை என்ற நிலை.

ஐ. நா. படைகள், அமளி காட்டுத் தீயாகாமல், பார்த்துக்கொள்ளச் சென்றுள்ளன; என்றாலும், அதன் பிடியை, மொபுடு ஏற்பதாகத் தெரியவில்லை.

காங்கோ, 1885-ல், பெல்ஜியம் நாட்டின், வேட்டைக் காடு ஆக்கப்பட்டது.

காங்கோ, பெல்ஜியத்தைப்போல 80 மடங்கு பெரிய அளவு உள்ளது.

905,582 சதுர மைல் பரப்பளவு கொண்டது.

12,843, 574 குடி மக்கள் கொண்ட நாடு.

காங்கோவில், பெரும் செல்வம் தரத்தக்க, காப்பியும் பருத்தியும், பருப்பு வகைகளும் பயிரிடப்படுகின்றன.

காங்கோ நாட்டிலே பாய்ந்தோடும் ஆறுகள் பல. மின்சாரம் ஆற்று நீர் ஓட்டத்திலிருந்து கிடைக்கிறது.

நீரோட்ட மூலம் உலகில் கிடைக்கப்பெறும் மின்சாரத்தின் அளவில், ஐந்தில் ஒரு பாகம், காங்கோவில் கிடைக்கிறது.

அணு ஆயுதங்களுக்குத் தேவைப்படும் யுரேனியம், மிக அதிக அளவில் இங்கு கிடைக்கிறது.

காங்கோ நாட்டு, விவசாயப் பொருளையும் தொழிலையும், பெல்ஜிய மூலதனம் போட்டு நடத்தப்படும் ஐந்து கம்பெனிகள், தம் வசம் வைத்துக்கொண்டுள்ளன.

அந்தக் கம்பெனிகளிடம்தான் காங்கோவின் பொருளாதார உயிர்நாடியே சிக்கிக்கொண்டு இருக்கிறது.

உழைத்திடக் காங்கோ மக்கள்; ஆப்பிரிக்கர்கள்.

சுறண்டிக் கொழுப்போர், பெல்ஜிய நாட்டு முதலாளிகள்.

அவர்கள் அவ்வப்போது ஏவிவிடும், பதவி வெறி பிடித்த தலைவர்கள், கசவுபு, மொபுடு, ஷாம்பே போன்றோர்.

பெல்ஜியத்தின் போக்கை, இப்போது, பல்வேறு நாட்டுப் பேரறிவாளரும் கண்டிக்கின்றனர்.

பெல்ஜிய முதலாளிகள், காங்கோவில் போட்டுள்ள முதலுக்கு ஈடாக, செல்வத்தைச் சுறண்டிடவே, விடுதலை தந்துவிட்டோம் என்று அறிவித்தான பிறகும், காங்கோவில் பெல்ஜியம், முகாமிட்டு இருக்கிறது என்று விஷயமறிந்தோர் கூறுகின்றனர்.

## அல்ஜீரியா

உடலெங்கும் வடுக்கள்! உடைந்தவாள்! ஒழுகும் இரத்தத்தைத் துடைக்கவும் நேரமின்றிப் போரிடும் வீரன்! அவன் மயக்கமுறும் வேளையிலே, கொத்தவரும் கழுகுக் கூட்டம்!

இப்படி ஒரு காட்சியை நினைவிற்கொண்டால், இன்றைய அல்ஜீரியாவைக் காண்கிறோம் என்னலாம்.

வட ஆப்பிரிக்காவில் உள்ள இந்நாடு, பிரன்சுப் பிடியில் 1865-ல் சிக்கிக்கொண்டது.

8,60,937 சதுரமைல் பரப்பளவு கொண்டநாடு.

தலைநகரம் அல்ஜீயர்ஸ்.

9,530,000 குடிமக்கள் உள்ளனர்.

1,000,000 மட்டுமே ஐரோப்பியர்; மற்றவரெல்லாம் முசுலீம்கள். எனினும், பிரஞ்சுப் பிடியில்தான் அல்ஜீரியா இருக்கவேண்டுமென்று; அங்கு முகாம் அமைத்துக்கொண்டுள்ள பிரன்சு முரடர்கள் கூறுகின்றனர்.

ஓரளவு தாராளம் காட்டமுனையும் பிரான்சுநாட்டுத் தலைவர்களைக்கூட, அரசியல் பதவிகளிலிருந்து விரட்டி அடிக்கும் அளவு, இவர்களுக்குச் செல்வாக்கு இருக்கிறது.

அல்ஜீரியாவில், பெரிய நிலப்பிரபுக்களாக வாழ்ந்து, கொழுத்துவரும் பிரன்சுக்காரர் இப்போது, தெகோலைக்கூட ஆட்டிப்படைக்கத் துணியும் போக்கிலுள்ளனர்,

அல்ஜீரிய மக்கள்; தட்டிக்கொடுக்கும் போக்கையும், சிறுசிறு சலுகைகளையும் இனி நாங்கள் விரும்பவில்லை, வேண்டுவது முழுவிடுதலை, என்று முழக்கமிட்டுப் போரிட்டு மடிகின்றார்கள்; என்றாலும் ஓய்ந்திடவில்லை.

அல்ஜீரிய விடுதலை சர்க்கார் ஒன்று, அமைத்து வேறு நாட்டிலிருந்து, நடத்திக்கொண்டு வருகின்றனர்.

அல்ஜீரியாவின் விடுதலைக்கு ஆதரவு காட்டாத நல்லறிவாளர் எவருமே இல்லை என்று கூறலாம்.

உலகில் உருப்பெற்றுவரும் கருத்தினையும் மதியாமல், பிரன்சு ஆதிக்கத்தைப், பெயர்மாற்றியேனும் நிலைநிறுத்த, வழிபல தேடி வதைப்பட்டு வருகிறார், தெகோல். வழி ஒன்றே ஒன்று உண்டு; வருவது வரட்டும் என்று, அல்ஜீரியாவில் உள்ள புரட்சிக்காரரை எல்லாம் சுட்டுத் தள்ளவேண்டும் என்று வெறிகொண்ட பிரன்சு ஆதிக்கக்காரர் உறுமுகின்றனர்.

இவர்களுக்கு, படை அணியில் பெரும் செல்வாக்கு உண்டென்றும், எந்த நேரத்திலும் படையிலே பிளவு ஏற்பட்டு, தெகோலையே, கவிழ்த்துவிடக் கூடுமென்றும் பலமான பேச்சு அடிபட்ட வண்ணமிருக்கிறது.

## க்யூபா

குபேரபுரியை எதிர்த்து நிற்கும், க்யூபா, தென் அமெரிக்காவில் உள்ள, நாடு. 46,736 சதுரமைல். 6,125,000 குடிமக்கள்.

தலைநகரம் ஹவானு.

16லிருந்து 19ம் நூற்றுண்டு வரையில், ஸ்பெயின் நாட்டின் இருப்புக்காலின் கீழ் சிக்கி வதைபட்டது; புரட்சி பல நடத்தி, இரத்த வெள்ளத்தில் குளித்தெழுந்து 1901ல், தனி அரசு நிலைபெற்று, தன்னுட்சி நடத்தலாயிற்று.

உலகிலேயே மிக அதிகமான அளவு சர்க்கரை, கியுபாவில் தயாராகிறது.

புகையிலை உற்பத்தியும் மிக அதிகம்.

இயற்கைச் செல்வம் இருந்தாலும், அதனைப் பயன்படுத்திப் பலன்காண, க்யூபா மக்களுக்கு வழி இல்லை.

எல்லா இடங்களிலும் அமெரிக்கப் பொருளாதார ஏகாதிபத்தியப் பிடி!

அந்தப் பிடிக்குத் தலையாட்டும் விதமாக அரசு இருத்தல் வேண்டுமென்று, அமெரிக்கா திட்டமிட்டு, அமைச்சர்களை ஆக்குவதும் அழிப்பதுமாக இருந்தது.

காஸ்ட்ரோ எனும் வீரன், நெருப்பிலே நீந்தினன்; தன் தம்பியின் துணையுடன், விரல்விட்டு எண்ணிடத்தக்க தோழர்களின் உதவியுடன், புரட்சி நடத்தி, புல்லர் ஆட்சியை விரட்டி, க்யூபாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துகிறுன்.

காஸ்ட்ரோவின் கரத்துக்கு வலிவூட்ட, நான் தயார், என்று சோவியத் குருஷேவும் அறிவித்து விட்டதாலே, அமெரிக்க ஆதிக்கத்தின் அடிப்படையைத் தகர்த்தெறியக், காஸ்ட்ரோ திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றுன்.

அமெரிக்கா, பெரும் பணத்தைக்கொட்டி நடத்தி வரும் பெரும் தொழில்கள் எல்லாமே, தேச உடைமை என்று சட்டம் பிறப்பித்துவிட்டான்.

பதிலடி கொடுத்திட்டாலோ, உலகப் பெரும் போர் மூண்டிடுமோ, என்பது அமெரிக்காவின் கவலை.

க்யூபாவின் சர்க்கரைக்கு இனி அமெரிக்காவில் இடம் இல்லை என்று கூறி, வயிற்றில் அடித்தால், வழிக்கு வருவார்கள் என்று எண்ணுகிருர்கள்.

இனி, எதற்கும் அஞ்சமாட்டோம்! பெற்றதை இழக்கமாட்டோம்!! என்று முழக்கமிட்டு, இரு காஸ்ட்ரோக்களும், வீரத்தை எழுச்சிதனை க்யூபாவில் நிரம்பச் செய்து ஆட்சி நடத்துகின்றுர்.

அண்டை அயல் நாடுகளைத் தூண்டிவிட்டுக், க்யூபாவை அலைக்கழிக்கச் செய்யவேண்டுமென்று அமெரிக்கா திட்டமிட்டுச், சதிசெய்வதாகக், காஸ்ட்ரோ குற்றம் சாட்டுகிறுன்.

அமெரிக்கா மறுக்கிறது. எனினும், க்யூபாவில் குமுறல் ஓயவில்லை; போர்க் குறிகள் நீங்கவிலலை.

மக்களோ, காஸ்ட்ரோ எங்கள் ஒப்பற்ற தலைவன் என்று நித்தமும் போற்றுகின்றுர்கள்.

உழைப்புக்கு மதிப்பளித்தல், காமவெறியாட்டம் தனை ஒழித்தல், கட்டுப்பாடு காணல், எனும் பல் வேறு திட்டங்கள் போட்டு க்யூபாவில், காஸ்ட்ரோ ஆட்சி நடத்தி வருகிறுன்.

## இஸ்ரேல்

எமது இதயத்துக்கு எரிச்சலூட்டும் புண்ணுக இருப்பது இஸ்ரேல் என்று, நாசர் கூறுகிருர்; அது அராபியர் அனைவரின் கருத்தாகும் என்று காட்டு கிருர்.

இஸ்ரேல், மத்திய தரைக்கடலின் கிழக்குக் கோடியில் உள்ள தனி நாடு—7,993 சதுர மைல், கொண்டது.

1,976,000 மக்கள் கொண்டது இஸ்ரேல்; மிகப் பெரும் பகுதி யூதர்கள்.

யூதர்களுக்காகவே இஸ்ரேல் அமைத்தனர், என்பது உலகம் அறியும்.

1948-ல், இஸ்ரேல் தனி நாடு ஆக அமைக்கப் பட்டபோதே, அராபியர்உலகம் ஆத்திரமடைந்தது.

1950-ல் இயற்றப்பட்ட சட்டப்படி யூதர் எங்கு இருப்பினும், இஸ்ரேலை, தன்நாடு என்று கொண்டு, குடி ஏற உரிமை பெறுகிறுன்.

உலகில் பல நாடுகளில் உன்னதமான நிலையில் உள்ள யூதர்கள், இஸ்ரேலை,வளமாக்கப்,பொருளுதவி மிகச் செய்து, பொன்னுடு ஆக்கிவிட்டார்கள். பொன்-கியூரான் போன்ற பெருந் தலைவர்கள், இஸ்ரேலின், வளம் காத்துப் பெருக்கிவிட்டனர்.

இப்போது, இஸ்ரேல், நூற்றுண்டுகளாக உழைத்து,வளம்கண்ட நாடுகளுக்கு ஈடாக,எழிலோடு இருக்கும் நிலை பெற்றுளது.

இதுகண்டு, அராபியர் நமக்கு ஆபத்துத் தருவிக்க, இஸ்ரேலை வளர்க்கின்றுர் என்றெண்ணிக் குமுறுகின்றுர்.

எமைத்தாக்க இஸ்ரேலும் எழுமானல், ஒரு நொடியில் இருக்குமிடம் தெரியாமல் அழித்திடுவோம் அதனை என்று, முழக்கமிடுகின்றுர், எகிப்து அதிபர் நாசர்.

எமக்குப் புனிதபுரி, இசுரேல், இங்கிருந்து எமது அரசு எவர்க்கும் எக்கேடும் செய்யாது என்று இசுரேல் கூறுகிறது.

எனினும், எல்லைச் சண்டை இரு நாடுகளுக்கும்.

எந்த நாட்டுக் கப்பலும், சூயஸ் வழி செல்லலாம்; இசுரேலுக்கு அந்த உரிமை தர இயலாது என்று, வேறு பல பிரச்சினைகளில் தாராளம் காட்டும் நாசர், கண்டிப்பாய்க் கூறுகின்றுர்.

இசுரேலை ஆதரிப்போர், எமக்குற்ற நண்பராகார்!—என்கின்றுர் நாசர்.

நாசர் கூறுவது, எமது நெஞ்சில் இருப்பது தான், என்று அராபியரின் தலைவரெல்லாம் கூறுகிருர்கள்.

இசுரேலுக்கு, தலைநகரம் ஜெருசலம்.

புனிதபுரியைத் தலைநகராகக் கொண்ட, யூதர் நாடு, புதுப்போருக்குக் காரணமாய், அமைந்துவிடக் கூடாதே, என்ற பெருங்கவலை பலருக்கும், இன்றும் உண்டு.

✻




"மணி சொன்னபிறகுதான் எனக்கு மனமே நிம்மதியாச்சடியம்மா. அந்தப் பெண்ணுக்கு இனி மயக்கமே வாராதாமே. போகட்டும். நல்ல கைராசி தான் இவளுக்கு இருக்கிறது"

"நான்கூட, உங்களிடம் பேசும்போது தைரிய மாக இருந்தேனே தவிர, உள்ளூர எனக்கும் பயம் தான். ஒரு குறையும் ஏற்படாது என்று சொன்ன பிறகுதான், பொங்கலைப்பற்றிய நினைப்பே வந்தது."

"பொங்கற் பண்டிகைதானேடி பொன்னி! உனக்கு ரொம்பப் பிடித்தமான பண்டிகை"

"பண்டிகை அல்ல அது. திருநாள்! விழா!..."

"ஏன், பண்டிகைஎன்றால் என்ன, கசக்கிறதோ?"

"பாகற்காய் என்று சொல்லிச் சாப்பிட்டாலும், மாம்பழம் இனிப்பாகத்தான் இருக்கும். என்றாலும், ஏன், உரிய பெயரிருக்க வேறு பெயரிடவேண்டும்..."

"பெயர் வைக்கும் போராட்டத்தில் சேர்ந்த வளோ, நீ."

"அதென்ன, உங்களுக்கு அக்கரை இருக்கக் கூடாதா அந்த விஷயமாகவெல்லாம்."

"அடி அம்மா! எனக்கு இருக்கும் எத்தனையோ வேலைகளில், இந்தப் பெயர் விஷயம் கவனிக்கவா நேரம் கிடைக்கும். அது கிடக்கட்டும். பண்டிகை என்று சொல்வதிலே என்ன தப்பு?"

"பழயது என்று, சொல்கிறோம், ஆறிப்போன சோற்றை."

"ஆமாம்."

"சுடசோறு என்று சொன்னால் என்ன தப்பு?"

"பொன்னி! என்ன, பேச்சா, இதெல்லாம்."

"பண்டிகை என்பது பெரிதும், பக்தி, புண்யம், போகிற கதிக்கு நல்லது தேடு வது, என்பதற்காக நடத்தப்படுவது. விழா, என்றால் மகிழ்ச்சி தெரிவிக்க, வாழ்க்கையிலே நிம்மதி பெற, இப்படி..."

"இப்படிச் சொன்னால் புரிகிறது. இதைவிட்டு விட்டு, வக்கணை பேசினால், கோபம் வராதா எனக்கு. சரி! பொங்கலுக்கு, புடவை புதுசா என்னென்ன எடுக்கப்போகிறே..."

"எப்போதும் போலத்தான். கைத்தறிப் புடவை..."

"இப்போதெல்லாம் கைத்தறிப் புடவைகள் ரொம்ப அழகாகவெல்லாம் வருகிறது, பொன்னி!"

"ஆமாம். ஆனால், கைத்தறிக்காரர்களின் கஷ்டம் மட்டும் இன்னும் தீர்ந்தபாடில்லை. சர்க்காரும் கண் துடைக்கிறார்கள், உருப்படியான காரியம் செய்வ தாகக் காணோம்."

"அவர்கள் எதை என்றுதான் கவனிப் பார்கள்."

"அது அல்ல காரணம். இன்று சர்க்காரை நடத்துகிற கட்சிக்கு மில்காரர்கள் ரொம்ப வேண்டிய வர்கள். எலக்ஷன் செலவுக்கு, ஏராளமான பணம், மில்காரர்கள் கொடுக்கிறார்கள்."

"அப்படி வாங்கக்கூடாது, என்று ராஜாஜி சொல்கிறாரே."

"அவராவது எதிர்க்கட்சி. இவர்களோட கட்சியைச் சேர்ந்தவர்களே சொல்லிப்பார்த்தாகிவிட்டது. கேட்டால்தானே."

"நேருவிடம் சொல்லக்கூடாதோ?"

"அதெல்லாம் சின்ன விஷயம் என்கிறார்."

"சின்ன விஷயம்தானே, அதைக் கவனிக்கலாமல்லவா?"

"இந்த மாதிரி கேட்க அந்தக் கட்சியிலே யாரும் இல்லை. கேட்டால் அடுத்தமுறை, தேர்தலிலே இடம் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற பயம்."

"கிடைக்காவிட்டால் போகிறது என்று மனதில் பட்டதைத் தைரியமாகச் சொல்லணும். பதவியா, பெரிது... செ!"

"பத்து வருஷத்துக்கு மேலே, யாரும், பதவியிலே இருக்கக்கூடாது என்று, அவர்கள் கட்சித் தலைவர் வேலையில் இருக்கும் சஞ்சீவி ரெட்டியார் கூடப் பேசுகிறார். பேசி? யார் ஒப்புக்கொள்கிறார்கள்."

"என்னமோ, யார் கண்டார்கள். அமெரிக்காவில் நடந்ததுபோல, இங்கு திடீரென்று, வேறு கட்சி ஜெயித்துவிடுகிறதோ என்னமோ..."

"அப்படி ஜெயித்தால், என்ன நடக்கும் தெரியுமோ? இப்போது இருக்கிற எலக்ஷன் முறையே சரியில்லை. வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டு என்று வந்ததாலே, தரமே குறைந்ததுபோய்விட்டது. இனி வேறே மாதிரி எலக்ஷன் ஏற்பாடு செய்யணும் என்று காங்கிரஸ் கட்சி பேச ஆரம்பித்துவிடும்."

"கொடுத்த ஓட்டுகளையே திரும்பப் பிடுங்கிக் கொள்வார்களா, என்ன?"

"மூடிய கள்ளுக் கடைகளையே, திறக்கலாம்னு பேசிக்கொண்டிருக்கிறார்களே, தைரியமா? அதைச் செய்யத் துணியும்போது, இது செய்யமாட்டார்களா என்ன?"

"ஏண்டி பொன்னி! கள்ளுக்கடை திறக்கணும்னு யார் பேசறா...?"

"காங்கிரஸ்காரர்தான். அதிலேயும், நேருவுடைய சொந்த ராஜ்யம், உத்திரப்பிரதேசம் இருக்கே, அங்கே இருக்கிற, முதல் மந்திரி குப்தா என்பவரே பேசுகிறார்."

"சே! ஏண்டி இவா இன்னமும், தங்களைக் காந்திக் கட்சின்னு சொல்லிக்கொள்கிறா."

"ஏன், சொல்லிக்கொள்கிறான்னா, ஜனங்க அனுமதிக்கறதாலேதான்... காங்கிரஸ் கட்சிக்காரர் எதைச் சொன்னாலும், தலையை ஆட்டிக்கொண்டு இருக்கற வரையிலே, அந்தக் கட்சி எதைத்தான் துணிஞ்சி செய்யாது, சொல்லாது. இல்லையானா, அரிசிச் சாதம் சாப்பிடுவது சரியில்லை. என்று நேரு சொல்வாரா?"

"சொன்னாரா...?"

"அழுத்தந் திருத்தமாச் சொன்னார். அரிசிச் சாதம் சாப்பிட்டா சோம்பேறிகளாகி விடுவார்களாம்......"

"இதென்னடி அக்ரமம். தலைமுறை தலைமுறையா அரிசிதானே, இங்கே. சோம்பேறிகளா, நமது முன்னோர்கள்......"

"மூளைகூடக் கெட்டுவிடுமாமே......"

"அரிசிச் சாதம் சாப்பிட்டாலா......?"

"ஆமாம். நேரு சொல்கிறார்."

"கேட்டுக்கொண்டுதானே இருக்கிறா?"

"ஆமா, அவர் என்ன ஒளிவு மறைவாகவா சொன்னார். காமராஜர் சுப்ரமணியம் போன்ற மந்திரிகளை எதிரிலே வைத்துக்கொண்டுதான் சொல்கிறார்."

"பெரிய ரோஷக்காரர், கோபக்காரர் சுப்ரமணியம் என்கிறாரே எங்க வீட்டுக்காரர்."

"அவருடைய கோபம் எல்லாம், இங்கேதான்—இளைத்தவர்கள்மீதுதான். அங்கே போனா அடி தண்டம் போடறதிலே, அவரும் சளைக்கிறவர் இல்லா."

"அவர், அரிசிச் சாதம்தானே சாப்பிடுகிறார்."

"ஆமாம்......ஆனால் இனிமேல்பட, ஒரு சமயம் கோதுமைக்கு மாறினாலும் மாறிவிடுவார்."

"ஏன்? நேரு சொல்கிறதாலேயா?"

"அப்படித் தோன்றவில்லை. அவருடைய மனைவியாரே வற்புறுத்துவார்கள் போலிருக்கிறது"

"கோதுமை சாப்பிடச் சொல்லியா? ஏன்?"

"காரணத்தோடுதான். அந்த அம்மா, கோதுமையை அதிகமாக, நாமெல்லாம் உபயோகப்படுத்த வேணும் என்கிற ஒரு சங்கத்துக்குத் தலைவர்."

"அப்படி ஒரு சங்கமா?"

"ஆமாம். ஒரு இலட்ச ரூபா அமெரிக்கா கொடுத்து தங்கள் நாட்டுக் கோதுமையை இங்கே உள்ளவர்கள் நிறைய உபயோகப்படுத்தனும்னு பிரசாரம் செய்யச்சொல்லி தனியாக வேறே ஏற்பாடு செய்கிறது."

"பொன்னி! கோதுமை சாப்பிட ஆரம்பித்துவிட்டா, இப்ப, நெல் விளைகிற, பூமியெல்லாம் என்ன ஆகும்?

"பாழாகிப்போகும்; ஆனால் அதைப்பத்தி அவர்களுக்கு என்ன கவலை. கோதுமை பழகிவிட்டால், அவர்கள் நாட்டுக் கோதுமையை இங்கே கொண்டுவந்து விற்றுப் பணமாக்குவார்கள். நம்ம நாட்டு சீதோஷ்ண நிலையிலே, கோதுமை பயிராகாது."

"இங்கே என்ன பயிராகுதோ அதைச் சாப்பிடாமல் தடுத்து, இங்கே விளையமுடியாத கோதுமையை நம்ம தலையிலே கட்டுவது. உம்! இது பெரிய அக்ரமண்டி பொன்னி!"

"அக்ரமம்தான். ஆனா இதைப் போக்கணும்னா எலக்ஷன்போது, காட்டணும்."

## "நாம் வளர்ந்துவிட்டோம்"

"திருப்பதிக் கோயில் வருமானம் இப்போது கிட்டத்தட்ட ஒரு கோடிக்கு எட்டியுள்ளது. இதற்கு முன் 10-அல்லது 20-இலட்சத்திற்குமேல் இல்லை. பழனிக்கோயிலிலும் வருமானம் பெருகியுள்ளது. இதெல்லாம் எதைக் காட்டுகிறது. இப்பொழுது வருமானம் அதிகரித்துள்ளது. வாழ்க்கைத்தரங்கள் உயர்ந்துள்ளன என்பதைக் காட்டவில்லையா?"

10—1—61-ல் திட்ட அரங்குகள் மாநாட்டுக்குத் தலைமை வகித்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டி. எம். நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் பேசியது.

"பாரேன்! நானே, நமக்குத் தெரிந்தவர்களைப் பார்த்துக் கேட்கறேன். காங்கிரஸ் கட்சியோட பெரிய தலைவர், நேரு, அரிசிச் சாதம் சாப்பிடுகிறவர்களெல்லாம், சோம்பேறிகள், அவர்களுக்கு மூளை கூடக் கெட்டுப்போகும்னு பேசி இருக்கிறார். கொஞ்சமாவது மானரோஷம் இருந்தா, அப்படிப்பட்ட கட்சிக்கு ஓட்டுப் போடலாமான்னு கேட்கத்தான் போறேன்."

"வடக்கு தெற்கு பேசாதே வம்பு வல்லடி செய்யாதே என்று மிரட்டுவார்கள்."

"மிரட்டட்டுமே......அடே அப்பா! நாமதான் பார்க்கிறோமே, இவர்களோட மிரட்டல் எந்த அளவுக்கு போகிறது என்பதை. பஞ்சாபிலே பதேசிங் உண்ணாவிரதம் இருக்கறதைப் பார்த்து, முதலிலே மிரட்டித்தான் பார்த்தார்கள். பிறகு?"

"வடக்கே, அது. இங்கே நம்ம காமராஜர் இருக்கிறாரே அவர், இதற்கெல்லாம் அசையமாட்டார். சங்கரலிங்க நாடார் செத்தாரே உண்ணாவிரதமிருந்து, காமராஜர், என்ன பயந்தாரா?"

"ஏண்டி பொன்னி! அதற்காக நீ என்ன காமராஜருக்கு தங்க மெடல் பரிசுதரச் சொல்றயா? ஈவு இரக்கமில்லாத மனசு! மனுஷத்தனம் இல்லை என்று அர்த்தம் அதற்கு. இதிலே பெரிய பெருமையா ஒருவருக்கு?"

"பெருமையோ இல்லையோ? ஒருவர் செத்துப் போவதைப் பார்த்தால்கூட, அவர் அசையமாட்டார் என்பதற்குச் சொல்கிறேன்."

"அவர் அசையாமலிருக்கலாம் பொன்னி! ஆனா இதைக் கேள்விப்படும் மக்கள், இவரைப்பற்றி மதிப்பாகவா எண்ணுவார்கள்."

"அது இப்ப எப்படித் தெரியும். அவர் திரும்பவும் விருதுநகர் தொகுதியிலே எலக்ஷனுக்கு நிற்கறபோதுதான் தெரியும்."

"நிச்சயமாக, கொஞ்சமாவது ஈவு இரக்கம் உள்ளவா, கல்மனக்காரர்களுக்கு ஆதரவு காட்டவே மாட்டா."

"அப்படித்தான் பேசறது, ஆனல், வேறே ஏதாவது காரணம் காட்டி பலபேர் கரணம் போட்டுவிடுகிறார்கள். இது சாதாரண விஷயம், இதை விட்டுத் தள்ளுங்க. எட்டு மாத கர்ப்பிணியைக் கண்ணைக் கட்டிக் காட்டிலே கொண்டுபோய் விட்டுவிட்டு வரச் சொன்னார் ராமபிரான்; கேட்கும்போதே கோபம் கோபமாக வருகிறது எல்லோருக்கும். காரணம் ஆயிரம் காட்டினாலும், இப்படிப்பட்ட கல்மனம் கூடவே கூடாது என்று எத்தனையோ பேர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனா இப்படி துளிகூட ஈவு இரக்கமில்லாமல் நடந்துகொண்டதற்காக, ராமருக்கு கொளுத்தவேண்டிய சூடத்தைக் குறைத்துவிட்டார்களோ! ராமநவமி உற்சவம் நடத்தாமலா இருக்கிறார்கள் பக்தர்கள்."

"என்ன இதுவரையிலே சுயமரியாதைப் பேச்சை ஆரம்பிக்கக் காணோமே என்று எண்ணிக்கொண்டிருந்தேன்; விடுவயா, நீ. இப்ப கிடைச்சுது சந்தர்ப்பம், சுயமரியாதைப் பிரசாரம் செய்ய......ஆனா பொன்னி! அது பகவானைப் பத்தின விஷயம். அவர் ஏன் அப்படிச் செய்தார் என்று யோசித்து முடிவுசெய்ய விசேஷமான ஞானம் இருக்கணும். மந்திரிகள் விஷயம் அப்படியோ! அவர்கள் என்ன அபூர்வமான பிறவிகளோ! இந்தக் காலத்திலே, மக்களுடைய ஓட்டுகளைத் தட்டிப் பறித்துக்கொள்கிற தந்திரம் மட்டும் தெரிந்துவிட்டா, எந்த மன்னார்சாமியும் மந்திரியாகலாமே......"

"பலே! பலே! ஏது, தேர்தல் பிரசாரம் செய்ய; நீங்களே தெருத் தெருவா கூட்டம் போடுவீர்கள் போல இருக்குதே......"

"கூட்டத்திலே பேசக்கூடாதா என்ன! ஆண்கள் தான் செய்யணுமா அந்தக் காரியம்."

"பெண்களும் செய்யலாம், தவறுமில்லை, கஷ்டமுமில்லை.........ரயில்வே ஸ்டேஷனிலே போர்ட்டராக வேலை செய்வதைக் காட்டிலும், இது என்ன கேவலமா, கஷ்டமா?"

"பொன்னி! பெண்களா ரயில்வே போர்ட்டராக வேலை செய்கிரு......"

"ஆமாம்! அதற்குத் தேவையான அனுமதியை அதிகாரிகளிடம் வாங்கிக்கொண்டு. சிகப்புச் சேலையாம் அவர்களுக்கு."

"எங்கேடியம்மா, இப்படி நடக்கறது."

"எல்லாம், நம்ம புண்ய பூமியிலே தான். பவநகர் ரயில்வே ஸ்டேஷனிலே, பெண்கள் போர்ட்டர் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்."

"காங்கிரஸ் நடந்ததே அந்த பவநகர்லேயா?"

"அதே திவ்ய க்ஷேத்திரத்திலேதான். தங்களுடைய ஆட்சியிலே பாரத தேசம் எவ்வளவு சுபீட்சமா இருக்கிறது என்று காட்டவேண்டாமா, காங்கிரஸ் தலைவர்கள். பெண்கள் போர்ட்டர் வேலை பார்க்கிறார்கள்! போதாதா?"

"செச்சே! பல இடத்திலே இருந்துவரப் போகிறார்களே, அவர்கள் கண்களிலே இந்தக் கண்றாவி படாமலிருக்கட்டும் என்று எண்ணியாவது ஒரு நாலு நாளைக்கு, பெண்களைப் போர்ட்டர் வேலை செய்ய வேண்டாம், கேவலமாக இருக்குமென்று சொல்லித் தடுத்திருக்கக் கூடாதோ?"

## "நாம் வளரவில்லை"

"வறுமையை நம் நாட்டிலிருந்து ஒழிக்க நாம் பெரும்பாடுபட்டு வருகிறோம். மற்ற நாடுகளை ஒப்பிட்டுப் பார்த்தால் நம் நாடு மிக ஏழ்மையான நாடு. வறுமையை ஒழிக்கவேண்டுமானல் அறிவின்மையை ஒழிக்கவேண்டும். தொழில் வளத்தைப் பெருக்கவேண்டும். விஞ்ஞான அறிவைப் பெறவேண்டும். அப்போதுதான் முன்னேற்றம் அடைந்தவர்களாவோம்."

10—1—61-ல் திட்ட அரங்குகள் மாநாட்டில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் பேசியது.

"நீ ஒரு பைத்யம். பலபேர் வருகிறபோதுதான் நாலு காசு கிடைக்கும். அந்தச் சமயத்திலேயா, வேலே பார்க்காமல் இருப்பது. அதுமட்டும் இல்லே. பவநகர்லே பெண்களே, போர்ட்டர் வேலே செய்கிருர்கள் என்று தெரிவது காங்கிரசுக்கு இன்னும் கூட்டம் சேர்த்துக் கொடுக்காதோ!"

"இதைக் காட்டித்தானு காங்கிரசுக்குக் கூட்டம் சேர்க்கணும்."

"அடேயப்பா! உனக்கு அது தப்பாகத்தோன்றுகிறதோ. காண்டாமிருகத்தைக் காட்டிக்கூடக் கூட்டம் சேர்த்தார்களே காங்கிரசுக்கு, அசாமிலே, கௌகத்தியிலே"

"என்னமோ, போ! மகாத்மா இருக்கிருர் என்று சொன்ன காலம் போய், இப்ப யானே பார், குதிரை பார், காண்டாமிருகத்தை பார் என்று சொல்கிற காலமா இருக்கு."

"மிருகங்கள் என்ரு கேவலம்னு சொல்லிவிடக் கூடாது. அமெரிக்காவிலே ஒரு கட்சிக்கு சின்னம், யானே; மற்ருெரு கட்சிக்குச் சின்னம், கழுதை."

"கழுதையா! கழுதைன்ன கேவலமில்லேயோ..."

"நமது நினைப்பு அது. கழுதை என்ரு, பொறுமைக்கு உதாரணம், அதிகச் செலவு வைக்காம, சடினமாக உழைக்கற சுபாவத்துக்கு உதாரணம்."

"நம்ம நாட்டிலே பசு ஒன்றுக்குத்தான், மதிப்பு."

"ஆமாம், சகல தேவர்களுர் பசுவுடைய உடலிலே தான் இருக்கிறதாக, புராணம் சொல்கிறதாமே."

"பொன்னி! என்னே வீணு வம்புக்கு இழுக்காதே. நான், பொதுவா, நம்ம நாட்டிலே பசுவுக்கு இருக்கிற மதிப்பைச் சொன்னேன். நீ கொண்டாடுகிற பொங்கலிலே, மாட்டுப் பொங்கலென்று ஒரு நாளே இல்லேயோ."

"ஆமாம். ஆனல் எதற்கு? மாடு கன்றுகளே அழகுபடுத்த! மாடுபிடி விளேயாட்டு மூலம், வீரம் காட்ட, இவைகளுக்கு. வாலேத் தடவிக் கண்ணிலே ஒத்திக்கொள்வதற்கா? பூஜை செய்வது வேறு. அன்பாக நடத்துவது வேறு. நேரு கூடச் சொல்கிருரே, நம்ம நாட்டிலே பசுவைப் பூஜை செய்கிருேமே தவிர, அதை அன்பாக நடத்த, நல்லபடி வளர்க்கத் தெரிவதில்லே என்று. ரஷியாவிலே பசு, நாளேக்கு ஒரு மணங்கு பால் கொடுக்கிறதாம். நம்ம நாட்டுப் பசுக்களேத்தான் பார்க்கிருேமே, வத்தலும் தொத்தலுமாக. டோயன்பி என்று பெரிய அறிவாளிகூட எழுதுகிருர், மேனுடுகளிலே, மாடுகளே இறைச்சிக்காக வெட்டிவிடுகிருர்கள். அதைக் கொடுமை என்று, இந்தியாவில் பேசுகிருர்கள். ஆனல், இந்தியாவிலே, மாடுகளே எலும்புந் தோலுமாக அல்லவா வைத்து வாட்டுகிருர்கள். அடுத்த ஜென்மத்தில் நீ. மாடு ஆகத்தான் பிறக்கவேண்டும், மேனுட்டில் பிறக்கிருயா, இந்தியாவிலே பிறக்கிருயா, என்று என்னேக் கடவுள் கேட்டால், இருக்கிறவரையிலாவது வயமுரச் சாப்பிட்டு, வகையாக வாழலாம் மேனுடாக இருந்தால், இந்தியா வென்ருல், மஞ்சள் குங்குமம் பூசி, மாதர்கள் கும்பிடுவார்களே தவிர, நல்லபடி வளர்க்கமாட்டார்கள். ஆகவே, பகவானே! மாடாகத்தான் பிறக்கணும்னு இருந்தா, மேனுட்டிலேயே ஜென்மம் எடுக்க அருள் செய்யணும் என்றுதான் வேண்டிக்கொள்வேன் என்று எழுதியிருக்கிருர்."

"ஏண்டி, பொன்னி! எப்படி உனக்கு நேரம் கிடைக்குது எதை எதையோ படிக்க."

"எங்க வீட்டிலே ஒரு வழக்கம். கூடுமானவரையிலே கடைகளிலே இருந்து வாங்கக்கூடிய சமையல் சாமான்களே கடையிலேயே வாங்கிவந்துவிடுவார், எங்களவர். இங்கே, மிளகாய்த் தூளிலிருந்து கொத்தவரங்காய் வத்தல் வரையிலே, நீங்களே செய்கிறதை நான் பார்த்திருக்கிறேன். நாங்கள், எதெது கடைகளில் கிடைக்குமோ அவைகளே வாங்கிக்கொள்வோம். அதுவரையிலே வேலே மிச்சம்தானே. நேரம் மிச்சம். அந்த நேரத்திலே, இப்படி ஏதாவது படிப்பது"

"பொன்னி! நம்ம வீட்டிலே செய்துகொண்டால் தான், சுத்தமாக இருக்கும், நல்லதாகவும் இருக்கும். நாமே செய்துகொள்ளக்கூடியதைப்போய், யாராவது கடையில் வாங்குவார்களோ? மஞ்சப்பொடி, மிளகாப்பொடி, வத்தல்வடாம், அப்பளம் இதெல்லாம்செய்துகொள்ளத்தானே வீடுன்னு ஒண்ணு இருக்கு"

"அதுபோல நினைப்பதாலேதான், இலேயிலே இருந்து எள்ளுருண்டைவரையிலே வீட்டிலேயே தயார் செய்துகொளகிருேம். இதை எல்லாம் செய்கிறதுன்னு, நமக்கு, காலேயிலே எழுந்ததிலிருந்து இராத்திரி தூக்கம்வந்து தன்னுலே கீழே விழுறவரைக்கும், ஓயாத வேலே இருந்துகொண்டுதான இருக்கும். விடியற்காலே, சாணித் தண்ணீரிலே கையை நனேத்தோமானு, ராத்திரி தோசை மாவுக்காக அரிசியை ஊறப்போட்டுக்கிளற கையை நனேக்கிற வரையிலே, நம்ம கைக்கு ஓய்வு ஏது. இப்படி இருந்தா, படிக்க நேரம் ஏது?"

"அதுக்காக, வீட்டுக்குத் தேவையான, பொடி எல்லாம், கடையிலே வாங்கிக்கொள்றதா?"

"தப்பு என்ன சொல்லுங்க? எண்ணெய் மட்டும் ஏன் கடையிலே வாங்கணும்? எள்ளுவாங்கி, வீட்டிலேயே, எண்ணெயா ஆட்டிக்கொள்ளக் கூடாதா? பால் எதுக்காக வாங்கிச்சாப்படணும்? பசுவே வளர்த்துக்கொள்ளக் கூடாதோ? பசுவே இருந்தாலும், அதற்கு புல்லுக்கட்டு ஏன் விலேகொடுத்து வாங்கவேணும். நம்ம பசுவுக்கு நல்ல புல் இருக்கணும்னு, புல்காரிக்கு அக்கறை இருக்குமோ. அதனுலே, நம்ம பசுவுக்குத் தேவையான புல் நம்ம தோட்டத்திலேயே பயிரிட்டு, பறிச்சுபோடலாம்."

## உயரம் எவ்வளவு?

பல நூற்றுண்டுகளுக்கு முன்பே நம்முடைய பெருவிரலின் நீளத்திற்கும், நம்முடைய உயரத்திற்கும் விகிதம் இருப்பதை, எகிப்து நாட்டினர் கண்டுபிடித்திருந்தனர். நம் உயரம், நம்முடைய பெருவிரலின் நீளத்தைப்போல் 19-மடங்கு இருக்கிறது.

"ஏண்டி பொன்னி! கேலிசெய்கிறயா? வீடுவாசல் இல்லாதவா, கடையை நம்பிக்கிடக்கணும். நமக்கு என்னடி வந்தது அப்படிப்பட்ட நிலைமை?"

"சரி! அதனாலேதான், வீட்டிலே, ஏத்தறதும் இறக்கறதும் அறைக்கறது, உடைக்கறது, உருட்டறது, உலர்த்தறது, தைக்கறது தேய்க்கறது என்று வேலை தொடர்ந்து இருந்துகொண்டிருப்பது வாடிக்கையாகிவிட்டது. அதனாலே, காலம் முழுவதும், இதேவேலை. படிக்க, சிந்திக்க, இதற்கு நேரம் கிடைக்கறதில்லை. எங்க வீட்டிலே அப்படி வழக்கம் கிடையாது. சில வேளைகளிலே, கடையிலே இருந்தே பதார்த்தம்கூட வாங்கிக்கொள்வதும் உண்டு"

"சுத்தமாக இருக்காதே"

"நிறையப்பேர் வாங்க ஆரம்பித்தா, இப்ப இருப்பதைவிடச் சுத்தமாகக் கூடச் செய்து விற்பார்களே கடைகளிலே. ஒரு விஷயத்தை மறுக்க முடியாது உங்களாலே. நம்ம வீடுகளிலே இப்போது இருக்கிற சமயல் முறை இதேபோல இருக்கிற வரையிலே, பெண்களுக்கு, ஓய்வுங்கிடையாது, படிக்க நேரமும் அகப்படாது. பணவசதி இருந்தா, நாலுபேர் வேலையாட்களை வைத்துக்கொண்டா, நேரம் கிடைக்கும். சாதாரண குடும்பத்திலே, சமயல் செய்து முடித்த பிறகு, அலுத்துப் படுக்கத்தோணுமே தவிர, உட்கார்ந்து படிக்கவா முடியும். ஒரு நாளைக்கு ஆயிரம் தோப்புக்கரணமாவது போட்டாகணுமே, ஒவ்வொருத்தியும்"

"தோப்புக்கரணம் போடணுமா? அது எதுக்கு?"

"நம்ம அடுப்புதான் தாழ இருக்குமே. அதைக் கவனிக்க, உட்கார்ந்து உட்கார்ந்து எழுந்திருக்கணுமே! தோப்புக்கரணம் போடுகிறமாதிரி தானே"

"போடி போக்கிரி! அடுப்புவேலையைக் கவனிக்க அப்படித்தான் செய்தாகவேண்டி இருக்குது"

"ஏனாம்! அடுப்பு மேடு, கொஞ்சம் உயரமாகத்தான் போட்டுக்கொண்டா என்னவாம்? நின்றபடி, சமயல் காரியத்தைக் கவனிக்கக் கூடாதா?"

"அது உண்மைதாண்டி பொன்னி! நான்கூட, இப்ப, சிலபேர் வீடுகளிலே பார்க்கறேன் நீ சொல்கிறபடிதான் அடுப்பு, உயரமாப் போட்டிருக்கிறா."

"விறகைச் செருகிக் கொளுத்தி, அது ஈரமா இருந்தா ஊதி ஊதி வீடு பூரா ஒரே புகைமயமாகி, அந்தப் புகை நம்ம வாயிலேயும் கண்ணிலேயும் புகுந்து, இருமலும் தும்மலும் வந்து, கண்ணிலே தண்ணீர் ஒழுகி, அதை அங்கேயே வழித்துப்போட்டு முந்தானையிலேயே துடைத்துக்கொண்டு, நாம் சமயல் செய்து முடிக்கறதுக்குள்ளே, எவ்வளவு அலங்கோலமாகிவிடவேண்டி இருக்குது!"

"அதற்கு என்னடிம்மா செய்யறது..."

"ஏன்! அடுப்பு எறிக்கக்கூட மின்சாரம் உபயோகப்படுத்த முடியுமே. பல நாடுகளிலே அப்படித்தான்."

"நம்ம நாட்டிலே முடியுமா? எத்தனையோ கிராமம் இன்னமும் மினுக்கு மினுக்குன்னு எண்ணெய் விளக்கு போட்டுக்கொண்டுதானே இருக்குது. இங்கே மின்சாரம் அடுப்புக்கு வருமா?"

"இப்ப போகிற போக்கிலே சர்க்கார் போய்க்கொண்டிருந்தா, கிடைக்காது. ஆனா, மின்சாரம் மட்டுந்தானா, வழி. வேறே எத்தனையோ இருக்குது. ஆவி உண்டாக்கி, அதைக்கூட அடுப்பு எறிக்க உபயோகப்படுத்த முடியும். சில இடங்களிலே அப்படி எல்லாம் நடக்கிறது."

"பொன்னி! நீ பெரிய பெரிய கோட்டைமா கட்டிக்கொண்டே போறயே! உன் யோசனையைக் கேட்டு நடக்கற ராஜாங்கம் வருகிறபோது, பார்த்துக் கொள்ளுவோம்."

"என் யோசனையைத்தான் கேட்கவேணும்னு நான் சொல்லலியே. யோசனை செய்து காரியத்தைச் செய்கிற ராஜாங்கமா இருந்தால் போதும்னு தான் நான் சொல்கிறேன்"

"ஆமாம்! இவ்வளவு குறை சொல்லிப் பேசறியே சமயல் முறையை; நாளைக்கு பொங்கல் திருநாளிலே எப்படி சமயல் செய்கிறது."

"என்னைக் கேட்டா, அப்படிப்பட்ட திருநாளிலே தான், கூடுமான வரையிலே, வீட்டிலேயே எல்லா வகையான பண்டம் பலகாரமும் செய்து, குடும்பம், ஒண்ணா இருந்து சாப்பிட்டுக் குதூகலமா இருக்கணும்னு சொல்லுவேன். பொங்கல் திருநாளின் போது, புருஷனும் மனைவியும், தாயும் மகளும், அப்பாவும் பிள்ளையும், அக்காவும் தம்பியும் எல்லோருமா, வீட்டிலே இருந்து ஒருத்தர் காய்கறி நறுக்க, இன்னொருத்தர் அடுப்பு எறியவிட, இன்னொருவர் குத்தி படைக்க, இன்னொருவர், கிளற வடிக்க, மற்றொருவர் கூட்ட குழைக்க. இப்படி ஆளுக்கொரு வேலையை மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டே செய்யணும், எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டு இன்பமாக இருக்கவேண்டும். குழந்தைகள் ஓடி விளையாடணும். இளம் பெண்கள், சீவிச் சிங்காரித்துக்கொண்டு, சிரித்த முகத்தோடு, வீட்டுக்கு விளக்கு ஏற்றி

### அணுவின் பயணம்

நம் உடலில் சுமார் 6 குவார்ட் இரத்தம் இருக்கிறது —இந்த இரத்தத்தில் சுமார் 2.4-கோடி அணுக்கள் இருக்கின்றன. இந்த அணுக்கள் தினம் நம்முடைய உடலில் 3000-தடவை சுற்றுலா வருகின்றன.

வைத்தா எவ்வளவு இலட்சணமா இருக்குமோ, அப்படி, வீடுகளிலே இருக்கவேண்டும். பெரியவர்கள் அதைப் பார்த்து, குடும்பம், தழைத்து வருகிறது என்று பெருமையும் பூரிப்பும் கொள்ளணும். மாடு கன்றுகள் துள்ளி விளையாடணும். வீட்டிலே, கோலம் கொண்டாட்டமா இருக்கவேண்டும்......''

"அடி அம்மா! கும்மி அடிக்கணும், கோலாட்டம் போடணும்னு கூடச் சொல்லுவேபோல இருக்குதே............''

''செய்தா என்ன்? ஊரிலே ஒரு சிங்காரத் தோப்பிலே, குமரிகளெல்லாம் கூடிக் கும்மி அடிக்க, சிறுமிகளெல்லாம் கோலாட்டம் போட, அதை பேரன் பேத்தியைப் பெத்தெடுத்த பெரியவங்க பார்த்து, ஒருத்தருக்கு ஒருத்தர் கண் சிமிட்டி களிப்பா இருந்தா, எப்படி இருக்கும்னு, யோசனை செய்துதான் பாருங்களேன்......''

"அழகாத்தான் இருக்கும். ஆனு......''

''அதோ வருகிறுர், உங்களவர், போய்க் கேளுங்க......''

"என்னன்னுடி கேட்க? என்கூடச் சேர்ந்துண்டு கும்மிஆட வாரிங்களான்னு கேட்கச் சொல்றியா...''

''கேட்டாத்தான் என்ன தப்பாம்! ஆட வருவாயா கண்ணு! என்னேடு விளையாட வருவாயா கண்ணு! என்று இன்னெருரு ஆடவரைக் கூப்பிடுவதைவிட, இது ஒண்ணும் தப்பு இல்லா.''

''கடவுளைக் கொண்டாடுகிற முறையாச்சே அது. கேலி செய்கிறயே...''

"கடவுளா இருந்தாலும்—கண்ணன், ருக்மணிக்குச் சொந்தம் ஆச்சே. ஆடவருவாயான்னு அழைக்கலாமோ...?''

"போடி போக்கிரி! அழைத்தா வந்து ஆடவாப் போகிருர்."

"அந்தத் தைரியம்தான் உங்களுக்கெல்லாம். அதைவிட புருஷனும் மனைவியுமாகச் சேர்ந்து, கும்மி கொட்டிக்கொண்டோ கோலாட்டம் போட்டுக் கொண்டோ, பகவானைக் கொண்டாடிப் பாடலாம்.'

"இரு! இரு! இந்தப் பொங்கல் வேலை எல்லாம் முடியட்டும், உன்னையும் உன்னுடை வீட்டுக்காரரையும் ஒரு நாளைக்கு அந்த மாதிரி ஆடச்சொல்லி, வேடிக்கை பார்க்கறேன்.''

"அது பிறகு பார்த்துக்கொள்ளலாம். இப்ப நீங்க போய் ஒத்திகை நடத்துங்க. கேட்ட புடவை வந்திருக்குதா, இல்லையான்னு பாருங்க. விடுங்க, காதை... ஐயோ! விடுங்கன்னு... அப்பப்பா! காதைப் பிடித்து இழுத்து இழுத்துப் பழக்கம் போலிருக்குது, உங்களுக்கு... அப்பா! இப்படி வலிக்கிறதே...''

''கேட்டிங்களா, பொன்னி பேசறதே...''

''உஸ்! அதையெல்லாம் போய் அவரிடம் சொல்லிக்கொண்டு... போங்க...''

●

# ஆரடித்தார் கடலே உனை?

**—'பூங்குன்றன்'—**

ஆரடித்தார் கடலே உனை — ஓங்கி
அடித்தவர் யார்?

போவாய் வருவாய் புரண்டு அழுவாய்
நாவாய் குலுங்க நடுங்கி யழுவாய் — ஆரடித்தார் உனை?

ஒருவாய் சோற்றுக் குழடிய தமிழரையுன்
பெருவாய் போட்டு விழுங்கிய கொடுங்கடலே,

காவிரித்த புகாரை ஆவிரித்து விழுங்கி
சாவிரித்துத் தருக்கித் தாவித்திரி கடலே,

முன்பாண் டியராண்ட தென்பாண் டியநாட்டை
வன்பால் விழுங்கிட்ட உன்பால் சினங்கொண்டே
— ஆரடித்தார் கடலே உனை?

# அன்பின் அருவி

மலை படுத்திருப்பதையும், அதை முகில் அணைத்திருப்பதையும், கண்டால் வறண்ட கற்பனை சிறகு விரித்தாடும் என்பார்கள். தங்கப்பனுக்கோ அவை ஏமாற்றமாக இருந்தது.


குங்குமச் செவ்வாய் திறந்து 'அக்கா' 'அக்கா' என்று பசும்பொன் சிறகு விரித்துப் பறக்கும் கிளிகளைக் கண்டு அவனது அகமும் முகமும் மலரவில்லை; ஏதோ ஒரு இனந் தெரியாத துன்பம் அவன் உள்ளத்தைத் திடீரென்று

'முரசொலி' மாறன் எம்.ஏ

கௌவிப் பிடித்தது. அதன் காரணம்தான் தெரியவில்லை.

தனிமையின் கரங்கள் பட்டுபோல் மென்மையானவைதான். ஆனால் அதன் பிடிப்போ உறுதியானது. காரணமில்லாத சோகமும் அதைத் தொடர்கிறது.

தங்கப்பன் ஆட்பட்டுத் தவித்த சோகம் அப்படிப்பட்டதுதான். வேடிக்கை விநோதங்களை அவன் அனுபவிக்க முடியும். லட்சாதிபதியின் மகனுயிற்றே! ஏராளமான நண்பர்கள். கல்லூரியில் படிப்பவனுக்கு இதற்குக்கூடவா பஞ்சம். ஆனால் இதயத்திற்குள் ஏற்பட்டிருந்த ஏதோ ஒரு உணர்வு அவனை தனிமையை நோக்கி விரட்டிக்கொண்டிருந்தது. அந்தக் காரணத்தால் வாலிபம் அவன் தோள்களிலே கட்டியிருந்த வண்ணச் சிறகு வெட்டியெறியப்பட்டது. தனிமைச்சகதியிலே புழுவாக நெளிவதிலே அவன் ஆனந்தம் கண்டான்.



வாழ்க்கை ஒரு மலையென்றால் அதில் இன்பமான பகுதி உச்சாணிச் சிகரமாகத்தான் இருக்கவேண்டும். நம்மில் பலர் டென்சிங்கு போல் அந்த எவரெஸ்டில் எப்போதோ ஒரு முறை சிரமப்பட்டு ஏறி



விட்டு இறங்கிவிடுகிறோம்;—அதுவும் முடிந்தால்தான்! அதிலேயே குடியிருப்பவர்கள் மிகக் குறைவு. இதுவரையில் முன்வகையில் சேர்க்கப்படவேண்டியவனாகத்தான் இருந்தான், தங்கப்பன். ஆனால் இன்பத்தின் எல்லையில் நிரந்தரமாகக் குடியேற நேருமென்று அவன் இதற்குமுன் கற்பனைகூடச் செய்துபார்த்ததில்லை.

அவன் கல்லூரியில் பி. ஏ. படிப்பதற்காக சென்னையில் ஒரு தனி வீடொன்றை விலைக்கு வாங்கி, அதிலே தங்கப்பனையும் ஒரு சமையல்கார கிழவனையும் குடியேற்றினார், அவன் தந்தை கிருஷ்ண பிள்ளை.

ஒரு நாள்: சனிக்கிழமை.

பக்கத்து வீட்டிலே குடியிருக்கும் பெரியவர் நல்லுறவு ஏற்படுத்திக்கொள்வதற்காகத் தங்கப்பனைத் தேடி வந்தார். இரவு சாப்பாட்டிற்குத் தன்வீடு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இரவு.

தங்கப்பன் சென்றான். பல பொது விஷயங்களைப் பற்றி அந்தப் பெரியவர் பேசிக்கொண்டிருந்தார்.

அப்போதுதான் அந்த அறைக்குள்ளே சாரதா வந்தாள். ஒருக்கணம் இருவர் பேச்சும் நின்றது. சாரதாவின் அழகு மௌனமாயிருந்து கௌரவிக்கப்படவேண்டியது என்கிற கருத்தினைத் தங்கப்பன் மனதில் ஏற்படுத்தியது.

"உங்கள் வீட்டுச் சமையற்காரப் பெரியவர் உங்களைப் பற்றி நிறையச் சொல்லியிருக்கிறார். எங்களைப்பற்றியும் அவர் உங்களிடம் கூறியிருப்பாரேயானால் இது நமது முதல் சந்திப்பு அல்ல!" — சாரதா கூறியதைக் கேட்டு அதை ஒப்பிடும் பாவனையில் தங்கப்பன் தலையசைத்தான்.

"சாரதாகூட உங்கள் கல்லூரியில்தான், தம்பி!"

"அப்படியா?"

"ஆமாம்; பி. ஏ, வகுப்பு—பொருளாதாரப் பிரிவு"

"அடே!......அதில்தானே நானும் படிக்கிறேன்..." என்று சிரித்துக்கொண்டே அவன் சாரதாவின் பக்கம் பார்வையைத் திருப்பினான். அப்போதுதான் அவனுக்கு நினைவு வந்தது—அந்த முகத்தை எங்கேயோ பார்த்திருப்பதாக! அவன் சுற்றுப்புற உலகத்தோடு எத்தகைய உறவு வைத்திருக்கிறான் என்பதற்கு அதுவே உதாரணமாய் அமைந்தது.

அப்போதுதான் ஒரு ஆள் வந்தான்.

"சார்...முதலாளி உங்களை அவசரமாக அழைச்சுகிட்டு வரச்சொல்றாரு!"—பெரியவருக்கு அழைப்பு இது.

"ஏம்'பா?"

"தெரியலிங்க. ரொம்ப அவசரமாம்! கார் கொண்டுகிட்டு வந்திருக்கேன்!"

"சரி. சரி......இதோ வந்துடறேன்'...தம்பி! என் முதலாளி எப்போதுமே இப்படித்தான், நள்ளிரவில்கூட எனக்கு வேலை வைத்திருப்பார்...நான் போய் சிறிது நேரத்தில் திரும்பிவிடுகிறேன்......சாரதா! தம்பியைக் கவனித்துக்கொள்!"

—பெரியவர் போய்விட்டார்.

தங்கப்பனும் சாரதாவும் தனிமையில் விடப்பட்டனர்.

என்ன பேசுவது? எப்படித் துவங்குவது?—இதெல்லாம் தங்கப்பனுக்குப் பிரச்சினையாகத் தோன்றவில்லை, அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

இருவரும் ஒருவரையொருவர் விழியால் விழுங்கிக் கொண்டிருந்தனர்.

அழகு, அழகு என்று நாம் வர்ணிக்கிறோம்; அதற்கு இலக்கணமோ அளவுகோலோ ஏது? அது ஒரு உணர்ச்சி; அதை உணரத்தான் முடியுமே தவிர கண்களால் பார்க்க முடியாது; வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. கண்களால் பார்க்கப்படாமல் உணர்ச்சிகளால் அறியப்படுவதுதான் உண்மையான அழகு.

தங்கப்பன் அந்த அழகிலே மனதைப் பறிகொடுத்தான்.

"கண்களுக்கு அப்பாற்பட்ட அழகைச் சாரதாவிடம் நான் காணுவது உண்மையானதா? அல்லது வாலிப மதுவால் போதையேற்றப்பட்ட என் மனதிற்கு சாரதாவின் தோற்றம் அப்படிப்பட்ட உணர்ச்சிப் பேரலைகளை என் உள்ளத்தில் ஏற்படுத்துகிறதா?"—இப்படிப்பட்ட கேள்விகளை அவன் மனசாட்சி அவனைக் கேட்க, அதற்குப் பதில் சொல்ல முடியாமல் பின்னால் அவன் தவித்திருக்கிறான்.

பேசத் தெரிந்தவர்களுக்கும் ஊமைகளுக்கும் ஒரே விதத்தில் ஒற்றுமையுண்டு: காதல் வயப்படும்போது அவர்களிடையே வித்யாசம் கிடையாது.

எவ்வளவு நேரம் அவர்கள் அப்படியே இருந்தார்களோ தெரியாது: சாரதாவின் தந்தை முதலாளியின் வீட்டிலிருந்து திரும்பி வந்து சேர்ந்தார்.

"என்ன தம்பி; சாப்பாடு முடிந்ததா?"—பெரியவர் கேட்டார்.

அப்போதுதான் சாரதாவிற்கு உயிர் வந்தது. "அடடே......இல்லை'ப்பா! இதோ, ஒரு நொடியில்..." — அவள் உள்ளே ஓடினாள்.

தங்கப்பன் மட்டும் பெரியவரோடு இருந்தான். அவன் உடல்தான் இருந்தது.

*

மறுநாள்; ஞாயிறு; மாலை தங்கப்பன் சாரதா வீட்டிற்குச் சென்றான். இல்லை, இல்லை. ஏதோ ஒரு உணர்ச்சி இவனை இழுத்துச் சென்றது.

அவனைப் பார்த்ததும் சாரதாவின் கண்கள் கலங்கின.

"வாருங்கள். நீங்கள் வருவீர்களென்று தெரியும். நீங்கள் வந்திருக்காவிட்டால்......"

## கண்ணீர் வடியுங்கள்!

கண்ணீர் ஏழைகளுக்குத்தான் சொந்தம் என்று சொல்வது தவறு—கண்ணீர் எல்லோருக்கும் பெருகவேண்டும்—ஏனெனில் இந்தக் கண்ணீர்தான், கண்களின் முன்பாகத்தில் கண்ணாடி போல் மூடிக்கொண்டிருக்கும் சவ்வினைக் காய்ந்துவிடாமல் பாதுகாத்துக்கொள்கிறது. அப்படிக் காய்ந்துவிட்டால் மனிதன் குருடனாகிவிடுகிறான்.

—அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை. செருமிச் செருமி அழுதாள்.

"அழாதே, சாரதா! நீ அழுவதற்கும் நான் அடக்கிக் கொண்டிருப்பதற்கும் காரணம் துன்பமல்ல; இன்பம்! எந்தச்சக்தி நமது உள்ளத்தைத் தாக்கும்போது இன்பமும் துன்பமும், சுகமும் சோகமும் கலந்த உணர்வு ஊடுருவுகிறதோ, அந்தக்காதல் சக்தி ஒரு இயற்கை நியதி. அதை யாராலும் மீறமுடியாது."—தங்கப்பனின் பதில், இது.

சாரதா அவன்மீது சாய்ந்தாள். அவளது விரல்கள் தங்கப்பனது தலையைக் கோதின. கோகினூர் வைரம் பதித்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்து மணிமுடியை அப்போது யாராவது வழங்கினால்கூடத் தங்கப்பன் அதைத் தட்டிவிட்டிருப்பான்.

அதற்குப் பிறகு அவர்களுடைய அதரங்கள் அசையவில்லை. அமைதி! அமைதி!! அமைதி!! கண்களைத் தவிர, மற்ற அவயவங்கள் செயலற்றுக் கிடந்தன.

அப்படி அவர்கள் என்னதான் கண்டுகொள்கின்றனர்!

சாரதா—

அவள் அழகு, அவளது வண்டு விழிகளிலே இல்லை; அந்த விழிகள் உமிழ்ந்த ஒளியிலே இருந்தது. கோவைப் பழ அதரங்களிலோ, அவை வழிவரும் குயிலிசை மொழியிலோ இல்லை; அந்த மொழி உருக்கொண்ட குழந்தைத் தன்மையிலே இருந்தது. கொடிபோன்ற உருவத்திலோ, துடிபோன்ற இடையிலோ இல்லை; அவள் உள்ளத்திலே குடிகொண்டிருந்த தூய்மையிலே இருந்தது!

"சாரதா! உன் வீட்டாரும் என் வீட்டாரும் இதை நம்பமாட்டார்கள். ஏனென்றால், பருவ காலங்கள் இன்றி, பார்த்த மாத்திரத்திலேயே பிறந்து, வளர்ந்து, வைரம் பாய்ந்து வலுப்பட்டுவிடும் தன்மை காதல் ஒன்றுக்குத்தான் உண்டு. இல்லையா?"

—அவள், அவன் கைகளை எடுத்துக் கண்களிலே ஒத்திக்கொண்டாள்.

"மனிதன் வாழ்க்கை, கருப்பையிலே துவங்கிச் சவக்குழியிலே முடிவுபெறுவதாகச் சொல்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் இந்த வினாடிதான் என் உடலுக்கு மூச்சு வந்திருப்பதாக உணர்கிறேன். இந்த உணர்வு என்று அடங்குகிறதோ, அன்றே என் வாழ்க்கை முடிவு பெறுவதாக நினைக்கிறேன்......"-தங்கப்பன் மனதிற்குள் இப்படியெல்லாம் பல குரல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன.

"என் தந்தை மிகவும் நல்லவர். நம் திருமணத்திற்குத் தடையே சொல்லமாட்டார்!"—என்றாள், சாரதா!

"என் பெற்றோரும் அப்படித்தான். என் விருப்பத்திற்கு மாறாக இதுவரை அவர்கள் நடந்ததே கிடையாது"-என்றான் தங்கப்பன்!

—இருவர் உடலும் ஒன்றுக்கொன்று ஆதாரமாயின.

* *

பல மாதங்கள் ஓடின......

"அத்தான்! நாம் ஒன்றை மறந்துவிடுகிறோம்!"

"எதை?"

"நாம் இந்த உலகத்திலேதான் வாழ்கிறோம் என்பதை! இன்றாவது அதை நினைவுபடுத்திக்கொள்வோமா?"

"ஆமாம்; எனக்குக்கூட நினைவு வருகிறது. நாம் அதை மறந்தேவிடுகிறோம்!"

"அத்தான்! நமது திருமணத்தைப்பற்றி யோசித்தீர்களா?"

# அடுத்த இதழ்

பொங்கல் விடுமுறை காரணமாக 14—1—61 முதல் 29—1—61 வரை அலுவலகத் தோழர்களுக்கு ஓய்வு அளிக்கப்படுவதால், எமது அடுத்த இதழ் 5—2—61-ல் இருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்.
'திராவிட நாடு'

"நிச்சயமாக நடக்கப்போவதைப்பற்றி நினைத்து நான் கவலைப்படுவதில்லை!"

"உங்களிடம் ஒரு இரகசியம் சொல்லவேண்டும். அருகே வாருங்கள்!"

"இங்கு நாம் தனியாகத்தானே இருக்கிறோம். சொல்லு?"

"ஊஹூம்; அருகில் வந்தால்தான்!"

—தலையோடு தலை நெருங்கிற்று.

"என்ன? நான் தந்தையாகப்போகிறேனா."—தங்கப்பன் உரக்கக் கூச்சல் போட்டான்.

"உஸ்... மெதுவாகப் பேசுங்கள்!"

"சும்மா, இரு—சாரதா! எனக்குக் குழந்தை பிறக்கப்போவுத; அதைக் கேட்டுகிட்டு 'உம்'ன்னு உக்காந்திருப்பாங்க!... உம்... என்ன குழந்தை? ஆணா, பெண்ணா?"

"எனக்கு எப்படித் தெரியும்?"

"ஆணா, எனக்குத் தெரியும்!"

"என்ன குழந்தை; என்ன குழந்தை? ஆணா, பெண்ணா?"

"இரண்டில் ஒன்று!"

—இருவருமே சிரிக்கின்றனர். பிறகு இருவரது கற்பனையுமே சிறகு கட்டிப் பறக்கிறது.

"கல்யாணம் முடிஞ்சவுடனே நமக்கு வேண்டியது ஒரு வீடு; ஒரு கார்!"—தங்கப்பன் தனது கனவின் ஒரு பகுதியை விவரிக்கிறான்.

சாரதா:- அப்புறம்?

தங்கப்பன்:- காலையிலே 'டாண்'ணு மணி ஒன்பது அடிக்கும். உன் குழந்தைக்கு நல்லாச் சீவிச் சிங்காரிச்சி 'பிரண்ட்' சீட்டில் உட்காரவைப்பாய்; நான்தான் 'டிரைவிங்;' நீ பின்னாடி!

சாரதா:- ஊஹூம்; நான் என் குழந்தைகிட்டேதான் உக்காருவேன்!

தங்க:- அப்ப சரி; முன் சீட்டுக்கு வா!

—சாரதா தன்னையறியாமல் சிறிது முன்னால் நகர்ந்து உட்காருகிறாள்.

தங்க:- முன் சீட்டுக்கு வந்தியா? கார் 'கொய்...ய்...னு' போகும்... ஸ்கூல் போயி நிற்கும்... உன் குழந்தை இறங்கும்... நான் அதுக்கு 'இச்'சுன்னு ஒரு முத்தம் கொடுப்பேன்!

சாரதா:- அப்ப நானும் ஒன்னு கொடுப்பேன்.

தங்க:- அப்ப நான் இன்னொன்னு கொடுப்பேன்.

சாரதா:- நானும் இன்னொன்னு...

தங்க:- சரிதான் — இப்படிச் சும்மா நீ முத்தம் கொடுத்து கிட்டே இருந்தா குழந்தை ஸ்கூலுக்குப் போவதா; கன்னம் வீங்கிச் சாகுறதா? குழந்தையை உள்ளே அனுப்பு...

—சாரதா கற்பனைக் குழந்தையின் நெற்றியில் முத்தமிட்டு உள்ளே அனுப்புகிறாள்.

தங்க:- அனுப்பினியா? வா, போகலாம்!

சாரதா:- என்னங்க ரொம்ப மோசம்! நீங்க முத்தம் கொடுத்து, கொடுத்து; கன்னம் அப்புடியே கோவைப் பழமாட்டம் செவந்து போச்சே!

—என்று ஞாபகமறதியாகத் தன் கன்னத்தையே தடவிக்கொள்கிறாள்.

தங்க:- என்ன நீ, நான் சும்மா இருக்கேன் — பொய் சொல்றே! எங்கே, கன்னத்தைக் காட்டு!

சாரதா:- போங்க; நான் குழந்தையைச் சொன்னா!

— பல கண்ணாடிப் பாத்திரங்கள் கீழே விழுந்தது போன்று 'களுக்'கென்ற சிரிப்பு அந்த அறையைச் சூழ்ந்து கொள்கிறது.

"சாரதா! இன்றிரவே நான் ஊருக்குப்போகிறேன். அப்பாவிடமும் அம்மாவிடமும் விஷயத்தைச் சொல்லி அடுத்த வாரத்திலேயே அதிகார பூர்வமாக அவர்களைப் பெண்பார்க்க அனுப்புகிறேன்!" — சாரதாவிடம் பிரியா விடைபெற்றுத் தங்கப்பன் புறப்படுகிறான்.

•

தங்கப்பன் குழந்தையைப்போல் ஆடிக்கொண்டே சாலையில் நடந்துகொண்டிருக்கிறான்.

பள்ளியிலிருந்து கார் புறப்படுகிறது. சாரதா இன்னும் நெருங்கி உட்காருகிறாள்.

"என்ன இருந்தாலும் உன் பையன் ரொம்பக் கெட்டிக்காரன்!"

"தெரிஞ்சு போச்சி; தெரிஞ்சி போச்சி! உங்களுக்குப் பையன் பிறக்கணும்னுதான் ஆசை!"-சாரதா கைகொட்டி அவனைக் கேலி செய்கிறாள்.

எதிரே கார் ஒன்று வருகிறது. தங்கப்பன் காரை ஒடித்து ஓட்டுகிறான்.

'பொய்...ய்...னு'. என்ற சப்தம்.

என்ன; இது கற்பனைச் சப்தமல்ல! உண்மையான சப்தம்!

அதோ—கார் ஒன்று வேகமாக வருகிறது.

சர்...ர்...ர்...

—பிரேக்குகள் பிடிக்கும் சப்தம்.

அடுத்த கணம் அந்தப் பிரமாண்டமான காரின் சக்கரங்களுக்கு அடியில் தங்கப்பன் விழுந்து கிடந்தான்.

"சாரதா......சாரதா....சா...ர...தா"—இந்த இறுதி வார்த்தைகளை உச்சரித்துவிட்டு அவன் வாய் மூடிக் கொண்டது.

•

அவ்வளவு பெரிய 'தங்கமாளிகை' களையிழந்து கிடந்தது.

இலட்சோப இலட்சம்ஆஸ்திக்கு ஒரே ஒரு வாரிசு தங்கப்பன்; காளை வயதில் அவனைப் பறிகொடுத்துவிட்டுத் தந்தை கிருட்டின பிள்ளையும், தாய் மீனாட்சி அம்மாளும் பித்துப் பிடித்ததுபோல் உட்கார்ந்திருந்தனர். அழுவதற்கும் இனிக் கண்ணீர் இல்லை; துக்கமும் குறையவில்லை.

கலைந்த கூந்தலுடனும், பொட்டிழந்த நெற்றியுடனும் ஒருத்தி உள்ளே நுழைந்தாள்.

"யாரம்மா நீ?"—கிருட்டின பிள்ளை கேட்டார்.

"என் பெயர் சாரதா?"

"சாரதாவா? இந்தப் பெண்ணை எங்கேயோ பார்த்தது போலிருக்கிறதே?"—மீனாட்சியம்மாளின் குரல்!

"ஓகோ...... ஆஸ்பத்திரியில் தங்கள் தங்கத்தைப் பார்த்து மயக்கம்போட்டுவிழுந்தது நீதானே?"-கிருட்டின பிள்ளைக்கு இப்போதுதான் நினைவு வந்தது.

"ஆமாம்!"

"உனக்கு என்னம்மா வேண்டும்?"

"நான் உங்கள் தங்கத்தின் தங்கம். உங்கள் வீட்டு மருமகள்!"

"என்ன?" — வியப்புடன் கிருட்டின பிள்ளை மனைவியைப் பார்த்தார்.

"என்னைப்பற்றி உங்களிடம் சொல்வதற்குத்தான் அவர் வந்துகொண்டிருந்தார். அப்போதுதான் அந்தத் துர்ப்பாக்கியம் ஏற்பட்டது."

"உண்மையாகவா?"—பிள்ளை வியப்பால் வாயைப் பிளந்தார்.

"ஆமாம் மங்கல வாத்தியங்கள் முழங்க மணமகளாக வலது கால் முன் வைத்து, இந்த வீட்டில் அடியெடுத்து வைக்கவேண்டிய நான், விதவையாக வந்திருக்கிறேன். என் வயிற்றிலே உங்கள் பேரக் குழந்தை வளர்கிறது!

மீனாட்சியம்மாளுக்கு ஒன்றும் புரியாத நிலைமை. ஆனால், கிருட்டின பிள்ளை தன் எண்ணங்களை மறைக்கவில்லை.

"பொய்...பொய்...மீனாட்சி! இவளை நம்பாதே! நம் தங்கம் அந்த வழிக்கெல்லாம் போகமாட்டான்...நம் நிலத்துக்கு ஆசைப்பட்டு இவள் சூழ்ச்சி செய்கிறாள்!...... ஏய்......மரியாதையாக வெளியே போய்விடு......இல்லையேல், உன்னைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்வேன்......தர்வான்......தர்வான்"

—கிருட்டின பிள்ளை கூக்குரல் போட்டார்.

சாரதாவுக்குத் தலையில் இடி விழுந்த நிலை!

"நான் உங்கள் மருமகள்......உங்கள் மருமகள்..." —இதற்குமேல் அவளால் பேசவும் முடியவில்லை. அவள் உடல் தரையில் சாய்ந்தது.

அவள் கண்ணீர் ஆறாக ஓடிற்று.

அன்பின் அருவி!

மாய்மாலம் என்கின்றனர் அவர்கள். ★

# இதய தாகம்





மாலை மணி ஆறு.

காலதேவன் தனது சவுக்கால் ஆறுமுறை உலகத்தை அடித்து, ஓய்ந்தான்.

ஊர்மிளா, நிலைக் கண்ணாடியிடமிருந்து, பிரியா விடைபெற்றாள். தங்களது பிரதிபிம்பத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொள்வதில் எவ்வளவு பெருமிதம், ஆனந்தம் பெண்களுக்குத்தான்!

கோலத்தைக் காணும் கணவன் சொக்கிப் போவார் என்று அவளின் இதயம் இரகசியமாகக் கூறியது. அந்த நினைவு......நிர்மலமான நீர்ப்பரப்பில் நெளிந்தோடும் தென்றலைப் போல், அவள் உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்தது.

முத்துக்களைத் தேக்கிவைத்திருக்கும் அவளது பவளப் பெட்டியில் ஒரு மோகனப் புன்னகை அரும்பு காட்டியது. ஒரு இனிய இராகத்தை மெள்ள இசைத்தவாறு அவள் கூடத்திற்கு வந்தாள்; அன்று

முல்லை சக்தி

மாலை அவளது கணவன் சுந்தரம், அவளைப் படக் காட்சிக்கு அழைத்துச் செல்வதாக வாக்களித்திருந்தான். "மணி ஆறு அடிக்கும்போது, நான் உன் அறையிலிருப்பேன, அதற்குள் உன் அலங்காரத்தை முடித்துக்கொள் ஊர்மிளா," என்று அவளிடம் காலையில் கூறியிருந்தான்! அதற்காகவே, அவள் காலையிலிருந்து தன்னை அலங்கரித்துக் கொள்வதில் ஈடுபட்டிருந்தாள்!

மணி ஆறு அடித்துவிட்டது, அவர் வந்துவிடுவார்! மணமான பின், இன்றுதானே அவள் கணவனுடன் சேர்ந்து படம் பார்க்கப் போகிறாள்?

காலம் ஓடியதே தவிர, கணவன் வரவில்லை. கடிகார முள் முன்போகப் போக, அவள் மனதில் கலவரம் மிகுந்தது. அவளது கண்களில் கண்ணீர் கரை கட்டியது!

திருமணத்திற்கு முன்னால்.........கல்லூரி வாழ் நாளில்......அவளும் அவனும் சேர்ந்து படக்காட்சிக்குச் சென்ற அந்த இன்ப நாட்கள் அவளது மனத்திரையில் ஓடின! அப்போதெல்லாம்—எத்தனையோ வேலைகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு, அவளைப் படக்காட்சிக்கு அழைத்துச் சென்றிருக்கிறான்......

ஆனால், இன்று......

எவ்வளவு நேரம் அவள் பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்தாளோ தெரியாது — பின்னால் யாரோ வரும் சத்தம் கேட்டது. சுந்தரம் அங்கே நின்று கொண்டிருந்தான். அவன் முகம் களைப்பால் சோர்ந்திருந்தது! ஊர்மிளாவை அவன் கவனித்ததாகவே தெரியவில்லை......

"ஏன் இவ்வளவு நேரம்?" ஊர்மிளா கேட்டாள்.

"ஒரு புதிய ஆராய்ச்சிக்கான ஆதாரங்களைத் தேடிக்கொண்டிருந்தேன்" அவன் வார்த்தைகளில் 'உயிர்' இல்லை.

அவனது இந்த அலட்சியத்தை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

"இன்று என்னைச் சினிமாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறியிருந்தீர்களே?"

"அப்படியா? மறந்துவிட்டேன்!"

"மறந்துவிட்டீர்களா?"

"உங்களுக்கு ஒரு மனைவி இருக்கிறாள் என்பதாவது நினைவிருக்கிறதா?"

"நீதான் எதிரில் நிற்கிறாயே — நினைவில்லாமலா போகும்!"

"என்னைப் பார்க்கும்போதுதான், என் நினைவு வருகிறதா, உங்களுக்கு?"

'இன்று முடியவில்லை; நாளை போவோம்' என்று கூறியிருந்தால்கூடப் போதுமே......அவள் மகிழ்ச்சியால் கூத்தாடியிருப்பாளே!

ஒரு சமயம்—அவர்கள் 'தாஜ் மஹால்' என்ற படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனர். அந்த அற்புதக் காதல் ஓவியத்தைக் கண்ட சுந்தரத்தின் கண்கள் கலங்கின!

'நீங்கள் யாருக்காக அழுகின்றீர்கள்' என்றாள் ஊர்மிளா.

அவன் ஒன்றுமே பேசவில்லை

நான் சொல்லட்டுமா? என்றாள் அவள்.

"உம்"

"ஷாஜஹானுக்காக"

"இல்லை...மும்தாஜுக்காக" என்றான் அவன்.

"அவளுக்காக வருந்த என்ன இருக்கிறது"

காலமெல்லாம் காதல் மழைபொழிந்து அவனைக் களிப்புக் கடலில் ஆழ்த்தியவளல்லவா அவள்.

"அப்படி ஒருத்தி யாராவது இப்போது இருக்கிறார்களா?"

சுந்தரம் அவளையே பார்த்தான். பின் "இருக்கிறாள்" என்றான். "எங்கே" என்றாள் அவள்! "என் கண்களில்"—என்றான் அவன்.

அப்பொழுது சுந்தரத்தின் கண்களில் ததும்பிய அன்பு......ஊர்மிளாவுக்கு அந்த நினைவை இப்போது தாங்கவே முடியவில்லை.

மற்றொரு நாள்......கடற்கரையில்.........அவள் கன்னத்தை அவன் இலேசாகத் தட்டினான். உடனே கையை இழுத்துக்கொண்டு "பெரிய தப்புச் செய்துவிட்டேன்" என்றான்.

"என்ன தப்பு" என்றாள் அவள்.

சுந்தரம் இலேசாகப் புன்னகை புரிந்தான்;

வைகறையின் முதல் ஒளிபோல, அந்தப் புன்னகை நிர்மலமாக இருந்தது; உன்னதமாக இருந்தது!

ஆனால்; இன்றோ! இதயத்தில் வேல்கொண்டு குத்தியல்லவா, துன்புறுத்துகிறான்.

ஊர்மிளா உள்ளம் உலைக்கூடமாகியது — எங்கேயோ ஒரு பாலைவனத்தில் தன்னைத் தன்னந் தனியாக விட்டுவிட்டுச், சுந்தரம் போய்விட்டான் என்ற பிரமை ஏற்பட்டது அவளுக்கு!

அவளது கண்கள் நீர் வீழ்ச்சிகளாயின! நீர்த்திரையின் ஊடே அவள் பார்வையைச் செலுத்தினாள்......அங்கே சுந்தரம் புத்தகங்களிலிருந்து குறிப்பெடுப்பதில் மூழ்கியிருந்தான்!

*

மறுநாள் காலை அவள், கண்விழித்தபோது, சுந்தரம் ஆராய்ச்சிக் கூடத்திற்கு சென்றுவிட்டிருந்தான். இரவு தன் அருகில் அவன் இல்லை என்பதும் தெரிந்தது. அதை நினைக்கவே நெஞ்சு அடைத்தது —அவளுக்கு!

பகலெல்லாம் ஒரே சிந்தனை......

மாலை நெருங்கிற்று......இன்றாவது சுந்தரத்தின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்க்கவேண்டுமென்று தீர்மானித்தாள்.

அவ்வேளையில்......,

சுந்தரம், பெரிய பெரிய புத்தகங்களைச் சுமந்துகொண்டு வந்தான்! அழகைச் சுமந்துகொண்டிருக்கும் ஊர்மிளா அவன் எதிரே நின்றாள்! சுந்தரமோ, தனது அறையை நோக்கி நடந்தான்! அவன் வைத்த ஒவ்வொரு அடியும், ஊர்மிளாவின் உள்ளத்தில் சம்மட்டியால் அடிப்பதுபோல் இருந்தது.

'அத்தான்' என்றாள் அவள். அவன் திரும்பினான்...ஏன் என்னை அழைத்தாய்?'' என்பதுபோல் இருந்தது அவன் பார்வை!

கள்ளமில்லாப் புள்ளிமான்போல் துள்ளி—வண்ணமயில்போல் அவன் எதிரில் நின்றாள்!

"அத்தான்"

"உம்"

'என்னைப் பாருங்கள்"

"பார்த்துக்கொண்டுதானே, இருக்கிறேன்"

அவன் பதில், அவளது இன்பக் கோட்டையை இடித்தது! தாங்கிக்கொண்டு பேசினாள்.

"இந்தப் புடவை......"

'நன்றாக இருக்கிறது......"

"அது தெரிகிறது" ஆத்திரம் தொனித்தது அவளது குரலில் ... "இந்தப் புடவை வேறு ஒன்றையும் உங்களுக்குக் கூறவில்லையா......

"புரியும்படி சொல் ஊர்மிளா" சலித்துக்கொண்டான் அவன்.

"அத்தான்"...துக்கம் தொண்டையை அடைத்தது..."அத்தான்...இந்தப் புடவை உங்களுக்கு நினைவில்லையா......இப்புடவைக்குப் பின்னால் இருக்கும் சரித்திரம் உங்களுக்கு நினைவில்லையா...?"

"ஊர்மிளா...என் நினைவில் வைத்துக்கொள்ள எத்தனையோ புள்ளிவிபரங்கள்—என் ஆராய்ச்சியின் ஆதாரங்கள் — நிரம்பி வழிகின்றன — அவைகளை நினைவில் வைத்துக்கொள்ள இடம் இல்லாமல் என் மூளை கொதிக்கிறது! நீ புடவையை, புராணத்தை நினைவில் வைத்துக்கொள் என்கிறாய்!"

"அத்தான்" அலறினாள் அவள்...

"ஊர்மிளா! பகலெல்லாம் படித்துப்படித்துச் சேகரித்த குறிப்புகளுக்கு எழுத்து வடிவம்கொடுக்க வேண்டும்—என் காலத்தை வீணாக்காதே!"

"அந்தப் புத்தகங்களையே மணந்துகொள்வது தானே! என்னை ஏன் மணந்துகொண்டீர்கள்! ஆத்திரமும், அழுகையும் போட்டிபோட்டன, அவளது வார்த்தைகளில்! சுந்தரம் பதில் ஏதும் பேசவில்லை—தனது கூட்டுக்குள் புகுந்துகொள்ளும் நத்தைபோல், அவன் புத்தகக் கூட்டுக்குள் புகுந்தான்!

அன்றொரு நாள்,

புடவைக்கடையிலே ஏற்பட்ட சந்திப்பு, ஊர்மிளாவின் உள்ளத்திலே புதிய திருப்பத்தை உண்டாக்கியது.

அவள் கண்களிலே நட்சத்திரம்போல் பிரகாசித்த உயிர்ஒளி தன் வாழ்க்கையின் விடிவெள்ளிஎன அவள் நினைத்தாள். அவன் நினைவில் வாழ்ந்தாள்.

ஒரு நாள்......

புத்தகசாலையிலிருந்து திரும்பிய சுந்தரத்தை அவள் பின் தொடர்ந்தாள்.

அவன் கேட்டான், "நீங்கள் என்ன துப்பறியும் இலாகாவைச்சேர்ந்தவர்களோ? என்னைத்தொடர்ந்து கொண்டே இருக்கிறீர்களே!"

அவன் கண்களில் நர்த்தனமாடிய குறும்பு அவளுக்கு நிரம்ப, நிரம்பப் பிடித்தது!

அவர்கள் உரையாடினர். அப்போது சுந்தரம் ஆர்வத்தோடு சொன்னான்.

"குடத்தில் இட்ட விளக்காக இருக்க விரும்பவில்லை நான்...குவலயம் முழுவதும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் பகலவனாக இருக்க விரும்புகிறேன்; ஒரு சிறிய வீட்டுக்குக்கூட ஒளிதர முடியாத மினுமினுக்கும் விளக்காக இருந்து பயன் என்ன? ஒரு கணப்பொழுதுதான் என்றாலும், உலகம் முழுவதையும் ஒளிமயமாக்கிவிடும் மின்னலாக இருக்கவேண்டும்!"

"உங்கள் இலட்சியத்தைப் போற்றுகிறேன்; வணங்குகிறேன்!"

"அப்படியே! உங்கள் வாயால் இதை கேட்க நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறேன் தெரியுமா? என் நண்பர்கள் என்னைப் பைத்தியம் என்கிறார்கள்—என் இலட்சியத்தைக் கனவு என்கிறார்கள்!"

"என்னையும் என் தோழிகள் பைத்தியம் என்று தான் கூறுகிறார்கள்!"

"உங்களுக்கும் ஏதாவது இலட்சியம் உண்டா?"

"இலட்சியம் இல்லாதவர்கள் வாழ்வு — நிலவில்லா வானம்தானே!"

"இலட்சியம் பலதரப்படும் — ஒவ்வொருவரும் அவர் அவர்களது இதய ஆசைகளை இலட்சியமாகக் கொள்கிறார்கள்!"

'மெத்த மகிழ்ச்சி' என்று சம்பாஷணையை முடித்தான் சுந்தரம்.

நாட்கள் செல்ல, செல்ல, அவர்களின் நெருக்கம் அதிகரித்தது.

தனது இலட்சியப் பயணத்தில், ஓய்வு எடுத்துக் கொள்ளக்கிடைத்த குளிர்தருதான் ஊர்மிளா என்று அவன் முதலில் எண்ணியிருந்தான் — நாட்கள் வளர, வளர, அவன் இதயத்தில்—இலட்சியவெறி கொண்ட அவன் உள்ளத்தில்—ஊர்மிளாவுக்கும் இடம் அளிக்கலானான்! என்னதான் இலட்சியம் கொண்டிருந்தாலும், அவனும் இளைஞன் தானே! இதயம் படைத்தவன் தானே!

ஒரு நாள் அவளிடம் கூறினான்...

"ஊர்மிளா! நீ என்னைச் சந்திக்காமலிருப்பதே மேல்..."

"ஏன்?"

"என் இலட்சியம் அதனால் அழிந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன்..."

"உங்களின் இலட்சிய தீபத்தை அணைக்கும் சூறாவளி அல்ல நான்! தூண்டுகோலாக இருப்பேன்!"

"உண்மையாகவா..."

அவள் தலையசைத்தாள்......

திருமணம் என்பது மனிதன் தனக்குத்தானே ஏற்படுத்திக்கொள்ளும் ஆயுள் தண்டனை! அந்த வாழ்க்கைச் சிறைச்சாலையில் மனைவி என்பவள் ஜெயிலர்; குழந்தைகள் அங்கு வாழும் மூட்டைப் பூச்சிகள் என்று எண்ணியிருந்த அவன்...திருமணம் என்பது ஒரு இன்பச்சோலை! அங்கு மனைவி என்

பவள் குளிர் ஓடை மட்டுமல்ல; வாழ்க்கை வெற்றியின் இலட்சிய ஊற்று—குழந்தைகள் தென்றலில் சிரிக்கும் மலர்கள்! என்று எண்ணலானன்; ஊர்மிளாவை மணக்கச் சம்மதித்தான்!

எங்கேயோ—யாருக்கோ சொந்தமான கொடியில் பூத்த மலர் தனது மடியில் விழுந்தது என்று மகிழ்ந்தாள் ஊர்மிளா. அதைத் தனது இதயத்திலே எடுத்து வைத்துக்கொண்டாள்! அந்த மலர் இன்று அவளின் இதயத்தை முள்ளாகக் குத்தியது! அவன் ஆராய்ச்சி செய்வதில் அவளுக்கு அட்டி இல்லை. அவன் பேரும் புகழும் பெறுவதிலும் பெருமைதான்! ஆனல், அவளுக்கு அவன் கணவன் என்பதை மறந்துவிட்டானே! ஒரு மனைவிக்கு இதைவிட வேறு என்ன வேதனை வேண்டும்.

சுந்தரத்தை அவள் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிவித்தபோது......

அவளின் தோழிகள்—"புத்தி பேதலித்துவிட்டதடி பெண்ணே—புத்தகப் பூச்சியை மணக்கிருயே!" என்று கேலி பேசினர்!

"அவர் என் இரத்தத்தோடு இரத்தமாக உறைந்துவிட்டார்" என்று பதில்கூறி அவர்களின் வாயை அடைத்தாள்!

"மகளே! நம் அந்தஸ்து என்ன? கௌரவம் என்ன? அவனைப்போய் மணக்கிருயே என்று கேட்டார்!" அவளின் தந்தை

"அப்பா! அந்தஸ்தும், கௌரவமும் யாருக்கும் நிலையானதல்ல. அவர் என் சிந்தையிலே குடியேறிவிட்டார் என்று சமாதானம் கூறினள்!

ஊர்மிளா! 'இட்டவில்லையே' என்ற பொருமையால் கூறுகிறேன் என்று தவருக எண்ணிவிடாதே! உன்னுடைய வாழ்க்கை நோக்கமும் — சுந்தரத்தின் வாழ்க்கையின் இலட்சியமும் ஒன்றுக்கொன்று சந்திக்கமுடியாத இரு துருவங்கள்! அதை மறவாதே! நன்ருக யோசித்துப் பார்! இலட்சியம் — இலட்சியம் என்று அலையும் அவன் எங்கே? இன்பம் — இன்பம் என்று பாடும் நீ எங்கே?" என்று அவளின் அத்தான் மாதவன் அடுக்கடுக்காக வாதங்களை வீசினன் அவளின் முடிவை மாற்ற!

அவள் கூறினள், "மாதவன்....! அவர் என்னை அலட்சியப்படுத்தினலும், அடித்தாலும், உதைத்தாலும், அவரே என் தெய்வம்!"

"இன்று கூறுவாய்......ஆனல்......"

மாதவன் அன்று கூறியது உண்மையாகி விட்டதே!

இலட்சியவெறி பிடித்தவோருக்கு இதயமே இல்லையா?

சுந்தரத்தின்மீது ஊர்மிளாவிற்கு எரிச்சல் வந்தது! அந்த எரிச்சல் கோபமாக மாறியது, கோபம் கனலெனத் தகித்தது!

நாட்கள் நகர்ந்தன; ஊர்மிளா நடமாடிக்கொண்டிருந்தாள், நடைப்பிணம் போல. இந்த மாற்றம் கூடச் சுந்தரத்திற்குத் தெரியவில்லை; அவன் வழக்கம் போல் புத்தகத்தோடு உறவாடிக் கொண்டிருந்தான்!

ஒரு நாள்...வேதனை வடிவமாகிவிட்ட ஊர்மிளா மாதவனைச் சந்தித்தாள்!

இருட்டில் நடந்துபோகிறவனுக்குத் திடீரென்று சந்திரப் பிறை தென்பட்டால், அல்லது மனிதப் பூண்டே இல்லாத ஒரு காட்டில் எங்கிருந்தாவது இனிய சங்கீதம் காதில் விழுந்தால், ஒரு கணப்போது, சுற்றுமுற்றும் 'கந்தர்வ'லோகத்துத் தோற்றம் தென்படுகிறதல்லவா? அவன் மனதில் அப்போது அத்தகைய இனிய உணர்ச்சிகளே வீசின!

'ஊர்மிளா, நலம்தானே' மாதவன் கேட்டான். 'கோ'வென்று கதறவேண்டும்போல் தோன்றியது, அவளுக்கு!

மங்கிய முகமும்—தேய்ந்த உடலும், குழிவிழுந்த கண்களும், அவனுக்குப் பதில் உரைத்தன!

"மாதவா...! நீ கூறியது உண்மையாகிவிட்டது" புலம்பியே விட்டாள்!

மாதவன் தேற்றினன்; ஆறுதல் கூறினன்; அது அவளின் இரணகளமாகிவிட்ட இதயத்தின்மேல் 'ஓடிகொலானே' கொட்டியதுபோலிருந்தது, அவளுக்கு!

மாதவன் அவளை அடிக்கடி சந்தித்தான்; தனது சோகத்தை அவனிடம் கூறுவதிலே ஒரு ஆறுதல் பெற்ருள் ஊர்மிளா! அவள் அழுத நேரத்தில் அவன் அழுதான்! இதில் ஒரு சிறிதளவாவது சுந்தரம் செய்திருந்தால், தனது பிறவியே பெரும் பேறு செய்ததென்று கருதியிருப்பாள் ஊர்மிளா!

ஒரு நாள்...மாதவன் கேட்டான்..."ஊர்மிளா... தவருக என்னைக் கருதாதே...கருகிப்போன உன் வாழ்வைக் கண்டு கலங்கும் ஒரு நல்ல இதயம் கேட்கிறது...இன்னமும் ஏன் நீ இந்த நரகத்தில் வதைபட்டுக் கொண்டிருக்கவேண்டும்? திடுக்கிட்டாள் ஊர்மிளா?"

சூடாத முல்லையாக—மீட்டாத வீணையாக ஏன் புழுதியில் புரளவேண்டும்?"

"மாதவா!"

"சொல்வதை கேள்! இந்த நரகத்திலிருந்து வெளியேறிவிடு!"

மாதவா — கணவனைவிட்டு ஓடுவது, பெண்களுக்கு அழகா"

"அழகல்லதான்; உன் கழுத்தில் தாலி கட்டிவிட்டதாலேயே, அவன் அளிக்கும் தண்டனைகளையெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமா? அவன் உன் கணவன் என்பதை மறந்தான்—உன் வாழ்க்கையின் எழில் மலரைக் கிள்ளி எறிந்தான்! ஆனல், நீ மட்டும் அவன் பாதார விந்தங்களைப் பூஜித்துக்கொண்டிருக்க வேண்டுமோ? புவியில் நீ காலமெல்லாம் புலம்பிக் கொண்டுதான் இருக்கவேண்டுமா!"

"மாதவா!" என்ருள். மேற்கொண்டு அவளால் பேச முடியவில்லை.

ஊர்மிளா, மாதவனின் சொற்கேட்டுத் திகைத்தாள்! பின் பயந்தாள்! சுடுசொல்லும், பழிச்சொல்லும் சூழுமே? என்ருள்.

"பழிப்பவர்களும், இழிமொழி உரைப்பவர்களும் இதுநாள்வரை உனக்குச் செய்தது என்ன என்ருன்?" மாதவன்.

ஊசலாடிக்கொண்டிருந்த அவள் உள்ளம் மாதவனின் வாதங்களுக்குப் பதில் உரைக்க இயலவில்லை!

இந்த நல்ல சந்தர்ப்பத்தை மாதவன் பயன்படுத்திக் கொண்டான்!

ஊர்மிளாவும், தனக்குதானே சமாதானம் கூறிக் கொண்டாள். ஏறெடுத்தும் பாராத கணவனின் பிணைப்பில் ஏன் இருக்கவேண்டும்? அன்பு மழையால் அர்ச்சித்த எனக்கு, அவன் அளித்த பரிசு என்ன? பாசத்தையும், நேசத்தையும் சொரிந்தஎனக்கு, அவன் அளித்தது என்ன? வேதனை! கண்ணீர்! புலம்பல்! ஒப்பாரி!

இப்படித் தனக்குத்தானே வினா தொடுத்து, மாதவனின் வாதங்களுக்கு ஆதாரம் தேடினாள்! மாதவனை நிழல்போலத் தொடரச் சம்மதித்தாள்!

இரவு பகலென்று பாராது புத்தகங்களோடு உறவாடிப், புள்ளி விபரங்களோடு போராடிவந்த சுந்தரம், தனது ஆராய்ச்சியை வெளியிட்டான்! வெற்றித்தேவி அவன் நெற்றியிலே திலகமிட்டாள்--ஊரே புகழ்ந்தது-உலகமெங்கும் அவன் புகழ் மணத்தது! புகழ் மாலைகள் — பொன் முடிப்புகள் — அவனது காலடியில் குன்றுபோல் குவிந்தன! இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடச், சுந்தரம், ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தான்! விருந்து மண்டபத்தில் சுந்தரம் மகிழ்ச்சியாக இருக்கும் நேரத்தில், ஊர்மிளா வெளியேறுவதென்றும், மாதவன் விமான நிலையத்தில் அவளுக்காகக் காத்திருப்பதென்றும், பம்பாய்க்குப் பறந்துவிடுவதென்றும் அவர்கள் தீர்மானித்தனர்! அந்தக் குறிப்பிட்ட நாளை அவர்கள் தேர்ந்தெடுத்ததிற்குக் காரணம், மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் அவன் இச்சேதி கேட்டுத் துன்பத் தீயில் வேகவேண்டுமென்றும், அவமானத்தால் தலைகுனிய வேண்டுமென்றும் — அணு, அணுவாகி அவன் சாகவேண்டுமென்றும், அவன் பெற்ற மகிழ்ச்சி, பிறந்த அன்றே இறக்கவேண்டுமென்றும், அதுதான் இதுநாள்வரை வெந்துமடிந்த ஊர்மிளா அவனுக்கு அளிக்கும் இறுதிப் பரிசென்றும், அவர்கள் பேசிக்கொண்டனர்!

விருந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது! பலரும் சுந்தரத்தைப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள்! ஊர்மிளாவைக்கூடப் பாராட்டினார்கள்—இத்தகைய மேதையின் மனைவி என்று! அவளின் கவனமெல்லாம் விமான நிலையத்தைச் சுற்றிக்கொண்டிருந்தது!

கடிகாரத்தைப் பார்த்தாள்; எட்டேமுக்கால்! மணி ஒன்பது அடிக்கும்போது அவள் வெளியே செல்வாள். தெரு முனையில் ஒரு 'டாக்சி' காத்துக் கொண்டிருக்கும்! அதில் ஏறுவாள்......அது விமான நிலையத்தை நோக்கி ஓடும்! அதைவிட வேகமாக அவள் மனம் மாதவனிடம் ஓடும்! மாதவன் காத்துக் கொண்டிருக்கிறான். அவன் கையில் இரண்டு டிக்கட்டுகள்......ஊர்மிளா புன்னகையை வீசுகிறாள் — மாதவன் அவளது பெட்டியைத் தூக்கிக்கொள்ளுகிறான்.........இருவரும் விமானத்தில் ஏறிக்கொள்ளுகிறார்கள்......விமானம் பறக்கிறது......உயர, உயரப் பறக்கிறது......"நண்பர்களே!" என்ற சொல் கேட்டு ஊர்மிளாவின் கனவு கலைந்தது!

சுந்தரம் பேச ஆரம்பித்தான்! 'இந்நேரத்தில் இவர் ஏன் பேசுகிறார்—நேரமாகிறதே' என்று எண்ணினாள் ஊர்மிளா!

சுந்தரம் மகிழ்ச்சியால் துள்ளிக்கொண்டிருந்தான். அவன் கண்களில் வெற்றி ஒளி!

ஊர்மிளா கடிகாரத்தைப் பார்த்தாள்! ஐந்துநிமிடங்கள் இருந்தது ஒன்பதுக்கு! மெல்ல எழுந்தாள்!

சுந்தரம் பேசிக்கொண்டே இருந்தான்......"என் ஆராய்ச்சியில் நான் பெற்ற வெற்றிக்கு முழுப் பொறுப்பு—என் மனைவிதான்!"

இவ்வொலி கேட்டுத் திடுக்கிட்டாள்; அசைவற்று நின்றாள் — ஊர்மிளா. "அவளில்லையேல், என்னால் இந்த வெற்றியைப் பெற்றிருக்கமுடியாது?

செல்வத் தொட்டிலில் வளர்ந்தவள்; கனவு காணும் பருவம்; சுகத்தைத்தேடி அலையும் வயது, சோபித வாழ்விற்கு ஏங்கும் உள்ளம்; இத்தனையும் நிரம்பிய அவள், என ஆராய்ச்சி வெற்றிபெறத் தியாகம் செய்தாள்! அவள் விரும்பியிருந்தால், என் ஆராய்ச்சிக்குச் சாவுமணி அடித்திருக்கமுடியும். அவள் நினைத்திருந்தால் என் சிந்தையை ஆராய்ச்சியில் ஈடுபடாமல் தடுத்திருக்கமுடியும். பெண்மையின் முன்னால் ஆண்கள் பலவீனர்களாகிவிடுவார்கள்! ஆனால், அவளோ—ஒருநாளும் என் ஆராய்ச்சியைத் தடுக்கமுயன்றதில்லை, அதற்குப்பதில்என்னிடமிருந்து ஒதுங்கி வாழ்ந்தாள்—தன் சுகத்தை இழந்தாள்—என் வெற்றிக்கு வழிவகுத்துத் தந்தாள்! இத்தகைய தியாகம் செய்து என்னை வெற்றியுறச் செய்த என் மனைவிக்கு, நான் எனது நன்றியைச் செலுத்தக் கடமைப் பட்டிக்கிறேன். நீங்கள் சூட்டிய புகழாரங்கள் எல்லாம் அவளுக்குத்தான் சொந்தம். நீங்கள் எனக்கு அணிவித்த மாலைகளெல்லாம் அவளுக்கு என் நன்றியின் காணிக்கையாக அணிவிக்கிறேன்" என்று சுந்தரம் கூறிக்கொண்டே மலைபோல் குவிந்திருந்த மலர் மாலைகளை ஊர்மிளாவின் காலடியில் கொட்டினான்!

ஊர்மிளாவின் கண்கள் நீரைக் கொட்டின! 'மகிழ்ச்சி — கண்களில் மலராகப் பூத்திருக்கிறது' என்றனர் அங்கு கூடியிருந்தோர்!

"ஊர்மிளா" என்றான் சுந்தரம்.

'அத்தான்' என்று அலறியபடியே அவன் காலடியில் விழுந்தாள்.

அவனது கால்களைக் கண்ணீரால் கழுவித் தனது 'பாவ' எண்ணத்திற்குப் 'பிராயச்சித்தம்' செய்துகொண்டிருந்தாள்!

காலம் ஓடுகிறது என்று ஒன்பதுமுறை ஒலித்து நினைவுபடுத்தினான் காலதேவன!

சுந்தரம் 'கண்ணே" என்று ஊர்மிளாவை வாரி எடுத்தான்!

அவன் கண்களில் நட்சத்திரம் கண்டாள்-தனது இருண்ட வாழ்விலும் வெள்ளி முளைத்துவிட்டதென்று மகிழ்ந்தாள்!

அந்நேரத்தில் விமானம் ஒன்று வானவீதியில் பறக்கும் ஒலி அவள் காதில் விழுந்தது!

★


விரைவில்...!

வீரத் தமிழர்கள் புயலெனக் கிளம்பிப் பொங்கி எழுந்து புலியெனப்பாயும், தேன் தமிழ் நாடகக் காவியம்.

பண்ணுருட்டி அறிஞர் நாடகமன்றம்

அளிக்கும்

தலைவணங்காத் தமிழன்

கதை, வசனம், பாடல்

புதுவை வாணன்.





காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.


பிப்ரவரி
வெளியீடு
புத்தா
பிக்சர்ஸ்
பாவ
மன்னிப்பு
திரைக் கதை & டைரக்ஷன்
A. பீம்சிங்
BUDDHA PICTURES
ஸ்டூடியோ
எவி எம்

பதிவு எண் எம். 4642
( இலங்கையில் செய்திப் பத்திரிக்கையாகப் பதிவு செய்யப்பட்டது )

தொலைபேசி எண் { அலுவலகம் : 15 / இல்லம் : 118 }




Wrapper Printed at Asian Printers, Madras - 5